

# பறக்கும் வகுப்பறை

எரிஹ் காஸ்ட்னர்



# பறக்கும் வகுப்பறை

ஆசிரியர் :

எரிஹ் காஸ்ட்னர்



தமிழில் :

மணவை முஸ்தபா

வெளியீடு:

சென்னை 1971

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், சென்னை, இந்தியா & ஹொர்ஸ்ட் எர்த்மன் ஃபெர்லாக், துபிங்கன் (மேற்கு ஜெர்மனி) & பாஸல் (ஸ்விட்ஸர்லாந்து)

Tamil

PARAKKUM VAKUPPARAI

Year 1971

Edition : 3000 copies

Original title : "Das Fliegende Klassenzimmer"

Author : Erich Kästner

© Atrium Verlag Zuerich

Translated by

Manaval Mustafa

Price : Rs. 3.00

Co-Production by

Southern Languages Book Trust, Madras, (India) and Horst Erdmann Verlag, Tuebingen (West Germany) and Basel (Switzerland)

Printed at

Sremati Printers

3/30, Mount Road, Madras-2.

# பறக்கும் வகுப்பறை

பறக்கும் வகுப்பறை உண்மையில் கிர்ஹ்பெர்க் விடுதிப் பள்ளி மாணவரான ஜானி த்ரோட்ஸ் எழுதிய நாடகமாகும். அந்நாடகம் கிருஸ்துமஸ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நடக்கவிருந்தது. ஆனால், அதற்கு முன்பாகவே எத்தனையோ பெரிய நிகழ்ச்சிகள்—உயர் நடுநிலைப்பள்ளி மாணவர்களின் ஆள்கடத்தல் கொடுஞ்செயலும், உயிர்க்கிறுதி உண்டாக்க வல்ல அக்கொடுமைக்கு ஆளான தங்கள் சக மாணவரை விடுவிக்க வேண்டி அவர்கள் மேற்கொண்ட அதியற்புதச் சாகசச் செயல்கள் பலவும்—நடந்து விடுகின்றன.

இப்புத்தகத்தில் வரும் பையன்களெல்லாம் இனியவர்களாக அல்லது விநோதமானவர்களாக அல்லது நல்ல ஆர்வலர்களாக இருக்கின்றனர். குறிப்பாக, வயிறு நிறைந்திருக்கும்போது மட்டும் மல்லிடும் மத்தியாஸ்; தனது நடன நண்பர்களைப்பற்றி மட்டுமே எண்ணிக் கொண்டிருக்கும் தெயடோர்; எதைக் கண்டாலும்—ஏன்—பனி உருண்டைகளைக் கண்டால்கூட பயப்படுகிறவன், இறுதியில் தன்னாலேயே நம்பமுடியாத வகையில் வீரச் செயல் புரிந்த சிறுவன் உலி; இவர்களெல்லாம் இக்கதையில் வரும் மிக முக்கியக் கதாபாத்திரங்கள் ஆவர்.

இந்நூலாசிரியர் எரிஹ் காஸ்ட்னர் உண்மையான உணர்ச்சிகளையெல்லாம் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார். ஒரு பையன் தனிமையில் விடப்பட்டபோது அல்லது வீட்டார்வத்தால் ஈர்க்கப்பட்டிருக்கும்போது அல்லது வெட்க உணர்வு மேலிடும்போது அவனுக்கு ஏற்படும் அனுபவ உணர்வுகளையும், வழிச் செலவுக்குப் பணம் அனுப்பக்கூடத் தன் பெற்றோர்களால் இயலவில்லை என்ற நிலை ஏற்பட்டபோது, மார்ட்டின் தாலர் வெளித் தோற்றத்தில் சாந்தமாக இருக்க முயன்றாலும் உள்ளூர எந்த அளவுக்கு வேதனை அனுபவித்தான் என்பதையும், புதிரான புகைபிடியாதவரும் தலைமையாசிரியர் ஜஸ்டஸூம் கிருஸ்துமஸ் ஈவின்போது எல்லாவற்றையும் எவ்வாறெல்லாம் சரிப்படுத்தினார்கள் என்பதையும் இந்நூலாசிரியர் உள்ளத்தைக் கவரும் வகையில் எடுத்துக் கூறுகிறார்.

இக்கதையைப் படிக்கும் எவரும் இதில் வரும் பையன்கள் இந்நூலாசிரியரின் சொந்த நண்பர்கள் என்ற உணர்வையே பெறுவார்கள். இத்தகையவர்களை நண்பர்களாகப் பெற்றவர் அதிர்ஷ்டசாலிதானே.

# படங்கள்

பக்கம்

1. ஒவ்வொருநாள் மாலையும் என்னைக் கூப்பிட எட்வர்ட் வரும. 6

2. ஆரும் படிவப் பையன்கள் பத்துபேர் ஜோடி ஜோடியாக இணைந்து நடனமாடிக்கொண்டிருந்தார்கள். 27

3. நீர் ஊற்றி முடிந்ததும் அவர் பசும்புல் தரையில் அமர்ந்து படித்தார். 44

4 டாக்டர் போக் குற்றஞ்சாட்டபபட்டவர்களை நெருங்கிஞர். 94

5. திடீரென வெள்ளைத்துணி போர்த்த பேய்களும் சூனியக்காரர்களும் ஊர்வலமாகப படுக்கையறைக்குள் வந்தார்கள். 118

6. ஹெர் க்ருய்ஸ்கெம் இந்த இழிவான செயலைக் கவனிக்கவில்லை. 128

7. ஆனுல், கண நேரத்தில உலி குதித்துவிட்டான் 146

8. நாடகம் மாபெரும் வெற்றி 184

9 எஞ்சின் நகர ஆரம்பித்ததும் எல்லோரும் தொப்பியை ஆட்டிஞர்கள். 197

10. அவர்கள் கோட்டுகளை அணிந்து கொண்டு ஸ்டேஷனை நோக்கிச் சென்ருர்கள். 220

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரையின் முதற் பகுதி 1

ஃப்ரௌ காஸ்ட்னருக்கும் அவளுடைய மகனுக்குமிடையேயான தர்க்கம், ஜெர்மனியின் மிக உயர்ந்த மலையின் ஒரு காட்சி; கோட்ஃபீரீத் எனும் பெயர் கொண்ட ஒரு வண்ணத்துப்பூச்சி; கறுப்பு, வெள்ளை நிறமுள்ள பூனை; நிலையான பனிப்படலம்; அமைதியான மாலை நேரம்; கன்றுகள் சிலசமயம் காளைகளாக வளருமென்ற ஒரு நியாய நினைவூட்டல்.

முன்னுரையின் இரண்டாம் பகுதி 9

ஒரு பச்சைப் பென்சில்; காணாமற்போன சிறுவர்களது கண்ணீரின் அளவைப்பற்றிய ஒரு குறிப்பு; ஜோனத்தான் த்ரோட்ஸின் கப்பற் பயணம்; அவனுடைய பாட்டன் பாட்டி அவனைச் சந்திக்காததற்கான காரணம்; கெட்டித் தோலைப்பற்றி ஒரு புகழ்மொழி; தைரியத்தை பொது அறிவோடு இணைப்பதற்கு ஒரு அவசர அறிவுரை.

அத்தியாயம் ஒன்று 21

மலையேறும் வீரச்செயல்; நடன வகுப்பில் ஒன்று அல்லது இரண்டு இளைஞர்கள்; சில சமயம் கடுங்கோபம் அடையும் தலைமைப் பையன்; நீண்ட வெள்ளைப் பொய்த் தாடி; 'பறக்கும் வகுப்பறை' என்ற அருஞ்செயற் கதைச் சுருக்கம்; மாதிரிப் பாடல்களோடு கூடிய அரங்க ஒத்திகையும் எதிர்பாரா இடையூறும்.

பக்கம்

**அத்தியாயம் இரண்டு** 41

புகை பிடியாதவரைப் பற்றிய சில தகவல்கள்; எழுத்திலக்கணத்தில் மூன்று பிழைகள்; உலியின் அச்சம்; ரயில் பெட்டியில் போர்க் குழுக் கூட்டம்; ஃபிரிடோலினின் வேவு நடவடிக்கை; க்ருய்ஸ்கெம் தாக்கப்படுவதற்கும் நீண்ட தூர ஓட்டத்திற்கான காரணமும் அடங்கியது.

**அத்தியாயம் மூன்று** 55

ஃப்ரிடோலின் திரும்புதல்; ஐரோப்பாவின் மிகச் சிறந்த மாணவர் தலைவரைப் பற்றி ஒரு உரையாடல்; ஃபிராங் எகர்லாண்டின் சமீபத்திய குழப்பம்; நடந்து செல்லும் ஒரு தூதுவன்; ஏற்கமுடியாத கோரிக்கைகள்; பயன் தரத்தக்க போர்த்திட்டம்; புகை பிடியாதவரின் மேலும் அதிகப் பயன் தரத்தக்க ஒரு திட்டம்.

**அத்தியாயம் நான்கு** 69

மயங்க வைக்கும் தாக்குதலோடு கூடிய கைச் சண்டை; உயர் நடுநிலைப் பள்ளிப் பையன்களின் வஞ்சகம்; எகர்லாண்டின் மனப்போர்; மார்ட்டினின் ரகசியப் போர்த்திட்டம்; நிலவறையில் குத்துகள்; சிறிய சாம்பல் குவியல்; வெற்றிக்கு அனுமதி; எகர்லாண்ட் ஓய்வு பெறுதல்.

**அத்தியாயம் ஐந்து** 89

தியதோரோடு நேர்முக மோதல்; பள்ளிக்கூட விதிமுறைகளைப்பற்றிய ஒரு விவாதம்; எதிர்பாராத புகழுரை; பொருத்தமான தண்டனை; விடுதித் தலைவரின் நீண்டகதை; அதைப்பற்றி பின்னர் மாணவர்கள் கூறியது.

பக்கம்

அத்தியாயம் ஆறு 107

ஆறு குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டியின் ஓவியம்; ஒரு பழைய நகைச் சுவையைப்பற்றிய பெருஞ் சிரிப்பு; பால் டூய்ன் என்பது கிருஸ்துவப் பெயர்; நனைந்த விந்தை; பேய்களின் ஊர்வலம்; அரிக்கும் பொடியைத் தூவிய ஒரு மிருகம்; பலகணியின் அடிக் கட்டையில் ஜானி; அவனது எதிர்காலத் திட்டம்.

அத்தியாயம் ஏழு 123

பேராசிரியர் க்ருய்ஸ்கெம்மைப்பற்றி ஒரு விளக்கம்; மயிர்க்கூச்செறியும் ஒரு சம்பவம்; வகுப்பில் ஐந்து முறை எழுத வேண்டிய ஒரு வாசகம்; இடைவேளை யின்போது வியப்பூட்டும் ஒரு அறிவிப்பு; டாக்டர் போக்கோடு நடந்தது; ஒதுக்கிடத்தில் ஒரு சந்திப்பு; வேலிக்கருகில் ஒரு கைகுலுக்கல்.

அத்தியாயம் எட்டு 139

நிறைய கேக்குகள்; ‘பறக்கும் வகுப்பறை’யின் அடுத்த ஒத்திகை; உலி தன்னுடன் குடையை எடுத் துச் சென்றதற்கான காரணம்; விளையாட்டுத்திடலி லும் பள்ளிக்கூடத்திலும் முரட்டுத்தனமான வேடிக்கை நிகழ்ச்சி; டாக்டர் போக்கின் ஆறுதல் வார்த்தைகள்; மூன்றும் எண் இசையறை.

அத்தியாயம் ஒன்பது 153

பயத்தைப் பற்றி செபாஸ்டியனின் ஆழ்ந்த சிந்தனை கள்; மாற்று நடிகர் தேர்ந்தெடுத்தல்; நோயாளி அறைக்குள் ரகசிய வருகை; ‘மாரோபோன்’ என் றழைக்கப்படும் பீர்க் கடை; சூடான இரவுச் சாப் பாடு; தபால்காரனை நேருக்குநேர் சந்தித்தல்; மார்ட்டி னின் வீட்டுக் கடிதம்.

பக்கம்

**அத்தியாயம் பத்து** 173

விடுமுறைக்கு முதல் நாள்; கிர்ஹ்பெர்க் வழியே சுற்றித் திரிதலும் நேருக்கு நேரான பல சந்திப்புக் களும்; மத்தியாஸுக்கான மற்றொரு சாக்லேட் கடை; பயிற்சிக் களத்தில் கிருஸ்துமஸ் குழுக் கூட்டம்; பார்வையாளர்களில் எதிர்பாரா புதியதோர் உறுப் பினர்; அவர் பெற்றுக் கொண்ட பரிசும் அவர் கூறிய யதும்; மார்ட்டின் படுக்கைக்கருகில் ஒரு நிமிடம்.

**அத்தியாயம் பதினொன்று** 191

புகைவண்டி நிலையத்தில் அன்பு ததும்பும் ஒரு காட்சி; மாணவர்கள் இல்லாத ஒரு பள்ளிக்கூடம்; விளையாட் டுத் திடலின் குறுகிய சந்தில் ஒரு கண்டுபிடிப்பு; தலைமையாசிரியர் திருட்டுத்தனமாக வேலி தாண்டு தல்; உலியைச் சென்று பார்த்தல்; ''நாம் நம்முடைய பெற்றோர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது'' என்ற ஜானியின் கொள்கை; மீண்டும் ஒரு பச்சைப் பொய்.

**அத்தியாயம் பன்னிரண்டு** 209

அருமையான பல கிருஸ்துமஸ் மரங்களும் ஒரு சிறிய ஃபிர் மரமும்; ஒவ்வொன்றும் நான்கு பௌண்டு எடை யுள்ள ஆரஞ்சுகள்; பல கண்ணீர்த்துளிகள்; மறுபடி யும் மணியடித்தல்; கண்ணீரோடு சேர்ந்த சிரிப்பு; சில புதிய வண்ணப் பென்சில்கள்; அவற்றை முதலாவ தாகப் பயன்படுத்தியது; ஹெர்ம்ஸ்ட்ராஃப் அஞ்சற் பெட்டி; ஒரு நட்சத்திர வீழ்ச்சி

**முடிவுரை** 223

புகைவண்டிகளும் உல்லாசப் பஸ்ஸுகளும்; கோட் ஃபிரீத், மயில்கண்ணன், எட்வர்ட் எனும் பெயருள்ள காளைக்கன்று ஆகியவற்றின் இனிய நினைவுகள்; ஜானி த்ரோட்ஸ், கேப்டன் ஆகியவர்களோடு நேர்முகச் சந்திப்பு; ஜஸ்டஸுக்கும் புகைபிடியாதவருக்கும் அநேக அன்பு நிறைந்த வாழ்த்துக்களும் நூலின் முடிவும்.

# முன்னுரையின் முதற் பகுதி

ஃப்ரௌ காஸ்ட்னருக்கும் அவளுடைய மக னுக்குமிடையேயான தர்க்கம்; ஜெர்மனியின் மிக உயர்ந்த மலையின் ஒரு காட்சி; கோட் ஃபிரீத் எனும் பெயர் கொண்ட ஒரு வண்ணத்துப் பூச்சி; கறுப்பு, வெள்ளை நிறமுள்ள பூனை; நிலை யான பனிப் படலம்; அமைதியான மாலை நேரம்; கன்றுகள் சில சமயம் காளைகளாக வளருமென்ற ஒரு நியாய நினைவூட்டல்.

# 1

இம்முறை அது ஒரு உண்மையான கிருஸ்துமஸ் கதையாகவே இருக்கும். அதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே எழுத எண்ணினேன். கடந்த ஆண்டு அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்தேன். ஆனால், எப்போதும் ஏதாவது இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்ததை நீயே அறிவாய் அல்லவா. அன்றொரு நாள் அம்மாள் என்னிடம் கூறினாள்: ''இவ்வாண்டு நீ அதை எழுதவில்லையென்றால் உனக்கு நான் கிருஸ்துமஸ் பரிசு எதுவும் தரப்போவதில்லை''.

அந்த விஷயம் முடிவாகிவிட்டது. விரைவாக என் பெட்டியினுள் டென்னிஸ் மட்டை, குளியல் உடை, பச்சை நிறப் பென்சில், நிறைய எழுதும் தாள்கள் ஆகியவற்றை வைத்துக் கட்டினேன். நாங்கள் பயணம் புறப்பட்டு ரயில் நிலையத்தை அடைந்தோம். வெயிலின் கடுமையால் நாங்கள் அவதிப்பட்டோம். ''நான் எங்கே போகப்போகிறேன்?'' நான் அம்மாவிடம் கேட்டேன். கோடை காலத்தின் உச்சகட்டத்தில் கிருஸ்துமஸ் கதை எழுதுவதென்பது கடினமான வேலை என்பது தெளிவு. குறிப்பாக உன்னால் உட்கார்ந்தபடியே எழுத இயலாது. 'கடுங்குளிராக இருந்தது. பனி கட்டி கட்டியாக விழுந்து கொண்டிருந்தது. டாக்டர் ஐஷென்மயர் பலகணி வழியாக வெளியே பார்த்தபோது அவருடைய இரண்டு காதுகளின் மடல்களும் மரத்துப் போய்விட்டன.' எவ்வளவுதான் விருப்பமும் மனவலிமையும் பெற்றிருந்தாலும் ஆகஸ்ட் மாத மத்தியில் மயக்கத்தை உண்டு பண்ணும் கடும் வெயிலில் சுர்றென்ற சுடு மணலில் உட்கார்ந்து இம்மாதிரி விஷயங்களை உன்னால் எழுத முடியாது. என்னால் கூட முடியாது.

பெண்கள் மிகவும் காரியசாத்தியமானவர்களாவர். என் தாயார் தயக்கமேதுமின்றி 'புக்கிங் ஆபீஸ்' ஜன்னலருகில் சென்று குமஸ்தாவிடம் புன்முறுவல் பூத்தபடி தலையாட்டிய வண்ணம் ''மன்னிக்கவும், ஆகஸ்ட் மாதத்தில் பனியை எங்கே பார்க்கலாம்?'' எனக் கேட்டாள்.

''வட துருவத்தில்'' என குறும்பாகக் கூற முனைந்தவன் என் தாயாரை அடையாளம் கண்டு கொண்டு, துடுக்குத்தனம் கூடாது என எண்ணியவனாய் அவளை நோக்கி ''ஸுக்ஸ் பிட்ஸ் மேல்'' என மரியாதையுடன் கூறினான்.

இவ்வாறு நான் மேல் பவேரியாவுக்கு ஒரு டிக்கெட் வாங்கும்படியாயிற்று. ''கிருஸ்துமஸ் கதையில்லாமல் வீடு திரும்ப முனைந்து விடாதே'' அம்மா கூறினாள். ''வெப்பம் *சற்று கடுமையாக இருப்பதுபோல் தோன்றினால் ஸுக்ஸ்* பிட்ஸின் மேலேயுள்ள நேர்த்தியான குளிர்ந்த பனியைப் பார்த்துக்கொள். என்ன?'' அப்போது ரயில் நகரத் தொடங்கியது.

''சலவை செய்யவேண்டிய உன் பொருள்களை வீட்டிற்கு அனுப்ப மறந்துவிடாதே'' வண்டியின் பின்னாலேயே உரக்கக் கூவினாள்.

அம்மாவைத் தொல்லைப்படுத்தும் வகையில் நான் 'பூச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற மறந்து விடாதே' என திரும்பக் கத்தினேன். அதன் பின்னர் ஒருவர் பார்வையிலிருந்து மற்றவர் மறையும் வரையில் நாங்கள் கைகுட்டைகளை வீசிக் கொண்டோம்.

இவ்வாறு, கடந்த பதினைந்து நாட்களாக, ஜெர்மனியிலேயே மிக உயரமான மலையான ஸுக்ஸ்பிட்ஸின் *அடிவாரத்தில்* தங்கி வருகிறேன். அருகில் கரும்பச்சை நிறமுள்ள பெரிய ஏரியொன்று இருக்கிறது. நான் குளிக்காதபோது அல்லது டென்னிஸ் விளையாடாதபோது அல்லது கார்லின்கெனேடு படகு ஓட்டாதபோது ஒரு பெரிய புல்வெளியின் மத்தியில் கிடக்கும் ஒரு பெரிய மரப்பெஞ்சியின் மேல் அமர்ந்து, எப்போதுமே

அசைந்தாடிக் கொண்டிருக்கும் மேசையொன்றின் அருகில் போய் அமர்ந்து எனது கிருஸ்துமஸ் கதையை தீவிரமாக எழுத முனைவேன்.

பலவகை வண்ண மலர்கள் என்னைச் சுற்றிலும் வனப்புடன் திகழ்கின்றன. மதிப்பளிக்கும் பாவனையில் புற்கள் காற்றுக்குத் தலைகுனிகின்றன. வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்துப் பறக்கின்றன. அவற்றில் ஒரு பெரிய மயில் கண்ணன் வண்ணத்துப் பூச்சி சில சமயம் என் அருகில் பறந்து போகும். அதற்கு நான் கோட்ஃபிரீத் எனப் பெயரிட்டேன். நாங்கள் மிகவும் நெருக்கமானவர்களாகி விட்டோம். அது சிறகடித்து மேலே பறந்து வந்து, அச்சமேதுமின்றி நாள் தவருது நான் எழுதும் தாளின்மீது அமராமல் இருப்பதில்லை.

''கோட்ஃபிரீத்! நலந்தானு?'' நான் கேட்பேன்.

''எப்போதும் மகிழ்ச்சியே'' என்று மறுமொழி கூறுவது போல் சிறகுகளை மெதுவாக மேலும் கீழுமாக அடித்துக் கொண்டு திருப்தியோடு தன் வழியில் பறந்துபோகும்.

அதோ, அந்தக் கருமையான பைன் மரக்காட்டின் முனையில் வெட்டிய மரக்கட்டைகளின் பெரும் குவியல் ஒன்று உண்டு. அதன் உச்சியில் கறுப்பும் வெள்ளையும் உள்ள பூனையொன்று பதுங்கியபடி என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அது என்னேடு பேச வேண்டுமென்றுல் பேசலாம். ஆனுல், அது அப்படிச் செய்யாமல் மிரட்டுவதுபோன்று இருந்தது, எனக்கு அதன்மீது அழுத்தமான சந்தேகத்தை ஏற்படுத்தியது. நான் சிகரெட் பற்றவைக்கும் ஒவ்வொரு தடவையும் அது சற்றுப் பின்வாங்கிச் செல்லும்.

நண்பகலில் வெப்பம் மிகும்பொழுது அது சென்றுவிடும். எனக்கும் மிக உஷ்ணமாக இருக்கும். இருந்தாலும் பிடிவாதமாக இருந்து சமாளித்துக் கொள்வேன். இருப்பினும் அங்கு உட்கார்ந்து எழுதுவதென்பது அவ்வளவு எளிதான வேலையல்ல; பெரும்பாலும் உருகிக் கொண்டிருக்கும், ஒரு பனிக்கட்டி யுத்தத்தை வர்ணிப்பது அவ்வளவு எளிதல்ல.



ஒவ்வொருநாள் மாலையும் என்னைக் கூப்பிட
எட்வர்ட் வரும்.

ஆனால், நான் எனது சிறிய பெஞ்சியின்மேல் சாய்ந்து கொண்டு ஸ்"க்ஸ்பிட்ஸின் மேலே பார்ப்பேன். அதனுடைய பெரும் மலைப்பாறை இடுக்குகளில் நிலையான குளிர் பனி மின்னித் திகழும். பின்னர் மீண்டும் நான் எழுதுவேன். என்றாலும் சில சமயம் ஏரியின் காற்றோரத்திலிருந்து மேகங்கள் மேலெழுந்து ஆகாயத்தினூடே ஸ்"க்ஸ்பிட்ஸை நோக்கி நகர்ந்து சென்று அதன் முன்பாக கூட்டமாகக் கூடி நின்று பனித் தோற்றத்தை அடியோடு மறைத்துவிடும்.

அதோடு பனித்திரள் போர்களும் பனிக்காலத்திற்குரிய குறிப்பிடத்தக்க மற்ற நிகழ்ச்சிகளின் வர்ணனைகளும் முடிவடைகின்றன. ஆனால், அவைகளைப் பற்றி மட்டுமல்லாமல் வீட்டிற்குள் நடக்கக்கூடிய காட்சிகளைப் பற்றியும் நான் எழுதிக் கொண்டிருப்பேன். சூழ்நிலைகளுக்கேற்றபடி எப்படி ஒத்துப் போவது என்பதை நீ அறிந்திருக்க வேண்டுமன்றோ. ஒவ்வொரு நாள் மாலையும் எட்வர்ட் என்னைக் கூப்பிட வந்து விடும். மிக அழகானத் தோற்றமுள்ள குட்டைக் கொம்புகளையுடைய மாநிறக் கன்றுக் குட்டியாகும் எட்வர்ட். தொலைவிலிருந்தபடியே அது வரும் ஓசையை நீங்கள் கேட்கலாம். காரணம் மணியொன்று அதன் கழுத்தைச் சுற்றிக் கட்டப் பட்டிருக்கிறது. முதலில் வெகு தூரத்திலிருந்தே அதை நீ கேட்கலாம். காரணம் அதனுடைய மேய்ச்சல் நிலம் மிக உயரத்தில் மலை மேலுள்ள புல்வெளிகளாகும். பின், மணியோசை கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கிவரும். கடைசியில் எட்வர்ட் என் முன் தோன்றும். எனக்குத் தரவேண்டும் என்ற எண்ணத்தோடு சில மஞ்சள் நிற மலர்ச் செடிகளை வாயில் கவ்வியபடி உயரமான கரும்பச்சை பைன் மரக் காட்டைவிட்டு வெளி வந்து, புல்வெளியிடையே துள்ளுநடை போட்டு என் பெஞ்சிக்கு வரும்.

''ஹலோ, எட்வர்ட், வேலை முடிந்ததா?'' நான் அதைக் கேட்பேன். அது என்னை உறுத்துப் பார்த்துத் தலையை ஆட்டும். அப்போது அதன் கழுத்திலுள்ள மணி ஓசை

எழுப்பும். சிறிது நேரம் நின்று புல் மேயும். இன்னும் சில வரிகளை நான் எழுதுவேன். இங்கு அற்புதமான சூரியகாந்தி மலர்களும் காற்றுப் பூக்களும் இருக்கின்றன. ஆகாயத்தில் உயரமாகக் காற்றில் மிதந்தபடி ஒரு கழுகு வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. சுருள் வடிவாக நீலவானில் மிக உயரப் பறக்கிறது.

கடைசியாக என் பச்சைப் பென்சிலைக் கீழே வைத்தேன். எட்வர்ட் தனது வெதுவெதுப்புள்ள மென்மையான தோலால் என் மீது மெதுவாக உரசியது. தன் குட்டைக் கொம்புகளால் மெதுவாக முட்டி என்னை எழுந்திருக்கச் செய்தது. பின் நாங்கள் இருவரும் பல்வகை நிறமுள்ள அழகான புல்வெளியைக் கடந்து, வீட்டை நோக்கி மென்நடை போட்டுச் சென்றோம்.

ஹோட்டலுக்கு வெளியே நாங்கள் பிரிந்துவிட்டோம். காரணம் எட்வர்ட் தங்கியிருப்பது ஹோட்டலில் அல்ல; அந்த மூலையிலுள்ள வட்டமான பண்ணையிடம்தான் அதன் தங்குமிடம். அன்றொரு நாள் நான் பண்ணைக்காரரோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர், ''எட்வர்ட் உரிய காலத்தில் நிச்சயமாக ஒரு காளை மாடாக வளர்ந்துவிடும்'', என என்னிடம் கூறினர்.

# முன்னுரையின் இரண்டாம் பகுதி

ஒரு பச்சைப் பென்சில்; காணமற்போன சிறுவர்களது கண்ணீரின் அளவைப்பற்றிய ஒரு குறிப்பு; ஜோனத்தான் த்ரோட்ஸின் கப்பற் பயணம்; அவனுடைய பாட்டன் பாட்டி அவனைச் சந்திக்காததற்கான காரணம்; கெட்டித் தோலைப் பற்றி ஒரு புகழ்மொழி; தைரியத்தை பொது அறிவோடு இணைப்பதற்கு ஒரு அவசர அறிவுரை.

# 2

எழுதத் தொடங்க வேண்டும் என எண்ணிய வண்ணம் நேற்று இரவு, சாப்பாட்டிற்குப் பின், சாய்வு நாற்காலி யொன்றில் சோம்பேறித் தனத்தோடு உட்கார்ந்திருந்தேன். மாலையொளி மங்கி மறைந்திருந்தது. ஸுக்ஸ்பிட்ஸ் மலையும் அதன் பாறைச் சுவர் பள்ளங்களும் அணுகிவரும் இரவின் இருளில் மறைந்து கொண்டிருக்கின்றன. தொலைவிலுள்ள ஏரிக்கரையை அடுத்துள்ள இருண்ட காட்டிற்கு மேலே பூரணச் சந்திரன் புன்முறுவல் பூத்தபடி உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் நான், என் பச்சைப் பென்சில் காணமற் போயிருப்பதைக் கவனித்தேன். வீட்டிற்கு வரும் வழியில் அது என் சட்டைப் பையிலிருந்து கீழே விழுந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஒருவேளை அழகிய கன்றுக் குட்டியான எட்வர்ட், அதை புல்லின் இதழ் என எண்ணி விழுங்கியிருக்க வேண்டும். இதனல், எழுத இயலாதவனுக சாய்வு நாற்காலி யில் அமர்ந்திருந்தேன். காரணம், அது ஒரு முதல்தரமான ஹோட்டலாக இருந்தும்கூட, அந்த ஹோட்டல் முழுவதும் ஒரேயொரு பச்சைப் பென்சில் இரவல் கிடைக்கவில்லை. இது விந்தையாக இல்லையா?

கடைசியில், சிறுவர் புத்தக ஆசிரியர் ஒருவர் எனக்கு அனுப்பியிருந்த சிறுவர் புத்தகமொன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். ஆனல், சீக்கிரமாகவே அதை நான் கீழே வைத்து விட்டேன். அந்த அளவுக்கு எனக்கு அது வெறுப்பை அளித்தது! ஏன் என்பதை நான் உனக்குக் கூறுகிறேன். சிறுவர்கள் எப்போதுமே வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந் தவர்கள் என்றும் அதனல் அவர்கள் தலைகால் புரியாதவர்கள்

என்றும் நம்பவைக்க, இந்த எழுத்தாளர் தனது புத்தகத்தில் முயன்றிருக்கிறார். இந்தப் போலி எழுத்தாளன், இளமைப் பருவம் என்பது வெண்ணெயும் முட்டையும் சுத்தமான கரும்புச் சர்க்கரையும் கொண்டு உருவாக்கப் பட்டது எனக் கூறி பாசாங்கு செய்கிறான்.

ஒரு குழந்தை சில சமயம் எப்படியெல்லாம் இரங்கத்தக்க வகையில் மகிழ்ச்சியற்று இருக்க முடியும் என்பதை அறியாத விதத்தில், எப்படி வயது முதிர்ந்த ஒருவர் தன்னுடைய கடந்த கால வாழ்வை அடியோடு மறக்க முடியும்? (இங்கே நான், உங்கள் இளமைப் பருவத்தை நீங்கள் ஒருபோதும் மறக்கக் கூடாது என என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து வேண்டிக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உறுதிதானே? நல்லது!)

உடைந்துபோன ஒரு பொம்மைக்காக நீங்கள் அழுதாலும் அல்லது பிற்கால வாழ்வில் நண்பன் ஒருவனின் மறைவைக் குறித்து நீங்கள் அழுதாலும் உண்மையில் அவை இரண்டுமே ஒன்றுதான். உங்கள் வருத்தத்துக்கு காரணங்கள் எதுவாக இருப்பினும் அதில் வேறுபாடு இல்லை. எந்த விஷயத்துக்காக எவ்வளவு மகிழ்ச்சியற்றிருக்கிறீர்கள் என்பதேயாகும். குழந்தைகளின் கண்ணீர் பெரியவர்களின் கண்ணீரைவிடச் சற்றும் குறைந்ததல்ல என்பதும், சில சமயம் பெரியவர்களைவிடக் கனம் கூடியது என்பதும் கடவுளுக்குத் தெரியும். என்னைத் தவறாகக் கருத வேண்டாம். உணர்ச்சி வயப்படுவதொன்றும் நமக்கு வேண்டாம். எனினும், வேதனை தரக்கூடியதென்றாலும் நேர்மையாக இருக்க வேண்டுமல்லவா. எல்லாவற்றிற்கும் மேலானது நேர்மை.

அடுத்த அத்தியாயத்தில் நான் உங்களுக்குச் சொல்லப் போகும் எனது கிருஸ்துமஸ் கதையில் ஜோனத்தான் த்ரோட்ஸ் எனும் பெயருள்ள பையனொருவன் இருக்கிறான். அவனை மற்ற பையன்கள் 'ஜானி' என்று அழைப்பார்கள்.

அவன் மூன்றாம் படிவத்தில் படிக்கிறான். அவன் நூலின் கதாநாயகன் அல்லவென்றாலும் இங்கு அவனைப் பற்றி உங்க

ளிடையே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அவன் நியூயார்க்கில் பிறந்தவன். ஜெர்மானியரான அவன் தந்தையும அமெரிக்காவைச் சேர்ந்தவரான அவன் தாயும் 'நாயும் பூனை யும்' போன்று வாழ்க்கை வாழ்ந்தார்கள். கடைசியில், ஜானிக்கு நான்கு வயதாகும்போது, அவன் தாயார் எங்கோ ஓடி விட்டாள். அவன் தந்தை அவனை நியூயார்க் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்ருர்; அங்கே ஜெர்மனி நாட்டிற்குச் செல்லும் கப்பல் ஒன்று இருந்தது. பையனுக்கு ஒரு டிக்கெட்டை வாங்கினுர்; அவனது மாநிறச் சட்டைப் பைக்குள் பத்து டாலர் நோட்டு ஒன்றை வைத்து அவன் பெயர் பொறிக்கப்பட்ட அட்டைத் துண்டு ஒன்றை அப்பையனின் கழுத்தைச் சுற்றிக் கட்டினுர். அவர்கள் இருவரும் கப்பல் கேப்டனிடம் சென்ருர் கள். ஜானியின் தகப்பனுர் கூறினுர்: ''தாங்கள் அன்பு கூர்ந்து உங்களோடு என் மகனை ஜெர்மனிக்குத் திரும்பி அழைத்துச் செல்ல முடியுமா? நீங்கள் ஹம்பர்க் துறைமுகம் சேர்ந்தவுடன், இப்பையனின் பாட்டனும் பாட்டியும் இவனுக்காகக் காத்திருப் பார்கள்''. ''நிச்சயமாக, சார்!'' கேப்டன் பதிலளித்தார். ஜானியின் தந்தை அவனை விட்டுச் சென்று விட்டார்.

எனவே அப்பையன் தனியாகவே கடல்கடந்து சென்ருன். பயணிகள் அவனிடம் மிகவும் அன்பு காட்டி அவனுக்குச் சாக்லேட் தந்தார்கள். அட்டைத் துண்டில் உள்ள அவன் பெயரைப் படித்துப் பார்த்த அவர்கள், இந்த வயதில் கடலைக் கடக்க அனுமதிக்கப் பட்டிருக்கும் இவன் எவ்வளவு அதிர்ஷ்ட சாலியான பையன் என்றெல்லாம் அவனைப் புகழ்ந்து பேசினுர்கள்.

ஒருவாரப் பயணத்திற்குப் பின்னர் அவர்கள் ஹம்பர்க் நகரை அடைந்தார்கள். கேப்டன் பையனேடு கப்பலில் இருந்த படியே ஜானியின் பாட்டன் பாட்டி வரும் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார். இறங்கும் பயணிகள் மீண்டும் ஜானியின் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார்கள். பள்ளியாசிரியர் ஒருவர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராஞர். அவருக்குரிய

பாடம் லத்தீன் ஆகும். அவர் கூறினர்: ''பையா! இஃது உனக்குப் பயனுள்ளதாக அமையட்டும்''. கரையை நெருங்கிய போது மாலுமிகள் இரைந்து கூறினர்கள்: ''ஜானி! உன்னுடையவைகளை எடுத்து வைத்துக் கொள்'' பின் அவர்கள் நீராவிக் களத்திற்கு புதிய வர்ணப்பூச்சுக் கொடுக்கக் கப்பல் தளத்திற்கு வந்தார்கள். ஏனெனில், அமெரிக்காவிற்கு அடுத்த கடற் பயணம் தொடங்கும்போது அது புதியதோர் ஊசியைப்போல பிரகாசமாக இருக்க வேண்டுமல்லவா.

கேப்டன் அச்சிறுவனைக் கையில் பிடித்தபடி, தரை இறங்கும் இடத்தில் நின்றபடி, அவ்வப்போது தன் கைக்கடியாரத்தைப் பார்த்த வண்ணம் காத்துக் கொண்டிருந்தார். ஆயினும் ஜானியின் பாட்டனே பாட்டியோ யாருமே வரவில்லை. உண்மையாகவே அவர்கள் வரமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் இருவரும் இறந்துபோய் எத்தனையோ வருடங்களாகிவிட்டன. ஜானியின் தகப்பன், அவனை எப்படியாவது தொலைத்துத் தலைமுழுக வேண்டுமென்று கருதித்தான் கப்பலேற்றி ஜெர்மனிக்குத் தள்ளி விட்டான். ஜெர்மனி சென்றபிறகு அச் சிறுவன் நிலைமை என்னவாகும் என்பதைப் பற்றியெல்லாம் அவன் சிறிதும் கவலைப்படவில்லை.

அச்சமயத்தில், ஜோனத்தான் த்ரோட்ஸ் தனக்கு என்ன நேர்ந்துள்ளது என்பதை உணர இயலாதவனுக இருந்தான். ஆயினும், அவன் வளர்ந்தான். அவன் எத்தனையோ இரவுகளைக் கண்ணுறங்காது அழுதே கழித்திருக்கிருன். அவன் தைரியசாலிப் பையன் என்ற என் வார்த்தையை நீங்கள் ஏற்றுக் கொண்ட போதிலும், அவன் நான்கு வயதாக இருந்த போது அவனுக்கு ஏற்பட்ட அப்பெரும் துன்பத்தைத் தன் வாழ்நாள் முழுவதுமே அவனுல் மறக்க முடியவில்லை.

இன்னும், காரியங்கள் மேலும் மோசமடைந்தன. அந்தக் கேப்டனுக்கு திருமணமான ஒரு தங்கை இருந்தாள்; அவன் அப்பையனை அவளிடம் விட்டுச் சென்றுன்; ஜெர்மன் துறைமுகத்திற்கு அவன் கப்பல் வரும்போதெல்லாம் கேப்டன்

சென்று அப்பையனைப் பார்த்து வருவான். ஜானிக்குப் பத்து வயதானபோது கிர்ஹ்பர்கிலுள்ள ஸிஜிஸ்மண்ட் பள்ளி விடுதியில் தங்கிப் படிக்க அவன் அனுப்பி வைக்கப் பட்டான். (இப் பள்ளி, நம்முடைய கிருஸ்துமஸ் கதையின் போக்கில் வரும் காட்சிக் களம் ஆகும்).

இப்போதும் சில சமயம் தன் விடுமுறையை ஜோனத்தான் த்ரோட்ஸ், கேப்டனின் சகோதரி வீட்டிற்குச் சென்று கழிப்பது முண்டு. உண்மையில் அவளும் அவள் கணவனும் மிகவும் நல்லவர்கள். அவன்மீது பேரன்பு காட்டினர்கள். ஆனல், வழக்கமாக அவன் தன் விடுமுறையை பள்ளியிலேயே கழிப்பான். நிறைய படிப்பான்; யாருக்கும் தெரியாமல் கதைகள் எழுதுவான்.

ஒருவேளை, அவன் ஒரு காலத்தில் ஒரு நூலாசிரியனுக ஆவான். ஆனல், இவ்வளவு தொடக்கக் கட்டத்திலேயே அதனைக் கூறலாமோ? பள்ளி மைதானத்தில் ஒரே சமயத்தில் சேர்ந்தாற்போல் பலமணி நேரம் தங்கியிருப்பான். சிலவகைப் பறவைகளிடம் அவன் கொஞ்சிப் பேசுவான். அவைகள் தாழப் பறந்துவந்து அவன் கைமீது அமர்ந்து, அவன் பேசும்போது அவை தம் சின்னஞ்சிறு கண்களால் அவனை உற்று நோக்கி, உசாவும் முறையில், அவன் உரையாடுவதைக் கவனித்துக் கொண்டிருக்கும். சில சமயம் பத்து டாலர் நோட்டுள்ள மாநிறமான சிறு பையை அவைகட்கு அவன் காட்டுவான்.

ஜானியின் கதையை நான் எதற்காகக் கூறினேன் என்ருல், கடந்த இரவு சாய்வு நாற்காலியில் அமர்ந்து நான் படித்த புத்தகத்தை எழுதிய போலி ஆசிரியர், சிறுவர்கள் இடையரு இன்பமும் மகிழ்ச்சியும் நிறைந்தவர்கள் என்றும் தலைகால் புரியாதவர்கள் என்றெல்லாம் போலியாகக் கூறியிருந்தாரல்லவா அதற்காகத்தான். நிரம்பத் தெரிந்தவர்!

வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தைத் தேடுவது

தானே வாழ்க்கையின் முதல் முக்கியக் காரியம். அதற்கு முதலும் இல்லை முடிவும் இல்லை. பலருக்கும் நன்கு தெரிந்த இவ்வுண்மையை இங்கு நான் வற்புறுத்திக் கூறுவது உங்களை அகம்பாவம் கொள்ளச் செய்வதற்காக அல்ல. இல்லவே இல்லை. உங்களை அஞ்சி நடுங்கி வருந்தச் செய்வதற்குமில்லை. முடிந்தவரை மகிழ்ச்சியாக இருங்கள்! உங்கள் விலாவெலும்பு நோகும்வரை சிரியுங்கள்!

ஆனல், உங்களை நீங்களே முட்டாளாக்கிக் கொள்ளவும் வேண்டாம்! மற்றவர்களையும் உங்களை முட்டாளாக்கவிட வேண்டாம். வாய்ப்புக் கேடுகளை நேரடியாக முகத்தில் தெரிந்துகொள்ள கற்றுக் கொள்ளுங்கள். அதிர்ஷ்டம் உங்களுக்கெதிராக இருக்கும்போது மனந் தளராதீர்கள்! மேலுதட்டை விரைப்பாக வைத்துக்கொள்ளுங்கள்! உங்களுக்குத் தேவையானது நல்லதோர் கெட்டித்தோல்.

குத்துச் சண்டைக்காரர்கள் கூறுவதுபோல கிடைக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தெரியவேண்டும். கடினமான தாக்குதல்களை விழுங்கவும் அவற்றை ஜீரணிக்கவும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் வாழ்க்கை உங்களுக்கு ஏற்படுத்தும் முதல் பேரடியினுல் உங்கள் நிலைமை தள்ளாடித் தடுமாறும்படியாக ஆகிவிடும். காரணம் வாழ்க்கை, குத்துச் சண்டைக்காரர் அணியும் வெறுக்கத்தக்க கடினமான கையுரையைப் பயன்படுத்துகிறது. அத்தகையதொரு பேரடி, நீங்கள் தயாராக இல்லாத சமயத்தில் உங்களுக்குக் கிடைத்தால், அதனைச் சமாளிக்க முடியாதெனத் தோன்றினுல் நீங்கள் தோல்விக்குத் தயாராக வேண்டும்.

எனவே மேலுதட்டை விறைப்பாக வைத்துக்கொள்ளுங்கள்! நல்ல கெட்டியான தோலை வளருங்கள்! அத்தகைய நிலையை நீங்கள் அடையும்போது, போரில் பாதியை வென்றவராவீர்கள். காரணம், எத்தகைய தாக்குதல்களை நீங்கள் பெறினும், உண்மையில் தேவைப்படும் இரு குணங்களாகிய தைரியத்தையும், பொது அறிவையும் வெளிப்படுத்தவல்ல

மனம் தளராத்தன்மை உங்களுக்கு உண்டாகும். இந்தக் குறிப்பை நன்கு கவனத்தில் இருத்துங்கள்: பொது அறிவு இல்லாத தைரியம் கேடானதாகும்; தைரியமில்லா பொது அறிவு மடத்தனமானதாகும்! அறிவற்ற மக்கள் துணிச்சல் உடையவர்களாகவோ அல்லது அறிவுள்ள மக்கள் கோழைகளாகவோ எத்தனையோ காலப் பகுதிகளில் இருந்ததைப் பற்றி வரலாறு நமக்கு எடுத்துக்கூறுகிறது. ஆனால், அவர்களில் யாருமே மிகச் சிறந்தவர்களாக இருந்ததில்லை.

*வீரன் விவேகியாகவும் விவேகி வீரனாகவும் ஆகும்வரை,* மக்கள் அவ்வப்போது தவறான கண்ணோட்டத்தில் கூறிவரும் 'மனிதகுல முன்னேற்றம்' நமக்கு ஏற்படப்போவதில்லை.

கிட்டத்தட்ட தத்துவப் பிரதிபலிப்புகளான இச்சிந்தனைகளை எழுதிக் கொண்டிருக்கும்போது நான் பல வண்ண வேறுபாடுகளைக் கொண்ட பரந்த புல்வெளியின் மத்தியில் உடைந்து கலகலத்துப்போன மேஜையின் முன்புள்ள மரப்பெஞ்சியின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

இன்று அதிகாலை எழுதும் பொருள் விற்பனைக்கடையிலிருந்து எனக்கொரு பச்சைப் பென்சில் வாங்கினேன். மீண்டும் இப்போது மாலை நேரமாகத் தொடங்கிவிட்டது. ஸ்ுக்ஸ்பிட்ஸ் புதிய பனியுடன் பளபளக்கிறது. அதோ அந்த மரக்கட்டைக் குவியலின் மீது கறுப்பு வெள்ளை நிறப் பூனை அச்சுறுத்தும் பாவனையில் என்னையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது. என் நண்பன் எட்வர்டின் கழுத்தில் தொங்கும் மணியின் ஓசை மலைப் பகுதியிலிருந்து வருகிறது. என்னைக் கொண்டுபோக அது சீக்கிரமே வரும். அது தன் குட்டை கொம்புகளால் என்னை முட்டும். மயில் கண்ணன் கோட்ஃபிரீத் இன்று வரவில்லை. அதற்குத் தீங்கேதும் ஏற்பட்டிருக்காது என நம்புகிறேன்.

ஆம், நாளைக்கு நான் நிச்சயமாக என்னுடைய கிருஸ்துமஸ் கதையைத் தொடங்கிவிடுவேன். நான் துணிவுள்ள பையன்களையும் பயங்கொள்ளிப் பையன்களையும் புத்திசாலிப் பையன்

களையும் மண்டுகளையும் பற்றிக் கூறுவேன். ஒரு விடுதிப் பள்ளியில் எல்லாவகையினரும் உண்டு.

இப்போதுதான் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு ஜெர்மன் விடுதிப் பள்ளி எப்படி இருக்குமென்று உங்களுக்குத் தெரியுமா? அது பையன்களின் ஒருவகைப் பாசறையாகும். பெரியதோர் சாப்பாட்டுக் கூடத்தில் உள்ள நீண்ட மேஜையில் அவர்கள் தங்கள் உணவினை உட்கொள்ள வேண்டும். ஆனால், முதலில் மேஜையை அவர்களேதான் போட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் பெரியதோர் படுக்கைக் கூடத்தில் படுத்துறங்குவார்கள். அதிகாலையில் மாணவர் விடுதித் தலைவர் வந்து மணியை இழுப்பார். அது பயங்கரப் பேரொலியை எழுப்பும். ஆறும் படிவ மாணவர்களில் சிலர் படுக்கைக்கூடப் பொறுப்பாளர்களாவர். அவர்கள் கூரிய பார்வையையுடைய ஒருவகைக் காட்டுப் பூனைகளைப் போன்று, மற்ற பையன்கள் படுக்கைக்கு வெளியே தாண்டுகிறார்களா என்பதை உடனுக்குடன் கவனிப்பார்கள். சில பையன்களுக்கு தங்கள் படுக்கைகளை சரியாக வைத்துக்கொள்ள ஒருபோதும் தெரிவதில்லை. அதற்காக மற்றவர்கள், சனிக்கிழமை பாதி நாளும் ஞாயிற்றுக் கிழமையும் சுதந்திரமாக இருக்கும்போது இவர்கள் மட்டும் விடுதியுள் தங்கி தண்டனையாக எழுத்து வேலை செய்யவேண்டும் (அப்படியும்கூட அவர்கள் படுக்கையை சரியாக விரிப்பது எப்படி என்பதை கற்றுக் கொள்வதில்லை).

இப்பையன்களின் பெற்றோர்கள் தொலைவிலுள்ள நகரங்களிலோ அல்லது நாட்டுப் புறங்களிலோ வாழ்கிறார்கள். அங்கு நல்ல உயர்நிலைப் பள்ளிகள் இல்லை. அவர்களது மக்கள் விடுமுறையில் மட்டுமே வீட்டிற்குப் போவார்கள். சில பையன்கள் விடுமுறை முடிந்த பின்னரும்கூட வீட்டில் தங்கியிருக்க விரும்புவதுண்டு. ஆனால், வேறு சில பையன்கள் பெற்றோர்கள் அனுமதித்தால் மூடிய பின்னரும்கூட பள்ளியில் மேலும் சிறிது தங்கவே விரும்புகிறார்கள்.

மேலும், 'பள்ளி விடுதியில் தங்காது பள்ளி வந்து படிக்கும்

பையன்கள்' (*day-boys*) என்று அழைக்கப்படுபவர்களும் உண்டு. அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு அருகாமையிலேயே வாழ்பவர்கள். எனவே அவர்கள் பள்ளிக் கூட விடுதியில் தங்கவேண்டிய தேவை இல்லை.

இதோ, என்னுடைய அழகான கன்றுக்குட்டி நண்பனை எட்வர்ட், கரும்பச்சை பைன் மரக்காட்டின் உள்ளிருந்து வருகிறது. அது திடீரெனத் தன்னைத்தானே ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு துள்ளுநடை போட்ட வண்ணம் புல்வெளியைக் கடந்து நேராக என்னையும் என் மரப்பெஞ்சியையும் நோக்கி வருகிறது. அது என்னை இழுத்துக் கொண்டு போகவே வருகிறது. எனவே எழுதுவதை நிறுத்திவிட வேண்டும்.

அது இப்போது என் பக்கத்தில் நின்று கொண்டு என்னைப் பாச உணர்வு பொங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் இப்போது எழுதுவதை நிறுத்துவதற்கு மன்னிக்க வேண்டும். நான் நாளை அதிகாலை எழுந்து எனது கிருஸ்துமஸ் கதையை உண்மையாகவே தொடங்குகிறேன். நேற்று என்னுடைய தாயாரிடமிருந்து கடிதமொன்று வந்திருக்கிறது. அதில் அவள் கதை எதுவரை ஆகியிருக்கிறதென்று கேட்டு எழுதியிருக்கிருள்.

# அத்தியாயம் ஒன்று

மலையேறும் வீரச்செயல்; நடன வகுப்பில் ஒன்று அல்லது இரண்டு இளைஞர்கள்; சில சமயம் கடுங்கோபம் அடையும் தலைமைப் பையன்; நீண்ட வெள்ளைப் பொய்த் தாடி; 'பறக்கும் வகுப்பறை' என்ற அருஞ்செயற் கதைச் சுருக்கம்; மாதிரிப் பாடல்களோடு கூடிய அரங்க ஒத்திகையும் எதிர்பாரா இடையூறும்.

# 1

இருநூறு விசிப் பலகைகள் பின்னால் தள்ளப்பட்டன. இருநூறு பள்ளிப் பையன்கள் ஆரவாரத்தோடு எழுந்து உணவு உண்ணும் அறையின் வாயிற்புறத்தில் குதித்தார்கள். கிர்ஹ பர்க் பள்ளியில் மத்தியான சாப்பாடு முடிந்தது.

''ப்பூ!'' நான்காம் படிவ மாணவர்களுள் ஒருவனான மத்தியாஸ் ஸெல்ப்மன் என்பவன் தன் பக்கத்திலிருந்தவர்களில் ஒருவனிடம் கூறினன். ''நான் கோரமான பசியோடிருக்கிறேன். ஒரு பாக்கெட் உடைந்த பிஸ்கெட் வாங்க எனக்கு இருபது ஃபென்னிங் வேண்டும். கையில் பணம் ஏதாவது இருக்கா?''

உலி ஃபொண் ஸிம்மேன் எனும் சிறிய அழகான தலை முடியை உடைய பையன், தன் சட்டைப் பையிலிருந்த மணிபர்சைத் திறந்து, அதிலிருந்து இருபது ஃபென்னிங்கை எடுத்து, எப்போதும் ஆரும் பசியுடைய தன் நண்பனுக்குக் கொடுத்தான். ''இங்கே பார் மாட்ஸ்!'' அவன் தணிந்த குரலில் கிசுகிசுத்தான். ''ஆனல் பிடிபட்டு விடாதே! தியதோர் தோட்டத்தில் அலுவலில் இருக்கிறன்; நீ 'கேட்' வழியாக ஓடுவதை அவன் பார்த்துவிடப் போகிறன்''.

''ஆரும் படிவத்திலுள்ள கழுதைகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்'', மத்தியாஸ் இறுமாப்போடு கூறினன். ''மேலும் நீயொரு குழிமுயலாக இருக்க வேண்டாம்!'' அவன் பணத்தை சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

''மேலும் 'ஜிம்'முவுக்கு வர மறந்து விடாதே! அங்கே மற்ெருரு ஒத்திகை இருக்கிறது''.

''சபாஷ்!'' என்று மாட்ஸ் கூறி தலையசைத்துக் கொண்டே நார்டு தெருவிலுள்ள ரொட்டிக் கடைக்காரரான ஷெர்ஃபிடமிருந்து உடைந்த பிஸ்கட்டுகளை எவ்வளவு முடியுமோ அவ்

வளவு விரைவாக வாங்க மறைந்து விட்டான்.

வெளியே பனி பெய்து கொண்டிருக்கிறது. கிருஸ்துமஸ் காற்று வெளியில் வியாபித்துள்ளது. நீ அதை பெரும்பாலும் நுகர முடியும்...... பெரும்பாலான பையன்கள் வெளியே மைதானத்திற்கு ஓடி, ஒருவரையொருவர் பனிக்கட்டிகளால் தாக்கிக் கொண்டனர். யாரோ ஒருவர் சிந்தனையில் ஆழ்ந்தபடி பாதைகளில் ஒன்றின் வழியே சென்று வலிமையாக ஒரு மரத்தை உலுக்க, மரக்கிளைகளிலிருந்து மிகுதியான பனித்திரள் கள் கீழே வீழ்ந்தன.

தோட்டம் நூற்றுக் கணக்கான சிரிப்பொலிகளால் நிறைந் திருந்தது. உயர் ஆறும் படிவ இளைஞர்கள் ஓரிருவர் தங்கள் வாய்களில் சிகரெட்டோடு கோட் காலரை தூக்கிவிட்டுக் கொண்டு பெருமையோடு தாவுநடை போட்டு ஒலிம்பஸுக்கு நேரே போனார்கள். (கொஞ்ச தூரத்தில் மறைவான குன்று ஒன்று இருக்கிறது. அங்கு ஆறும்படிவ மாணவர்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப் படுவார்கள். அந்தக் குன்றுக்குத்தான் எப்போதோ 'ஒலிம்பஸ்' என்று பெயரிட்டார்கள். அது பழங் கால ஜெர்மனியின் நிவேதனக் கற்களைக் கொண்டு ஒருக்கம் செய்யப்பட்டதாக ஒரு வதந்தியுண்டு. அதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஈஸ்டர் விழாவிற்கு முன்பாக சமய சம்பந்தமான சடங்குகள் முதற்படியாக அங்கு நடத்தப் படுகின்றன. க்ர்ர்ர்!).

மற்ற பையன்கள் பள்ளிக்கூடத்திலேயே தங்கியிருந்து பொது அறைக்குச் சென்று எழுதவோ, சிறுதூக்கம் போடவோ, படிக்கவோ அல்லது கடிதம் எழுதவோ செய்தார் கள். இசை அறையிலிருந்து பியானோ இசைக் கருவியின் தந்திகளை மீட்டும் ஓசை உரத்து ஒலித்தது.

உடற்பயிற்சி மைதானத்தில் அநேகப் பையன்கள் பனிச் சறுக்கு விளையாட்டு விளையாடுகின்றார்கள். அந்த இடம் ஒரு வாரத்துக்கு முன்புதான் விடுதித் தலைவரால் பனிச்சறுக்கு விளையாட்டுத் தலமாக மாற்றப் பட்டது. அங்கு திடீரென எதிர்

பாராத பூசலொன்று எழுந்தது. பனித்தலத்தில் ஹாக்கி விளையாடும் குழுவினர் பயிற்சி செய்வதற்கென அங்கு வந்த போது, சாதாரண பனிச்சறுக்கு விளையாட்டுக்காரர்கள் மைதானத்தை விட்டு வெளியேற மறுத்தார்கள். முதல், இரண்டாவது படிவங்களைச் சார்ந்த ஒரு சில சிறுவர்கள் துடைப்பம், மண்வெட்டி முதலிய ஆயுதங்களைக் கொண்டு பனியை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்ய முனைந்தார்கள். அவர்களுடைய விரல்கள் குளிர்ச்சியால் விரைத்தபோது அவர்கள் புருவங்களை நெறித்து முணுமுணுக்கலானார்கள்.

பள்ளிக் கூடத்தின் முன்பு ஆவேசம் கொண்ட கூட்ட மொன்று அண்ணாந்து பார்த்தபடி நெருக்கியடித்துக் கொண்டு நின்றிருந்தது. ஐந்தாம் படிவத்தைச் சேர்ந்த கேப்ளர் என்ற சிறுவனொருவன் மூன்றாவது தளத்தில் கட்டடத்தின் முன்னே குறுக்காகவுள்ள ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு குறுகிய பலகணி அருகு வழியே தனியாக நடந்து கொண்டிருந்தான். அவன் ஒரு ஈயைப்போல சுவற்றில் தொற்றிக் கொண்டு பக்கவாட்டில் அடிமேல் அடிவைத்து மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த பையன்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

இறுதியில் கேப்ளர் அகலத் திறந்திருந்த பலகணியை அடைந்து ஒரே தாண்டில் அறைக்குள் சென்றடைந்தான்.

பார்த்துக் கொண்டிருந்த பையன்கள் பேரார்வத்தோடு உரக்கக் கைதட்டி ஆராவரித்தார்கள்.

''இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?'' சற்று தாமதமாக வந்து சேர்ந்த ஒரு ஆரும்படிவ இளைஞன் கேட்டான்.

''ஓ! அப்படியொன்றுமில்லை'' செபாஸ்டியன் ஃபிராங்க் பதிலளித்தான். ''நாங்கள் ஷ்ரைஃபோஜலிடம், பலகணிக்கு வெளியே பார்க்கச் சொன்னோம். காரணம், அவனுக்கு கடைக்கண் பார்வை என்பதை ஹாரி நம்பவில்லை'' மற்றவர்கள்

சிரித்தார்கள்.

''ஏது, என் காலை வாரிவிட முயற்சிக்கிறீயா?'' வினவியவன் கேட்டான்.

''அம்மாதிரி எதையும் நான் நினைக்கவில்லை'' என, செபாஸ்டியன் அடக்கத்தோடு கூறினான். ''உங்கள் அளவுள்ள ஒரு சிறுபயலை சீர்குலைந்த நிலையில் ஏன் நான் கை வைக்க வேண்டும்.''

பெரிய பையன் தன் வழியே விரைந்து செல்லலானான்.

உலி வேகமாக ஓடிவந்தான். ''செபாஸ்டியன் நீ ஒத்திகைக்கு வர வேண்டும்''.

''மன்னனும் பணியாளும் முன்னேக்கிச் சென்றுர்கள்,'' என்று பல்லைக்காட்டியபடி உரக்கக் கூறிக்கொண்டு மெதுவாக தாவி நடக்கத் தொடங்கினான்.

ஒத்திகைக் கூடத்திற்கு வெளியே முன்னதாகவே மூன்று பையன்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். 'பறக்கும் வகுப்பறை' என்ற மயிர்க்கூச்செறியத்தக்க பெயரைக் கொண்ட கிருஸ்துமஸ் கதையின் ஆசிரியரான ஜானித்ரோட்ஸ்; வகுப்புத் தலைவனும் காட்சியமைப்பாளனுமான மார்ட்டின் தாலர்; எப்போதும், குறிப்பாக சாப்பாட்டிற்குப் பின்னர் பசியுள்ளவனும் பெரியவனுகும்போது பணத்திற்காகப் பந்தயச் சண்டை போடுபவனுக ஆக விரும்புபவனுமாகிய மத்தியாஸ் ஸெல்ப்மன். செபஸ்டியனேடு உடன் வரும்போதும் கூட வாயை வேகமாக மென்று கொண்டிருந்தான். சிறியவனை உலிக்கு அவன் உடைந்த ஒருசில பிஸ்கட்களைக் கொடுத்துக் கொண்டு வந்தான். ''இதோ, நீ பெரியவனுகவும் பலமுள்ளவனுகவும் வளர வேண்டுமானல் நிறைய சாப்பிட வேண்டும்,'' என்று அழுத்தமாகக் கூறினான்.

''புத்திசாலியான ஒருவன் எப்படி இவ்வளவு அதிக உணவை ஒதுக்க முடியும்?'' செபாஸ்டியன் கேட்டான். ''ஆனல், நீ ஒரு புத்திசாலி சிறுவனில்லை. இல்லையா, மாட்ஸ்?''



ஆறும் படிவப் பையன்கள பத்து பேர் ஜோடி ஜோடியாக
இணைந்து நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

மத்தியாஸ் இயல்பான போக்கில் தோள்களைக் குலுக்கி விட்டு உணவு உண்ணச் சென்றான்.

செபாஸ்டியன் தன் காலின் கட்டைவிரல் நுனியால் ஊன்றி நின்றபடி பலகணி வழியாக எட்டிப்பார்த்து தலையைக் குலுக்கினான். ''அரை தெய்வங்கள் மற்றொரு வகை நடனம் ஆடத் தொடங்கி விட்டனர்.''

''நாம் உள்ளே போகலாம்'' மார்ட்டின் கூறினான். ஐந்து பையன்களும் ஒத்திகைக் கூடத்திற்குள் நுழைந்தார்கள். அவர்கட்கு அங்கு கண்ட காட்சி உள்ளபடியே மகிழ்ச்சி தருவ தாக இல்லை. ஆரும்படிவ மாணவர்கள் பத்துப்பேர் இருவர் இருவராக இணைந்து ஒருவரையொருவர் லேசாக உராய்ந்தபடி சுற்றி வந்து, அவர்களுடைய நடன வகுப்புக்காகப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். லாங்கி தீர்பாஷ் என்பவன் பெண்ணின் தொப்பியொன்றை இரவலாக வாங்கிக்கொண்டு வந்திருந்தான். அது வேலைக்காரியுனுடையதாகத்தான் இருக்க வேண்டும். அவன் அதை தன் தலையின் ஒரு பக்கமாகச் சாய்த்தபடி மாட்டிக் கொண்டு, அவன் ஒரு பெண்ணைப் போலவே தன் கூட்டாளியின் கைகளோடு தன் கைகளைச் சரியானபடி பிணைத்துக்கொண்டு சுற்றிச் சுற்றி நடனமாடிக் கொண்டிருந்தான்.

மார்ட்டின் நேராகப் பியானோ அருகில் சென்றான். அங்கு தியதோர் சுரக் கட்டைகளை அழுத்தி உச்சகட்ட அபஸ்வர ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தான்.

''மடக் கழுதைகள்!'' மத்தியாஸ் வெறுப்போடு முண கினான். உலி அவன் பின்னால் பதுங்கிக் கொண்டான்.

''நீங்க இப்போ நிறுத்தறீங்களா?'' மரியாதையுடன் மார்ட்டின் கேட்டான். ''நாங்கள் ஜானி த்ரோட்ஸின் நாடக ஒத்திகைகளை நடத்தவேண்டும்.''

நடனக்காரர்கள் தங்கள் நடனத்தை நிறுத்திவிட்டார்கள். தியதோர் அவனுடைய இசை நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு ''நாங்கள் முடிக்கும்வரை நீங்கள் பொறுத்திருங்கள்,'' என்று

நயமாகக் கூறிவிட்டு மீண்டும் அவன் தன் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்தான். நடனமாடுபவர்களும் தங்கள் நடன நிகழ்ச்சியைத் தொடர்ந்தார்கள்.

நான்காம் படிவ மாணவர் தலைவனான மார்ட்டின் தாலரின் முகம் கடுஞ்சிவப்பாக மாறத் தொடங்கியது. அது பள்ளி முழுவதுமே நன்கறிந்த ஒரு முன் அறிகுறியாகும்.

''நீங்கள் எப்போதுதான் நிறுத்தப்போகிறீர்கள்?'' அவன் உரத்த குரலில் கேட்டான். ''டாக்டர் போக் இரண்டிலிருந்து மூன்று வரை ஒத்திகைக் கூடத்தை எங்களுக்கு அளித்துள்ளார். உங்களுக்கே அது நன்கு தெரியும்!''

தியதோர் பியானோ ஸ்டூலின் மேலிருந்தபடி ஒரு சுற்றுச் சுற்றி ''இப்படித்தானா நீ பேசுவது? ஊம்?''

உலிக்கு ஓடிவிட வேண்டும்போல் தோன்றியது. நெருக்கடியான கட்டங்கள் என்றால் அவனுக்குப் பிடிக்காது. ஆனால், அவனது கைப்புறச் சட்டையின் நுனியை மத்தியாஸ் இறுகப் பிடித்து அவனை நிறுத்தினான். அவன் நடனக்காரர்கள்மீது ஆங்காரமான கோபத்துடன் இருந்தான். ''ப்பூ!'' அவன் மிகுந்த வெறுப்போடு முணுமுணுத்தான். ''மெலிந்து நீண்ட அந்தத் தாடையை சாரக்கட்டைத் தடியால் நான் உடைக்கணுமா?''

''வாயை மூடு!'' ஜானி கூறினான். ''மார்ட்டின் அதைக் கவனித்துக் கொள்வான்.''

பெரிய பையன்களெல்லாம் சிறுவன் தாலரை விழுங்கப் போவது போல அவனைச் சுற்றி வட்டமாக நின்றார்கள். தியதோர் மீண்டும் அவனுடைய 'டாங்கோ' இசையை வாசிக்கத் தொடங்கினான். மார்ட்டின் அக்கூட்டத்திற்கிடையே முண்டியடித்துக் கொண்டு, பியானோ இசைக்கருவியருகில் சென்று, கண்ணிமைக்கும் நேரத்தில் படாரென மூடினான். ஆறும்படிவ மாணவர்கள் திகைப்போடு பேச இயலாது நின்றார்கள். மத்தியாஸும் ஜானியும் மார்ட்டினுக்கு உதவி செய்ய விரைந்தார்கள்.

ஆனால், மார்ட்டின் எந்த நிலைமையையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தான். ''நமக்கென்று உள்ள விதிமுறைகளை எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு நீங்கள் அப்படியே கடைப்பிடிக்க வேண்டும்.'' கோபமாகக் கத்தினன். ''எங்களை விட ஓரிரண்டு வயது அதிகம் என்பதற்காக நீங்கள் 'ரொம்பவும் முக்கியத்துவமுடையவர்களாகி விட்டோம்' என்றெல்லாம் நீங்கள் ஏதும் எண்ணிவிட வேண்டாம். வேண்டுமானல் நீங்கள் டாக்டர் போக் அவர்களிடம் போய் என்னைப் புகார் செய்து கொள்ளுங்கள். ஆனல், நீங்கள் இந்த ஒத்திகைக் கூடத்தைவிட்டு வெளியேறி விடவேண்டும்!''

பியானேவின் மூடியை தியதோர் தன் கைமுட்டி கொண்டு இறக்கி மூடினன். சாதாரணமாகவே நாவிதனின் கரிய முகம் போன்றிருக்கும் அவன் முகம் சீற்றத்தால் உருமாறி யிருந்தது. ''கொஞ்சம் பொறு, பையா'', பயமுறுத்தும் வகையில் கூறினன். அப்போது அவன் சச்சரவிலிருந்து பின் வாங்கினன்.

செபாஸ்டியன் கதவைத் திறந்தான். ஆரும்படிவ மாண வர்கள் ஒவ்வொருவரும் வெளியேறும் போதும் மிக்க மரியாதை யுடன் தலைகுனிந்தான்.

''பெண்களைப் போலும் நாணமில்லாத ஜீவன்கள்'', அவர்கள் அனைவரும் வெளியேறிய பின்னர் அவன் வெறுப் போடு கூறினன். ''மோசமான அவர்களுடைய நடன வகுப்பில் சாயம் பூசிய பெண்களைப் போல் தங்களை எண்ணிக்கொண்டு ஆட்டம் போடுகிருர்கள். உலகம் முழுவதுமே அவர்களைச் சுற்றி திரும்பியிருப்பதுபோல் அவர்களுக்கு நினைப்பு. பெண் களைப் பற்றி ஆர்தர் ஸ்கோப்பென்ஹோவர் எழுதியதை அவர்கள் படிக்கவேண்டும்.''

''பெண்கள் மகிழ்ச்சி மிக்க, நேர்த்தியானவர்கள் என நினைக்கிறேன்'' ஜானித்ரோட்ஸ் கூறினன்.

''எனக்கு, குத்துச் சண்டை போடக்கூடிய அத்தை இருக் கிருள்'' பெருமிதத்தோடு மத்தியாஸ் குறிப்பிட்டான்.

''ஜோனத்தான்'' கூச்சலிட்டு மார்ட்டின் அழைத்தான். ''நாம் இனி ஒத்திகையைத் தொடங்குவோமே''.

''சரி'' ஜானி கூறினன். ''நாம் கடைசிக்காட்சி நிகழ்ச்சியை மீண்டும் ஒரு முறை செய்து பார்ப்போம். நமக்கு இது இன்னும் சரியாக அமையவில்லை. மாட்ஸ், உன் வரிகள் இன்னும் உனக்குச் சரியாகத் தெரியவில்லை''.

''நான் ஒரு நாடகத்தில் நடிக்கிறேன் என்பது என்னுடைய காப்பாளருக்குத் தெரிந்தால்,'' மத்தியாஸ் கூறினன், ''பத்து நிமிடங்களுக்குள் இப்பள்ளிக் கூடத்திலிருந்து என்னை அழைத்துச் சென்று விடுவார். எது எப்படியானாலும் நான் உங்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காகவே இதைச் செய்கிறேன். ஸெயிண்ட் பீட்டர் பாத்திரமேற்று நடிக்க உங்களுக்கு வேறு யார் கிடைப்பார்கள்?'' அப்போது அவன் தன் கால்சட்டைப் பையிலிருந்து நீண்ட வெள்ளைத்தாடியை வெளியே எடுத்துத் தன் முகத்தில் வட்டமாக ஒட்ட வைத்துக் கொண்டான்.

ஜானி எழுதிய நாடகம் விழாவில் நடைபெறவிருந்த கதம்ப நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக உடற்பயிற்சிக் கூடத்தில் நடைபெற விருந்தது. நான் உங்களிடம் கூறியதுபோல அதற்குப் 'பறக்கும் வகுப்பறை' எனப் பெயரிடப் பட்டிருந்தது. அதில் ஐந்து நாடகக் காட்சிகள் அடங்கியிருந்தன. ஒரு வகையில் அவை வருங்கால நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பதாகவே இருந்தன. காரணம், வாழ்க்கையில் ஒருநாள் உண்மையாகவே பயன்படத்தக்க ஒருவகை படிப்பு முறையாகவே அதை நான் எடுத்துக் கூறி விளக்கியிருந்தேன்.

முதலாவது காட்சியில் ஒரு பள்ளிக்கூட ஆசிரியராக ஒரு பொய் மீசையின் உதவியோடு செபாஸ்டியன் ஃபிராங்க் இப் பாத்திரத்தை நம்பத்தக்க வகையில் நடித்துக் காட்டினன். பூகோளப்பாடமொன்றை குறிப்பிட்ட அதே பகுதிக்கே சென்று கற்றுக் கொள்ளத் தன் கண்ணுடியோடு ஒரு விமானத்தில் புறப்பட்டான். 'குற்றக் காட்சியைக் காண்பதன் மூலம் படிப்பு' என்பது முதல் காட்சியில் வரும் செய்யுள் வரியாகும்.

ஆனால், அது ஜானி எழுதியது அல்ல; அதி புத்திசாலி யான செபாஸ்டியனின் சரக்காகும் அது. அவன் அதைக் கூறும்போது ஆசிரியர்கள் எல்லோரும் சிரிப்பார்கள் என்பது அவன் நம்பிக்கை. மார்ட்டின் சிறந்ததோர் ஓவியனாக இருந்த தனால், அவனே திட்டமிட்டு, காட்சிகளுக்கு வண்ணம் தீட்டினான். வெள்ளை அட்டைப் பெட்டி கொண்டு செய்து வண்ணம் தீட்டிய ஒரு விமானம், ஓவியத்தாள் குத்திவைக்கப் பயன்படும் ஊசிகளைக் கொண்டு இரண்டு இணையான கம்பித் தண்டுகளின் மேல் பொருத்தப்பட்டிருந்தது. அதில் மூன்று காற்றாடிகளும் மூன்று எஞ்சின்களும் அவர்கள் திறந்து கொண்டு உள்ளே செல்வதற்கான ஒரு கதவும் அமைக்கப் பட்டிருந்தன. (ஆனால், உண்மையிலேயே அவர்கள் உள்ளே சென்றது இணை தொலைவில் அமைக்கப்பட்டிருந்த இரும்புத் தண்டுகளுக்கிடையேயாகும்).

உலி ஸிம்மேன் பாகம் பயணம் செல்லும் பள்ளிக்கூடப் பையனொருவனுடைய ச கோ தரி யா க நடிப்பதாகும். அவனுடைய அத்தை மகள் உர்ஸுலா, ஒரு பெண்ணின் கவுனை வாங்கி அவனுக்கு அனுப்பியிருந்தாள். மேலும் அவர்கள் நாவி தனிடமிருந்து நீண்ட கிரட்ஸென் பின்னலோடு கூடிய பொன்னிற பொய் முடியை வாடகைக்கு வாங்க எண்ணயிருந் தார்கள். முந்தைய சனிக்கிழமை பிற்பகல் நாவிதனிடம் சென்று, பொய்முடியை உலியின் தலையில் சரியாக இருக்கிறதா என்று பொருத்திப் பார்த்தார்கள். அந்நிலையில் நீங்கள் அவனை ஒருபோதும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. உண்மை யில் நீங்கள் அவனை ஒரு பையன் என்றே கூற முடியாது. பொய்முடிக்கு வாடகை மொத்தம் 5 மார்க்குகளாகும். ஆனால், க்ருஜெர் என்ற பெயருடைய அந்த நாவிதன், அவர்கள் அனைவரும் சேவிங் செய்து கொள்ளும் வயதை அடையும் போது, தன்னிடமே சேவிங்குக்கு தவறாது வருவதாக வாக்களித்தால் வழக்கமான வாடகையில் பாதி குறைத்துத் தருவதாகக் கூறினான். எனவே, அவர்கள் அனைவரும் மிகவும்

நம்பிக்கைக்குரியவர்களாக அவனுக்கு அவ்விதமே உறுதியளித்தார்கள்.

நல்லது, முதல் காட்சியில் அவர்கள் எல்லோரும் விமானத்தில் ஏறிப் புறப்பட்டார்கள். இரண்டாவது காட்சியில் விமானம் வெஸுவியஸ் எனும் எரிமலைவாயின் முனையில்போய் இறங்கியது. மார்ட்டின் எரிந்து கொண்டிருக்கும் மலையை ஒரு பெரிய அட்டையைக் கொண்டு எரிமலை போன்று தோற்றமளிக்கும்படி வண்ணமடித்து அமைத்திருந்தான். அவர்கள் எரிமலையை, இணை கம்பித்தண்டின் முன்பாக வெஸுவியஸ் விழாதிருக்கும் வண்ணம் மெதுவாகத் தள்ளினார்கள். செபாஸ்டியன், பூகோள பாட ஆசிரியராக, எரிமலையின் இயல்புகளைப்பற்றித் தன் மாணவர்களுக்கு இசை சந்தத்தோடு பாடம் சொல்லியதுடன், லாவாவின் வெள்ளத்தின் அடியில் புதையுண்ட ஹெர் குலேனியம், பாம்ப்பே போன்ற ரோம நகரங்களைப்பற்றி தன் மாணவர்களிடம் கேள்விகளும் கேட்டான். இறுதியாக எரிமலை வாயிலிருந்து வெளிப்படுவதாக மார்ட்டின் திறம்பட வரைந்திருந்த தீக்கொழுந்திலிருந்து அவன் தன் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டபின், அந்தக் குழாம் தாங்கள் போகும் வழியே பறந்து சென்றது.

மூன்றுவது காட்சியில் அவர்கள் ஜிஸெக் பிரமிட்டுகளில் இறங்கினார்கள்; காட்சியினிடையே முன்னோக்கி நடந்தார்கள்; கம்பீரமாக நிற்கும் மாபெரும் அரச குடும்பக் கல்லறைகளின் கட்டட நிர்மாணத்தைப்பற்றி அவர்கட்குப் பாடம் நடத்த செபாஸ்டியன் முனைந்தான். அப்போது 'மம்மி' எனும் பதனம் செய்யப்பட்ட பிணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் முகத்தில் வெள்ளைச் சாயம் பூசிக்கொண்டு ஜானி பிரமிட்டினின்றும் வெளியே வந்தான். அவன் இப்போது இரண்டாவது ரமேஸஸ் ஆவான். அட்டை மிகவும் சிறியதாக இருந்ததால், அவன் தலையை மிகவும் குனிந்து கொண்டிருக்க வேண்டியதாயிற்று. ரமேஸஸ் முதலாவதாக நைல் நதியின் நீர்வளத்தைப் பற்றியும் பின்னர் தண்ணீரின் பொதுவான சிறப்பம்சங்களைப்

பற்றியும் புகழ்ந்தும் வாழ்த்தியும் ஒரு சொற்பொழிவு செய்தான். பின்னர் அவன் தன்னுடைய சோதிடர் வருங்கால நிகழ்ச்சிகளைப்பற்றி முன்னறிந்து கூறியுள்ள உலகத்தின் முடிவைப்பற்றி பிரஸ்தாபித்தான். உலக முடிவு இன்னும் ஏற்படவில்லை என்பதைக் கேட்டபோது அவன் மிகவும் கிளர்ச்சியடைந்தவனாக முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் அச் சோதிடனை வேலையிலிருந்து விரட்டியடிப்பதாகக் கூறி பயமுறுத்தினான். அப்போது சிறுமியாக நடித்த உலி புராதன எகிப்தின் பாரோவை (பண்டைய எகிப்திய மன்னர்களின் பட்டப்பெயர் பாரோ என்பது) பரிகசித்துச் சிரித்து, அவனது சோதிடர் நீண்ட நாளைக்கு முன்பே இறந்து போய் விட்டதாகவும் அவனிடம் கூறினாள். அதனால் இரண்டாம் ரமேஸஸ் ஏதோ ஒரு புதிரான சைகை காட்டவே, உலி முழுமையாக மயக்கமடைந்தநிலையில் மெதுவாக மூடிக்கொண்டிருக்கும் பிரமிட்டின் வாயிலுக்குள் அவனைப் பின்தொடர்ந்து செல்லலானாள். அவளை விட்டுச் செல்ல பையன்களுக்கு முதலில் பெருந்துயரமாக இருந்தது; ஆனால், அவர்கள் அந்த இடத்தை விட்டு மிகுந்த பிரயாசையுடன் வெளியேற வேண்டியதாயிற்று.

நான்காவது காட்சியில் 'பறக்கும் வகுப்பறை' வடதுருவத்தில் இறங்கியது. பூமியின் அச்சு பனியிடையே உயர்ந்தோங்கித் திகழ்வதை அவர்கள் கண்டார்கள். உருண்டை வடிவ உலகம் துருவங்களிடையே பரந்து கிடப்பதை அவர்கள் தங்கள் சொந்தக் கண்களால் கண்டுணர முடிந்தது. அதனுடைய புகைப்படமொன்றை கம்பியில்லாத் தந்தி மூலம் அவர்கள் 'கிர்ஹ்பெர்க் கெஜட்'டிற்கு அனுப்பினார்கள். ஒரு துருவக் கரடி பனியையும் பனிக்கட்டிகளின் தனிமையையும் குறித்து உள்ளத்தைத் தொடவல்ல பாட்டொன்றை பாடிக் கொண்டிருப்பதைக் கேட்டார்கள். மத்தியாஸ் கரடித் தோலைப் போர்த்திக் கொண்டு துருவக் கரடியாக நடித்தான். அவர்கள் அவனுக்கு 'குட் பை' கூறி அவனுடைய பாதத்தைக் குலுக்கி மீண்டும் பறந்து சென்றார்கள்.

மாஸ்டரின் சிறு தவறுதலாலும் இயக்கு கருவி அமைப்பான 'ஸ்டீயரிங் கீய'ரில் ஏற்பட்ட கோளாறினாலும் அவர்கள் ஐந்தாவது அதாவது இறுதிக் காட்சியில் 'சொர்க்கம்' போய்ச் சேர்ந்தார்கள். அங்கே செயிண்ட் பீட்டர் ஒரு கிருஸ்துமஸ் மரத்தருகில் அமர்ந்து 'கிர்ஹ்பெர்க் கெஜட்'டைப் படித்துக் கொண்டு கிருஸ்துமஸைக் கொண்டாடிக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அவர்களுடைய தலைமையாசிரியர் டாக்டர் க்ருல்கோர்னை தனக்கு நன்ருகத் தெரியுமென்று செயிண்ட் பீட்டர் அவர்களிடம் கூறி, அவர் இப்போது எப்படி இருக்கிருர் எனறு குசலம விசாரித்தார். தொடர்ந்து அவர், இங்கே பார்ப்பதற்கு அப்படியொனறும் அதிக விசேஷம் இல்லை என்றும் சொர்க்கத்தில் இருப்பவை எல்லாமே கண்ணுக்குப் புலனுகாதவைகள் என்றும் கூறினர். அவர்கள் புகைப் படங்கள் எடுக்க அனுமதிக்கப்படவில்லை.

இரண்டாம் ரமேஸஸ்ஸால் பிரமிட்டுக்குள் மாயக்கவர்ச்சியின் மூலம் அழைத்துச் செல்லப்பட்ட சிறுமியை விடுவிக்க பீட்டரினுல் முடியுமே என்று மாஸ்டர் கேட்டார். பீட்டர் தலையாட்டினர். அவர் ஏதோ ஒரு மந்திர உச்சாடனத்தை ஓதினர்; உடனே உலி வண்ணமயமான மேகங்களிடையே எழுந்து தோற்றமளித்தாள்; அவளைக் கண்டு அவர்கள் எல்லோரும் மிக மகிழ்ந்தார்கள். 'அமைதி இரவு' என்ற இசையோடு நாடகம முடிவடைந்தது.

பார்வையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய எல்லோருமே கிருஸ்துமஸ் பாடலைச் சேர்ந்து பாடினர்கள். இவ்வாறு நிகழ்ச்சி மிக வெற்றிகரமாக முடிவுற்றது.

எனவே, அவர்கள் இன்று கடைசிக் காட்சியை ஒத்திகை பார்த்தார்கள். பீட்டர் அதாவது மத்தியாஸ் வண்ண கிருஸ்துமஸ் மரத்தின் முன் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிருர். உலியைத் தவிர மற்றவர்கள்—உலி இப்போதும் பிரமிட்டிலதான்—அவரைச் சுற்றி அவருக்குப் பெரிதும் மதிப்

பனிக்கும் நிலையில் நின்றார்கள். மத்தியாஸ் தன்னுடைய வெளுத்த செயற்கைத் தாடியைத் தடவிக் கொண்டு தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாழ்ந்த குரலில் கூறினான்:

பீட்டர் : நீங்கள் அடைந்ததாய் நினைக்கும் சொர்க்கம்
உண்மைச் சொர்க்கம் இல்லை உணர்வீர்;
விமானத்தில் ஏறி மேகங்கள் சுற்றினீர்;
ஆகாயந் தன்னையும் ஆராய்ந்தீர் கருவியால்—
உங்கள் நம்பிக்கை உடைத்திட விரும்பேன்!
கண்ணுக்குப்புலப்படாச்சொர்க்கம்எங்கெனில்
ஆகாயச் சுவர்களுக் கப்பால் இருப்பது!
என்னை மட்டுமே காண்பீர்; ஆனால்
மற்ற எவருமே உம்கண்ணில் படார்!

மார்ட்டின்: ஆம் ஆம் வேதனை நிலைதான்; ஆயினும்
அதுவே உண்மைச் சொர்க்கமா யிருப்பின்
மனிதர் குறையினை ஒத்துக் கொள்கிறோம்!

பீட்டர் : சொர்க்கம் எதுவெனில் செத்தவன் காண்பதே!
ஜானி : புகைப்படம் எடுப்பதைத் தடுத்திடுவீரோ?
பீட்டர் : புகைப்படம் எடுப்பது விதிக்குப் புறம்பாம்;
பயனிலாச் செய்கை என்பதும் எம்எண்ணம்!
கண்கள் காண்பதைத் துருவுக; ஆனால்
விளங்காத பொருளில் இறங்கிட வேண்டாம்!

மத்தியாஸ் கடைசிவார்த்தையைக் கேட்டுத் தடுமாறினான். அது அவனுக்குப் பெரும் கஷ்டமாகத் தோன்றியது. இது அவனை அடுத்த வரியை மறக்கும்படி செய்தது. பேசாது மன்னிப்புக் கேட்கும் போக்கில் அவன் கவியுலக இளவரசனை ஜானியைப் பார்த்தான். ஜானி அருகே சென்று அவனுக்குத் தணிந்த குரலில் அவ்வரியை எடுத்துக் கூறினான்.

''ஆ! அதுதான்!'' மாட்ஸ் கூறினான். ''ஆனால், உங்களுக்குத் தெரியுமல்லவா, எனக்குப் பசி தாங்காது என்று!

அது என் நினைவாற்றலையே குழப்புகின்றது''. பின், அவன் தன்னைச் சரி செய்து கொண்டு ஒரு இருமல் இருமி தொடர்ந்து சொல்லலானான் :

கண்கள் காண்பதை ஆராய்க ; ஆனால்
புரியாத பொருளில் தலையிட வேண்டாம்;
உங்களை அறிவோம்—சற்றே தடுப்பினும்
உடனே நீங்கள் பொங்கி எழுவீர் ;
இருப்பினும் மூடத்தனத்திற்கு மேலே
சற்றே படித்தவன் தான் புத்திசாலி !

ஜானி : நீங்கள் கடுமையாய் இருப்பவரன்றோ
செயிண்ட் பீட்டரே, உண்மையைச்
செப்பினால்...
கற்றிடும் ஆசை எங்களுக்கில்லையே !

மார்ட்டின் : மூளைக்கு அதிக வேலையும் தவறே.

செபாஸ்டியன் : நீங்களெல்லாம் அனைத்தும் அறிவீர்
என்று கேள்விப் படுகிறோம் பீட்டரே,
அப்படி யாயின் நீங்களே அறிவீர்
எங்களுள் ஒருவரை நாங்கள் இழந்ததை,
திடகாத் திரராய் நன்னெஞ் சுடன்தான்
தோன்றினார் மன்னர் ரமேஸஸ்;
தொடர்ந்து அவர்பின் சென்ற அவனைக்
காணோம் பிரமிட் இடையே வழிதவறிப்
போனான் !

பீட்டர் : சரிசரி, அவ்விதம் தவறிய குழந்தையை
மீட்டிடப் பலவழி உண்டு ; அவற்றுள்
சக்தி வாய்ந்த மந்திர மொன்றை
உபயோகிப்பேன். ஆனால் ஒன்று ;
உங்கள் குரல்கள் ஒலிக்கக் கூடாது—
சத்தியம் செய்க ; இன்றேல் சக்தி

'வீணாய்ப் போகும் விளைவை உணர்வீர்!
காலடிச் சுவட்டைக்
காட்டுவது பூமி
சொல் அழிந்தாலும்
செவியில் ஒலிக்கிறது;
வாருங்கள்......மேலே !

அக்கணமே உடற்பயிற்சிக் கூடத்தின் கதவு திடீரெனத் திறந்தது. சொற்கள் மத்தியாஸின் தொண்டையிலேயே நின்று விட்டன. மற்றவர்கள் திடுக்கிட்டு சுற்றிலும் பார்த்தார்கள். தான் உள்ளே நுழைவதற்கான குறிப்பை எதிர் பார்த்தபடி வர்ணம் அடித்த மேகத்திற்குப் பின்னால் இருந்த உலி மேகத்தின் முனைப் பகுதியில் பேரார்வத்தோடு ஒளிந்தபடி சுற்றிலும் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

ஒரு பையன் வாயிற் கதவருகில் நின்று கொண்டிருந்தான். அவனுடைய முகமும் ஒரு கையும் இரத்தக் கறையோடு இருந்தன. அவன் உடைகள் கிழிந்திருந்தன. அவன் மிகுந்த கோபத்தோடு தன் பள்ளித் தொப்பியைத் தரையை நோக்கி வீசியடித்தான். ''என்ன நடந்ததென்று உனக்குத் தெரியுமா?'' அவன் கத்தினான்.

''இல்லை. எங்களுக்கு எப்படித் தெரியும் ஃபிரிடோலின்?'' சிநேகபாவத்தோடு மத்தியாஸ் கேட்டான்.

''பள்ளி விடுதியில் தங்காது பள்ளி வந்து படிக்கும் பையன் ஒருவன் கொஞ்ச நேரத்திற்குப் பின் என்னைப்போல—நீ மோசமாக உடையணிந்து வருவதைப்போல — உடுத்திக் கொண்டு பள்ளிக்கு வந்தபொழுது'', செபாஸ்டியன் கூறினான்.

''அப்போது —''

ஃபிரிடோலின் இடைமறித்தான். ''சரி அந்தச் பேச்சை விடு'' அவன் கத்தினான். ''நான் க்ரூய்ஸ்கெம்முடன் சேர்ந்து வீட்டிற்குப் போகும்போது உயர்நிலைப் பள்ளியில் சிறு பயல்கள் ஒரு கூட்டமாக எங்களை எதிர்த்து, க்ரூய்ஸ்கெம்மை சிறை பிடித்தார்கள். அவனுடைய தந்தை திருத்துவதற்காக

நாங்கள் கொண்டு போயிருந்த நோட்டுக்களையெல்லாம் அவர்கள் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள்!'' (க்ருய்ஸ் கெம்முடைய தகப்பனுர் ஜான் ஸிஜிஸ்மண்ட் பள்ளியில் ஜெர்மன் மொழி ஆசிரியர் ஆவார்.)

'ப்பூ! நோட்டுப் புத்தகங்களை அவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள், இல்லையா?'' மத்தியாஸ் கூறினுன். ''அதுவும் நல்லதுக்குத்தான்!''

மார்ட்டின் தன் நண்பன் ஜானியைப் பார்த்தான். ''நாங்கள் ஆறுபேர்'', அவன் சொன்னுன். ''அது போதுமா?'' ஜானி தலையாட்டினுன்.

''அப்போ, வாருங்கள்'' மார்ட்டின் கூவினுன். வேலியைக் கடந்து பிரித்துக் கொடுக்கப்பட்ட பகுதிகளுக்குள் செல்லத் தொடங்குங்கள்! புகை பிடியாதவருடைய இடத்திற்கு வெளியே நாம் எல்லோரும் சந்திப்போம்''.

அவர்கள் உடற்பயிற்சிக் கூடத்திற்கு வெளியே பாய்ந்தார்கள். உலி, மத்தியாஸுக்கு வெகு அருகில இருந்தான். ''தியதோர் இப்போது நம்மைக் கண்டு பிடித்தால்,'' அவன் பெருமூச்சு விட்டான். ''அதெல்லாமே மறைந்து போகும்''.

''அப்பாடியானுல் இங்கே தங்குவதா?'' மத்தியாஸ் கூறினுன்.

''உனக்கு நடுக்கம் வந்து விட்டதா?'' சிறுவன் வேதனையோடு கேட்டான்.

அவர்கள் மைதானத்தின் முனையை அடைந்தார்கள். வேலிமேல் ஏறி, அடுத்த பக்கத்தில் குதித்தார்கள்.

மத்தியாஸ் இன்னும் தன் நீண்ட வெள்ளைத் தாடியை அணிந்து கொண்டிருந்தான்.

# அத்தியாயம் இரண்டு

புகை பிடியாதவரைப் பற்றிய சில தகவல்கள்; எழுத்திலக்கணத்தில் மூன்று பிழைகள்; உவியின் அச்சம்; ரயில் பெட்டியில் போர்க் குழுக் கூட்டம்; ஃபிரிடோவினின் வேவு நடவடிக்கை; க்ருய்ஸ்கெம் தாக்கப் படுவதற்கும் நீண்ட தூர ஓட்டத்திற்கான காரணமும் அடங்கியது.

# 2

'புகை பிடியாதவர்' என்பது, அவரது சரியான உண்மைப் பெயரை அறியாததால் அவருக்கு அவர்கள் கொடுத்த பெயராகும். புகை பிடியாதவர் என்று அவரை அழைப்பதற்குக் காரணம் அவர் புகை பிடிப்பதில்லை என்பதல்ல ; உண்மையில் அவர் அதிகம் புகைப்பவராவார். அவர்கள் அடிக்கடி அவரிடம் போவார்கள். ஆனால் எப்போதும் ரகசியமாகத்தான் செல்வார்கள். அவர்களுக்கு அவரை மிகவும் பிடித்திருந்தது. கிட்டத்தட்ட தங்களுடைய விடுதித் தலைவர் டாக்டர் யொஹன் போக்கை விரும்பியது போன்றே அவர்கள் இவரையும் விரும்பினார்கள்.

அவருடைய ஒதுக்கிடத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பழைய ரயில் பெட்டியின் காரணமாகத்தான் அவர்கள் 'புகை பிடியாதவர்' என அவரை அழைத்தார்கள். இந்தப் பெட்டியில் தான் ஆண்டு முழுவதும் அவர் வசித்து வந்தார். அப் பெட்டி முழுவதுமே இரண்டாவது வகுப்பு 'புகை பிடியாத' கம்பார்ட்மெண்டுகளைக் கொண்டதாகும். ஓராண்டுக்கு முன்பு அந்த ஒதுக்கிடத்தில் முதன் முறையாக வந்து வசிக்கத் தொடங்கிய போது அவர் அதை ஜெர்மன் நேஷனல் ரயில்வேயிடமிருந்து 180 மார்க்குகளைக் கொடுத்து வாங்கினார். அதில் அவர் சில மாற்றங்களைச் செய்து அதை ஒரு வீடாக ஆக்கினார். ஒவ்வொரு கம்பார்ட்மெண்டின் வெளிப் பக்கத்திலும், சிறிய தோர் வெள்ளைப் பலகையில் பொறித்திருந்த 'புகை பிடியாத' என்ற சொற்களை அவர் அப்படியே விட்டு வைத்திருந்தார்.

கோடை காலத்திலும் இலையுதிர் காலத்திலும் அவரது சிறிய தோட்டம் வியக்கத்தக்க அருமையான மலர்களால் நிறைந்திருந்தது. செடிகளுக்குத் தண்ணீர் வார்த்தல்,



நீர் ஊற்றி முடிந்ததும் அவர் பசும்புல் தரையில் அமர்ந்து படித்தார்.

மண்ணைக் கிளறி விடுதல், பறித்து நட்டு மறுபயிர் செய்தல் ஆகிய பணிகளை முடித்த பின்னர், அவர் பசும் புல்வெளியில் கீழே அமர்ந்து அவரிடமுள்ள புத்தகங்களில் ஒன்றை எடுத்துப் படிப்பதுண்டு. குளிர் காலத்தில் அவர் பெரும்பாலும் தனது நேரத்தின் பெரும் பகுதியை உள்ளேயே கழிப்பதுண்டு. ஒரு சிறிய செங்குத்தான கரு நீலநிற புகை போக்கிக் குழாயோடு கூடிய கணப்படுப்பைக் கொண்டு அவர் தன்னுடைய அசாதாரண சிறிய வீட்டை உஷ்ணப்படுத்துவார். புகைபோக்கிக் குழாய் கூரைக்குமேல் நீட்டிக் கொண்டிருந்தது. சில சமயம் அதிலிருந்து பயங்கரமாக புகை வெளிவரும்.

ஜானி அவருக்கு கிறிஸ்துமஸுக்கு ஒரு பரிசு கொடுக்க விருந்தான். (கேப்டன் நியூயார்க்குக்கு கடற்பயணம் சென்றிருப்பதால் இவ்வாண்டு ஜானி கிருஸ்துமஸ் விடுமுறையை பள்ளிக் கூடத்திலேயே கழிப்பான்.) சிறுவர்கள் பணம் வசூலித்து சில பரிசுப் பொருட்களை முன்னதாகவே வாங்கி வைத்திருந்தார்கள்: வெப்பந்தரும் காலுறைகள், புகையிலை, சிகரெட், கறுப்பு நிறக் கம்பளிச் சட்டைகளாகும் அவை. கம்பளிச் சட்டை பொருந்தக் கூடியதாகவே இருக்கும் என்று நம்பினார்கள். என்ருலும், முன்னேற்பாடாக, அவசியமேற்பட்டால் அதனை மாற்றிக் கொள்ளக் கூடிய ஏற்பாட்டையும் கடைக்காரரோடு செய்து கொண்டார்கள்.

மார்ட்டினுக்கு எப்போதும் வறுமைதான். அவன் பெற்ருேர்கள் ஏழைகளாக இருந்ததால் அவனுடைய பள்ளிக் கட்டணத்தில் பாதியை உபகாரச் சம்பளம் மூலம் பெற்றுச் செலுத்தி வந்தான். புகை பிடியாதவருக்காக அவன் ஒரு ஓவியம் வரைந்தான். அதற்கு அவன் 'துறவி' எனப் பெயரிட்டான். ஒரு ஒதுக்கிட தோட்டத்தில் ஒளிரும் வண்ண மலர்களுக்கிடையே ஒரு மனிதன் அமர்ந்திருப்பதுபோல் அவ்வோவியம் காட்டியது. வேலிக்கருகிலிருந்து மூன்று பையன்கள் அவரைக் கையசைத்து சைகை செய்து அழைத்தார்கள். அவர் மகிழ்ச்சியற்று இருப்பினும் அன்பாக அவர்களைத் திரும்பிப் பார்த்தார்.

நம்பிக்கையோடு சிறு வயல்வெளி சுண்டெலிகளும் மைனுக் குருவிகளும் அவருடைய கையிலும் தோளிலும் வந்து அமர்ந்தன. மின்னும் வண்ணத்துப் பூச்சிகள் தலைக்குமேல் சிறகடித்துப பறந்தன.

அது மிக அருமையான படம். அதை வரைய மார்ட்டின் குறைந்தது நாலு மணி நேரம் எடுத்திருக்க வேண்டும்.

கிருஸ்துமஸ் மாலையன்று புகை பிடியாதவரை வியப்பிலாழ்த்தும் வண்ணம் இந்தக் கிருஸ்துமஸ் பரிசைக் கொண்டு சென்று கொடுக்க வேண்டும். அவர் தனிமையில் இருப்பார் என்பதை அவர்கள் அறிவார்கள். அதற்காக அவர்மீது அவர்கள் கழிவிரக்கங் கொண்டார்கள்.

ஒவ்வொரு மாலையும் அவர் நன்கு உடை உடுத்திக் கொண்டு நகரத்திற்குச் செல்வார். தான் பியானோ பாடங்கள் கொடுப்பதாக அவர், அவர்களிடம் கூறினார். அதை அவர்கள் மறுத்துப் பேசவில்லை. அதே சமயம் அவர் கூறுவது அனைத்தையும் அவர்கள் நம்புவதுமில்லை.

வீட்டில் தங்கிப் பள்ளி சென்று பயிலும் மாணவனும் எங்கும் ஓரளவு சுற்றித் திரிபவனுமான ரூடி க்ருய்ஸ்கெம், அவர் நகர்ப்புறத்தில் உள்ள 'மச்சை எலும்பு' எனும் பெயருடைய ஒரு பீர்க் கடையில் ஒவ்வொரு நாள் மாலையும் இரவு வெகுநேரம் வரை பியானோ வாசிப்பார் என்று கூறினான். அதற்குப் பிரதி பலனாக அவருக்கு ஒரு மார்க்கும் ஐம்பது ஃபென்னிங்கும் சூடான இரவுச் சாபபாடும் அவருக்குக் கிடைக்கும். இதிலிருந்து எல்லாம் தெளிவாகிவிடவில்லை. ஆனால், ஒருவேளை அப்படியும் இருக்கலாம். எதுவானாலும் அதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படவில்லை. அவர் ஓர் நல்ல மனிதர் என்பதை மட்டும் அவர்கள் எல்லோரும் அறிவார்கள். அவர் தலையை ஒருபக்கமாக வளைத்தமாதிரி வைத்துக் கொண்டிருந்தார்; ஒருவேளை ஏதாவது கஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். அவரைப் பார்த்தால் புகை நிறைந்த பீர்க் கடையில் இறுதி நடனத்திற்கான ராகங்களை தொடக்க முதல் இறுதியோசை வரை வாசிக்க

வேண்டுமெனக் கருதியவராகத் தெரியவில்லை.

அவர்கள் அவ்வப்போது திருட்டுத்தனமாக அவரைக் காணவும் அவரது அறிவுரைகளைக் கேட்கவும் போவது உண்டு. குறிப்பாக அவர்கள் விடுதித் தலைவரோடு அதிகம் பேச விரும்புவதில்லை. டாக்டர் போக்குக்கு அவர்கள் இட்ட செல்லப் பெயர் 'ஜஸ்டஸ்' என்பதாகும. அதாவது 'நீதிமான்' என்பது அதன் பொருளாகும். காரணம் டாக்டர் போக் நீதி தவருதவராக இருந்தார். அதனுல்தான் அவர்கள் அவரை அந்த அளவுக்கு உயர்வாக மதித்து அழைத்தார்கள்.

ஆனுல், சில சமயம் நியாயம் எது அநியாயம் எது எனப் பிரித்தறிவது கடினமாக இருக்கும் விஷயங்களில் அவர்கட்கு தக்க அறிவுரை தேவைப்படும். அப்போது ஜஸ்டஸ் அருகில செல்ல அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் விரைந்து வேலியைத் தாண்டிச் சென்று புகை பிடியாதவரைக் கேட்பார்கள்.

இன்னலுற்றவனும் வீட்டில் தங்கிக் கொண்டு பள்ளியில் பயிலும் பையனுமான ஃபிரிடோவிடுேடு சேர்ந்து மார்ட்டினும் ஜானியும் ஸெபாஸ்டியனும் கேட் வழியாக வெறுமையான பனி மூடிய தோட்டத்திற்குள் சென்ருர்கள். மார்ட்டின் கதவைத் தட்டினுன். அப்போது அவர்கள் ரயில் பெட்டிக்குள் மறைந்து கொண்டார்கள்.

மத்தியாஸும் உலியும் கேட்டில் நின்ருர்கள். "நமக்கு மற்ருெரு நல்ல அடிதடி இருக்கும் போல் தோன்றுகிறது," முழுத் திருப்தியுடன் குறிப்புரையாகக் கூறினுன் மத்தியாஸ்.

"பெரிய காரியம்," உலி கூறினுன், "அந்தப் பயிற்சி நோட்டுப் புத்தகங்களைத் திரும்பப் பெறவேண்டுமல்லவா."

"எனக்கு நம்பிக்கையில்லை," மத்தியாஸ் பதில் கூறினுன். "நான் சில பெருந் தவறுகளைச் செய்துவிட்டதாக எனக்கு ஏதோ ஒரு தெளிவற்ற குற்ற உணர்வு இருக்கிறது. உலி, 'Provinse' என்பதில் 'S' என்ற எழுத்தைப் போட்டுத்

தானே எழுத வேண்டும்?''

''இல்லை,'' உலி கூறினன். '''C' என்ற எழுத்தைப் போட்டு!''

''ஆஹா'' மத்தியாஸ் கூறினன். ''ஆகவே நான் அதை தவருக உச்சரித்திருக்கிறேன். 'Littrature' என்பதில் இரண்டி 'T' எழுத்துக்களா?''

''இல்லை, ஒன்றுதான்''.

''அது எப்படி இரண்டு 'T' வரும்?''

'L-i-t-e-r-a-t-u-r-e.'

''ப்பூ!'' மத்தியாஸ் கூறினன். ''இரண்டு சொற்களில் மூன்று பிழைகள். இதில் நான் எல்லோரையும் விஞ்சி விட்டேன். உயர்நடுநிலைப் பள்ளியின் சிறு பயல்கள் க்ருய்ஸ் கெம்மிடம் கையகப் படுத்தியுள்ளதிலெல்லாம் எனக்குப் பங்குண்டு. ஆனல், பயிற்சி நோட்டுப் புத்தகங்கள் எல்லாம் அவர்களே வைத்திருக்கட்டும்.''

இடையே சிறிது நேரம் அவர்கள் ஏதும் பேசவில்லை. உலிக்கு நடுங்கியது. முதலில் ஒரு காலிலும் பிறகு மற்ருெரு காலிலும் நிற்கும்படியிருந்தது. கடைசியாக அவன் கூறினன்: ''எல்லாம் ஒரே மாதிரியாகத் தான், மாட்ஸ். நான் உன்னேடு விரைந்து மாற வேண்டும். சொல்வதை எழுதுவதிலோ அல்லது எண் கணக்கிலோ நான் அவ்வளவு அதிகத் தவறு களைச் செய்ய மாட்டேன் என்று எனக்குத் தெரியும். எனினும் உன்னுடைய முயற்சி முனைப்பு எனக்கிருந்தால் உன்னுடைய மோசமான ரிப்போர்ட்களை நான் பொருட்படுத்த மாட்டேன்.''

''அதெல்லாமே மோசம்,'' மத்தியாஸ் பிரஸ்தாபித்தான். என்னை எவ்வகையிலும் எதுவுமே புத்திசாலியாக்க முடியாது. என்னுடைய தந்தை தன் சொத்து அனைத்தையும் இழக்கும் வரை என்னுடைய இந்த உருப்போடும் படிப்புக்காக மேன் மேலும் செலவழிக்கட்டும்; அதனல் எந்த விதமான சிறு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. பிறகு, உன்னேடு உண்மை யைப் பேச வேண்டுமென்ருல் 'ப்ராவின்ஸ்,' 'லிட்டரேச்சர்'

ஆகிய சொற்களை நீ எப்படி எழுத்துக் கூட்டிப் படித்தாலும் அதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. நான் பெரிய வனுனல் ஒரு குத்துச் சண்டை 'சாம்பியன் ஆவேன். பிறகு என்ன? உனக்கும் வேண்டாமென்ருல் நீயும் கூட இங்கு இப்படி பயந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.''

''உனக்கு இதுதான் தெரியும்,'' உலி சோர்வடைந்த வனுகக் கூறியபடி, தன் பிசுக்குள்ள விரல்களைத் தேய்த்துக் கொண்டான். ''இப்படிக் கோழைத்தனமில்லாதிருக்க நான் செய்திருக்கும் காரியங்களுக்கு எல்லையே இல்லை. ஒவ்வொரு சமயமும் நான் என் சொந்த நிலையிலேயே நிற்க வேண்டும் என்றும் ஓடிப் போகக் கூடாதென்றும் மனதைத் திடப்படுத்திக் கொள்வேன். ஆனுல், சமயம் வரும்போது நான் ஓடிப் போய் விடுவேன். மற்ற சிறுவர்கள் விசுவாசத் தோடு என்மீது நம்பிக்கை வைப்பது இயலாததாகும்.''

''மற்றவர்கள் உன்னிடம் மரியாதை காட்ட வேண்டு மாஞல் நீ அவர்களுக்கு ஏதேனும் நல்லதைச் செய்ய வேண்டும். வேண்டியதும் அதுவே,'' மத்தியாஸ் கூறினுன். 'அட கடவுளே, இந்த உலி எப்படிப்பட்ட பயலாக இருக்க வேண்டும். நாம் அவனைப் பொறுத்தவரை தவறு செய்து விட்டோம், அவ்வளவு தான்.''

உலி தலையை ஆட்டி கீழே பார்த்தான். பூட்ஸின் விரல் முனைப் பகுதியால் வேலியின் மேலுள்ள ஒரு அட்டையை ஒரு உதை கொடுத்தான். ''ஒரு பனிக்கட்டித் துண்டைப்போல் நான் குளிர்ந்து போயிருக்கிறேன்,'' கடைசியில் அவன் கூறினுன்.

''அதில் ஆச்சரியம் எதுவுமில்லை,'' மத்தியாஸ் சற்று அழுத்தமாகக் கூறினுன். ''நீ போதிய அளவு சாப்பிடவில்லை. அது முழுக்க முழுக்க அவமானமாகும். உன்னைச் சாப்பாட்டு மேஜையில் பார்க்க எனக்குச் சகிப்பதில்லை. உனக்கு வீட்டு ஏக்க நோய் பிடித்திருக்கிறதென எனக்குத் தோன்றுகிறது. அது தானே?''

''ஆ! அப்படியொன்றுமில்லை,'' உலி மெதுவாகக்கூறினுன்.

''சில சமயம் இரவில், படுக்கைக் கூடத்தில், இளம் படைவீரர் பாசறையிலிருந்து கொம்பு ஊதும சத்தத்தைக் கேட்கும்போது மட்டும் தான்'' அவனுக்குத் தன்னைப் பற்றியே வெட்கம் ஏற்பட்டது.

''எனக்கு மீண்டும் பசிக்கிறது,'' மத்தியாஸ் தன பசியையே வெறுத்தபடி கத்தினான். ''இன்று காலையில் ஜெர்மன் வகுப்பிலும் இதே போல்தான் இருந்தது. ஆசிரியர் க்ரூய்ஸகெம்மிடம் பாக்கெட்டில்ரொட்டித் துண்டுகள் ஏதேனும இருக்குமா வென்று நான்கேட்க நினைத்தேன். அதற்குப் பதிலாக 'ப்ராவின்ஸ' போலவுள்ள மடத்தனமான சொற்களை 'எஸ்' என்றோ அலலது 'ஸி' என்றோ அவைகளை எழுத்துக் கூட்டிப் படித்துக் தலையைப் புண்ணக்கிக் கொள்ளும் படியாயிற்று.''

உலி சிரித்தான். ''மாட்ஸ,'' அவன் கூறினான். ''அந்த வெள்ளைத் தாடியை எடுத்துவிடு.''

''தெய்வமே, நான் இப்போதும் அந்தப் பழைய கடற்பாசியை அணிந்திருக்கவா?'' மத்தியாஸ் கத்தினான். 'அது' வும் என்னைப் போலவே இருக்கிறது'' அவன் தாடியைசட்டைப் பையில் திணித்துக் கொண்டு, குனிந்து, ஒரு குவியல் பனி உருண்டைகளைச் செய்து, அவற்றை மிகுந்த பலத்துடன் 'புகை பிடியாதவ'ரின் புகைக் கூண்டை நோக்கி எறிந்தான். இம் மாதிரி அவன் இரண்டு முறை தாக்கினான்.

புகை வண்டிப் பெட்டியினுள் மற்ற நான்கு பையன்கள் கெட்டுப் போன பழைய ஆசனம் ஒன்றின் மீது அமைதி குலைந்தவர்களாக அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய நண்பரான புகை பிடியாதவர் அப்படியொன்றும் வயதானவர் இல்லை. ஒரு வேளை முப்பத்தைந்து வயது இருக்கும். அவர் ஒரு பழைய 'ஸ்போர்ட்ஸ' சட்டை அணிந்து கொண்டிருந்தார்; மூடுவதற்குக் கடினமாக இருந்த கதவின் மேல சாய்ந்தபடி ஒரு சிறிய புகைக் குழாயின் மூலம் புகை பிடித்துக் கொண்டு, புன்முறுவல் பூத்தபடி, நடந்த தாக்குதலைப் பற்றி ஃப்ரிடோவின் சொன்ன முழு விவரங்களையும்

கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு வழியாக இறுதியில் எல்லாவற்றையும் கூறி முடித்தான்.

''இனி செய்ய வேண்டிய காரியம்,'' செபாஸ்டியன் கூறினன், ''ஃப்ரிடோலின் உடனே-க்ருய்ஸ்கெம்மிடம் போய், ரூடி வீட்டிற்கு வந்து விட்டானு என்றும், அவன் நோட்டுப் புத்தகங்களைத் தன்னோடு எடுத்து வந்திருக்கிருனு என்றும் கெட்டிக்காரத்தனமாகத் தகவல் அறிந்து வரவேண்டும்.''

ஃப்ரிடோலின் குதித்து எழுந்து புகை பிடியாதவரைப் பார்த்தான், அவர் தலையாட்டினர்.

''ரூடி வீட்டிற்கு வரவில்லை என்றல், நீ வேலைக்காரியிடம் என்ன நடந்தது என்பதைக் கூற வேண்டும்; அவள் அதை ஹெர் க்ருய்ஸ்கெம்மிடமிருந்து மறைத்து வைத்துக் கொள்வாள்,'' என்று மார்ட்டின் அறிவுறுத்தினன்.

''அதோடு நீ எகர்லாண்டிற்கு வெளிப் பக்கத்தில் எங்களைப் பார்க்க வேண்டும். நாங்கள் அங்கே காத்துக் கொண்டிருப்போம். அந்தப் பயல்கள் ரூடியை வெளியே விடாமலோ, பாடப் பயிற்சிப் புத்தங்களைக் கொடுக்காமலோ இருந்தால், நாம் எகர்லாண்டின் கூரை மீது ஏறவேண்டும். அவன் தான் அவர்களுடைய தலைவன். நாம் பிடிக்கப்போவது அவனைத்தான். ஒரு வேளை நாம் அவனைச் சிறைப் பிடித்தால் அவனைப் பிணையாளியாக வைத்திருப்போம். அப்போது நாம், அவனை மற்றவர்களோடு பேரம் பேசலாம். ரூடிக்குப் பிணையாக அவனை மாற்றிக் கொள்ளலாம்.''

''சரி,'' ஃப்ரிடோலின் கூறினன். ''எகர்லாண்டு எங்கே வசிக்கின்றன் என்று உனக்குத் தெரியுமல்லவா — 17, ஃபோர்ஸ்ட்ரேய் தெரு. அப்போ நான் போகிறேன்! நீங்கள் வர மறந்து விடாதீர்கள்.''

''சபாஷ்!,'' மற்றவர்கள் கத்தினர்கள். ஃப்ரிடோலின் எதிரிகளால் ஊறுபடுத்தப்பட்டு, கைக் குட்டையால் கட்டப் பட்டிருந்த தன் கையை புகை பிடியாதவரிடம் காட்டிய பிறகு விரைந்து வெளியேறினன் மற்றவர்கள் எழுந்தார்கள்.

''இனி எனக்குக் கூறுங்கள்,'' புகை பிடியாதவர் தெளிவான, நம்பிக்கையூட்டும் தொனியில் கூறினார். ''எகர்லாண்டும் உயர் நடுநிலைப் பள்ளியின் மற்ற பையன்களும் ஜெர்மன் ஆசிரியருடைய மகனை கைதியாகச் சிறைபிடித்தது, உங்களுடைய அறிவுக் கூர்மை மிக்க எழுத்துக்களைக் கொண்ட நோட்டுப் புத்தகங்களைக் கைப்பற்றியது ஆகியவை எப்படி நடந்தன?''

பையன்கள் ஏதும் கூறாது அமைதியாக இருந்தார்கள். அப்போது மார்ட்டின் ''அது ஒரு புத்தக ஆசிரியரின் வேலையாகும். ஜானி, நீ அவருக்கு எடுத்துச் சொல்,'' எனக் கூறினான்.

''அதற்கு முன்பு அங்கே ''எவ்வளவோ நடந்துள்ளது'' ஜானி விவரித்தான். எங்களுக்கும் உயர் நடுநிலைப் பள்ளிப் பயல்களுக்கும் இடையே வரலாற்றுக் காலந் தொட்டே ஓயாச் சண்டை சச்சரவு உண்டு. பத்தாண்டுகளுக்கு முன்பும் இப்படியே தான் இருந்தது எனக் கேள்விப் பட்டிருக்கிறேன். தகராறு இரண்டு பள்ளிகளுக்கும் இடையே தானே தவிர பையன்களுக்கு இடையே இல்லை. எல்லாப் பையன்களும் அந்தப் பாரம்பரியத்தை அப்படியே கடைப்பிடித்து வருகிறார்கள். கடந்த மாதம் ஒரு நாள் நாங்கள் அவர்களுடைய விளையாட்டு மைதானத்திலிருந்த ஒரு கொடியைப் பிடுங்கினோம்.

அது ஒரு வகைக் கடற் கொள்ளைக்காரர்களின் கொடி போன்றது; ஒன்றுக்கொன்று குறுக்காக அமைந்த இரு எலும்புகளின் மேல் அமைந்த அச்சம் தரத்தக்க மண்டையோட்டுடன் கூடியது அக்கொடி. கொள்ளையடிக்கப்பட்ட அப்பொருளைத் திருப்பித்தர நாங்கள் மறுத்து விட்டோம். எனவே அவர்கள் ஜஸ்டஸுக்குப் போன் பண்ணி புகார் செய்தார்கள். அவர் எங்களை மிக மோசமாகத் திட்டினார். ஆனால், எங்களில் யாருமே எதுவும் கூற முனையவில்லை. இறுதியில் அவர் கூறினார், 'நீங்கள் மூன்று நாளைக்குள் அந்தக் கொடியை உயர்

நடுநிலைப் பள்ளி மாணவர்களிடம் ஒப்படைக்க வில்லையென்றால், பதினைந்து நாளைக்கு என்னோடு பேச உங்களை அனுமதிக்க மாட்டேன்.''

''புது மாதிரியான பயமுறுத்தலாக இருக்கே,'' புகை பிடியாதவர் சிந்தனை தேங்கிய புன்முறுவலோடு கூறினார். ''அப்படியேதான் நடந்தது.''

''அது நடந்தது மிக வேடிக்கையாகும்,'' ஜானி கூறினான். அடுத்த நாள் அந்தக் கொடி, அது முன்பு எங்கே இருந்ததோ அங்கேயே திரும்பவும் போய்ச் சேர்ந்து விட்டது. ஆகாயத் தினின்றும் விழுந்ததைப் போன்று விளையாட்டு மைதானத்தில் அது கிடந்ததை அவர்கள் கண்டார்கள்.''

''ஒரே ஒரு குறை மட்டும் ஏற்பட்டிருந்தது,'' மார்டின் தொடர்ந்து கூறினான். ''அந்தக் கொடி கொஞ்சம் கிழிந்து விட்டிருந்தது.''

''நல்ல கிழிச்சல்,'' மார்ட்டின் திருத்தம் செய்தான்.

''அதனால் அவர்கள் இப்போது பயிற்சிப் புத்தகங்கள் மூலம் பழிக்குப் பழி வாங்க முயற்சிக்கிறார்கள் என்பது தான் என் கருத்து'' என செபாஸ்டியன் சூசகமாகக் கூறி முடித்தான்.

''சரி, வரலாற்றுக்கு முன்பிருந்தே நடந்து வரும் உங்கள் சண்டைக்கு நீங்களும் போங்கள்,'' புகை பிடியாதவர் கூறினார். ''ஒரு வேளை ஃபோர்ஸ்ட்ரேய் தெரு விலுள்ள போர்க்களத்திலே நானும் வந்து சேர்வேன். ஊறு நேர்ந்தவர்களுக்குக் கட்டுப் போட்டு உதவலாம் அல்லவா. ஆனால், நான் இப்போது உடுப்பு மாற்ற வேண்டும். நான் உங்களுடைய ஜஸ்டஸை மிகமிக அதிகமாக விரும்புகிறேன்.''

''ஊம்'' ஆர்வ மேலீட்டால் மார்ட்டின் கத்தினான். ''அவர் மிகச் சிறந்த தோழர் — நமது டாக்டர் போக்.''

புகை பிடியாதவர் லேசாகத் தொடங்கினார் ''அவர் பெயர் என்ன?''

''டாக்டர் யொஹன் போக்,'' ஜானி கூறினான். ''உங்களுக்கு அவரைத் தெரியாதே, தெரியுமா?''

''இல்லை'' புகைபிடியாதவர் கூறினார். ''அதே பெயருள்ள வேறொருவரை எனக்குத் தெரியும் ...... ஆனால், அறிவு பண்பாட்டில் முதிர்நிலை பெருத சிறுவர்களாகிய நீங்கள் உங்களுடைய போர் வழியில் இப்போது வேகமாகப் போங்கள். உங்களுடைய சொந்தக் கழுத்தையோ அல்லது மற்றவர்களுடைய கழுத்தையோ நெறிக்கும்படியாகவோ அல்லது நெறிக்கவோ செய்யாது கவனமாக இருக்க வேண்டும், தெரிந்ததா? நான் உடுப்பு மாற்றி அடுப்புப் பற்றவைக்க வேண்டும்.''

''குட் பை'' மூன்று பையன்களும் கத்திக் கொண்டு தோட்டத்திற்கு ஓடினார்கள்.

''அவருக்கு ஜஸ்டஸைத் தெரியுமென்று நான் பந்தயம் கட்டுகிறேன்,'' அவர்கள் வெளியே இருக்கும் போது செபாஸ்டியன் கூறினன்.

''அது நம்முடைய வேலையில்லை,'' மார்ட்டின் வலியுறுத்திக் கூறினன்.

''இவர் அவரைப் பார்க்க வேண்டுமென்றால் இவருக்கு அவரது முகவரி தெரிந்திருக்குமே.''

அவர்கள் மத்தியாஸையும் உலியையும் அடுத்துச் சென்றார்கள். ''இறுதியில்,'' மத்தியாஸ் உறுமினன். உலி ஒருமாதிரி விரைக்கத் தொடங்கினன்.

''நல்ல ஓட்டம் அவனுக்கு நல்ல வெதுவெதுப்பைக் கொடுக்கும்,'' மார்டின் கூறினன். ''வாருங்கள்'' அவர்கள் நகரத்தை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

# அத்தியாயம் மூன்று

ஃபிரிடோவின் திரும்புதல்; ஐரோப்பாவின் மிகச் சிறந்த மாணவர் தலைவரைப் பற்றி ஒரு உரையாடல்; ஃபிராங் எகர்லாண்டின் சமீபத்திய குழப்பம்; நடந்து செல்லும் ஒரு தூதுவன்; ஏற்க முடியாத கோரிக்கைகள்; பயன் தரத்தக்க போர்த் திட்டம்; புகை பிடியாதவரின் மேலும் அதிகப் பயன் தரத்தக்க ஒரு திட்டம்.

# 3

அப்போதும் பனி பெய்து கொண்டிருந்தது. ஓடிக் கொண்டிருக்கும் பையன்களின் மூச்சு அவர்கள் சிகரெட்டு பிடித்துக் கொண்டிருக்கிறார்களோ என எண்ணும் விதத்தில் கனத்த ஆவியாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. பார்பரோஸா ப்ளாட்ஸாவிலுள்ள ஈடன் திரைப்படக் கொட்டகைக்கு வெளியே மூன்றும் படிவத்தைச் சேர்ந்த, பள்ளி விடுதியில் தங்காது பள்ளி வந்து படிக்கும் சில பையன்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் திரைப்படம் பார்ப்பதற்காக கதவு திறக்கும் வரை காத்துக் கொண்டிருந்தார்கள்.

''ஓடுங்கள்,'' மார்ட்டின் தன் கூட்டாளிகளை நோக்கி கூவினான். ''நான் உங்களிடம் வந்து சேர்ந்து விடுவேன்'' அவன் விடுதியில் தங்காது பள்ளிவந்து படிக்கும் பையன்களிடம் சென்றான். ''நீங்கள் எங்களுக்கொரு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்,'' அவன் வேண்டினான். ''திரைப் படத்தைப் பற்றிக் கவலை இல்லை! உயர் நடுநிலைப் பள்ளியிலுள்ள ஜந்துக்கள் க்ரூய்ஸ்கெம்மை கைப்பற்றியிருக்கிறார்கள். நாங்கள் அவனை விடுவிக்கப் போகிறோம்''.

''நாங்களும் உங்களோடு வரலாமா?'' ஷ்மிட்ஸ் எனும் பெயர் கொண்ட பையன் கேட்டான். அவன் உயரம் குறைந்தும் உருண்டுமிருந்ததால் 'தூபி' என்று அழைக்கப்பட்டான்.

''வேண்டாம்'' மார்ட்டின் கூறினான். ''நமக்கு எவ்வளவோ நேரமிருக்கிறது. பதினைந்து நிமிடங்களுக்குள் ஃபோஸ்ட் ரைஸ் தெரு மூலையிலுள்ள வோர்க்வெர்க் தெருவில் இருக்க வேண்டும். உங்களோடு இன்னும் சிலரை அழைத்து வாருங்கள். ஆனால், எல்லோரும் சேர்ந்து ஓரே கூட்டமாக ஒருமித்துச் செல்ல வேண்டாம். உங்களது தொப்பிகளைச் சட்டைப் பைகளில் திணித்து வைத்துக் கொள்ளுங்கள்!

நாம் சில காரியங்களைச் செய்யப் போகிறோம் என்பது அந்த ஜந்துக்களுக்குத் தெரியவேண்டாம்.''

''சரி, மார்ட்டின்,'' தூபி கூறினன்.

''எங்களை கைவிட்டுவிட வேண்டாம்!''

''சபாஷ்!'' மூன்றும் படிவப் பையன்கள் கத்தினர்கள். மார்ட்டின் துடித்துக்கொண்டு ஓடினன். அவன் மற்றவர்களை அடுத்துச் சென்று அவர்களையெல்லாம் பல்வேறு கிளை வழிகள் மூலம் ஃபோஸ்ட்ரேய் தெருவை நோக்கி கூட்டிச் சென்றுன். மற்றவர்கள் கண்ணில் படாதபடி மறைந்திருப்ப தற்காக அவர்கள் எல்லோரும் வோர்வெர்க் தெருவின் மூலையை அடைந்து நின்றார்கள்.

அப்போது ஃப்ரிடோலின் ஓடி வந்தான்.

''என்ன ஆயிற்று?'' ஒரே குரலாக எல்லோரும் கேட்டார்கள்.

''ரூடி இன்னும் வீட்டிற்கு வந்து சேரவில்லை. அவன் மூச்சு வாங்கியபடி கூறினன். அதிர்ஷ்டவசமாக அவர்களு டைய வேலைக்காரி பார்வையில் படுவது போல அவ்வளவு முட்டாள் அல்ல க்ரூய்ஸ்கெம், ரூடி எங்கே என்று கேட்டால் அவள், இரவு உணவு உண்ண அவனைத் தன் வீட்டிற்கு அழைத்திருப்பதாகக் கூறி விடுவாள்.''

''அப்போ, நாம் அதற்குத் தயார் தான்,'' மத்தியாஸ் திருப்தியுடன் கூறினன். நான் 17ஆம் நம்பருக்குள் பதுங்கிச் சென்று எகர்லாண்டை அழித்துவிட்டு வந்து விடுகிறேன்.''

''நீ இங்கேயே இரு,'' மார்ட்டின் உத்திரவிட்டான். 'முஷ்டிப் போரால் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயமல்ல இது. உன்னல் எகர்லாண்டின் தலையே போனாலும் கூட க்ரூய்ஸ்கெம்முக்கும் பயிற்சிப் புத்தகங்களுக்கும் என்ன நேர்ந்தது என்பது நமக்குத் தெரியப் போவதில்லை. நீ பொறு! உனக்குத் தகுந்த வேலையை நாங்கள் பார்த்துத் தருகிறோம்.''

''இங்கே தான் என்னுடைய பங்கு வருகிறது!'' செபாஸ் டியன் ஃப்ராங்க் கூறினன். அது சரிதான். ''நான் ஒரு

தூதனைகப் போகிறேன். ஒரு வேளை இதைக் கூடிப் பேசுவதன் மூலம் நாம் தீர்த்துக் கொள்ளக் கூடும்.''

''நீ பந்தயம் கட்டினாலும் அது நடக்காது!'' மத்தியாஸ் பரிகாசமாகச் சிரித்தான்.

''எதுவானாலும் அவர்கள் ரூடியை என்ன செய்தார்கள் என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியும்,'' செபாஸ்டியன் மறுமொழி கூறினான். ''அது ஏதாவதொன்றாக இருக்கும்,'' அவன் வெளியேறினான். மார்ட்டின் கொஞ்ச தூரம் அவனோடு சென்றான்.

மத்தியாஸ் ஒரு விளக்குக் கம்பத்தின் மீது சாய்ந்து கொண்டு நின்றான். தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய நோட்டுப் புத்தகத்தை எடுத்து அவன் ஏதோ மனக் கணக்குப் போடுவது போல உதடுகளை அசைத்துக் கொண்டிருந்தான்.

உலி மீண்டும் குளிரால் விறைக்கத் தொடங்கினான். ''நீ எதைக் கணக்குப் போடறே மாட்ஸ்?'' அவன் கேட்டான்.

''நான் என்னுடைய கடன்களைக் கூட்டுகிறேன்,'' மத்தியாஸ் சோர்ந்தவனாய் உண்மையை ஒப்புக் கொண்டான். நான் என்னுடைய அப்பாவை வீட்டிலிருந்தும் குடிசையிலிருந்தும் வெளியே அனுப்புவேன்.'' அவன் நோட்டுப் புத்தகத்தை மூடித் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். ''ஃப்ரிடோலின்,'' அவன் கூறினான். ''எனக்குப் பத்து ஃபென்னிங்ஸ் கடன் கொடு. மிக முக்கியமான காரணத்துக்காகத் தான் அது. நாளை மறுநாள் நான் நிச்சயமாக அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். எனக்கு என் அப்பாவிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருக்கிறது. தகப்பனார் வீட்டிற்கு வருவதற்கான பயணச் செலவுக்கும், வழிச் செலவுக்கும் 20 மார்க்கு அனுப்புகிறார். ஏதாவது சாப்பிடக் கிடைக்கவில்லையெனில் என்னால் சண்டையிடாமல் இருக்க முடியாது.''

''இது முழுக்க முழுக்க அச்சுறுத்திப் பணம் பறிப்பதேயாகும்.'' ஃப்ரிடோலின் [illegible] அவனுக்குப் பத்து ஃபென்

MAHAMAHOPADHYAYA ...NED LIBRARY.

ஙிங்ஸ் கொடுத்தான்.

மத்தியாஸ் பக்கத்திலிருந்த ரொட்டிக் கடையை நோக்கி அம்பெனப் பாய்ந்தான். அவன் திரும்பி வந்தபோது அவன் மகிழ்ச்சியோடு வாயை அசை போட்டுக் கொண்டு வந்தான். அவன் ஒரு காகிதப் பையை அவன் கூட்டாளி களின் முன் நீட்டினுன். அப் பை முழுவதும் சுருள் ரொட்டி இருந்தது. ஆனுல், அவர்களுக்கு அதைத் தின்பதற்கான பசியேதும் இல்லாததால் அது அவர்களுக்குத் தேவைப்பட வில்லை. ஃப்ரிடோலின் பேரார்வத்தோடு மூலைப் பகுதியைச் சுற்றி உற்றுப் பார்த்தான். ஜானி ட்ரோட்ஸ் பல சரக்குக் கடைக்காரனின் ஜன்னலுக்கு நேராக உற்றுப் பார்த்தபோது, அங்கு வைக்கப் பட்டிருந்த சாமான்களெல்லாம் இன்காவின் பொக்கிஷமோ என எண்ணும்படி இருந்தது. ஜானி ட்ரோட் ஸை அவர்கட்குத் தெரியும். ஏதாவது அவன் கண்ணில் பட்டால் அவன் தன் வாழ்க்கையில் அதற்கு முன்பு அப்படி யொன்றை கண்டதே இல்லை எனும்படி அதனை உறுத்துப் பார்ப்பான். அவன் அதிகம் பேசாததற்கு ஒரு வேளை அதுவே காரணமாகக் கூட இருக்கலாம். அவன் எப் போதும் ஏதாவதொன்றைப் பார்ப்பதிலும் கேட்பதிலும் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தான்.

மார்ட்டின் மூலைப் பகுதியைச் சுற்றி வந்து தலையை மட்டுமே ஆட்டினுன். வோர்வேர்க் தெருவிலுள்ள முதலாவது வீட்டிற்குள் புகுந்து திடீரென மறைந்து விட்டான். மத்தியாஸின் பசியைக் குறித்து உலி மகிழ்ச்சியடைந்தான். ''மார்ட்டின் அற்புதமானவன், இல்லையா?'' அவன் கூறினுன். அவன் ஆறும் படிவ பையன்கள் உடற் பயிற்சிக் கூடத்தி லிருந்து வெளி வருவதைப் பற்றி அவன் நினைக்கலானுன்.

''மார்டின் ஐரோப்பாவிலேயே விசித்திரமான வகுப்புத் தலைவன் என்பதில் யாதொரு ஐயமுமில்லை,'' வாய் அசை போட்டபடியே மத்தியாஸ்கூறினுன். அவன் வேலையில் மிக ஆர்வ முடையவனைப் போன்று பொய் பாவனை செய்யும் அளவுக்குப்

படிப்பில் கடும் முயற்சியுடையவன் அல்ல. அவன் எப்போதும் வகுப்பில் முதல் பையன்தான். என்ருலும் எங்கே சச்சரவு உண்டோ அங்கே அவனும் இருப்பான். அவன் உபகாரச் சம்பளம் பெறுகின்ற பையன். அவனுக்கு மானியத் தொகையோ என்னவோ கிடைத்து வருகிறது. எனினும் அவன் யாரிடமிருந்தும் எதையும் எடுத்துக் கொள்வதில்லே. தலேவர்களாலும் அடாவடிக்காரர்களாலும் அல்லது கிழக்கேயிருந்து வந்த மூன்று அரசர்களேயாலும் அவன் யாரையும் மதித்துக் கவலேப்படுவதில்லே. அவனுக்கு நேர்மை என்று தோன்றுமிடத்தில் காட்டெருமை போன்று அவன் மூர்க்கத்தனமுள்ளவனுக இருப்பான்.

''அவன் ஜஸ்டஸையே தனக்குரிய முன்மாதிரியாகக் கொண்டுள்ளான் என நான் நம்புகிறேன்,'' உலி ஒரு பெரிய ரகசியத்தை வெளிப்படுத்துவதுபோலக் கூறினுன். ஜஸ்டஸைப் போல நீதிமானுக இருக்கவேண்டுமென்ற பேரார்வம் அவனுக்கு உண்டு. அவன் இவ்வாறு அவருடைய பரமபக்தனுக இருப்பதற்கு இதுவே காரணமாக இருக்க வேண்டும்.

செபாஸ்டியன், 17, ஃபோர்ஸ்ட்ரேய் தெருவின் மூன்ருவது மாடியில், எகர்லாண்டின் குடியிருப்புப் பகுதியின் வெளிப் பக்கத்தில் உள்ள மணியை அடித்தான். ஒரு மாது வாசல் கதவைத் திறந்து கடுகடுப்புடன்நோக்கினுள். ''உங்கள் மகன்படிக்கும் வகுப்பில்தான் நானும் ஒன்ருகப் படிக்கிறேன்,'', செபாஸ்டியன் கூறினுன். '' நான் அவனேடு பேசமுடியுமா?''

''உங்களுக்கும் பையன்களுக்கும் என்ன சச்சரவு என்று என்ருல் அறிந்து கொள்ளவே முடியலேயே,'' அம் மாது குறைபட்டவளாய் முணுமுணுத்தாள். ''எதுக்காக இவ்வளவு பரபரப்பு? முதலில் உங்களில் ஒருவன் வந்து தன்னுடைய பனிச் சறுக்குக் கலத்தை நிலவறையில் வைக்க, அதனுடைய திறவு கோல் வேண்டுமென்ருன்; பின்னர் மற்ருெருவன் வந்து துணி உலர்த்தும் கொடி இரவல் கிடைக்குமா என்று கேட்டான்; மற்றவர்களோ உரத்த காலடியோசையுடன் இங்கே வந்து

என்னுடைய சமுக்காள விரிப்பை நாசப்படுத்தினார்கள்.

செபாஸ்டியன் மிகுந்த கவனத்துடன் தன்னுடைய காலணிகளை வாசல் மிதியடி விரிப்பின் மீது துடைத்தான். "அவனோடு வேறு யாராவது இருக்கிறார்களா ஃபிரோ எகர்லாண்டு?" அவன் கேட்டான்.

அவள் சிடுசிடுப்போடு தலையை ஆட்டி அவனை உள்ளே போக அனுமதித்தாள். "அதுதான் அவன் அறை" என்று கூறிக்கொண்டே அவள் இடைவழியின் முடிவில் இருந்த ஒரு கதவைச் சுட்டிக் காட்டினாள்.

"ஓ, மறந்து போவதற்கு முன்பே கேட்க வேண்டும்," செபாஸ்டியன் கேட்டான், "அவர்கள் நிலவறைத் திறவு கோலைத் திரும்பக் கொடுத்து விட்டார்களா?"

"நீயும் உன்னுடைய பனிச்சறுக்குக் கலத்தை அங்கே வைக்க வேண்டும், இல்லையா?" அவள் முணுமுணுத்தாள்.

"அதற்கு அவசியமில்லை, ஃபிரோ எகர்லாண்டு" அவன் கூறினான். கதவைத் தட்டாமலேயே அறையினுள் நுழைந்தான். அங்கே எதிரி தலைவன் உட்கார்ந்திருந்தான்.

இளைய எகர்லாண்டு ஆச்சரியத்தோடு நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்தான். "இதற்கு என்ன பொருள்?" அவன் இரைந்தான். "நீ யொஹன்—ஸிஜிஸ்மண்ட்—இடே!" செபாஸ்டியன் கூறினான். "நான் ஒரு வகையில் தூதுவனாக வந்திருக்கிறேன். நான் ஒரு ராஜப் பிரதிநிதி. அன்புகூர்ந்து அதை மறந்து விட வேண்டாம்."

எகர்லாண்டு வெறுப்போடு புருவங்களைச் சுழித்தான். "அவ்வாறானால் குறைந்த பட்சம் நீ ஒரு வெள்ளைத் துணியை உன் கையைச் சுற்றிக் கட்டிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் என்னுடைய ஆட்கள் உன்னைப் பார்த்தார்களானால் உன் நிலைமை கஷ்டமாகிவிடும்."

செபாஸ்டியன் தன் சட்டைப் பையிலிருந்து தனது கைக் குட்டையை வெளியே எடுத்தான் 'அது அவ்வளவு வெண்மையாக இல்லையே," அவன் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே

கூறினான். அவன் அதைத் தன் இடது கையாலும் பல்லாலும் பிடித்துக் கொண்டு வலது கையைச் சுற்றிக் காட்டினான்.

" உனக்கு என்ன வேண்டும் ? " எகர்லாண்டு கேட்டான்.

" எங்களுக்கு வேண்டியதெல்லாம் இளைய க்ருய்ஸ்கெம்மையும் பயிற்சிப் புத்தகங்களையும் திருப்பித் தரவேண்டுமென்பதே யாகும். "

" அதற்குப் பதிலாக நீங்கள் எங்களுக்கு என்ன தருவீர் கள் ? "

" எதுவும் இல்லை " செபாஸ்டியன் மிக அமைதியாகக் கூறினான். எங்களுடைய ஆட்கள் இங்கே வந்து கொண்டிருக் கிறார்கள். நீங்கள் சிறைபிடித்துள்ள கைதியை உங்களுடைய சொந்த இணக்கத்தின் அடிப்படையில் விடுதலை செய்யவில்லை என்றால் நாங்கள் அவனை விடுவித்துக் கொண்டு போவோம். "

எகர்லாண்டு சிரித்தான். " முதலில் நீங்கள் அவனைக் கண்டுபிடியுங்கள். பிறகு அவனை நீங்கள் விடுவிக்கலாம். இந்த இரண்டு வேலைகளுக்கும் நேரமாகுமே, மகனே. "

"நெருங்கிய நண்பனைப்பற்றி இவ்வளவு மோசமாகப் பேசி யிருக்க வேண்டியதில்லை; கண்டிக்கும் முறையில் பதிலளித் தான். "நான் உங்களுடைய மகனல்ல என்பதை மறந்து விட வேண்டாம். மேலும் ருடி க்ருய்ஸ்கெம்மை நீங்கள் என்ன செய்ய வேண்டுமென நினைக்கிறீர்கள்? காரியங்கள் மிகவும் அருவருக்கத்தக்கதாக, உங்களுக்கு எதிராக உருமாறிக் கொண்டிருக்கிறது என்றாலும் நாம் காரியத்தைக் கவனிப் போம். உங்களுடைய ஒப்பந்த விதிமுறைகள் தான் என்ன ?"

"நாங்கள் விதிப்பதெல்லாம் ஒரேயொரு நிபந்தனை தான்" எகர்லாண்டு கூறினான். எங்களுடைய கொடியைக் கிழித்த தற்காக மன்னிப்புக் கேட்டும், சிறை பிடிக்கப் பட்டவனையும் பயிற்சிப் புத்தகங்களைத் திருப்பித் தருமாறு கோரியும் நீங்கள் உடனடியாக எங்களுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும்."

"நாங்கள் மறுத்தால் ?"

'' நீங்கள் மறுத்தால் பயிற்சிப் புத்தகங்களைத் தீ வைத்து நாங்கள் கொளுத்துவோம். க்ரூய்ஸ்கெம்மையும் எங்களிடமே வைத்துக் கொள்வோம் உங்களுக்கு நான் இந்த வாக்குறுதியைத் தருகிறேன். நீங்கள் அந்தக் கடிதத்தை எழுதவில்லையென்றால் அவன் முகத்திலெல்லாம் மூலை முகக் கூறுகள் தோன்றும்.''

'' நாங்கள் உங்களுடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள இயலாமல் இருக்கிறோம்; என செபாஸ்டியன் கூறினான். '' நான் உங்களிடம் கூறும் வார்த்தை இது தான்: க்ரூய்ஸ்கெம்மை விட்டு விடுங்கள்; எவ்வித நிபந்தனையுமின்றி பயிற்சிப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்.''

''உங்கள் தாளிப்பை நான் இதற்கு முன்பே கண்டிருக்கிறேன்,'' எகர்லாண்டு உறுதியாகப் பதிலளித்தான்.

'' அப்படியானால் இதற்குமேல் அதிகமாக நான் ஏதும் செய்வதற்கில்லை,'' செபாஸ்டியன் கூறினான். ''பத்து நிமிடங்களுக்குள் நாங்கள் கைதியை விடுவிக்கப் புறப்படத் தொடங்குவோம்.''

எகர்லாண்டு ஒரு கறுப்புத் துணியை மேஜையிலிருந்து எடுத்து, ஜன்னலைத் திறந்து, அங்கே அதைத் தொங்கவிட்டு, முற்றத்தை நோக்கி '' ஹோய்!'' எனக் கத்தினான். பின்னர் அவன் ஜன்னலை மூடிவிட்டு ஏளனமாகச் சிரித்தான். ''அப்படியானால் சரி, வந்து அவனைக் கொண்டு போங்கள்,'' அவன் கூறினான்.

அவர்கள் இருவரும் ஒருவரைநோக்கி ஒருவர் வெறுப்புடன் தலையாட்டிக் கொண்டனர். செபாஸ்டியன் விரைவாக குடியிருப்பை விட்டு வெளியேறினான்.

அவன் மீண்டும் தன் சகாக்களோடு சேர்ந்தபோது மூன்றும் படிவப் பையன்கள் துபியின் தலைமையில் சரியான நேரத்தில் அங்கே வந்து சேர்ந்தார்கள். வோர்வெர்க் தெருவில் சரியாக இருபது பள்ளி மாணவர்கள் நின்று கொண்டு தங்கள் குளிர்ந்த குதிகால்களை சேர்ந்தாற்போல் தட்டிக்

கொண்டு தங்கள் தூதன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

''கிழிந்த கொடிக்காக மன்னிப்புக் கேட்டும், கைதியையும் பயிற்சிப் புத்தகங்களையும் திருப்பித் தருமாறு வேண்டியும் நாம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்கின்ருர்கள்,'' செபாஸ்டியன் செய்தியை அறிவித்தான்.

''எவ்வளவு ஆசை,'' மத்தியாஸ் இரைந்து கூவினன். ''வாருங்கள் நல்ல வலுவானதாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்.''

''மார்ட்டினைப் பற்றி என்ன?'' பேரார்வத்தோடு உலி கேட்டான்.

''க்ருய்ஸ்கெம்மை அவர்கள் என்ன செய்கிருர்கள்?'' ஜானி ட்ரோட்ஸ் கேட்டான்.

''அவர்கள் அவனைக் கட்டி, எகர்லாண்டின் நிலவறையில் பூட்டி வைத்திருக்கிருர்கள் என்று நினைக்கிறேன்,'' செபாஸ்டியன் கூறினன். ''எகர்லாண்டின் தாயிடமிருந்து இது சம்பந்தமான நல்ல குறிப்பொன்று வெளிவந்தது. நிலவறையின் திறவுகோலையும் துணி உலர்த்தும் கொடியையும் அவர்கள் இரவல் வாங்கியிருக்கிருர்கள்.''

''வேடிக்கை தொடங்க இது தான் நல்ல சமயம்'' துபிகத்தினன். மற்றவர்களும் காத்து நின்று சோர்வுற்ருர்கள்.

அப்போது மார்ட்டின் ஓடி வந்தான். ''விரைந்து செல்ல வேண்டும், அவர்களெல்லாம் முற்றத்தில் கூடியிருக்கிருர்கள்''.

என்ன நடந்தது என்பதை செபாஸ்டியன் மார்ட்டினுக்கு எடுத்துக் கூறினன்.

''இவ்வளவு நேரம் நீ எங்கே இருந்தாய்?'' உலி கேட்டான்.

வோர்வெர்க் தெருவிலுள்ள முதல் வீட்டை மார்ட்டின் சுட்டிக் காட்டினன். ''அங்கிருந்து நீங்கள் எகர்லாண்டின் முற்றத்தைக் காணலாம்,'' அவன் கூறினன். ''அவன் ஒரு கறுப்புத் துணியை வெளியே காட்டி ''ஹோய்!'' என்று

கத்தினன். இப்போது அவர்கள் எல்லோரும் கூட்டமாக முற்றத்தில் குழுமிக் கொண்டிருக்கிருர்கள்''.

''உங்களுக்கு க்ரூய்ஸ்கெம் எங்கே என்று தெரியாது, இல்லையா?'' பொறுமையோடு செபாஸ்டியன் கேட்டான்.

''தெரியும், எகர்லாண்டின் நிலவறையில்! அவர்களுடைய ஆட்கள் சிலபேர் அவனை காவல் காத்துக் கொண்டே இருக்கிருர்கள். அவர்களை நாம் உடனே தாக்க வேண்டும். ஆட்களின் கூட்டம் ஒவ்வொரு நிமிடமும் அதிகமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. நாம் முற்றத்தைத் தாக்கி நிலவறையைக் கைப்பற்ற வேண்டும். நம்மில் பாதிப் பேர் ஜானி தலைமையில் தெருவிலிருந்து வீட்டைத் தாக்க வேண்டும். மற்ருெரு பாதி என்னைப் பின்தொடர வேண்டும். நான் இப்பொழுது சென்று வந்த வீட்டு முற்றத்தின் வழியாக நாம் செல்ல வேண்டும். எனவே, மதில் ஏறி அவர்களைப் பக்கவாட்டில் தாக்க வேண்டும். ஆனுல், நாம் ஜானியின் கூட்டம் செயல்படுவதற்கு ஒருசில நிமிடங்கள் கொடுக்க வேண்டும்.''

''கொஞ்சம் பொறுங்கள்,'' அவர்களுக்குப் பின்னுலிருந்து யாரோ ஒருவர் கூறினர். அவர்கள் அச்சத்தோடு திரும்பிப் பார்த்தார்கள். புன்முறுவல் பூத்தபடி அங்கே புகைபிடியாதவர் நின்று கொண்டிருந்தார். ''ஹலோ!'' அவரைப் பார்த்து முறுவலித்தபடி அவர்கள் கத்தினர்கள்.

''உங்களுடைய திட்டம் செயல்படாது,'' அவர் அறிவிப்புச் செய்தார். ''அங்கே அவர்கள் முப்பது பேர் இருப்பார்கள். இப்போதுதான் நான் பார்த்தேன். மேலும், உங்களது இச்சண்டை பெரும் இரைச்சலை உண்டாக்கும். போலீஸ் உங்களுக்குப் பின்னுலேயே வரவேண்டியிருக்கும்.''

''அப்போது தலைமையாசிரியர்கள் அதைக் கேட்பார்கள்,'' உலி நடுங்கியபடி கூறினன். ''அங்கே ஒரு ரகளையே உண்டாகும். அதுவும் கிருஸ்துமஸுக்கு முன்னதாகவே!''

மத்தியாஸ் அச்சிறு பையனைக் கடுமையாகப் பார்த்தான்.

''ஆமாம். அது உண்மைதான்,'' உலி அஞ்சும் பாவனையில் கூறினன்.

''என்னுடைய சொந்தத் தோலைப் பற்றிய பயத்தினுல் ஏதுமில்லை, மாட்ஸ்.''

''பின்னே உங்கள் அறிவுரைதான் என்ன?'' மார்ட்டின் கேட்டான்.

''அதோ அந்தக் வீட்டு மனை தெரிகிறதல்லவா? நீங்கள், உயர் நடுநிலைப் பள்ளியின் பையன்களை அங்கே வைத்துச் சந்திக்க சவால் விடவேண்டும். மேலும், நீங்கள் ஒரு மற்போருக்கு ஏற்பாடு செய்யவேண்டும். நீங்களெல்லோரும் கூடி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதால் என்ன பயன்? இருபக்கத்திலும் தங்களது சாம்பியன் ஒருவனைத் தேர்ந்தெடுங்கள். இரண்டு பேர் சண்டை போட்டால் போதும். உங்களுடைய சாம்பியன் வெற்றி பெற்ருல் அவர்கள் நிபந்தனையின்றி கைதியை உங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.''

''அவர்களுடைய சாம்பியன் வென்ருல்?'' வஞ்சகப் புகழ்ச்சியாகக் கேட்டான் செபாஸ்டியன்.

''ப்பூ!'' மத்தியாஸ் கூறினன். ''நீங்கள் ஒரு பைத்தியம்! ஆனல், நான் மற்ெருரு சுருள் அப்பம் கூட வேகமாகத் தின்ன வேண்டும்.''

அவன் பையிலிருந்து ஒரு சுருள் அப்பத்தை எடுத்துத் தின்னத் தொடங்கினன். ''அவர்கள் யாரை நியமிப்பார்கள் என்று எனக்குத் தெரியும்—அந்த வாவெர்க்கா இருக்கிருனே அவனைத்தான், ஒரு கையை பின்பக்கத்தில் கட்டிக் கொண்டு அவனை என்னல் சமாளித்துக் கொள்ள முடியும்.''

''பிரமாதம்'', மார்ட்டின் கத்தினன். ''நாம் அதைச் செய்ய முயற்சிப்போம். செபாஸ்டியன் நீ போய் அவர்களைக் வீட்டு மனைக்குக் கொண்டு வா. நாங்கள் அங்கே காத்துக் கொண்டிருக்கிருேம்.''

பனிக்கட்டிகளை அதிக அளவில் தயாராகச் சேமித்து

வைக்க வேண்டும். செபாஸ்டியன் அறிவுறுத்தினுன். ஏதாவது தகராறு ஆனுலோ!''

அவர்கள் மூலையை நோக்கிப் பாய்ந்தார்கள்.

# அத்தியாயம் நான்கு

மயங்க வைக்கும் தாக்குதலோடு கூடிய கைச் சண்டை; உயர் நடுநிலைப் பள்ளிப் பையன்களின் வஞ்சகம்; எகர்லாண்டின் மனப்போர்; மார்ட்டினின் ரகசியப் போர்த்திட்டம்; நிலவறையில் குத்துகள்; சிறிய சாம்பல் குவியல்; வெற்றிக்கு அனுமதி; எகர்லாண்ட் ஓய்வு பெறுதல்.

# 4

உயர் நடுநிலைப் பள்ளிப் பையன்கள் மணைக்கட்டு இடத்தின் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். யொஹென் ஸிஜிஸ் மண்டைச் சார்ந்த பையன்கள் மற்றொரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். முறைப்பாக அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். முறைப்படி தலைவர்கள் நடுவில் வந்து நின்று ஒருவரையொருவர் நேரிடையாகச் சந்தித்துக் கொண்டனர். தூதனுகிய செபாஸ்டியன் எகர் லாண்டோடு வந்தான். ''எதிரிகள் நமது புதிய ஏற்பாட்டை ஒத்துக் கொண்டிருக்கிருர்கள்,'' அவன் மார்ட்டினிடம் கூறினுன். ''ஆகவே இருவரிடையிலும் சண்டை நடக்கும். அவர்கள்தங்கள் பகுதிச் சாம்பியனுக வாவெர்க்காவைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்.''

''நம் பகுதி ஆள் மத்தியாஸ் ஸெல்ப்மன்'', மார்ட்டின் அறிவித்தான். அவன் தொடர்ந்து மேலும் ஆலோசனை கூறினுன். ''அவர்களது ஆள் வளையத்திற்கு வெளியே ஓடும் வரை அல்லது நீண்ட நேரம் தன்னுல் தாக்குதலை எதிர்த்து நிற்க திராணியற்ற நிலையை அடையும்வரை சண்டை தொடர்ந்து நடக்க வேண்டும்.''

எகர்லாண்ட் வாவெர்க்காவைப் பார்த்தான். வாவெர்க்கா நல்ல உயரமான, வலிமை மிகுந்த இளைஞுக இருந்தான். வாவெர்க்கா ஆங்காரத்தோடு தலையசைத்தான். எகர்லாண்ட் கூறினுன், ''உங்களுடைய நிபந்தனைகளை நாங்கள் ஒப்புக் கொள்கிறேம்.''

''எங்களுடைய சாம்பியன் வெற்றி பெற்ருல்,'' செபாஸ்டியன் உரக்கக் கூவினுன். ''நீங்கள் கைதியையும் பயிற்சிப் புத்தகங்களையும் எவ்வித நிபந்தனையுமின்றிக் கொடுத்துவிட வேண்டும். வாவெர்க்கா வெற்றியடைந்தால் அவைகளை

நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்.''

''அப்போ நீங்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்க மாட்டீர்கள், இல்லையா?'' எகர்லாண்ட் ஏளனமாகக் கேட்டான்.

''எல்லாவற்றையும் கிளறினால் மீண்டும் நாம் பேரம் பேசத் தொடங்க வேண்டி வரும்,'' மார்ட்டின் கூறினான். மேலும் மேலும் மோசமான நிலைமையே ஏற்படும் என்றால் நாங்கள் கடிதம் எழுதுகிறோம். ஆனால், முதலில் இருவரிடையேயான சண்டை நடக்கட்டும்.''

''தலைவர்கள் தங்கள் ஆட்களோடு அவரவர் இடத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டும்,'' மார்ட்டின் கத்தினான்.

பகையாளர் குழாம்களிடையே இப்போது வெற்று இடைவெளி ஏற்பட்டது. இடது பக்கமிருந்த உயர் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் அணியிலிருந்து திடீரென வாவெர்க்கா வெளிப்பட்டான். வலது பக்கத்திலிருந்து செபாஸ்டியன் அவனை நெருங்கினான்.

''ஹோய்!'' வாவெர்க்காவின் ஆதரவாளர்கள் கத்தினார்கள். ''சபாஷ்!'' மத்தியாஸின் ஆட்கள் ஆராவாரம் செய்தார்கள்.

இப்போது சாம்பியன்கள் இருவரும் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் ஒருவரையொருவர் எதிர் நோக்கிக் கொண்டு நின்றிருந்தனர். எங்கும் அமைதி நிலவியது. எல்லோருமே முதல் தாக்குதலுக்காகக் காத்திருந்தனர். இருவருமே முதல் தாக்குதலைத் தொடங்க விரும்பாதவர்கள் போல் காணப்பட்டனர்.

அப்போது வாவெர்க்கா மின்னல் வேகத்தில் குனிந்து எதிராளியின் காலைப் பிடித்து திடீரென இழுத்து விட்டான். மத்தியாஸ் உறை பனியில் நீள வாட்டத்தில் மல்லாந்தபடி விழுந்தான். மற்றவர்கள் அவன்மீது ஏறியமர்ந்து பலங் கொண்ட மட்டும் அவனைக் குத்தத் தொடங்கினார்கள்.

உயர் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் எக்களிப்போடு கூப்பாடு போட்டார்கள். அவர்களது எதிரிகள் திடுக்கிட்டு

அதிர்ச்சியடைந்தார்கள். குளிராலும் பரபரப்பாலும் உலியின் பற்கள் கிடுகிடுவென அடித்துக் கொண்டன. தனது மூச்சை அடக்கிக் கொண்டு தாழ்ந்த குரலில், ''மாட்ஸ் கவனமாக இரு! கவனமாக இரு மாட்ஸ்! விழிப்பாக இரு மாட்ஸ்!''

திடீரென மத்தியாஸ், வாவெர்க்காவின் வலது கையைப் பிடிப்பதில் வெற்றி பெற்று, அதனை இரக்கமின்றி மெதுவாக வளைத்து முறுக்கத் தொடங்கினான். வாவெர்க்கா குதிரைப் படை வீரனைப் போல் சூளுரைத்தான். ஆனால், அதெல்லாம் அவனுக்கு உதவவில்லை. கீழ்ப்படிய வேண்டிய நிர்ப்பந்தத்தினால் அவன் ஒரு பக்கமாக உருண்டான். மத்தியாஸ் வாவெர்க்காவின் தலையை இறுகப் பற்றினான். அவன் முகத்தை உறை பனிக்குள் அழுத்தி அமுக்கினான். வாவெர்க்கா காற்றில் தன் கால்களை உதறினான். அவனால் சுவாசிக்கக் கூட இயலவில்லை.

எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் மத்தியாஸ் அவன் மீது இருந்த பிடியைத் தளர்த்தி பின்புறமாக மூன்று தப்படி பின்வாங்கி அடுத்த தாக்குதலுக்காகக் காத்திருந்தான். அவன் கண் புடைத்திருந்தது. வாவெர்க்கா மூச்சு வாங்கிக் கொண்டு எழுந்தான். அரைப் பவுண்டு உறைபனியை வெளியே துப்பியபடி விரைந்து மத்தியாஸ் மீது பாய்ந்தான். ஆனால், மத்தியாஸ் தலையைச் சற்று தாழ்த்தினான். எதிரி அவன் மீது பாய்ந்து சென்று மீண்டும் அவனை உறைபனியில் அமுக்கினான். யொஹன் ஸிஜிஸ்மண்ட் பையன்கள் சிரித்தார்கள். மத்தியாஸ் திரும்பி நின்று அவர்களிடம் இறைந்து கூறினான். ''இப்ப அவன் மீது நான் தாக்குதல் தொடங்கப் போகிறேன்!''

வாவெர்க்கா எழுந்து தன் கை முஷ்டிகளைக் குத்திப் பிசைந்து கொண்டு காத்திருந்தான். மத்தியாஸ் அவனை நெருங்கி கையைப் பின்னால் இழுத்து அடித்தான். மற்றவன் திருப்பித் தாக்கினான். மாட்ஸ் அவனை மீண்டும் அடித்தபின் கொஞ்ச நேரம் வரை எந்தப் பக்கத்துக்கும் தெளிவான வெற்றி தோல்வியின்றி இருவருமே தொடர்ந்து சண்டையிட்டுக் கொண

டிருந்தனர். அச்சமயம் மத்தியாஸ் கீழே குனிந்தான். வாவெர்க்கா தன் உடலை அவனிடமிருந்து தடுக்கத் தன் கைகளைத் தாழவிட்டு மறைக்க முயன்றான். உடனே மத்தியாஸ் கீழே பாய்ந்து அடித்துத் தன் எதிரியின் தாடையைப் பார்த்து ஒரு குத்துவிட்டான்.

வாவெர்க்கா தள்ளாடியபடி ஒரு குடிகாரனைப் போலச் சுழன்று விழுந்தான். அவனால் தன் கைகளைத் தூக்க முடியவில்லை. அவனால் இனி எதுவும் செய்ய முடியாது.

''போ, மாட்ஸ்!'' செபாஸ்டியன் கத்தினன். அவன் கதையை முடித்துவிடு!''

''முடியாது,'' செபாஸ்டியன் கத்தினன். மீண்டும் அவன் சரியான நிலையை அடைய நாம் அவனுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

வாவெர்க்கா மிகுந்த சிரமத்துடன் கீழே குனிந்தான். கை நிறையப் பனிக்கட்டிகளை அள்ளினன். தன் கழுத்துப் பட்டையின் உட்பகுதியினுள் திணித்துக் கொண்டான். அது அவனுக்குப் பழைய நிலையை மீண்டும் அளித்தது. மீண்டுமொருமுறை அவன் தன் கை முஷ்டிகளை உயர்த்தியபடி மத்தியாஸை நோக்கிச் சென்றான். ஆனால், மத்தியாஸ் ஒரு பக்கமாக ஒதுங்கவே, வாவெர்க்கா அவனையும் தாண்டி முன்னேக்கிப் போகும்படியாயிற்று. ''ஹோய்!'' உயர் நடுநிலைப் பள்ளிப் பையன்கள் கூச்சலிட்டார்கள். வாவெர்க்கா ஒரு கணம் நின்று, மாடுபிடி களத்தில் காளைமாடு திரும்புவதுபோல் சுற்றித் திரும்பினன். ''வாடா! மிருகமே!,'' அவன் உறுமினன்.

''அரை நொடியில்,'' மத்தியாஸ் பதில் கூறினன். அவன் நெருங்கிச் சென்று தன் முஷ்டியால் வாவெர்க்காவின் மூக்கின் அடிப்பகுதியை அழுத்தினன். வாவெர்க்கா வெறி கொண்டவனைப் போல அடித்தான். ஆனால், இந்தத் தடவையும் அவன் தன் தலையை எதிராளியின் பிடிக்கு உள்ளாகும்படி விட்டுவிட்டான். காதின் பின்புறத்தில் வெடிப்புப் போன்ற ஒரு

சிறு கீறல் ஏற்பட்டது. உடனே அவன் தான் கீழே உட்கார்ந் திருப்பதை உணர்ந்தான். அவன் மீண்டும் தடுமாறி எழுந்து தப்பிக்க முயன்றபோது தன் தலைப் பக்கத்தில் இரண்டு மொத் துகள் வாங்கினன். ஆனல், அவை பெரும்பாலும் தேவை இல்லாதவைகளாகும். அவனுடைய கதை முடிந்தது. மத்தியாஸ் நிர்க்கதியான தன் எதிரியின் தோள்களைப் பற்றி ஒரு சுற்றுச் சுற்றி ஒரு உதை கொடுத்தான். சாவி கொடுத்த இயந்திரப் பொம்மை போல, ஹெய்ன்றிஹ் வாவெர்க்கா வளை யத்திற்கு வெளியே பேச்சற்று இருக்கும் அவனது ஆதரவாளர்களை நோக்கித் தள்ளாடிச் சென்ருன். அவர்கள் அவனைத் தாங்கிப் பிடிக்கவில்லையென்ருல் அவன் மேலும் தடுமாறிக் கொண்டே யிருந்திருப்பான்.

மத்தியாஸ் உணர்ச்சிப் பெருக்கோடு பாராட்டப் பட்டான். ஒவ்வொருவரும் அவனேடு கைகுலுக்கினர்கள். உலியின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசமடைந்தது. ''உன்னை நினைத்து நான் எவ்வளவு துயரப்பட்டேன் என்பது உனக்குத் தெரியாது,'' அவன் கூறினன். ''உன் கண் ரொம்ப வலிக்கிறதா?''

''ஒரு துண்டு துக்காணிகூட இல்லை,'' உணர்ச்சி மேலிட் டவனய் விக்டர் முணகினன். ''அப்பச்சுருள் எனக்காக வைத்திருக்கிருயா?'' சிறுவன் அவனிடம் காகிதப் பையைக் கொடுத்தான். மீதமிருந்த தன்னுடைய பட்சணத்திலிருந்து மத்தியாஸ் நல்லதொரு துண்டை எடுத்துக் கடித்தான்.

''இனி விரைந்து சென்று க்ரூய்ஸ்கெம்மை கொண்டு வரவேண்டும்,'' துபி கத்தினன்.

ஆனல், அதுவோ வேறுவிதமாக நடந்தது. பெரிதும் மலைக்கச் செய்யும் வகையில் எகர்லாண்ட் அவர்களை அணு கினன். ''நான் மிகமிக வருந்துகிறேன்,'' அவன் கூறினன். என்னுடைய ஆட்கள் கைதியை விடுவிக்கப் போவதில்லை.

''ஆனலும், அது முடியாத காரியம்,'' மார்ட்டின் கூறினன். ''அதெல்லாம் முன்பே தீர்மானிக்கப் பட்டுவிட்டது. நீங்கள்

வாக்குத் தவறக் கூடாது!''

''நீங்கள் சொல்வதை நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்,'' துயரம் தோய்ந்தபடி எகர்லாண்ட் மறுமொழி கூறினுன். ''ஆனல், நான் என்ன சொன்னபோதிலும் அதை அவர்கள் செய்ய மாட்டார்கள். அதற்கு நான் ஏதும் செய்ய இயலாதவனுக இருக்கிறேன்.''

மார்ட்டினின் முகம் சிவக்கத் தொடங்கியது. ''நிறுத்து,'' மிகவும் சீற்றம் கொண்டவனுகக் கத்தினுன்.

''உங்களுடைய ஆட்களுக்கு நாகரிகப் பண்பாட்டு அறிவே கிடையாதா?''

''ப்பூ! இப்படியென்று எனக்குத் தெரிந்திருந்தால்,'' மத்தியாஸ் வாயை அசைபோட்டவாறே கூறினுன். ''நான் வாவெர்க்காவை பொறித்த இறைச்சியினுள் வைக்கத் தக்க பொருளாக பொடிப் பொடியாக்கியிருப்பேன். உலி ''பொறித்த'' என்பதை எவ்வாறு எழுதுவது?''

''இரண்டு 'த்த' சேர்த்து எழுதவேண்டும்'' உலி பதில் கூறினுன்.

''அப்படியாஞல் நான் அவனை நான்கு 'த்த' சேர்த்து ''பொறித்த்த்த'' இறைச்சிக்குள் வைக்கத் தக்கவாறு பொடிப் பொடியாக்கியிருப்பேன்,'' மத்தியாஸ் கூறினுன்.

''இதனல் எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது,'' எகர்லாண்ட் கூறினுன். ''நான் நீங்கள் கூறுவதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனல், எனது குழுவை விட்டு நான் வெளியேறி வர முடியாது.''

''ஒருக்காலும் கூடாது,'' செபாஸ்டியன் கூறினுன். உன்னுடைய கஷ்டகாலம்தானே. வாய்மை போராட்டத்திற்கிடையே கிடந்து உழலும், குறிப்பிடத்தக்க கடுமையான உதாரணம் நீ. அது ஒன்றும் புதிதல்ல.''

புகைபிடியாதவர் திறந்த வெளியின் குறுக்கே மெதுவாக நடந்து வந்தார். ஒப்புக் கொள்ளும் பாவனையில் மத்தியாஸை நோக்கித் தலையாட்டியபடி என்ன தகராறு என விசாரித்தார்.

செபாஸ்டியன் சூழ்நிலையை விளக்கிக் கூறினன். ''அட கடவுளே,'' புகைபிடியாதவர் வியப்பால் கத்திஞர். இன்றையப் பையன்கள் இவ்வளவுதூரம் வாய்மையற்றவர்கள் என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டதே. மார்ட்டின் ! இருவரிடை யேயான சண்டைக்கான யோசனையைக் கூறியதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். கண்ணியமான பையன்களிடையே அது ஒன்றுதான் சாத்தியமான நல்லமுறை என்பது மட்டும் நிச்சயம்.''

''நீங்கள் சொல்வது மிகமிக சரியே சார்,'' எகர்லாண்ட் கூறினன். என்ஞல் முடியக்கூடிய ஒரே காரியம் என்னையே நான் பணயப் பொருளாக்கிக் கொள்வதுதான். மார்ட்டின் தாலர் நான் உங்களுடைய கைதி.''

''சரியான காரியம், பையா,'' புகைபிடியாதவர் கூறிஞர். ''ஆனல் அதற்கு இப்போது அவசியமில்லை. எவ்வளவு பையன்களை இன்று நீங்கள் பூட்டிவைக்கப் போகின் றீர்கள்?''

''மிகவும் சரி,'' மார்ட்டின் கூறினன். அவனுடைய முகம் துயரத்தால் வெளிறியது. ''எகர்லாண்ட் நீ நல்லவன். உங்கள் பையன்களிடம் போய் இன்னும் இரண்டு நிமிடங்களில் நாங்கள் அவர்களைத் தாக்கப் போகிருேம் என்பதைக் கூறு. இது உங்கள் பள்ளிக்கூடத்திற்கும் எங்கள் பள்ளிக்கூடத்திற்கும் இடையேயான இறுதிப் போராட்டமாக இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ருத பண்பற்ற குணக்கேடர்களோடு நாங்கள் போராடவில்லை. நாங்கள் அவர்களை மிக இழிவாகக் கருதுகிருேம்.''

எகர்லாண்ட் அமைதியாகத் தலையாட்டியபடி அவ் விடத்தை விட்டு அகன்ருன்.

மார்ட்டின் விரைந்து தன் ஆதரவாளர்களைத் திரட்டினன். ''இனி நான் கூறுவதைக் கவனியுங்கள்,'' அவன் மெதுவாகக் கூறினன். இன்னும் இரண்டு நிமிடங்களில், மிகச் சிறந்த முறையில் பனிக்கட்டிச் சண்டையை நீங்கள் தொடங்க

வேண்டும்; உங்களுக்கு வேண்டிய உத்திரவுகளை செபாஸ்டியனிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். மத்தியாஸ், ஜானி ட்ரோட்ஸ்க்கும் எனக்கும் செய்ய வேண்டிய சிறியதோர் காரியம் இருக்கிறது. நாங்கள் திரும்பி வருவதற்குள் வெற்றியடைந்து விடாதபடி கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேரம் அவர்களைப் போரிட்டுக் கொண்டிருக்கும்படி செய்யவேண்டும்; உங்களுக்கு உசிதமாகத் தோன்றும் பட்சத்தில் அவர்களைச் சற்றுப் பின் வாங்கும்படி செய்தாலுங் கூடச் சரியே.''

''ஓ, அது நீண்டுகொண்டேயிருக்கும்,'' துபி கூறியபடி கீழே குனிந்து பனிக்கட்டி உருண்டைகளைச் செய்யத் தொடங்கினுன்.

''வேடிக்கையானதொரு கடுமையான திட்டம்,'' பாராட்டும் வகையில் செபாஸ்டியன் கூறினுன். ''அதை என்னிடம் விட்டு விடுங்கள். அதை நான் மிக நல்லமுறையில் பார்த்துக் கொள்கிறேன்.''

மத்தியாஸோடு எப்போதும் நெருக்கமாக இருக்க விரும்பும் உலி, மார்ட்டின் அருகில் சென்று, ''நான் உன்னோடு வரட்டுமா?'' அவன் கேட்டான்.

''வேண்டாம்,'' மார்ட்டின் மறுமொழி கூறினுன்.

''உலி, நீ இங்கேயே இரு,'' செபாஸ்டியன் இரைந்து கூறினுன். ''பின் வாங்கும் நடவடிக்கைக்கு எங்களுக்கு நீ உதவலாம் அல்லவா; அது உனக்குள்ள வேலையாகும்.''

உலியின் கண்கள் கண்ணீரால் நிறைந்தது.

மத்தியாஸ் ஓங்கிய முஷ்டியை கீழே தாழ்த்தியவனுய் ''வேருெரு சமயம்'' எனக் கூறி முணகினுன். ''சொந்தத் தகராறுகளுக்கு இப்போது நேரமில்லை.''

அவர்களது எதிரியிடமிருந்து முதல் பனிக்கட்டி உருண்டை பறந்து வந்து விழுந்தது. செபாஸ்டியன் தன் ஆட்களுக்கு உத்தரவிட்டான். மணைக்கட்டு இடத்தில் போர் ஆரம்பமாகி விட்டது.

''உதட்டை உறுதியாகக் கடித்துக் கொள் பையா,'' புகை பிடியாதவர் உலியிடம் கூறினர். அவர் மற்றவர்களை நோக்கித் தலையாட்டினர். ''போக்கிரிப் பசங்களா! உங்களுக்கு அதிர்ஷ்ட முண்டாகட்டும். உங்களுக்கு மார்ட்டின் இருக்கிருன். எனவே, நான் இப்போது உங்களுக்குத் தேவை இல்லை.''

''சபாஷ்!'' அவர்கள் கத்திஞர்கள். அவர் சிந்தனையில் ஆழ்ந்தவராய், அன்புணர்வோடு பறக்கும் பனிக்கட்டிகளுக்கிடையே தன் ரயில் பெட்டிக்குச் சென்ருர்.

செபாஸ்டியன் ஒரு குழுவிலிருந்து மற்றொரு குழுவிற்கு ஓடினன். யொஹன் ஸிஜிஸ்மண்ட பையன்கள் தங்களது எதிரிகளின் நம்பிக்கைத் துரோகச் செயலுக்குப் பழி வாங்கும் முறையில் அதிக ஆரவாரம் இல்லாமல் தாக்கவே விரும்பினர்கள். குறிப்பாகத் துபி பொறுமையின்றி இருந்தான். ''பாவி, நீ ஏன் உத்திரவு கொடுக்கவில்லை ..'' அவன் ''தாக்குவதற்கு'' என்று சொல்ல முனைந்தான். ஆனல், சரியாகக் குறி பார்த்து எறியப்பட்ட பனிக்கட்டியொன்று அவனது திறந்த வாயில் பட்டு உடைந்தது. அவனது வகுப்பறை நண்பர்கள் சிரிப்போடு ஆரவாரம் செய்ய, அவன் ஊமைபோல் திகைத்து நின்ருன்.

''நம்முடைய வெற்றியை நாம் ஏன் தள்ளிப் போட்டுக் கொண்டே போக வேண்டும் என்பதை நீ அறிய மாட்டாய்,'' செபாஸ்டியன் கூறினன். எனினும் நீ உத்திரவுகளுக்குப் பணிந்தே தீர வேண்டும்; அப்போது உலி எங்கே இருக்கிருன் எனச் சுற்றிலும் நோக்கினன். உலியின் கைகள் மிகவும் குளிர்ந்து போயிருந்ததால் அவைகளை கால் சட்டைப் பைகளினுள் செருகிக் கொண்டிருந்தான். செபாஸ்டியன் பார்ப்பதைக் கண்டபோது அவன் விரைவாகத் தன் கைகளை வெளியே எடுத்துக் கொண்டு, பனிக்கட்டி எறிவோருடன் சேர்ந்து கொண்டு விட்டான்.

இதற்கிடையில் மார்ட்டின், ஜானி, மத்தியாஸ் முதலானேர்

வோர்வெர்க் தெருவை நோக்கி ஓடி, மூலை வீட்டிற்குத் திரும்பி, முற்றத்தினிடையே ஓடி சுவற்றின்மீது ஏறினார்கள். அப்போது தாங்கள் எகர்லாண்ட் வீட்டு முற்றத்தின் நுழை வாயிலில் இருப்பதைக் கண்டார்கள்.

''அதே நிலவறைக் கதவு,'' தணிந்த குரலில் மார்ட்டின் கூறினான். முன்னெச்சரிக்கையுடன் மத்தியாஸ் கதவைத் திறந்தான். மூன்று பேரும் சத்தமில்லாதபடி வழுக்கு நடையாக இறங்கிச் சென்றார்கள். தாங்கள் கும்மிருட்டில் இருப்பதைக் கண்டார்கள். அங்குக் கெட்டுப்போன உருளைக் கிழங்கு வாடை வீசியது.

தாங்கள் செல்லும் வழி தாழ்ந்த குறுகிய பாதையாக இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஓரிரு தடவைகள் அவர்கள் மூலை திரும்பும்படியாக இருந்தது. அப்போது ஜானி, மார்ட்டினின் கைச்சட்டையைப் பிடித்து இழுத்தான். அவர்கள் நின்றார்கள். அவர்களுக்கு ஒரு பக்கத்தில் பாதை யொன்று இருந்தது. அங்கே சிறிதளவு மங்கிய வெளிச்சம் இருந்தது. அவர்கள் மெதுவாக ஊர்ந்து சென்றார்கள். முன்பின் பழக்கமில்லாத பையன்களின் பேச்சரவம் அங்கிருந்து கேட்டது.

''குர்ட்,'' அப்பையன் கூறினான். ''மேலும் பத்து நிமிஷங்கள் ஆகி விட்டது.''

''நல்லது. நம் வேலையைச் செய்வோம்,'' மற்றொரு அன்னியக் குரல் பதில் கூறியது. ''என்னுடைய கைகள் வலிக்கின்றன,'' அப்போது அவர்கள் ஆறுமுறை ஒன்றன் பின் ஒன்றாக அறையும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பூரண அமைதி நிலவியது.

''எனக்கு எவ்வளவு ஆச்சரியமாக இருந்தது,'' மூன்றாவது குரல் திடீரெனக் கேட்டது. ''உங்களுக்காக வெட்கப்படவில்லையே.''

''அது க்ரூய்ஸ்கெம் தான்'' ஜானி தணிந்த குரலில் கூறினான். என்ன நடக்கிறது என்பதைத் தெளிவாகக் காணும் வரை அவர்கள் ஊர்ந்து முன்னேக்கிச் சென்றார்கள். திறந்துள்ள

மரச் சட்டக் கதவுக்குப் பின்னால் உயர் நடுநிலைப் பள்ளி மாண வர்கள் இருவர் இருந்தனர். அங்கு ஆடக்கூடிய ஒரு பழைய சமையற்கட்டு நாற்காலியின் மேல் ரூடி க்ரூய்ஸ்கெம் உட் கார்ந்து கொண்டிருந்தான். துணி உலர்த்தும் கொடியால் அவன் சுற்றிக் கட்டப்பட்டிருந்தான். எனவே, அவனால் கை கால்களை அசைக்க முடியாமல் இருந்தது. அவனுடைய கன்னங்கள் இயற்கைக்கு மாறுபட்ட வகையில் சிவந்து போய் இருந்தன. மேஜை யொன்றின் மீது மூன்று மெழுகு வத்திகள் எரிந்து கொண்டிருந்தன. தொலைக் கோடியிலுள்ள மூலையில் மரம், நிலக்கரி, சுட்டகரி ஆகியவற்றின் குவியலுக்கிடையே ஒரு கிருஸ்துமஸ் மரம் இருந்தது. இரண்டு நாளைக்கு முன்பு எகர்லாண்டின் தகப்பனார் வாங்கியது அது.

''என்னுடைய நண்பர்கள் என்னை மீட்டுக் கொண்டு போனாலுங் கூட இதை நான் மறப்பதற்கில்லை''; க்ரூய்ஸ்கெம் கோபத்தோடு கூறினான்.

''அதற்கு முன்பே நீ புழுப்போலாய் விடுவாய்,'' மற்றவர் களில் ஒருவன் கூறினான்.

''இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அவர்கள் என்னைக் கண்டுபிடித்து விடுவார்கள்,'' நம்பிக்கையுடன் க்ரூய்ஸ்கெம் பதிலளித்தான்.

''அதற்கு முன்பே எத்தனையோ கஷ்டங்கள் உனக்கு வந்து விடும்,'' மற்றவன் மறுமொழியாகக் கூறினான். ''ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் கன்னத்தில் ஆறு அறைகள்; அதாவது ஒரு மணிக்கு முப்பத்தாறு அறைகள்.''

''செயல் முறைக் கணக்கு!'' முதலாமவன் மேல் கூரை யில் எதிரொலிக்கும் வண்ணம் சத்தம் போட்டுச் சிரித்தான். ''உன்னுடைய நண்பர்கள் ஒரு வேளை அதற்கு முன்பே வந்து சேரலாம், இல்லையா?''

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது,'' க்ரூய்ஸ்கெம் கூறினான்.

''அப்படியானால் முன்னெச்சரிக்கை ஏற்பாடாக உனக்கு

மேலும் ஒரு அரைடஜன் அறைகளை இபபோதே தந்து விடு கிறோம். கணக்கு வைத்துக் கொண்டு கொடுங்கள். வா, குர்ட், உதவி செய்.''

குர்ட் எனும் பெயருடைய பையன் க்ரூய்ஸ்கெம்மின் நாற் காலிக்கு அருகில் சென்று தனது இடது கையை உயர்த்தி மீண்டும் அறைந்தான். ''இரண்டு,'' அவன் எண்ணினான். அவன் மீண்டும் தன் இடது கையை உயர்த்தினான். ஆனால், அந்தச் சமயத்தில் மத்தியாஸ் அவன்மீது பாய்ந்து விழுந்தான். மூன்றுவது அறையை குர்ட் வாங்கினான்.

அவன் எகர்லாண்டின் கிருஸ்துமஸ் மரத்தை ஒடித்துக் கொண்டு பைன் மர முட்களிடையே அலறிக் கொண்டு இடது பக்கக் கன்னத்தை இறுகப் பிடித்தபடி உட்கார்ந்தான் மற்ற பையனுக்கு மார்ட்டின ஒரு இரட்டைக் குத்து விட்டான். பார்க் கவோ, கேட்கவோ ஒவவாத அளவுக்கு அது மிகக் கடுமையா னதாக இருந்தது. வீங்கியிருந்த க்ரூய்ஸ்கெம்மின் கைகளை ஜானி அவிழ்த்து விட்டான்.

''சீக்கிரம்,'' மார்ட்டின் கத்தினான். ''இன்னும் இரண்டே நிமிடங்களில் நாம் மணைக்கட்டு இடத்தில் இருக்க வேண்டும்''. விறைப்பாக இருந்த தன் கைகளை க்ரூய்ஸ்கெம் நீட்டிவிட்டான். அவன் உடலின் ஒவ்வொரு எலும்பும் வலித்தது. அவனுடைய கன்னங்கள் வீங்கி வாயில் கொழுக்கட்டை இருந்தால் எப்படி இருக்குமோ அபபடிக் காணப்பட்டது.

''இந்த நாற்காலியில் ஒன்றரை மணியிலிருந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்,'' அவன் கூறினான். ''இப்பொழுது மணி நான்காகிறது. ஒவ்வொரு பத்து நிமிஷங்களுக்கும் ஆறு அறைகளை முகத்தில் அறைந்தார்கள்.''

''எனது தொப்பி, அது வேடிக்கையாக இல்லை!'' துணி உலர்த்தும் கொடியை அவிழ்த்து எடுத்துக்கொண்டே மார்ட்டின் கூறினான்.

அவர்கள் இரண்டு எதிரிகளை எதிரெதிராக உட்காரவைத்து மிகக் கவனத்தோடு கட்டினார்கள்.

''இதோ,'' மார்ட்டின் கூறினுன். ''இனி வேகமாகப் போக வேண்டும். இந்தப் போக்கிரிப் பயல்களுக்கு ஏதாவது திரும்பக் கொடுக்க வேண்டும். இரண்டரை மணி நேரத் திற்கு நூற்றியைம்பது நிமிடங்களாகும். எத்தனை அறைகள் ஆகிறது குர்ட் ?''

''தொண்ணூறு'' எனக் கூறிய குர்ட் அழத் தொடங் கினுன். ''ஒவ்வொருவருக்கும் நாற்பத்தைந்து.''

''நமக்கு அதற்கு நேரம் இல்லை,'' மத்தியாஸ் கூறினுன். நான் ஒவ்வொருவருக்கும் என்றென்றைக்கும் மறக்க முடியாத படி சாட்டையடி ஒன்று கொடுக்கிறேன். ரூடி க்ரூய்ஸ்கெம் முக்குக் கொடுத்தது போலவே அந்தத் தொண்ணூறும் இருக்க வேண்டும். அச்சமயத்தில் மற்ருெரு பையனும் அழத் தொடங் கினுன்.

''இதோ பார், ரூடி, பயிற்சிப் புத்தகங்கள் எங்கே இருக் கின்றன ?'' மார்ட்டின் கேட்டான்.

க்ரூய்ஸ்கெம் ஒரு மூலைப் பகுதியைச் சுட்டிக் காட்டினுன்.

''அவைகளைப் பார்க்க முடியவில்லையே,'' மார்ட்டின் கூறினுன்.

''நீ மிகுந்த கவனத்தோடு உற்றுப் பார்க்க வேண்டும்,'' க்ரூய்ஸ்கெம் பதில் கூறினுன்.

மூலைப் பகுதியில் சாம்பல் குவியல் ஒன்று இருந்தது. இப்பவும் எரிந்து கருகிய காகிதத்தாளையும் ஒரு நீலநிற அட்டை யின் ஒரு மூலைப் பகுதியையும் அடையாளத்திற்காகப் பார்க் கலாம்.

''புனிதப் புகையே !'' மத்தியாஸ் கத்தினுன். ''அவைகள் நம்முடைய பயிற்சிப் புத்தங்கள் ?''

க்ரூய்ஸ்கெம் தலையாட்டினுன். ''என் கண் முன்னுலேயே அவற்றை அவர்கள் எரித்தனர்.''

''உன்னுடைய தந்தை பாதி மகிழ்ச்சி கூட அடைய முடி யாது,'' மார்ட்டின் கூறினுன். அவன் தனது கைக்குட்டையை வெளியே எடுத்து சாம்பலை அள்ளி கவனமாகக் கைக்குட்டை

யில் கட்டி, பயிற்சிப் புத்தகங்களுக்கிடையே பத்திரப் படுத்தித் தன் கால சட்டைப் பைகளுக்குள் வைத்துக் கொண்டான்.

''இது மிக அருமையான ஒரு காரியம,' ஜானி கூறினன்.

மத்தியாஸ் மகிழ்ச்சியுடன் தன் கைகளைத் துடைத்துக் கொண்டான். ''இந்தச் சாம்பலுக்காக நான் ஒரு கலயம ஏற்பாடு செய்வேன்,'' அவவ் அறிவித்தான். ''நாம் நம் முடைய பயிற்சிப புத்தகங்களை புகை பிடியாதவரின் தோட்டத்தில் புதைக்க வேண்டும்.''

மார்ட்டின் ஆலோசித்தான். ''ரூடி நீ உடனே வீட்டிற்கு ஓடு,'' அவன் கூறினன். ''உன்னுடைய தந்தை பயிற்சிப் புத்தகங்களைப் பற்றிக் கேட்டால அவை பள்ளிக்கூடத்தில் இருப்பதாகக் கூற வேண்டும். நான் நாளைக் காலையில அவை களை அவரிடம் கொடுப்பதாகச் சொல். அவரிடம் வேறு விஷயம் எதையும் கூற வேண்டாம். நாம் மணிக்கட்டு இடத்தில் அந்தப் பயலகளோடு நடந்த சண்டையைக் கூறினல் போதும். அதன் பிறகு நாம் திருப்பித் தாக்கலாம். நிச்சயம் நமக்காகத் திய தோர் காத்துக் கொண்டிருப்பான். வேகமாகப் போக வேண்டும்.''

அவர்கள் நிலவறையை விட்டு அகன்ருர்கள். மத்தியாஸ் மட்டும் தயங்கினன் மற்றவர்கள் படியேறிப் போகும்போது ஒன்றன்பின் ஒன்ருக இரண்டு பேர் அடித்துக் கொள்ளும் சத்தம் உரக்கக் கேட்டது. அதைத் தொடர்ந்து காது செவி டாகும்படியாக இரண்டுபேரின் அலறல் கேட்டது.

மத்தியாஸ் அவர்களை முற்றத்திற்கு இழுத்து வந்தான். ''அதைச் சரிப்படுத்திக் கொள்ளலாம்,'' அவன் சொன்னன். ''இனி மீண்டும் நம்மில் ஒருவரை அவர்கள் ஆட்டி வைக்க முடியாது.''

அவர்கள் தெருவை அடைந்தவுடன் க்ருய்ஸ்கெம் அவர்களை விட்டுப் பிரிந்து சென்ருன்.

''மிக்க நன்றி,'' அவன் கூறினன். ''நல்லபடியாகச்

செய்யுங்கள்.''

''ஆஹா! அவர்கள் கத்தியபடியே மூலையை நோக்கிப் பாய்ந்தார்கள். க்ருய்ஸ்கெம் விழிப்போடு மெதுவாகத் தன் கன்னங்களைக் கைகளால் தொட்டுப் பார்த்துத் தலையைக் குறுக்கியவண்ணம் வீட்டுக்குத் துள்ளு நடை போட்டுச் சென்றான்.

மணிக்கட்டு இடத்தில் நிற்குமாறு மார்ட்டின் உத்திர விட்டான். ''ஜானி'' அவன் கூறினான், ''நமமுடைய ஆட்களிடம் ஓடிப்போய், செபாஸ்டியனை உள்ளே போய் வெற்றி பெறும்படிக் கூறு. அதிக நேரம் தாமதிக்க வேண்டாம். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குத் தாங்குங்கள். நீங்கள் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நம் தங்குமிடம் போய்ச் சேர்ந்தால் மத்தியாஸும் நானும் அவர்களைத் துரத்தி விடுவோம்.''

தன் காரியமாக எண்ணி ஜானி ஓடிப் போனான்.

மாட்ஸும் மார்ட்டினும் வேலியிலுள்ள வெடிப்புத் துளையொன்றின் வழியாக உற்றுப் பார்த்தார்கள். செபாஸடியனும் அவனது கூட்டமும் தாங்களாகவே ஒரு மூலைப் பகுதிக்குள் சென்றார்கள். காற்று மண்டலம் முழுவதும் பனிக்கட்டியால் நிறைந்திருந்தது. உயர் நடுநிலைப் பள்ளிப் பையன்கள் சண்டையில் தாங்கள் முன்னரே வெற்றி பெற்று விட்டதாகக் கருதி ''ஹோய்'' என்று கத்தினார்கள்.

''நீ உலியைப் பார்த்தாயா?'' மத்தியாஸ் கேட்டான்.

''இல்லை, நான் பார்க்கவில்லை,'' மார்ட்டின் கூறினான்.

''வா, மாட்ஸ் வேலியைக் கடக்கலாம்!'' சரியான சமயத்தில் அவர்கள் வேலியைக் கடந்தார்கள். செபாஸ்டியன் கதாநாயகனைப்போல தன் பங்கையாற்றிக் கொண்டிருந்தான். யொஹன் ஸிஜிஸ்மண்ட் பையன்கள் சிறிதும் எதிர்பாரா நிலையில் முன்னேக்கிப் பாய்ந்து சென்றார்கள். இந்தத் தாக்குதலின் நெருக்கடியினால் அவர்களது எதிரிகள் விட்டுக் கொடுக்கும்படியாயிற்று.

மத்தியாஸும் மார்ட்டினும் குறுக்காக இடைவெளியைக் கடந்து ஓடி, பின்வாங்கிக் கொண்டிருக்கும் எதிரிகளை பின் புறத்திலிருந்து கடுமையாகத் தாக்கினர்கள். சிலர் ஆச்சரியப் படத்தக்கவகையில் பனியில் இன்னும் ஆடாமல் அசையாமல் வீழ்ந்த இடத்திலேயே கிடந்தார்கள்.

''சபாஷ்!'' என்ற ஒலி நாலாபக்கங்களிலிருந்தும் வந்தது. மாட்ஸு எங்கு தோன்றினாலும் அங்கிருந்து எதிரிகள் சிட்டாய்ப் பறந்தார்கள். அவர்கள் தனித் தனியாகவும் கூட்ட மாகவும் ஓடினர்கள்;

எகர்லாண்ட் மட்டும் தன் இடத்தில் நின்றான். அவனுக்கு இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவனுடைய முகம் கொடூர மான தீர்மானம் ஒன்றை வெளிப்படுத்துவது போல் இருந்தது. அவன் நம்பிக்கை இழந்த நிலையில் கைவிடப்பட்ட அரசனைப் போலக் காணப்பட்டான். துபி அவன்மீது பாய்ந்தான்.

ஆனால், மார்ட்டின் அவர்கள் இருவருக்குமிடையே ஓடிப் போய் நின்றான். ''நாம் அவனைப் பாதுகாப்பாக நடத்த வேண்டும்,'' அவன் கத்தினன். ''போக்கிரியாகவோ கோழை யாகவோ இல்லாதவன் இவன் ஒருவன்தான்.''

எகர்லாண்ட் தோல்வியடைந்தவனுக-தனியனுக- போர்க் களத்தைவிட்டு திரும்பி நடந்தான்.

அப்போது ஃபிரிடோலின் தன் நண்பர்களிடம் வந்தான். ''க்ருய்ஸ்கெம் விடுதலை அடைந்துவிட்டானு?''

மார்ட்டின் தலையசைத்தான்.

''பயிற்சிப் புத்தகங்கள் என்னவாயிற்று?'' துபி ஆர்வத் துடன் கேட்டான்.

''அவை என்னுடைய கைக்குட்டையில் இருக்கின்றன,'' என்று கூறிய மார்ட்டின், மதிப்புக்குரிய குழுவினிடம் சாம்பலைக் காட்டினன்.

''வியக்கத்தக்க அதிசயமான மனிதன்!'' செபாஸ்டியன் கருத்தறிவித்தான்.

''உலி, எங்கே?'' மத்தியாஸ் கேட்டான்.

துபி தன் பெருவிரலை அவனுடைய தோளின் மீது வைத்து அசைத்தான். மார்ட்டின் மணிக்கட்டிற்கு அப்பாலிருந்த மூலைக்கு ஓடினான். அங்கே உலி ஒரு பலகையின் மீது உட்கார்ந்து கொண்டு பனியையே உற்று நோக்கியவண்ணம் இருப்பதைக் கண்டான்.

"என்னவாயிற்று, முதியவரே?" மத்தியாஸ் கேட்டான்.

"அதிகமாக எதுவுமில்லை," தாழ்ந்த குரலில் உலி மறு மொழி கூறினான். "நான் மீண்டும் ஓடினேன். வாவெர்க்கா என்னிடம் விரைந்து வந்தான். அவனைக் குதிங்காலால் இடறி விட நான் தீர்மானித்தேன். அப்போதுதான் நான் அவனு டைய முகத்தைப் பார்த்தேன். அதில் எல்லாமே முடிந்து போயிருந்ததைக் கண்டேன்."

"ஆமாம், அவனுக்குப் பயங்கரமான முகம்தான்," மத்தியாஸ் கூறினான். "அவனை நான் முதன் முதலாகப் பார்த்த போது எனக்கு வெறுப்பு நோயே ஏற்பட்டு விட்டது."

"நீ என்னை ஆறுதல்படுத்த முயற்சிசெய் மாட்ஸ்," உலி கூறினான். "ஆனால், இப்படியே என்னால் தொடர முடியாது இதற்கு ஏதாவது செய்து தீரவேண்டும்."

"சரி. வா," மத்தியாஸ் கூறினான். "மற்ற பசங்கள் இப்போதுதான் போகிறார்கள்."

நோயால் ஒற்றுமைப்பட்ட இரண்டு நண்பர்களும் பள்ளித் தோழர்களுக்குப் பின்னால் ஓடினார்கள். மெதுவாகத் துள்ளு நடை போட்டபடி அவர்கள் பள்ளியை நோக்கிச் சென்றார்கள். அங்கே தெயடோர் இவர்களுக்காகக் காத்திருந்தான்.

தோல்வியடைந்த உயர்நடு நிலைப்பள்ளியின் படை, 17, ஃபோர்ஸ்ட்ரேய்-தெருவின் முற்றத்தில் எகர்லாண்டிற்காக காத்துக் கொண்டிருந்தது.

எகர்லாண்ட் நம்பிக்கைக்குரியவனாக அவர்களிடம் வந்து சேர்ந்தான். "கைதியை விடுதலை செய்யுங்கள்," அவன் கூறினான்.

''நான் விடுதலை செய்ய முடியாது!'' வாவெர்க்கா இரைந்தான்.

''அப்போ, நீ என்ன செய்ய விரும்புகிறாயோ அதைச் செய்து கொள்,'' எகர்லாண்ட் கூறினான். ''அப்போ நீங்கள் வேறொரு தலைவரை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்,'' அவர்களை ஏறிட்டுப் பார்க்காமலே அவன் வீட்டிற்குள் சென்றான்.

அவர்கள் கத்திக் கொண்டு நிலவறையினுள் ஓடினார்கள். அவர்களுடைய கடுஞ் சீற்றத்தைக் கைதியின் மீது காட்ட வேண்டுமென்பது அவர்களின் விருப்பம்.

ஆனால், ஒரு கைதிக்குப் பதிலாக அங்கே அவர்கள் இரண்டு கைதிகளைக் கண்டார்கள். அக்கணமே அவர்கள் முகம் தொங்கிவிட்டது; தாளமுடியாத அவமானத்தை அடைந்துவிட்டது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டது.

# அத்தியாயம் ஐந்து

தியதோரோடு நேர்முக மோதல்; பள்ளிக்கூட விதிமுறைகளைப்பற்றிய ஒரு விவாதம்; எதிர் பாராத புகழுரை; பொருத்தமான தண்டனை: விடுதித் தலைவரின் நீண்டகதை; அதைப்பற்றி பின்னர் மாணவர்கள் கூறியது.

# 5

கிட்டத்தட்ட நண்பகல் கடந்துவிட்டது. ஐந்துமணிக்குச் சற்று முன்னால் பனிபெய்வது நின்றுவிட்டது. ஆனால், கந்தக நிறமுள்ள மேகங்கள் வானத்தில் தவழ்ந்து கொண்டிருந்தன. குளிர்கால மாலைநேரம் நகரத்தின் மீது கவிந்திருந்தது. ஆண்டிற்கு ஒருமுறை சிறப்பாக வரும் ''கிருஸ்துமஸ் ஈவ்'' மாலை நேரத்திற்கு முன்னதாகவுள்ள மாலை நேரங்களில் அது இறுதியானதாக அமைந்திருந்தது. இன்னும் ஒரு சில நாட்களுக்குள் கிருஸ்துமஸ் மரங்களில் எரியும் மெழுகுவத்திகள் இருண்ட தெருக்களில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பதை வீடுதோறுமுள்ள பலகணிகள் எல்லோருக்கும் நினைவுறுத்திக் கொண்டிருந்தன. ஆனால், அச்சமயத்தில வீடுகளிலுள்ள பையன்கள் பெற்றோர்களோடு தங்கள் சொந்தக் கிருஸ்துமஸ் மரங்களைச் சுற்றிலும் இருப்பார்கள்.

கடைகளில் பிரகாசிக்கும் பலகணிகளில் பைன் மரக்கிளைகளும் கண்ணாடி அலங்காரங்களும் நிறைந்திருந்தன. வயதானவர்கள் ஏதோ விளங்காத, புதிரான உணர்ச்சிகளை முகங்களில் தேக்கிக் கொண்டு பொட்டலங்களைச் சுமந்தவண்ணம் ஒரு கடையிலிருந்து மற்றொரு கடைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். இஞ்சியப்பத்தின் மணம் தெருவெங்கும் நிறைந்திருந்தது.

அந்தப் பையன்கள் ஐந்துபேரும் குன்றின்மீது மூச்சுத் திணற ஓடினார்கள். ''எனக்குக் கிருஸ்துமஸ் பரிசாக ஒரு குத்துச் சண்டைப் பயிற்சிப் பந்து கிடைக்கப் போகிறது.'' மத்தியாஸ் கூறினான். ''அதை உடற்பயிற்சிக் கூடத்தில் கட்டித் தொங்கவிட ஜஸ்டஸ் எனக்கு அனுமதி கொடுப்பார். அப்போது அது ரொம்பப் பிரமாதமாயிருக்கும்.''

'' உன் கண்ணைச் சுற்றிலுமிருந்த வீக்கம் குறைந்து கொண்டிருக்கிறது,'' உலி கூறினான்.

'' அதொன்றுமில்லை. அதெல்லாம் ஒரு நாள்வேலை ''.

அவர்கள் பள்ளிக்கருகில் வந்து சேர்ந்தார்கள். நகரத்திற்கு உயரமான இடத்தில் அது அமைந்திருக்கிறது. ஒளிவீசும் பலகணிகளைக் கொண்ட அப்பள்ளி இரவில் கடலில் சஞ்சரிக்கும் மிகப் பெரிய கப்பலைப் போன்று காணப்பட்டது. இடது பக்க டவரின் வலதுபக்க உச்சியில் இரண்டு பலகணிகள் தனித்துப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. விடுதித் தலைவரான டாக்டர் யொஹன் போக்கின் அறைதான் அது.

'' இன்று இரவு கணக்கு ஏதேனும் செய்யவேண்டியிருக்கிறதா ?'' ஜானிட்ரோட்ஸ் கேட்டான்.

'' ஆம்,'' மார்ட்டின் கூறினான். '' சில சாதாரண வட்டிக் கணக்குகள். ஆனால், அது பொடிப் போடும் நேரத்தில் செய்து முடிக்கக்கூடிய எளிய கணக்குகள். இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் அவைகளை நான் செய்துவிடுவேன்.''

'' அப்போ நாளைக் காலையில் நான் அவைகளை உன்னிடமிருந்து பார்த்தெழுதிக் கொள்கிறேன்,'' செபாஸ்டியன் கூறினான். இவ்வாறு அவர்கள் நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். '' நான் பரம்பரையைப்பற்றிய நூலொன்றைப் படித்துக் கொண்டு வருகிறேன். அது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது.''

அவர்கள் காலுக்கடியில் கிடக்கும் பனியை மிதித்துத் துவைத்துக் கொண்டு மூச்சுவாங்கக் குன்றின்மேல் ஏறினார்கள்.

பள்ளிக்கூட வாசலுக்கு வெளிப்பக்கத்தில் யாரோ ஒருவன் சிகரெட் ஒன்றைப் புகைத்தவண்ணம் மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தான். அவன்தான் தியதோர். '' பொடிப் பசங்களா, வந்துவிட்டீர்களா !'' ஏளனம் செய்யும் பாவனையில் அவன் கூறினான். '' ஒருவேளை ஒளிந்து மறைந்து சினிமாவுக்குப் போயிருந்திருப்பீர்கள். அது மிக நல்லபடம் என்று நான் நினைக்கிறேன். அப்போ தண்டனையும் அதற்குத் தகுந்தபடி

இருக்க வேண்டுமல்லவா?''

"அது அற்புதமான படமாக இருந்தது," தங்கு தடையின்றி செபாஸ்டியன் கூறினான். கதாநாயகன் உன்னைப் போலவே இருந்தான்; ஆனால், அவ்வளவு அழகாக இல்லை."

மத்தியாஸ் சிரித்தான். "அறிவீனத்தை நிறுத்து ஸெப்!'' மார்ட்டின் கூறினான்.

"ஓ! நீயும் இங்கே இருக்கிறாயா?'' மார்ட்டினை முன்னர் காணாததுபோல் பாவனை செய்துகொண்டு தியதோர் சத்தமாகக் கூறினான்.

"உன்னைப் போன்ற அன்னியர்களுக்கு அவர்கள் பள்ளி உதவித் தொகை எப்படிக் கொடுக்கிறார்கள் என்பது எனக்கு எப்போதுமே விளங்குவதில்லை."

"மனம் இடிந்து போகவேண்டாம்," ஜானி கூறினான். "நீ இப்போதும் சிறுவன்தான்!''

தியதோர் கடுங்கோபத்தால் காரித்துப்புபவன் போலப் பாவனை செய்தான்.

"நல்லது, என்னோடு வாருங்கள் குழந்தைகளே," அவன் கூறினான். "டாக்டர் போக் உங்களைக் காண மிகவும் பொறுமையற்றவராக இருக்கிறார்."

அவர்கள் சுழல் படிக்கட்டு வழியாக ஏறி டவருக்குள் சென்றார்கள். அவர்கள் தப்பியோட முயற்சிக்கக் கூடும் என அஞ்சிய தியதோர் காவலனைப்போல் அவர்களுக்குப் பின்னாலேயே ஏறினான்.

ஒரு நிமிடம் கழித்து அவர்கள் எல்லோரும் ஜஸ்டஸின் முன்பாக, அவரது படிப்பறையில் நின்று கொண்டிருந்தார்கள்.

"இதோ ஒளிந்து ஓடியவர்கள், டாக்டர்," தியதோர் கூறினான். அவன் குரல் தேனைப்போல் அவ்வளவு இனிமையாக இருந்தது.

போக் தனது எழுது மேஜையில் அமர்ந்து, கடமை தவறிய குற்றவாளிகள் ஐவரையும் பார்த்தபடியே இருந்தார். அவரது கண்ணிமைகள் ஒருமுறை கூட இமையாததால் அவரது சிந்



டாக்டர் போக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நெருங்கினர்.

தனைகள் தெளிவாக வெளிப்படவில்லை. தோற்றத்தில் அவர்கள் மிகவும் நம்பிக்கையற்றவர்களைப்போலக் காணப்பட்டனர். மத்தியாஸின் கண்கள் கறுத்து வீங்கியிருந்தன. செபாஸ்டியனின் கால்சட்டை முழங்காலுக்குக் கீழே கிழிந்திருந்தது. உலியின் முகமும் கைகளும் குளிரால் கருஞ்சிவப்பாக இருந்தன. மார்ட்டினின் தலைமுடி முகத்தின்மீது தொங்கிக் கொண்டிருந்தது. ஜானியின் மேலுதட்டில் இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவன்மீது வீசப்பட்ட பனிக்கட்டி யொன்றினுள் கல் ஒன்று இருந்திருக்கிறது. ஐந்து ஜோடி பூட்ஸுகளின்மீது பனி உருகி, ஐந்து சின்னஞ்சிறு நீர்க்குட்டைகளை உருவாக்கியிருந்தன.

டாக்டர் போக் தன் இருக்கையினின்றும எழுந்து குற்றவாளிகளை நோக்கி நெருங்கி வந்தார். ''எந்த விதியை இச்சந்தர்ப்பத்தில் மீறியிருக்கிறீர்கள், உலி?'' அவர் கேட்டார்.

''குறிப்பிட்ட நேரங்களைத் தவிர வேறு நேரங்களில் மாணவர்கள் பள்ளிக் கட்டடத்தைவிட்டு வெளியே செல்ல தடை செய்யப்படுகின்றனர் என்ற விதியை,'' நடுங்கியபடி சிறுவன் உலி பதில் கூறினன்.

''ஏதாவது விதிவிலக்கு உண்டா, மத்தியாஸ்?'' அவர் கேட்டார்.

''உண்டு, சார்,'' மாட்ஸ் பதிலளித்தான். ''ஆசிரியர்களில் ஒருவர் அனுமதி கொடுத்தால்.''

''வெளியே போவதற்கு ஆசிரியர்களில் யார் உங்களுக்கு அனுமதியளித்தது?'' விடுதித் தலைவர் கேட்டார்.

''யாருமில்லை,'' ஜானி மறுமொழி கூறினன்.

''அப்போ, நீங்கள் யாருடைய அனுமதியின் பேரில் வெளியே சென்றீர்கள்?''

''அனுமதி இல்லாமலே நாங்கள் போனோம்,'' மத்தியாஸ் அறிவித்தான்.

''அது முழு உண்மை இல்லை,'' மார்ட்டின் கூறினன்.

''மற்ற பையன்கள் என்னைப் பின்பற்றி வருமாறு நான்தான் உத்திரவிட்டேன். நான்தான் அதற்கு முழுப்பொறுப்பு.''

''இந்த விஷயத்தில் நீ எந்த அளவுக்குப் பொறுப்பேற்க விரும்புகிறாய் என்பதை நான் நன்கு அறிவேன், மார்ட்டின்,'' டாக்டர் போக் கடுமையுடன் கூறினார். ''ஆனால், உன்னுடைய உரிமைகளை நீ தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.''

''அவன் அவைகளைத் தவறாகப் பயன் படுத்தவில்லை,'' செபாஸ்டியன் இரைந்து கூறினான். ''நாங்கள் நகரத்திற்குப் போக வேண்டியிருந்தது. அது மிகவும் அத்தியாவசிய மாகவும் இருந்தது.''

''நீங்கள் ஏன் என்னுடைய அனுமதியைக் கேட்கவில்லை?''

''விதிமுறையின் காரணமாக நீங்கள் அதை மறுக்கும்படி ஏற்படும்,'' மார்ட்டின் கூறினான். ''எனினும் உங்கள் கட்டளையை மீறி நாங்கள் போயே தீர வேண்டியிருந்திருக்கும். அது இன்னும் மோசமான நிலையை உண்டாக்கியிருக்கும்.''

''என்ன? எனது கண்டிப்பான உத்திரவுகளை நீங்கள் மீறுவீர்களா?'' ஜஸ்டஸ் கேட்டார்.

''ஆமாம், சார்,'' ஐந்து பேரும் பதிலளித்தார்கள்.

''துர்பாக்கிய நிலை,'' உலி தளர்ச்சியடைந்தவனாய் தொடர்ந்து கூறினான்.

''ஆயினும், சாதாரணமாக இது மன்னிக்க முடியாத குற்றமாகும், டாக்டர்,'' அபிப்பிராயம் கூறியபடி தலையாட்டினான் தியதோர்.

''நான் உன்னுடைய தனித்த அபிப்பிராயத்தைக் கேட்டதாக எனக்கு நினைவில்லை,'' டாக்டர் போக் கூறினார். அப்போது தியதோரின் முகம் வான்கோழி முகம்போல் சிவந்து விட்டது.

''எதற்காக நீங்கள் நகரத்திற்குப் போகும்படி நேர்ந்தது?'' விடுதித் தலைவர் மீண்டும் கேட்டார்.

''உயர் நடுநிலைப் பள்ளிப் பசங்கள் காரணமாகத்தான் சென்றோம்,'' மார்ட்டின் பதில் கூறினான். அவர்கள் விடுதியில்

*தங்காது பள்ளி வந்து படிக்கும் எங்கள் சக மாணவர்களில் ஒருவன் மீது ஆக்கிரமிப்புச் செய்தார்கள்.* அவனையும் ஹெர் க்ரூய்ஸ்கெம்மையும், பிழை திருத்துவதற்காக அவன் கொண்டு போன பயிற்சிப் புத்தகங்களையும் அவர்கள் கைப்பற்றிக் *கொண்டு போய் விட்டார்கள்.* விடுதியில் *தங்காது பள்ளி* வந்து பயிலும் மற்றொரு மாணவன் திரும்பி வந்து எங்களிடம் அதைக் கூறினான். இனி, அவனைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் போய்த்தானே ஆக வேண்டும். வேறு என்ன செய்வது?''

''நீங்கள் அவனைக் *காப்பாற்றினீர்களா?''* விடுதித் தலைவர் கேட்டார்.

''ஆமா *சார்,*'' அவர்களில் நான்கு பேர் இரைந்து கூறினார்கள். உலி ஒன்றுமே கூறவில்லை. இந்தக் கோரஸில் தானும் கலந்து கொள்வது அவ்வளவு உசிதமானதாக அவனுக்குத் தோன்றவில்லை.

டாக்டர் போக், ஜானியின் பிளந்த உதட்டையும் மத்தியாஸின் வீங்கிய கண்ணையும் பரிசோதித்தார். ''எல்லோருக்கும் அடி விழுந்ததா?'' அவர் கேட்டார்.

''கொஞ்சங் கூட இல்லை,'' மத்தியாஸ் கூறினான் ''யாருக்கும் இல்லை.''

''பயிற்சிப் புத்தகங்களைத் *தவிர''* — செபாஸ்டியன் தொடங்கினான்.

*மார்ட்டின் ஒரு மாதிரியாக* அவனைப் பார்க்கவே அவன் உடனே பேச்சை நிறுத்திக் கொண்டான்.

''பயிற்சிப் புத்தகங்கள் என்னவாயிற்று?'' ஜஸ்டஸ் கேட்டார்.

''*நாற்காலி யொன்றில்* கட்டி வைக்கப்பட்டிருந்த கைதியின் கண் முன்னாலேயே நிலவறையில் எரிக்கப் பட்டன,'' மார்ட்டின் கூறினான். ''சாம்பலைத் தவிர வேறு எதையும் நாங்கள் பார்க்கவில்லை.''

''*சாம்பலையெல்லாம் மார்ட்டின்* தன் கைக்குட்டையொன்றில் சேகரித்துத் தன் சட்டைப் பையில் வைத்திருக்கின்றான்,''

மகிழ்ச்சியுடன் விளக்கிய மத்தியாஸ், ''நான் அதை ஒரு கலயத்தில் திரட்டி வைக்கப் போகிறேன்.''

டாக்டர் போக்கின் உதடுகளில் மெல்லிய புன்னகை இழையோடி நின்றது. ஒரு விநாடியில் பத்தில் ஒரு பங்கு நேரமே அவர் புன்னகை புரிந்தார். பின் மீண்டும் அவர் கடுமை யானவராக மாறினார். ''சரி. இனி என்ன செய்யப் போகிறீர்கள்?'' அவர் கேட்டார்.

''நான் காலையில் ஒரு பட்டியல் தயாரிக்கப் போகிறேன்.'' மார்ட்டின் கூறினான். ''வகுப்பிலுள்ள ஒவ்வொரு பையனும் அவன் செப்டம்பரிலிருந்து பெற்ற 'மார்க்' நாணயங்களையெல் லாம் என்னிடம் தரவேண்டும். நான் அதையெல்லாம் பட்டியலில் குறித்துக்கொண்ட பிறகு, பாடம் தொடங்கும் சமயத்தில் ஹெர் க்ருய்ஸ்கெம்மிடம் கொடுப்பேன். ஒருவேளை நாங்கள் கடைசிப் பயிற்சியை மீண்டும் செய்யும்படியாக இருக்கும். ஏனென்றால் அதில் மதிப்பெண் போடவில்லை.''

''ப்பூ!'' மத்தியாஸ் தன்னைத்தானே குலுக்கிக் கொண்டு முணுமுணுத்தான்.

''ஹெர் க்ருய்ஸ்கெம் திருப்திப் படுவார் என்று எனக்குத் தோன்றவில்லை,'' ஜஸ்டஸ் கூறினார். ''உங்களுக்குக் கிடைத்த மதிப்பெண்களையெல்லாம் உங்களால் நினைவுபடுத்திக் கொள்ள முடியும் என்றும் எனக்குத் தோன்றவில்லை. என்றாலும் உங்களுடைய செயலுக்கு நான் ஒப்புதல் அளிக்கிறேன். என்னருமை மாணவர்களே நீங்கள் மிக நன்றாகச் செயல்பட்டி ருக்கிறீர்கள்.''

ஐந்து பூரண நிலவுகளைப் போல அவர்கள் மந்தகசித்தார் கள். தெயடோர் புன் முறுவல் பூக்க முயன்றான், ஆனால் முடியவில்லை.

''அப்படி இருந்தாலும்,'' டாக்டர் தொடர்ந்தார், ''அனுமதியின்றி நீங்கள் பள்ளியை விட்டு வெளியேறியதன் மூலம் விதி முறையை மீறி இருக்கிறீர்கள். அந்தச் சோபாவின் மீது அமருங்கள். நீங்கள் மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள்.

அடுத்த நடவடிக்கையைப் பற்றி இனி நாம் ஆலோசிக்க வேண்டும்.''

ஐந்து பையன்களும் சோபா மீது அமர்ந்து மிகுந்த நம்பிக் கையுணர்வோடு ஜஸ்டஸை நோக்கினார்கள். தெயடோர் தொடர்ந்து நின்று கொண்டே இருந்தான். அவனுக்கு அங் கிருந்து ஓடிவிட வேண்டும்போல் இருந்தது.

டாக்டர் போக் அறையில் அங்குமிங்குமாக உலாவினார். இறுதியில் அவர் கூறினார்: ''நாம் சாதாரண நடைமுறை நிலையிலிருந்து இக் காரியத்தைப் பார்க்க வேண்டும். அனுமதி யின்றி நீங்கள் வெளியே போயிருக்கிறீர்கள் என்பது உண்மை. வழக்கமாக அதற்கு என்ன தண்டனை, செபாஸ்டியன்?''

''பதினைந்து நாட்களுக்கு எல்லா விடுமுறைகளும் நட்ட மாகும்,'' அவன் பதில் கூறினான்.

''இல்லையேல் நீங்கள் சில சலுகைகளை விட்டுக் கொடுக்க வேண்டி வரும்,'' ஜஸ்டஸ் தொடர்ந்தார், அதையும் செய்ய வில்லையென்றால் ஒரு விஷயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். அதாவது, என்னவாயினும் சரி என உங்கள் வாய்மை தவறாத அறிவு, உங்களை நகரத்திற்குப் போகும்படி கட்டாயப் படுத்தியுள்ளது. எனவே இந்த வழக்கில் நீங்கள் செய்த ஒரே குற்றம் அனுமதி பெறத் தவறியது தான்.''

அவர் ஜன்னல் பக்கம் சென்று வெளியே பார்த்தார். பின், அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அவர் கூறினார்: ''எதனால் நீங்கள் என்னைக் கேட்கவில்லை? உங்களுக்கு என் னிடம் மிகமிகக் குறைந்த அளவு நம்பிக்கையாவது இருக் கிறதா?'' அவர் திரும்பி நின்றார். ''அப்படியானால் தண்டனை எனக்குத்தான். ஆகவே, உங்கள் தவறுக்குக் காரணம் நான் தான்.''

''அப்படிச் சொல்லாதீர்கள் ஹெர் ஜஸ்டஸ்,'' மத்தியாஸ் தன்னை மறந்த நிலையில் இரைந்து கூறினான். மேலும் தடு மாற்றத்துடன் தொடர்ந்தான்: ''அப்படிக் கூறவேண்டாம், சார். எங்களைப்பற்றி உங்களுக்கு எவ்வளவோ தெரியும்

என்பது என் நம்பிக்கை''—அவன் தொடர்ந்து கூறவில்லை. பல கணியருகில் நிற்கும் அம் மனிதரை எவ்வளவு அதிகமாக அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை முழுமையாக வெளிப் படுத்த அவனுக்கு வெட்கமாக இருந்தது.

''நாங்கள் போய்க் கொண்டிருந்தபோது,'' மார்ட்டின் கூறினான். ''உங்களிடம் அனுமதி கேட்கவில்லையே என ஒரு நிமிடம் நான் எண்ணினேன். ஆயினும், அது தவறு என்பதை நான் உணர்ந்தேன். எங்களுக்குத் தங்கள் மீது நம்பிக்கை இல்லாமலில்லை சார். நாங்கள் எதனால் உங்களிடம் அனுமதிக் கேட்கவில்லை என்பது எனக்கே சரியாகத் தெரியவில்லை.''

இங்கே செபாஸ்டியனுக்குத் தன் புத்திசாலித்தனத்தைக் காட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ''அது மிகவும் சுலபம், சார்,'' அவன் விளக்கினான். ''அங்கே இரண்டே மாற்று வழிகள் தான் இருந்தன. ஒன்று நீங்கள் எங்களுக்கு அனுமதி தர மறுத்தால் நாங்கள் உங்கள் கட்டளைக்கு கீழ்படிய மறுக்க நேரிடும்; இல்லையென்றால், நீங்கள் அனுமதி கொடுத்திருந்தால் எங்களில் யாருக்காவது ஏதாவது ஏற்பட்டிருந்தால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பாளியாக்கப் படுவீர்கள். மற்ற ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதற்காக உங்களைக் குற்றம் சாட்டுவார்கள்.''

''அதைப் போல ஏதாவதொன்று,'' மார்ட்டின் கூறினான்.

''உண்மையில் நீங்கள்தான் பொறுப்புத் திறன் மிக்க வர்கள்,'' விடுதித் தலைவர் மறுமொழி கூறினர்.

''ஆகவே என்னைக் கேட்காமல் சென்றதற்கு உண்மை யான காரணம் எந்த மகிழ்ச்சியற்ற நிலையிலிருந்தும் என்னைக் காப்பது தானே உங்கள் நோக்கம். சரி. உங்களுக்கு வேண்டிய தண்டனையை நீங்களே விதித்துக் கொள்ளுங்கள். விடுமுறைக்குப் பின் உங்களது முதல் விடுமுறை உங்களுக்கு நட்டமாகும். அது பள்ளிக்கூட விதிமுறைகளுக்கும் திருப்தி யளிக்கக் கூடியதாக இருக்கும். அல்லவா?'' போக் உசாவும் பாவனையில் தெயடோரை நோக்கினர்.

''நிச்சயமாக, சார்,'' அவன் அவசர அவசரமாகப் பதில் கூறினன்.

''அப்போ, உங்களுடைய தண்டனைக்காக பிற்பகலை ஒதுக்கியுள்ளேன். டவருக்கு வந்து என்னோடு தேநீர் அருந்தும் படி உங்களை நான் அழைக்கிறேன். விதி முறைகளில் கூறப் பட்டதல்ல இது. ஆனல், இதற்கு ஆட்சேபணை ஏதும் இருக்கும் என நான் நினைக்கவில்லை, இருக்கா?'' மீண்டும் அவர் தெய டோரை நோக்கினர்.

''அப்படியொன்றுமில்லை, சார்,'' ஆறும் படிவப் பையன் புல்லாங்குழல் ஒலியால் கூறினன்.

''நீங்கள் தண்டனையை ஒப்புக் கொள்கிறீர்களா?'' போக் கேட்டார். பையன்கள் மகிழ்ச்சியோடு தலையசைத்தார்கள். ஒருவரையொருவர் விலாப்புறங்களால் மெதுவாக இடித்துக் கொண்டனர்.

''பிரமாதம்,'' மத்தியாஸ் கத்தினன். ''அங்கு ஏதாவது கேக் இருக்குமா?''

''பெரும்பாலும் இருக்கும் என நம்புகிறேன்,'' ஜஸ்டஸ் கூறினர். ''ஆனல், உங்களை வெளியே போக விடுவதற்கு முன்பு, நான் உங்களுக்கு ஒரு சிறிய கதையைச் சொல்ல விரும் புகிறேன். நாம் எல்லோரும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்மையைத் தரும் வகையில் நீங்கள் என் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்ற உணர்வு எனக்கு எப்போதுமே இருந்து வருகிறது.''

தெயடோர் கதவை நோக்கித் திரும்பித் தன் கால் நுனி விரல்களால் நடக்க ஆரம்பித்தான்.

''வேண்டாம், வேண்டாம், நீ இங்கேயே இருக்க வேண்டும்,'' போக் இரைந்து கூறினர். அதன் பின் அவர் மேஜைக்கருகில் அமர்ந்தபடியே பலகணி வழியாக வெளியே வசந்தகால மாலை நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வசதி யாகத் தன் நாற்காலியைச் சுழற்றினர்.

''இருபது ஆண்டுகள் இருக்கும்,'' அவர் கூறினர்.

''அப்போது இந்தப் பள்ளியில் உள்ள உங்களைப் போன்ற பையன்கள் இருந்தனர். மிக நல்ல ஆறும் படிவப் பையன் களும் ஒரு விடுதித் தலைவரும் இருந்தனர்.

நாம் இருக்கும் இதே அறையில் அவர் தங்கியிருந்தார்...... நான் உங்களுக்குக் கூறப்போவது இருபது ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் இப்போது படுத்துறங்கும் படுக்கையில் படுத் துறங்கி, வகுப்பிலும் உணவுக் கூடத்திலும் நீங்கள் உட்காரும் இருக்கைகளில் அமர்ந்திருந்த நான்காம் படிவ மாணவர்களில் ஒருவனைப் பற்றித்தான் நான் கூறப் போகிறேன். அவன் மிகவும் நல்ல பையன்; கடுமையாக உழைத்துப் படிக்கக் கூடியவன். மார்ட்டின் தாலரைப் போல அவன் எவ்வித அநியாயத்தையும் வெறுப்பவனாக இருந்தான். அவனும் மத்தியாஸ் செல்ப் மன்னைப் போலவே அவசிய மேற்பட்டால் சண்டை செய்யக் கூடியவனாகவும் இருந்தான். சில சமயங் கள் இரவு முழுவதும் அவன் பலகணி அடிக் கட்டையில் அமர்ந்து உலி ஃபோண் ஸிம்மேன் போல வீட்டை நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பான். செபாஸ்டியன் ஃபிராங்கைப் போல அவன் உயர்ந்த அறிவூட்டும் புத்தகங்களை நிறையப் படிப்பான். சில சமயங்களில் த்ரோட்ஸைப் போல அவன் கட்டடத்தைச் சுற்றிலுமுள்ள நிலத்தில் ஒளிந்து கொண்டி ருப்பான்.''

பையன்கள் அடுத்தடுத்து அமைதியாக சோபாவில் உட் கார்ந்து மிகுந்த ஆர்வத்தோடும் கவனத்தோடும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் தொடர்ந்து கூறினார். ''ஒரு நாள் இந்தப் பையனின் தாயார் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். அவள் வசித்த சிறிய கிராமத்திலிருந்து கிர்ஷ்பெர்கிலுள்ள மருத்துவ மனைக்கு அவள் கொண்டு செல்லப்படாவிட்டால் அவள் நிச்சயம் இறந்து விடுவாள். அது எங்கே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். வெகு தூரத்திற்கப்பால் நகரத்தின் இறுதியில் இருக்கிறது. பெரிய சிவப்புச் செங்கற்

கட்டடம். தோட்டத்தின் பின்னல் ஒதுக்குப்புறமாக இருந்த தனித்த மருத்துவமனை அது.

அச்சிறு பையன் நிலைகுலைந்து போனன். அவனுக்கு ஒரு நிமிடம் கூட மனம் சமாதானம் அடையவில்லை. ஒருநாள் அவன் தாயார் உடல் நிலை மிக மோசமான கட்டத்தை அடைந்தபோது, அவன் பள்ளியை விட்டு வெளியேறி நகரத்தின் வழியாக மருத்துவ மனைக்கு ஓடி, தன் தாயாரின் படுக்கைக்கு அருகில் அமர்ந்து வெப்பமான தன் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தான். அடுத்த நாள் அரை விடுமுறையாதலால் தான் மீண்டும் அடுத்த நாள் வருவதாக தன் தாயாருக்கு வாக்களித்து விட்டு மீண்டும் தான் வந்த வழியே திருப்பி ஓடினன்.

பள்ளிக்கூட வாசலில ஒரு ஆரும் படிவ மாணவன் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகார சக்தியை நியாயமாகவும் பரந்த மனப்பான்மையோடும் பயன்படுத்த நியமிக்கப்பட்ட மாணவர்களில் அவனும் ஒருவன். அச்சிறு பையனை அவன் எங்கே போயிருந்தாய் என்று கேட்டான். சிறுவனுக இருந்த போதிலும் நாக்கைக் கடித்துக் கொண்டு, ''அம்மாவைப் பார்க்கச் சென்றிருந்தேன்'' என்று உண்மையை மனம் திறந்து கூற அவன் தயாராக இல்லை. அவனுடைய அடுத்த நாளை விடுமுறை நீக்கம் செய்து அவனுக்குத் தண்டனை விதித்தான் அந்த ஆரும் படிவ மாணவன்.

எனினும், அடுத்தநாள் பிற்பகல் வந்தபோது அச்சிறுவன் மீண்டும் மருத்துவ மனையை நோக்கி ஓடிவிட்டான். அவனு டைய தாயார் அவனுக்காகக் காத்திருந்தாள். அவன் நகரத்தின் வழியாக ஓடினன். ஒரு மணி நேரம் அவள் படுக்கையருகில் அவன் அமர்ந்திருந்தான். முதல் நாளை விட மோசமான கட்டத்தில் அவள் இருந்தாள். எனவே அடுத்த நாளும் இதே போன்று வருமாறு அவனை அவள் மிகவும் வேண்டிக் கொண்டாள். அவனும் அவ்வாறே வருவதாக

வாக்குறுதி கொடுத்து விட்டுப் பள்ளிக்குத் திரும்பி ஓடி வந்தான்.

வெளியே போகக் கூடாது என்று தடை செய்தும் கூட அச்சிறு பையன் தனக்குக் கீழ்ப்படியாது மீண்டும் வெளியே போவதாக விடுதித் தலைவரிடம் ஆறும் படிவ மாணவன் முன்னரே அறிவித்திருந்தான். அச்சிறு பையன் விடுதித் தலைவரின் முன்பாகப் போய் நின்றான்—டவரிலுள்ள இதே அறையில் தான் -இப்போது நீங்கள் வந்து நிற்பதைப்போன்றே இருபது வருடங்களுக்கு முன்பு அவனும் வந்து நின்றான். விடுதித் தலைவர் கண்டிப்பானவராக இருந்தார். ஒரு சிறு பையனுக்கு நம்பிக்கையூட்டத்தக்கவராக அவர் இல்லை. அச்சிறுவன் எதுவுமே கூறவில்லை. ''அவன் ஒரு மாத காலத்திற்குப் பள்ளித் திடலைவிட்டு வெளியே செல்லக் கூடாது'' என தடை விதிக்கப்பட்டான்.

ஆனால், மறுநாள் மீண்டும் பழையபடியே அவன் நழுவி விட்டான். திரும்பி வந்தபோது அவன் தலைமையாசிரியரிடம் கொண்டு செல்லப்பட்டான். தலைமையாசிரியர் அவனுக்கு இரண்டு மணி நேரச் சிறைத் தண்டனை விதித்தார். அடுத்த நாள் தலைமையாசிரியரும் விடுதித் தலைவரும் அச்சிறுவனைக் கண்டு பேசுவதற்காக சிறை வைககப்பட்டிருந்த தனியறையின் கதவை திறந்தபோது அங்கே வேறொரு பையன் இருப்பதை அவர்கள் கண்டார்கள். அவன் ஓடிப் போனவனின் நண்பனுவான். அச்சிறு பையன் போய் அம்மாவைப் பார்த்து விட்டு வரட்டும் என்று கருதி இவன் தன்னையே அவனுக்குப் பதிலாகச் சிறைப்படுத்திக் கொண்டு கிடந்தான்.''

''சரி,'' டாக்டர் போக் கூறினார், ''அவர்கள் இருவரும் நண்பர்களானார்கள். அவர்கள் பிற்காலத்திலும் நண்பர்களாகவே சேர்ந்து இருந்தார்கள். அவர்கள் ஒரே பல்கலைக் கழகத்திற்குச் சென்று வாடகையறையில் தங்கினார்கள். அவர்களில் ஒருவனுக்குத் திருமணமாகிய பின்னரும் கூட அவர்கள் நண்பர்களாகவே இருந்தனர். அதன் பிறகு மனைவிக்கு ஒரு

குழந்தை பிறந்து இறந்து விட்டது. அதன் பின்னர் மனைவியும் இறந்து விட்டாள். பின்னர் இறுதிச் சடங்கு முடிந்த அடுத்த நாள் கணவன் காணமல் போய்விட்டான்; அவனது நண்பன், இப்போது யாருடையை கதையை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே அவனைப் பற்றி இன்று வரைக் கேள்விப் படவேயில்லை,'' டாக்டர் போக் தன் கையின்மேல் தலையைச் சாய்த்தபடியே இருந்தார். அவரது கண்களில் துயரம் நிறைந்திருந்தது.

''தலைமையாசிரியர்,'' அவர் தொடர்ந்து கூறினர், ''அச் சிறுவன் தன்னை ஏமாற்றினன் என்பதை அறிந்தபோது அவர் மிகவும் ஆத்திரம் அடைந்தார். ஆனல், அந்தச் சிறு பையன் நகரத்திற்குள் செல்ல வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிந்தபோது எல்லாம் சரியாகி விட்டது. அந்தப் பையனின் தாயார் மருத்துவ மனையில் இருந்தபோது தனக்கு நம்பிக்கை யூட்டத்தக்க ஒருவர்விடுதியில் இல்லாததால் பெரிதும் துன்புற்ற அவன் என்ருவது ஒருநாள் அப்பள்ளியின் விடுதித் தலைவராக வரவேண்டுமென்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்.''

ஜஸ்டஸ் எழுந்தார். அவரது முகம் சிநேக பாவத்தில் இருந்தபோதிலும், துக்கம் நிறைந்ததாக இருந்தது. அவர் ஐந்து பையன்களையும் பார்த்தார். ''அந்தப் பையனின் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்,'' அமைதியாக மார்ட்டின் கூறினன். ''யொஹன் போக்'' என்பது தான் அது.

ஜஸ்டஸ் தலையாட்டினர். ''சரி, சரி, இனி, விரைவாக வெளியே போங்கடா, போக்கிரிப் பயல்களா!''

அவர்கள் எழுந்து அமைதியாக அறையிலிருந்து வெளியே சென்ருர்கள். தெயடோர் தலை குனிந்தவண்ணம் அவர்களைக் கடந்து சென்ருன். ''அந்த மனிதருக்காக எதையும் ஏற்க நான் தயாராக இருக்கிறேன்,'' படிக்கட்டில் இருந்தபடி கூறினன் மத்தியாஸ்.

உலி தனக்குள் எங்கோ அழுது கொண்டிருப்பது போலக் காணப்பட்டான். ''நானும்'' அவன் கூறினன்.

அவர்கள் தங்களது பல்வேறு அறைகளுக்குப் பிரிந்து செல்லுவதற்கு முன்னர் ஜானி இடைவழியில் நின்ருன்.'' உனக்குத் தெரியுமா,'' அவன் கேட்டான், ''அவருக்காக இரண்டு மணிநேரம் தன்னைச் சிறைப் படுத்திக் கொண்டவரும் இறுதிச் சடங்குக்குப் பின்னர் மறைந்துவிட்டவருமான அவர் யார்?''

''எனக்கொன்றும் தெளிவாகத் தெரியவில்லை,'' மத்தியாஸ் கூறினன். ''நமக்கு எப்படித் தெரியும்?''

''நமக்கு அவரை சரியாகத் தெரியும்,'' ஜானி த்ரோட்ஸ் கூறினன். ''அவர் தங்கியிருப்பது இங்கிருந்து வெகு தூரத்தில் இல்லை. இன்று பிற்பகல் போக்கின் பெயரைக் கேட்டபோது அவர் ஒரே குதியாய்க் குதித்தார்.''

''நீ கூறுவது மிகவும் சரி,'' மார்ட்டின் கத்தினன். ''நிச்சயமாக நீ கூறுவது சரியானது தான் ஜானி; இவர் இழந்த நண்பரின் பெயரை நாம் நன்கு அறிவோம்.''

''அப்படியா, யாரது,'' பொறுமையற்றவனாக மத்தியாஸ் இரைந்து கேட்டான்.

அப்போது தான் ஜானி கூறினன். ''அவர் தான் புகை பிடியாதவர்!''

# அத்தியாயம் ஆறு

ஆறு குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டியின் ஓவியம்; ஒரு பழைய நகைச் சுவையைப் பற்றிய பெருஞ் சிரிப்பு; பால் டூய்ன் என்பது கிருஸ்துவப் பெயர்; நஜ்ந்த விந்தை; பேய்களின் ஊர்வலம்; அரிக்கும் பொடியைத் தூவிய ஒரு மிருகம்; பல கனியின் அடிக்கட்டையில் ஜானி; அவனது எதிர்காலத் திட்டம்.

# 6

இரவுச் சாப்பாட்டிற்குப் பின்னர் அவர்கள் தங்கள் படிப் பறைகளுக்குச் சென்றூர்கள். மார்ட்டின் அடுத்த நாளைக்குப் போட வேண்டிய கணக்குகளைப் போட்டு, ஜெர்மன் மொழிப் பாடத்தில் சேர்க்க வேண்டிய மதிப்பெண்களைப் பற்றிய பட்டியலைத் தயாரித்துத் தொகுத்தான். தனக்குக் கிடைத் திருந்த மதிப்பெண்கள் எத்தனை என்பது மத்தியாஸின் நினைவுக்கு வரவில்லை. கடைசியில் அவன் ''ஒவ்வொரு பயிற் சிக்கும் நான்கு மதிப்பெண் வீதம் போடு,'' என யோசனை கூறினான்.

அதன் பின்னர், மத்தியாஸ் பள்ளிக்கூடப் பொது வேலை யாளிடமிருந்து ஒரு சுத்தியலையும் சில துணிகளையும் வாங்கிக் கொண்டு வந்து பச்சைக் குச்சிகளை மிகுந்த ஓசையுடன் ஆணியறையத் தொடங்கினான். யாருக்காவது பைத்தியம் பிடித்திருக்கிறதோ என பக்கத்துப் படிப்பறையில் உள்ளவர் கள் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அறை எண் ஒன்பதில் உள்ள மாணவர் தலைவனை தெயடோர் எப்படியோ விஷயத்தை அறிந்து கொண்டான். ஜெர்மன் ' பாடத்திற்குரிய மதிப்பெண்களைச் சேகரித்துத் தொகுக்க அடுத்த அறைக்குள் போக மார்ட்டின் அனுமதி கேட்டபோது அவன், ''நண்பரே நீங்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ளக் கூடாது,'' என மறுமொழி கூறினான்.

மத்தியாஸ் வியப்போடு மார்ட்டினைப் பார்த்தான். ஜஸ்ட ஸோடு நடைபெற்ற பேட்டியில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றி எதுவும் அறியாதிருந்த அறையிலுள்ள மற்றவர்கள் பேராச் சரியத்தோடு வாய் பிளந்து நின்றூர்கள். அறையிலிருந்த மற்ற ஆறும் படிவ மாணவர்கள் மிகவும் திகைத்து நின்றதால் வாயிலிருந்த சிகரெட்டும் அணைந்து விட்டது. ''உனக்கு

என்ன நேர்ந்தது தெயோ?'' அவன் கேட்டான், ''உனக்கு உடல் நலமில்லையா?''

இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால் திக்குமுக் காடச் செய்யும் நிலைமையைக் கண்ட மார்ட்டின் பரபரப்போடு விரைந்து அறையை விட்டு வெளியே வந்தான். நான்காம் படிவத்தைச் சேர்ந்த மற்ற பையன்களோடெல்லாம் ஆலோ சித்து அவர்களுடைய மதிப்பெண்களை தனது பட்டியலில் எழுதிக் கொண்ட பிறகு அவன் ஜானி த்ரோட்ஸிடம் சென்றான். ஜானி த்ரோட்ஸின் படிப்பறையிலுள்ள ஆறும் படிவ மாணவர்கள் பண்பு மிக்கவர்கள். ''என்ன மார்ட்டின் மீண்டும் போர்ப் பாதையில்தானா?''

''இல்லை,'' பதில் கூறிய பையன், ''இப்போது இல்லை. ஜானியும் நானும் கிருஸ்துமஸ் அற்புத மொன்றைப் பற்றி விவாதிக்கப் போகிறோம்.'' பிறகு இரண்டு பையன்களும் கூடி ஆலோசித்து அடுத்த நாள் சாப்பாட்டிற்குப் பின்னர் ஜஸ்டஸை ஒதுக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்வதென்று முடிவு செய்தார்கள்.

''நாம் தவறேதும் செய்யவில்லை என்றே நம்புகிறேன்,'' மார்ட்டின் கூறினான். ''அப்படியிருந்தால் அது மிகப் பெரிய தவறாகும். ஒருவேளை ஜஸ்டஸும் புகை பிடியாதவரும் அவர் களுடைய வாழ்க்கையில் இதற்கு முன்பு தாங்கள் ஒருவரை யொருவர் ஒருபோதும் சந்தித்ததில்லை எனக் கூறக்கூடும்.!''

''அந்தப் பயம் வேண்டாம்,'' ஜானி தீர்மானமாகக் கூறி னான். ''இந்த மாதிரிக் காரியங்களில் நான் ஒரு போதும் தவறு செய்யமாட்டேன். என்னை நம்பு.'' அவன் ஒரு கணம் சிந்தித் தான். ''நீ இதை மறந்துவிடக் கூடாது. புகைபிடியாதவர் தன் னுடைய ரயில் பெட்டியில் பள்ளிக்கு அடுத்தாற் போல் வந்து தங்கியிருப்பதானது தற்செயலாக நடைபெற்ற நிகழ்ச்சியன்று. அவர் தான் தனித்து இருக்க வேண்டும் என விரும்பியது உண்மை தான். அதனால் தான் எங்கே போகிறேன் என்பதை யாரிடமும் கூறாமல் பல ஆண்டுகளுக்கு முன்பு ஓடிப் போனார்.

ஆனுல், அவரால் கடந்த காலத்திலிருந்து தன்னை பூரணமாக விடுவித்துக் கொள்ளவும் முடியவில்லை. அவர் நம்மோடு பேசும் போது தனது சொந்த வாழ்க்கையின் இளமைப் பருவத்தைப் பற்றித்தான் நினைக்கிருர். நான் அதை நன்ருக அறிவேன் மார்ட்டின். பெரும்பாலும் அதனை நேரிடையாகவே நான் அனுபவித்தது போன்ற உணர்வே எனக்கு உண்டாகிறது.''

''நீ கூறுவது சரியே,'' மார்ட்டின் கூறினுன். ''தெய்வமே, அவருக்கு எது மகிச்சி?''

ஜானி வேகமாகத் தலையாட்டினுன். ''எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் நாம் இதைச் சரி எனக் கருதினுல்,'' அவன் கூறினுன், ''உடனே நாம் அதை அமைதியாகச் செயல்படுத்த வேண்டும்.''

''அதுவும் சரிதான்,'' மார்ட்டின் ஒத்துக் கொண்டான். பிறகு அவன் அறை எண் ஒன்பதுக்குத் திரும்பி, அவன் தனது பெற்ருேர்களுக்கென வரைந்திருந்த ஒரு ஓவியத்தை மேஜையிலிருந்து வெளியே எடுத்தான். அது முழுமையாக வரையப்பட்டதன்று. அவன் அதை முழுமையாக்க முனைந்தான். அதை அவன் வீட்டிலுள்ள கிருஸ்துமஸ் மரத்தினடியில் வைக்க விரும்பினுன். நாளைக்கு அல்லது நாளை மறுநாளுக்கு அவன் தாய் அவனுக்குப் பயணச் செலவிற்குப் பணம் அனுப்புவாள். சரியாகக் கூறினுல் ஓவியம் வியப்பூட்டும் வகையிலேயே அமைந்திருந்தது, அது ஒரு பச்சைநிறத் தடாகத்தையும் பனி மூடிய உயர்ந்த மலைகளையும் காட்டியது. தடாகத்தின் கரையிலே பனை மரங்களும் பெரிய பெரிய ஆரஞ்சுப் பழங்கள் தொங்கும் ஆரஞ்சு மரங்களும் இருந்தன. தடாகத்தில் தங்க நிற உல்லாசத் தோணிகளும் செவ்வண்ண இரும்புத்துரு நிறத்திலுள்ள படகுகளும் செல்வது போல் இருந்தன. தடாகத்திற்கு அருகிலுள்ள சாலை வழியே நீல நிறக் கோச்சு வண்டி போய்க் கொண்டிருந்தது. சாம்பல் நிறப் புள்ளிகளைக் கொண்ட ஆறு குதிரைகள் அதனை இழுத்துச் சென்று கொண்டிருந்தன. அந்தக் கோச்சு வண்டியில் மார்ட்டினின் பெற்ருேர்

கள் தங்களது ஞாயிற்றுக்கிழமை கடையில் இருந்தனர். வண்டி ஓட்டுவோன் அமரும் பெட்டியின் மேல் மார்ட்டினே இருந்தான். ஆனால், அவன் மிக வயதானவனுகவும் காவி நிற மீசையுடையவனுகவும் இருந்தான். தென் பகுதியினர் அணியும் ஒளி மிக்க ஆடைகளை அணிந்து கொண்டு கோச்சு வண்டிக்குப் பின்னுல் நின்று கொண்டிருக்கும் மக்கள் தங்கள் கைகளை ஆட்டிக் கொண்டிருந்தனர். மார்ட்டினின் பெற்ருேர்கள் சிநேகப் பாங்குடன் இடது பக்கமும் வலது பக்கமும் தலைகுனிந்து பதில் மரியாதை செய்து கொண்டு செல்கின்றனர். மார்ட்டின் தனது நாடா கட்டிய சாட்டையை வீசிக் கொண்டிருந்தான்.

ஓவியத்தின் பெயர் ''பத்து ஆண்டுகளில்'' என்பதாகும். அதன் பொருள் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மார்ட்டின் பெருமளவு பணம் சம்பாதிப்பான் என்றும் தன்னுடைய பெற்ருேர்களை புதிய, தொலைதூர இடங்களுக்குத் தன்ேேடு அழைத்துச் செல்வான் என்பதாகும் அதன் கருத்து.

மத்தியாஸ் ஓவியத்தை நோக்கிப் பாதி கண்ணை மூடியபடி கூறினுன்: ''ஓ! வருங்காலத்தில் ஒரு நாள் உனக்குப் புகழ் பெற்ற ஓவியக் கலைஞர் திதியனையோ, ரெம் பிராண்டிட்டையோ போலப் பெரும் புகழ் உண்டாகும். நான் கூறும் அந்தக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.''

''ஆம், மார்ட்டின் தாலர் என்னுடைய வகுப்புத் தலைவனுவான். அவன் ஒரு அற்புத மனிதன்! நாங்கள் இருவரும் சேர்ந்து சில பயங்கரத் தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளோம்.'' திடீரென அவனுக்கு மீண்டும் பசியெடுத்திருப்பதை உணர்ந்து அவன் எப்போது ஏதாவது தின்னக்கூடிய பொருள்களைச் சேமித்து வைத்திருக்கும் சாய்வு மேஜைக் கருகில் வேகமாகச் சென்ருன். மேஜை அறையின் உட்பகுதியில் உலகக் குத்துச் சண்டை வீரர்களின் புகைப்படங்களை, ஓவியம் குத்தி வைக்கும் ஊசியைக்கொண்டு பதிய வைத்திருந்தான்.

தெயடோரும் பணிவுடன் ஓவியத்தை ஆராய்ந்து பார்க்க முன் வந்ததோடு மார்ட்டினுக்குக் கலைத் துறையில் தனிச்

சிறப்பான திறமையுண்டு எனவும் கருத்துத் தெரிவித்தான்.

அது மிகவும் மகிழ்ச்சியான மாலைநேரம். முதலாவது, இரண்டாவது படிவத்தைச் சேர்ந்த பையன்கள் தலையோடு தலை சேர்த்துக் கொண்டு, தங்களுக்குள் கிருஸ்துமஸுக்குத் தங்கள் பெற்றேரிடம் என்ன பொருள் கேட்பது என்பதைப் பற்றி குசுகுசுவெனப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆறும் படிவத்தைச் சேர்ந்த ஃபிரிட்ஷே என்னும் பெயருடைய பையன் வகுப்பில் அன்று காலை ஏற்பட்ட ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறினுன். உடனே அறை முழுவதும் அதைக் கவன மாகக் கேட்கத் தொடங்கியது.

''ஒவ்வொரு வருடமும் முதியவர் க்ரூன்கென் அதே நகைச்சுவையைக் கூறுகிருர்,'' ஃபிரிட்ஷே விளக்கினுன். ''அவர் எப்போதும் ஆறும் படிவத்திற்கு சந்திரனின் கூட்டமை வைப் பற்றி விவரிக்கும்போது அதைக் கூறுவார். கடந்த இருபது ஆண்டுகளாக அல்லது அதற்கும் அதிகமாகவே ஒவ் வொரு ஆண்டும் அவர் இதே வார்த்தைகளோடு தான் பாடம் தொடங்குகிருர்: ''நாம் சந்திரனைப் பற்றிப் பேசப் போகிறேம் —என்னைப் பாருங்கள்!''

''எந்தவித நகைச்சுவையும் இதில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை,'' இரண்டாம் படிவத்தைச் சேர்ந்த பீட்டர்மன் கூறினுன். ஆனல், மற்றவர்கள் அவனைப் பேசாது இருக்கும் படி கூறினுர்கள். அவனும் அவ்வாறே செய்தான்.

''அவர் எங்களிடமிருந்து ஒரு புன்னகையைக் கூடப் பெற்றதில்லை,'' தெயடோர் கூறினுன்.

அச்சமயத்தில் பீட்டர்மன் குபீரெனச் சிரித்தான். அப் போதுதான் அந்த நகைச்சுவை அவனுக்குப் புரிந்தது.

''இன்றைக்கும் அந்த நகைச்சுவையைக் கூறுவார் என்று நாங்கள் முன்கூட்டியே எங்கள் ஏற்பாடுகளைச் செய் திருந்தோம். க்ரூன்கென் தனது புகழ்பெற்ற நகைச்சுவை யைக் கூறியபோது கடைசி வரிசையில் இருந்தவர்கள் சிரித் தார்கள். அவருக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. தொடர்ந்து

அவர் பேசத் தொடங்கியபோது இரண்டாவது வரிசையில் இருந்தவர்கள் சிரித்தார்கள். அப்போது க்ருன்கென்னுக்கு மீண்டும் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

அவர் மீண்டும் ஏதோ சொல்லத் தொடங்கியபோது மூன்ருவது வரிசையில் இருந்தவர்கள் சிரித்தார்கள். அதைக் கண்ட அவர் சிறிது நெற்றியைச் சுழித்தார். பிறகு அதே போக்கில் நான்காவது வரிசையும் வந்தது.

''நீங்கள் என் நகைச்சுவையை விரும்பவில்லையா?'' அவர் கேட்டார். ''அது ஒன்றும் அப்படி மோசமான நகைச்சுவை இல்லை, சார்,'' ம்யூல்பர்க் கூறினன். ''ஆனல், என்னுடைய தகப்பனர் ஐந்தாம் படிவத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே அது பழைய நகைச்சுவை ஆகியிருந்தது என்றும் எவ்வளவோ காலத்திற்கு முன்பே அதற்கு 'பென்ஷன்' கொடுத்திருக்க வேண்டும் என்றும் என் தந்தை என்னிடம் கூறியுள்ளார்.''

''தாங்கள் ஏதாவது புதிதாக சிந்தித்து வைத்தால் என்ன?''

''ஒரு வகையில் நீ கூறுவது சரிதான்,'' நீண்டதோர் மௌனத்திற்குப் பிறகு க்ருன்கென் கூறினர். பிறகு பாடத்தின் இடையே திடீரென வகுப்பறையை விட்டு வெளியேறிய அவர், அதன் பிறகு திரும்பி வரவே இல்லை. அவர் தன்னுடைய சொந்த இறுதிச் சடங்குக்குப் போனல் எப்படி இருப்பாரோ அப்படிக் காணப்பட்டார்.

ஃபிரிட்ஷே சிரித்தான்; அவனேடு வேறு சிலரும் சிரித்தார்கள். ஆனல் பெரும்பாலான பையன்கள் ஐந்தாம் படிவப் பையன்களின் செயலை அப்படியே ஏற்றுக் கொண்டவர்களாகக் காணப்படவில்லை. ''எனக்குத் தெரியவில்லை,'' ஒருவன் கூறினன். ''அந்தக் கிழவரை நீங்கள் அப்படியொரு முட்டாளாக ஆக்கியிருக்கக் கூடாது.''

''ஏன் கூடாது,'' ஃபிரிட்ஷே கத்தினன். ''எல்லாப் பயிற்சியாளர்களும் அவரவர்களுடைய கதையை தங்களுடைய

மனதில் பதியவைக்க வேண்டியது கடமையாகும். இல்லாவிட்டால் நாமெல்லோரும் காலையில் படுக்கையில் கிடந்தபடியே கிராமபோன் ரெக்கார்டிலிருந்து பாடங்களைப் படித்துக் கொள்ளலாம். நமக்கு நம்முடைய ஆசிரியராக மனிதர் வேண்டுமேயல்லாமல் இரண்டு கால்களின் மேல் இருத்தி வைத்து முத்திரையிடப்பட்ட தகவல் பேழை தேவையேயில்லை. நம்மை அவர்கள் தங்களுடைய அறிவு முதலியவற்றால் வளர்த்து முன்னேற்றுவிக்க வேண்டுமெனில் முதலில் அவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.''

திடீரென கதவு திறந்தது. டாக்டர் க்ருன்கென் அறை எண் ஒன்பதுக்குள் நுழைந்தார். பையன்கள் சட்டென எழுந்து நின்றார்கள்.

''உட்கார்ந்து உங்கள் பாடங்களை நீங்கள் படியுங்கள்,'' தலைமையாசிரியர் கூறினார். ''எல்லாமே சரியாக இருக்கிறதல்லவா?''

''இருக்கு சார்,'' தெயடோர் அறிவித்தான், ''எல்லாமே சரியாக இருக்கு.''

''நல்லது,'' அந்த முதியவர் சோர்வுற்றவராகத் தலையை ஆட்டியபடி கூறிவிட்டு, அடுத்த அறைக்குள் சென்றார்.

''உள்ளே வருவதற்கு முன்பு அவர் வாசற்படிக் கருகில் நின்று கவனித்திருந்தால்?'' இரண்டாம் படிவப் பையன் பேரார்வத்தோடு கேட்டான்.

''அவர் அப்படிக் கேட்டிருந்தால் நாம் என்ன செய்ய முடியும்,'' கடுகடுத்தவனாக ஃபிரிட்ஷே கூறினான். ''அவருக்கு சிறுவயதில் அரசு அலுவலகப் பணியில் ஆர்வமிருந்ததென்றால் பின் ஏன் அவர் பள்ளியாசிரியராக வரவேண்டும்?''

மத்தியாஸ், தன் பக்கத்திலிருந்த முதல் படிவ மாணவனாகிய சிவப்புத் தலைப் பையன்மீது சாய்ந்தான். ''க்ருன்கென்னின் கிருஸ்துவப் பெயர் என்ன தெரியுமா?'' அவன் கேட்டான். அந்தச் சிறுபையன் தலையாட்டினான். ''பால்டுயின்,'' மத்தியாஸ் கூறினான். '' பால்டுயின் க்ருன்கென்''

அவர் எப்போதும் 'பா' என்று எழுதி முற்றுப் புள்ளி வைப்பார். ஒரு வேளை அவர் அதைப் பற்றி வெட்கப் படுகிறாரோ என்னவோ.''

''அந்த முதியவரை அமைதியாக விட்டு விடுங்கள்;'' தெயடோர் கூறினான். ''ஒப்பீட்டடிப்படையில் வேறுபாடு காட்ட அவர் வேண்டும். க்ரூன்கென் இல்லாதிருந்தால் டாக்டர் போக் நமக்குக் கிடைத்தது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் என்பது நமக்குத் தெரியாமலே போயிருக்கும்.''

மற்றொரு ஆறும் படிவப் பையன் தன் சொந்தக் காது களையே நம்ப முடியாதவன் போல உற்றுப் பார்த்தான். ''தெயோ,'' அவன் கூறினான், ''எவ்விதச் சந்தேகமும் இல்லை, உன்னுடைய மூளையில் ஒரு கொப்பளம் இருக்க வேண்டும்.''

மாலை நேரப் பிரார்த்தனை முடிந்த பின்னர் அவர்கள் அகன்ற மாடிப் படிகளில் ஓடி இறங்கி ஆடைகள் வைக்கும் அறைக்குப் போய் தங்கள் உடுப்புகளைக் களைந்து அங்கே தொங்க விட்டு விட்டு, நீண்ட, இரவு உடுப்புகளை அணிந்து கொண்டு மாடிக்கு மீண்டும் ஓடினார்கள். முதலில் அலம்பும் அறைக்கும் பிறகு தூங்கும் அறைக்கும் போனார்கள்.

ஆறும் படிவப் பையன்கள் தாமதமாகத் தூங்க அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். ஆனால், தூங்கும் அறையின் தலைவர்களாக இருந்தவர்களுக்கு மாடியில் போய் இருந்து மற்ற பையன்கள் வேண்டிய அளவுக்கு, முறையாகத் தாங்களாகவே கைகால்களைக் கழுவி, பற்களைச் சுத்தம் செய்து கொண்டு, குறித்த நேரத்தில் விரைவாகப் படுக்கையில் படுத்துத் தூங்கு கிறார்களா என்று பார்க்க வேண்டிய பொறுப்பும் இருந்தது.

படுக்கைக்குப் போவது கஷ்டமான காரியம் ஆகும். படுக்கையின் மேல் உடலைச் சுற்றிக் கொள்ள வேண்டும். அதன் பின் மின்னல் வெட்டுப் போல் படுக்கையின் மேல் படுக்கை வசத்தில் படுக்க வேண்டும். அப்போது இரும்புக்

கட்டிலிலிருந்து கிரீச்சென்ற சப்தமும் கரகரப்பொலியும் ஏற்படும்.

இரண்டாவது படுக்கையறையும் கொஞ்சம் தொந்தரவு தருவதாக இருந்தது. யாரோ ஒரு ரசிகன் தண்ணீர் நிரம்பிய அலம்பு தட்டை மத்தியாஸின் படுக்கை விரிப்பிற்குக் கீழே வைத்திருக்கிருன். மத்தியாஸ் பகலில் நடந்த வீரச் செயல்களால் களைத்துப் போய் ஒரு மரக் கட்டைபோல் சென்று படுக்கையில் விழுந்தபோது நீர்க் குட்டை யொன்றில் தான் விழுந்து விட்டதைப் போல் அவன் கருதினுன். கிடு கிடுவென அடிக்கும் பற்களோடு அவன் தடுமாறிப் பேசியவனுகப் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து விரிப்பிற்குக் கீழே இருந்த நீர் நிரம்பிய அலம்பு தட்டை வெளியே எடுத்தான். ''யார் இதைச் செய்தது?'' கோபத்தோடு அவன் இரைச்சல் போட்டான். ''எவ்வளவு மிருகத்தனமான விளையாட்டு! இதைச் செய்தது யார்? அந்தப் பயலை நான் கொன்று விடுகிறேன்! அந்த மிருகத்தின் பிணத்தை பறவைகளுக்கு உணவாக்கி விடுகிறேன்!''

மற்றவர்கள் சிரித்தார்கள். உலி மிகுந்த அக்கறையுடையவனுகத் தன்னுடைய தலையணையைக் கொடுத்தான்.

''கோழைகள்!'' 'மத்தியாஸ் இரைந்து கத்தினுன்.'

''படுக்கையில் போய் இரு,'' ஒருவன் கத்தினுன்.

''பேசாதே,'' மற்ருெருவன் கத்தினுன். ''ஜஸ்டஸ் வந்து கொண்டிருக்கிருர்.''

உலியும் மத்தியாஸும் தங்கள் படுக்கைகளில் தாவி ஏறிக் கொண்டார்கள். டாக்டர் போக் வந்த போது அந்த நீண்ட அறை எங்கும் நிசப்தம் நிலவியது. பையன்கள் அங்குக் கண்களை மூடி இரண்டாவது வரிசை தேவ தூதர்களைப் போலக் கிடந்தார்கள். ஜஸ்டஸ் படுக்கைகளுக்கிடையே நடந்தார். ''ஹலோ!'' அவர் சத்தமிட்டுக் கூறினுர்.

''இங்கு ஏதோ தகராறு இருக்கிறது. பையன்கள் இவ்வளவு அமைதியாக இருப்பது இயற்கையானது அல்ல. என்ன நடந்தது, உண்மையைச் சொல்!''



திடீரென வெள்ளைத்துணி போர்த்த பேய்களும் சூனியக் காரர்களும் ஊர்வலமாகப் படுக்கையறைக்குள் வந்தார்கள்.

மார்ட்டின் தன் கண்களைத் திறந்தான். ''அப்படி யொன்றும் பெரிதாக இல்லை சார்'', அவன் கூறினான். ''சும்மா ஒரு தமாஷ்.''

''அதற்கு மேல் அதிகமொன்றும் இல்லையா?''

''இல்லை, சார்''

டாக்டர் போக் வாசற்படிக்குச் சென்றார். ''குட் நைட், போக்கிரிப் பசங்களா!''

''குட் நைட், சார்,'' அவர்கள் எல்லோரும் இரைந்து கூறினார்கள். அதன் பிறகு அவர்கள் திருப்தியோடு தங்கள் படுக்கையில் கிடந்தனர். மத்தியாஸ் ஒரு நீர் யானையைப் போலக் கொட்டாவி விட்டபடி உலியினுடைய தலையணையை அவனுக்குப் பின்புறத்திற்கும் நனைந்த விரிப்புக்கும் இடையே வைத்து, உடனே ஆழ்ந்து உறங்கி விட்டான். அதன் பிறகு வெகு சீக்கிரத்திலேயே மற்றவர்களும் தூங்கி விட்டார்கள்.

உலி மட்டும் இன்னும் விழித்துக் கொண்டிருந்தான். முதலாவதாக அவனுக்குத் தலையணை இல்லை. இரண்டாவதாக அவன், மீண்டும் தன் வீரத்தை நிலைநாட்டி நிரூபிக்க என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான். படையிலிருந்து வீடு திரும்பும் போர் வீரர்களுக்கு இறுதி எச்சரிக்கையாக பாசறையிலிருந்து ஊதப்படும் குழல் சத்தத்தை அவன் கேட்டான். உலி தன்னுடைய பெற்றோர்களையும் சகோதர சகோதரிகளையும் பற்றி சிந்தித்தான். அவர்களை மீண்டும் மூன்று நாட்களில் அவன் பார்க்கப் போவதைப் பற்றி எண்ணியபோது புன்னகை தவழ அவன் உறங்கி விட்டான்.

ஒருமணி நேரம் ஆனபின்னர் உறங்கியவர்களெல்லாம் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தனர். முதலாவது படுக்கையிலிருந்துதான் உண்மையில் பேய் பிடித்தாற் போன்ற ஆரவாரம் வந்தது. திடீரென பேய்களின் கைகள் இரண்டாவது படுக்கையறையின் கதவுகளைத் திறந்தன. சப்தம்

மேலும் மேலும் பயங்கரமாக அதிகரித்தது. ஒருசில பையன்கள் தங்கள் தலையை படுக்கை விரிப்புத் துணிகளுக்குள் புதைத்துக் கொண்டார்கள் அல்லது தங்களது கைகளால் காதுகளைப் பொத்திக் கொண்டார்கள்.

பின்னர், திடீரென வெள்ளைத் துணியுடுத்திய பேய்களும் பிசாசுளும் ஒரு ஊர்வலமாக இருண்ட படுக்கையறைக்குள் சென்றன. சிலர் மினுக் மினுக்கென எரியும் மெழுகுவத்திகளைப் பிடித்துக் கொண்டிருந்தனர். சிலர் கரிபாத்திரத்தின் மூடிகளை திடீரென மூடிக்கொண்டிருந்தனர். மற்றவர்கள் பசியால் கர்ஜிக்கும் சிங்கம்போல் கர்ஜித்துக் கொண்டிருந்தனர். கடைசியாக மாபெரும் வெள்ளை அரக்கன் அசைந்தபடி நடந்து வந்து, பல பையன்களுடைய படுக்கைத் துணிகளைப் பிடித்து இழுத்தும் பெரியதொரு காகிதப் பையிலிருந்து ஒரு ரகசியப் பொடியை எடுத்து, அவர்களுடைய படுக்கைகளில் தூவினன். முதல் படிவ சிறு பையன்கள் திகிலால் நடுங்கிக் கொண்டு தேம்பியழுதார்கள்.

''அழவேண்டாம்!' உலி தன் பக்கத்துப் பையனிடம் கூறினன். ''அவர்களெல்லாம் ஆரும்படிவப் பசங்கள் தான். கிருஸ்துமஸுக்கு முன்னதாக ஒருசில நாட்கள் அவர்கள் எப்போதும் இப்படித்தான் செய்வார்கள். ஆனல், அந்த அரிக்கும் பொடியை அவர்கள் உன்னுடைய படுக்கையில் தூவாதபடி கவனமாகப் பார்த்துக் கொள்.''

''எனக்கு மிகவும் பயமாக இருக்கு,'' அச்சிறு பையன் தேம்பியபடி கூறினன். ''பின்னலுள்ள அந்தப் பயங்கர அரக்கனக இருப்பது என்ன?''

''அது மூன்று பசங்கள்! சில படுக்கை விரிப்புகளை ஒன்ருகத்தைத்து அதற்குள் புகுந்து கொண்டிருக்கிருர்கள்.''

''எனக்கு இன்னும் பயமாகவே இருக்கு,'' அந்தச் சிறு பையன் கூறினன்.

''உனக்கு அது பழக்கமாகிவிடும்,'' உலி அவனுக்கு ஆறுதல் கூறினன். முதல் ஆண்டு நான் இங்கிருந்தபோது

அழுதேவிட்டேன்.''

"நீயா?"

"ஆமாம்," உலி கூறினன்.

பேய்களின் கூட்டம் அடுத்திருந்த மற்ருெரு வாசல் வழியாகப் போய் மறைந்தது. மெதுவாக மீண்டும் அமைதி நிலை பெறத் தொடங்கியது. பொடி தூவப்பட்டிருந்த படுக்கைகளில் படுத்திருந்தவர்கள் மட்டும் உறக்கம் இல்லாது சொறிந்து கொண்டும் தூக்கக் கலக்கத்தில் முணகிக் கொண்டும் இருந்தனர். பொடி தன் மோசமான அரிப்பு வேலையைச் செய்து கொண்டிருந்தது. கடைசியில் அதுவும் அடங்கிவிட்டது.

மத்தியாஸ் அவனுடைய கண்களைத் திறக்கவே இல்லை. அவன் ஒருமுறை கண்களை மூடினல் பிறகு நீங்கள் அவன் கட்டில் அருகில் பீரங்கி வைத்து வெடித்தாலும் அவனை எழுப்ப முடியாது.

இறுதியில் படுக்கையறையில் ஒருவனைத் தவிர மற்றவர்களெல்லாம் நன்கு உறங்கி விட்டனர். அவன் தான் ஜானி த்ரோட்ஸ். அவன் எழுந்து அந்தப் பெரிய பலகணிக்கு அருகில் ஊர்ந்து சென்ருன். அவன் அகன்ற பலகணிப் படிக்கட்டின் மேல் ஏறியிருந்தபடி கால்களை இழுத்து அவற்றைத் தன் இரவு உடுப்பால் போர்த்திக் கொண்டு, வெளியே நகரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். அநேக வீடுகளின் பலகணிகளின் வழியாக இன்னும் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. எத்தனையோ திரைப்படக் கொட்டகைகளும் நடன அரங்குகளும் இருக்கும் மத்திய நகரத்தின் மீது வானவெளி பிரகாசமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது. மீண்டும் பனி கொட்டிக் கொண்டிருந்தது.

ஜானி வினவுவது போல வீடுகளை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வீடுகளின் கூரைகளுக்குக் கீழேயெல்லாம் மக்கள் வாழ்கிருர்கள் என அவன் சிந்தித்தான். நகரத்தில் எத்தனை வீடுகள் இருக்கும்? நாட்டில எத்தனை நகரங்கள் இருக்கும்? உலகத்தில் எத்தனை நாடுகள் இருக்கும்?

பிரபஞ்சத்தில் எத்தனை உலகங்கள் இருக்கும்? மகிழ்ச்சி எண்ணற்ற பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. மகிழ்ச்சியின்மையும் அது போலத்தானே......என்றாவது ஒரு நாள் நான் என் சொந்த நாட்டில் தங்கி வாழ முடியுமென்று உறுதியாக இருக்கிறேன். பெரிய தோட்டத்தோடு கூடிய சிறியதோர் வீட்டில்; எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கும். நான் அவர்களை அப்புறப் படுத்த வேண்டி கடலுக்கு அப்பால் ஒருபோதும் அனுப்ப மாட்டேன். என் தந்தை என்னை நடத்துவதைப் போல அவர்களை நான் மோசமாக நடத்த மாட்டேன். என் மனைவி என் தாயைவிடச் சிறந்தவளாக இருப்பாள். அவள்-என்னுடைய தாயார்-எங்கே யிருப்பாள்? அவள் இன்னும் உயிரோடு இருப்பாளா? இருப்பாள்.

ஒருவேளை மார்ட்டின் வந்து என்னோடு வாழலாம். அவன் ஓவியம் வரைவான்; நான் புத்தகங்கள் எழுதுவேன்; அப்போது நாங்கள் மகிழ்ச்சியாக இல்லையென்றால், சரி, எங்களை மகிழ்ச்சிப் படுத்துவது கடினமாகத்தான் இருக்கும், ஜானி த்ரோட்ஸ் சிந்தித்தான்.

# அத்தியாயம் ஏழு

பேராசிரியர் க்ருய்ஸ்கெம்மைப்பற்றி ஒரு விளக்கம்; மயிர்க்கூச்செறியும் ஒரு சம்பவம்; வகுப்பில் ஐந்து முறை எழுத வேண்டிய ஒரு வாசகம்; இடைவேளையின்போது வியப்பூட்டும் ஒரு அறிவிப்பு; டாக்டர் போக்கோடு நடந்தது; ஒதுக்கிடத்தில் ஒரு சந்திப்பு; வேலிக்கருகில் ஒரு கை குலுக்கல்.

# 7

அடுத்த நாள் காலை பாடங்கள் தொடங்குவதற்குச் சற்று முன்பு மார்ட்டின் வகுப்பறையைவிட்டு நடைவழிக் கூடத்திற்குச் சென்றான். ஜெர்மன் மதிப்பெண் பட்டியலையும் அவன் தன்னுடன் கொண்டு சென்றான்; ஜெர்மன் மொழி ஆசிரியரான ஹெர் க்ரூய்ஸ்கெம் வகுப்பிற்குள் நுழைவதற்கு முன்பாக முதல் நாள் நடைபெற்ற துரதிர்ஷ்ட வசமான நிகழ்ச்சிகளைப் பற்றி அவருக்குத் தெரியப்படுத்த அவன் விரும்பினான். தன்னுடைய தந்தைக்கு அதைப்பற்றி எதுவுமே தெரியாதென்று ரூடி க்ரூய்ஸ்கெம் மார்ட்டினிடம் கூறியிருந்தான்.

நடைவழிக் கூடம் ஆள் சந்தடியின்றிக் காலியாக இருந்தது. ஆனால், வகுப்பறைகள் பலவற்றிலும் ஏற்பட்ட சப்தமானது சிறைப்பட்ட தேனீக்களின் சப்தம்போல், அடங்கிய மந்தமான இரைச்சல் அங்கு நிறைந்திருந்தது.

அப்போது ஆசிரியர்கள் முதல் தளத்திலிருந்து இறங்கி வந்தார்கள். அவர்கள் நல்ல நகைச்சுவையோடு உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகுப்பறைக்குள் சென்றார்கள். நடைவழிக் கூடத்தில் நிறைந்திருந்த மந்தமான இரைச்சல் கொஞ்சங் கொஞ்சமாக அடங்கி மறையத் தொடங்கியது. ஹெர் க்ரூய்ஸ்கெம் இறுதியாக வந்தார். அவர் தன்னுடைய கைத்தடியை இழந்து விட்டாலும் வழக்கம்போல விரைப்பாகவே நடந்து வந்தார். அவருடன் இருந்த டாக்டர் போக் சுவையாக எதையோ அவரிடம் கூறிக் கொண்டிருந்தார். ஹெர் க்ரூய்ஸ்கெம் சிரத்தையுடன் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவர் வழக்கத்துக்கு மாறாகக் கடுகடுப்பாகக் காணப்பட்டார்.

இந்த ஹெர் க்ரூய்ஸ்கெம் ஒரு தனித் தன்மை வாய்ந்த

மனிதர் அவர்களுக்கு எப்போதும அவரிடம் கொஞ்சம அனுதாபம் உண்டு. இதில சங்கடம் என்னவென்ருல் அவர் சிரிப்பதேயில்லை. ஒருவேளை அவருக்குச் சிரிக்க வேண்டும் என்ற விருப்பமே இல்லாமலிருக்கலாம். அவருடைய மகன் ரூடி மற்ற பையன்களிடம், கூறியதாவது, என்னவானுலும வீட்டிலும் கூட அவருடைய முகத்தின் கடுமை ஒருபோதும் குறைந்து காணப்பட்டதேயில்லை எனபதேயாகும. அவர் ஒரு போதும சிரித்ததில்லை என்ருலும் மற்றவர்களைச் சிரிக்கவைக்கக் கூடிய விஷயங்களை அவர் கூறுவார். உதாரணமாக சில வாரங் களுக்கு முன்பு அவர், மதிப்பெண் போடப்பட்ட பயிற்சிப் புத்தகங்களை மாணவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் மத்தியாஸைக் கேட்டார் : ''சென்ற முறை நீ என்ன மதிபபெண் பெற்றிருந்தாய்.''

''நான்கு,'' மத்தியாஸ் கூறினன்.

''ஓ!'' ஆசிரியர் கூறினர். ''இந்த முறை நீ மிக நன்ருகச் செய்திருக்கிருய்.''

மத்தியாஸ் மகிழ்ச்சியடைந்தான். அப்போது ஆசிரியர் தொடர்ந்து கூறினர் : ''இந்த முறை உனக்கு மிக நல்ல முறையில் நான்கு மதிப் பெண்கள் கிடைத்திருக்கின்றன!''

மற்றொரு சந்தர்ப்பத்தில் வகுப்பறையின் அலமாரிக் கதவு திறந்து கிடந்தது. ஹெர் க்ருய்ஸ்கெம கூப்பிட்டார். ''ஃபிரிடோலின்! அலமாரிக் கதவை மூடு. புயல் அடிக் கிறது.''

ஒவ்வொரு தடவையும் சிரிக்கும்போது உங்களுக்குப் பெரி யதொரு பேதமை உணர்வே உண்டாகும. காரணம் அவர் மேஜைக்கருகிலிருநது, கடுமையான வயிற்றுவலியுளளவரைப் போல கடுமையான முகபாவத்தோடு அவர் காணப்படுவார். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கே தெரியாது. ஏனென்ருல் அவருடைய முகம் அவர் என்ன உணர்ச்சி கொண்டிருக்கிருர் என்பதை ஒருபோதும் வெளிக்காட்டு வதில்லை.

ஆனால், அவருடைய வகுப்பில் நீங்கள் நிறைய கற்றறிய முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக நோக்கமும் அதுதானே.

இப்போது மார்ட்டின் அவரிடம் பயிற்சிப் புத்தகங்கள் எரிக்கப்பட்ட விஷயத்தை விளக்கிக்கூற முயன்று கொண்டிருந்தான். ஜஸ்டஸ் இரண்டாம் படிவ வகுப்பறைக்குத் திரும்பினார். ஹெர் க்ருய்ஸ்கெம் மார்ட்டினை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினார்.

"ஏதாவது செய்தியுண்டா?" அவர் மிகக் கண்டிப்புடன் கேட்டார்.

"உண்டு சார்," தாழ்ந்த குரலில் மார்ட்டின் கூறினான். "நேற்றுப் பிற்பகல் உயர் நடுநிலைப் பள்ளிப் பையன்கள் எங்களுடைய பயிற்சிப் புத்தகங்களை எரித்து விட்டார்கள்."

ஆசிரியர் அப்படியே சற்று நின்று விட்டார். "நீங்கள் அவர்களைக் கேட்டீர்களா?" அவர் வினவினார்.

மீண்டும் சிரிக்க வேண்டுமா வேண்டாமா என்று மார்ட்டினுக்குத் தெரியவில்லை. அப்போது அவன் தலையை ஆட்டினான். நிலைமையை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக விளக்கிக் கூறி, ஆசிரியரிடம் மதிப்பெண் பட்டியலைக் கொடுத்தான்.

ஹெர் க்ருய்ஸ்கெம் கதவைத் திறந்து, மார்ட்டினை முன்னால் தள்ளிக் கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தார்.

மார்ட்டின் வெளியே காத்து நிற்கும் போது பீதியூட்டும் சம்பவம் ஒன்று நடந்தது.

க்யோர்க் குன்ட்ஷென்டோர்ஃபினால் அழைத்து வரப்பட்ட விடுதியில் தங்காது பள்ளி வந்து பயிலும் சில பையன்கள் உலியைக் குப்பைக் கூடைக்குள் வைத்து, அக் கூடையை உலகப் படம் தொங்கவிடப் பயன்படுத்தும் இரண்டு வளையத்தின் மேல் மாட்டி, உயரத் தொங்கவிட்டு விட்டார்கள். நான்கு பேர் மத்தியாஸைப் பிடித்து வைத்துக் கொண்டார்கள். இப்போது உலி அறையின் உட்கூரைக்குக் கீழே தொங்கிக் கொண்டிருந்



ஹெர் க்ருய்ஸ்கெம் இந்த இழிவான செயலைக் கவனிக்கவில்லை.

தான். கூடைக்கு வெளியே, உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும் அவனது முகம் வான்கோழியின் முகத்தைப்போல் சிவந்திருந்தது. மார்ட்டினுக்குத் தலை சுற்றுவது போலிருந்தது.

ஹெர் க்ருய்ஸ்கெம் இந்த இழிவான தகாத செயலை கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் தன் மேஜையின் முன்பு அமைதியாக அமர்ந்து தன் முன்பாக இருந்த மார்ட்டினின் கைக்குட்டையைத் திறந்து அதிலிருந்த சாம்பலை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

''இது என்ன ?'' அவர் கேட்டார்.

''அது எஞ்சியிருந்த எங்கள் பயிற்சிப் புத்தகங்கள்,'' நடுங்கியபடி மார்ட்டின் பதில் கூறினான்.

''ஓஹோ !'' ஆசிரியர் கூறினார். ''அடையாளம் கண்டு கொள்வது அசாத்தியம். பயிற்சிப் புத்தகங்கள் நேற்று யார் வசம் இருந்தன.''

அவருடைய மகன் ரூடிக் க்ருய்ஸ்கெம் எழுந்து நின்றான்.

''உனக்கு அவைகளை நல்ல முறையில் பத்திரமாகப் பாது காக்க முடியவில்லையா ?''

''இல்லை, சார், என்னை மன்னிக்க வேண்டும்,'' ரூடி கூறினான். ''இருபது பையன்களுக்கு மேல் ஃபிரிடோலினை யும் என்னையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். புத்தகங்களை எரிப்பதற்கு முன்பு அவர்கள் என்னை ஒரு நிலவறையில் வைத்து துணி உலர்த்தும் கொடியினால் கட்டிப் போட்டுவிட்டு கதவை மூடிப் பூட்டிவிட்டார்கள்.''

''நிலவறையில் எவ்வளவு நேரம் இருந்தாய்,'' அவனுடைய தந்தை கேட்டார்.

''கிட்டத்தட்ட நான்கு மணி வரை.''

''உன்னுடைய பெற்றோர்கள் ஏதும் கவனிக்கவில்லையா?''

''இல்லை, சார்,'' ரூடி பதில் கூறினான்.

''அவர்கள் ஒரு மாதிரி தனித்தன்மை வாய்ந்த பெற்றோர்களாகத் தான் இருக்க வேண்டும், இல்லையா,'' துயரம் தோய்ந்த குரலில் சொன்னார் ஆசிரியர்.

சில பையன்கள் சிரித்தார்கள். ஒரு பள்ளியாசிரியர் தன்னைத் தானே விமர்சனம் செய்து கொள்வதானது கேட்பதற்கு வேடிக்கையாகத் தோன்றியது.

''மதிய உணவின்போது நீ இல்லாதது அவர்களுக்குத் தெரியுமா?'' அவர் கேட்டார்.

''இல்லை, சார்,'' ரூடி மறுமொழி கூறினான். ''ஒரு நண்பன் என்னை விருந்து சாப்பிட அழைத்திருப்பதாக யாரோ ஒருவன் அவர்களிடம் கூறியிருக்கிறான்.''

''உன்னுடைய தந்தைக்கு என்னுடைய நன்றியறிதலைக் கூறு,'' ஹெர் க்ரூய்ஸ்கெம் கூறி, ''உன்னை எதிர்காலத்தில் இன்னும் நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுமாறு அவரிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.''

இப்போது வகுப்பு முழுவதுமே சிரித்தது, உலியைத் தவிர ஆசிரியரும் சிரிக்கவில்லை.

''நான் என்னுடைய தந்தையிடம் கூறுகிறேன், சார்,'' ரூடி க்ரூய்ஸ்கெம் பதில் கூறினான். அவர்கள் அனைவரும் மீண்டும் சிரித்தார்கள்.

''இது விந்தையான ஒரு நிலைமையல்லவா,'' அவனுடைய தந்தை கூறினார். ''மார்ட்டினின் பட்டியல் எனக்குத் தேவையில்லை. நான் எல்லா மதிப்பெண்களையும் என்னுடைய சொந்த நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்திருக்கிறேன். ஆனால், உங்களுடைய பட்டியலை என்னுடைய நோட்டுப் புத்தகத்தில் இருப்பவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறேன். யாரும் ஏமாற்ற மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். வேறொன்றும் நான் கூற வேண்டியுள்ளது. இனியொரு முறை இம்மாதிரி ஏதாவது நடந்தால் உங்களுடைய தலைமயிர் வெளுக்கும் வகையில் நான் உங்களுக்கு 'டிக்டேஷன்' கொடுப்பேன்.''

ஒரு உத்திரவு வார்த்தை கிடைத்ததைப் போல எல்லோரும் உலியை நோக்கிப் பார்த்தார்கள். நிலைமை திடுக்கிட வைப்பதாக இருந்தது.

''அறையின் உட் கூரையில் குப்பைக் கூடை என்ன

செய்து கொண்டிருக்கிறது?'' ஆசிரியர் கேட்டார். ''இந்த மாதிரி சிறுபிள்ளைத்தனமான வேடிக்கை விநோதங்களை நிறுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது.'' ஒரு சில மாணவர்கள் கூடையைக் கீழே இழுக்கத் துள்ளி எழுந்தார்கள்.

''வேண்டாம்,'' உரத்தகுரலில் ஆசிரியர் சொன்னார். ''அது எங்கே இருக்கிறதோ அங்கேயே இருக்கட்டும்.''

அதில் என்ன இருக்கிறதென்பதை அவர் கவனிக்க இயலாது போய் விடுவாரோ?

''புதிய பாடத்திற்கு நாம் போவதற்கு முன்பு,'' அவர் கூறினார், ''நாம் நேற்றைய டிக்டேஷனிலிருந்து ஒருசில சொற்களைப்பற்றிப் பார்ப்போம். ''நிமிர்தளம்'' என்ற பதத்தை எப்படி உச்சரிப்பாய், செபாஸ்டியன்?''

செபாஸ்டியன் பாரம்பரியத்தைப் பற்றி தான் படிக்கும் புத்தகத்தை மேஜைக்கடியில் தள்ளிவிட்டு அவன் அச் சொல்லை உச்சரித்தான். அவன் அதைச் சரியாகவே உச்சரித்தான். ஆசிரியர் தலையாட்டினார்.'' உலி, ''கிராமபோன்'' என்ற பதத்தை எப்படி உச்சரிப்பது?'' அவர் கேட்டார்.

வகுப்பு முழுவதுமே பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது.

ஆசிரியர் தனது மேஜைமேல் தன் கையால் மெதுவாகத் தட்டி தாளம் போட்டார். ''சொல்லு, ஸிம்மேன்! சீக்கிரம்!''

அப்போது குப்பைக் கூடையிலிருந்து நடுங்கிய குரலில் சத்தம் வெளிவந்தது. ''கி-ரா-ம-'' உலியால் தொடர்ந்து முடிக்க முடியவில்லை. இந்திரஜாலத்தால் ஈர்க்கப்பட்டவர் போல ஆசிரியரின் கண்கள் மேல் நோக்கிப் பார்த்தன. பின் அவர் எழுந்து நின்றார். ''எப்போதுமுதல் இந்த அறை ஒரு சந்தத் தலமாக மாறியது? ஊசல் படகில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உங்கள் எல்லோருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டதா? இறங்கி வா உடனே!''

''என்னால் முடியாது,'' உலி கூறினான்.

''யார் இதைச் செய்தது?'' ஆசிரியர் கேட்டார்.

''சரி, நீங்கள் சொல்லமாட்டீர்கள் என்று எனக்குத்

தெரியும் மத்தியாஸ்!''

மாட்ஸ் எழுந்து நின்ருன்.

''நீ ஏன் இதைத் தடுக்கவில்லை?''

''அவர்கள் - நிறையபேர் இருந்தார்கள்,'' மேலிருந்த படியே உலி எடுத்துக் கூறினுன்.

''தவறு செய்யும்போது அதைச் செய்தவர்களைப் போலவேதான் அதைத் தடுக்கத் தவறியவர்களும் குற்றவாளி களாவர்,'' ஆசிரியர் கூறினர். இந்த வாசகத்தை நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்த பாடம் தொடங்குவதற்கு முன்பு ஐந்து முறை எழுதவேண்டும்.

''ஐம்பது தடவையா?'' செபாஸ்டியன் அதிகப் பிரசங்கித் தனமாகக் கேட்டான்.

''இல்லை, ஐந்து தடவை,'' ஆசிரியர் திரும்பக் கூறினர். ''ஒரு வாசகத்தை நீங்கள் ஐம்பது தடவை எழுதினீர்க ளென்ருல் உங்களுக்கு அவ்வாசகம் மறந்துபோகும். செபாஸ்டியன் ஃபிராங் ஐம்பது தடவை எழுத வேண்டும். மற்றவர்கள் ஐந்து தடவை எழுதினுல் போதும். என்ன வாசகம் மார்ட்டின்?''

''தவறு செய்யும்போது,'' மார்ட்டின் கூறினுன், ''அதைச் செய்தவர்களைப் போலவேதான் அதைத் தடுக்கத் தவறிய வர்களும் குற்றவாளிகளாவர்.''

''இது எந்த அளவுக்கு உண்மை என்பதை அறிந் திருந்தால்,'' நாற்காலியில் பின்புறமாகச் சாய்ந்தபடி ஆசிரியர் கூறினர். ''அதோடு இந்தச் சோக நாடகத்தின் முதல் கட்டம் முடிந்தது. இனி அந்தச் சிறு பையனை அவ னிருக்கும் ஊசல் படகிலிருந்து வெளியே எடுக்க வேண்டும்.''

மற்றவர்கள் பின் தொடர மத்தியாஸ் முன்னேக்கிச் சென்ருன். கடைசியில் உலி மீண்டும் தரையில் காலூன்றினுன்.

''இனிமேல்தான் சோக நாடகத்தின் இரண்டாவது கட்டம் வருகிறது,'' ஆசிரியர் கூறினர். அவர் ஒரு பகுதியை ''டிக்டேஷன்'' கொடுத்தார். அதைக் கேட்டபோது

பையன்களின் உச்சித் தலைமயிர் சிலிர்த்தெழுந்து நின்றது. அந்நிய மொழிச் சொற்கள் - சிக்கலான நிறுத்தக் குறியீடுகள் - அவர்களை மனமுடையச் செய்ய போதுமானதாக இருந்தன.

அரைமணி நேரமாக உறைபனியும் பனி மழையுமாக இருந்துங்கூட அந்த நான்காம் படிவ மாணவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது. (ஆண்டுகள் பல கடந்த பின்னரும் கூட அவர்கள் அந்த "டிக்டேஷன்" பற்றிப் பேசிக் கொண்டார்கள். வகுப்பில் அதற்குக் கிடைத்த மிக அதிக மதிப்பெண் மூன்றாகும்).

"ஓ!" மத்தியாஸ் பக்கத்துப் பையனிடம் தணிந்த குரலில் கூறினான். "உயர் நடுநிலைப்பள்ளி மிருகங்கள் இன்றும் ருடியைப் பிடித்துக் கொள்வார்கள் என எண்ணுகிறேன்."

ஆனால், ஹெர் க்ருய்ஸ்கெம் பயிற்சிப் புத்தகங்களை தானே வீட்டிற்குக் கொண்டு போய் விட்டார். "பத்திரம் பத்திரம் தான்," அவர் கூறிக் கொண்டு, அறைக்குள் வந்தது போன்றே கடுமையோடும் கௌரவத்தோடும் அறையை விட்டு வெளியே சென்றார்.

இடை வேளையில் உலி மேடையில் ஏறிநின்று "ஆர்டர்! ஆர்டர்!" அவன் கத்தினான். ஆனால், மற்ற பையன்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. "ஆர்டர்!" அவன் மீண்டும் உரக்கக் கத்தினான். அவனது குரல் ஏதோ வலியினால் அழுவது போன்றிருந்தது. அந்தச் சத்தமும் மறைந்து விட்டது. உலி ஒரு பிரேதம்போல் வெளிறிப் போயிருந்தான். "நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்," அவன் தாழ்ந்த குரலில் கூறினான். "நீங்கள் என்னை கோழை எனக் கருதுகிறீர்கள்; சரி, நீங்களே பாருங்கள்! இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நீங்கள் எல்லோரும் பள்ளி உடற்பயிற்சித் திடலுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூன்று மணிக்கு மறக்க வேண்டாம்!" அவன் தன் இடத்திற்குத் திரும்பிச் சென்று பெஞ்சியின் மீது அமர்ந்தான்.

"எதற்காக அப்படிக் கூறுகிறீர் முதியவரே?"

மத்தியாஸ் கேட்டான். ஜானியும் மார்ட்டினும்கூட அவனிடம் சென்று என்ன செய்யப் போகிருய் என்று கேட்டார்கள்.

அவன் கிட்டத்தட்ட பகைமையாளன் போன்ற பாவத்தோடு தலையை ஆட்டினன். ''என்னை விட்டுப் போங்கள்,'' அவன் கூறினன், ''விரைவிலேயே காண்பீர்கள்.''

மதிய உணவுக்கு முன் உணவுக் கூடத் தலைமைப் பணியாளர் தபால் கொண்டு வந்து கொடுத்தார். மத்தியாஸுக்கும் மற்றும் சிலருக்கும் வந்த கடிதத்தில் பயணச் செலவிற்கு வேண்டிய பணம் இருந்தது. அவர்கள் இதற்காகத்தான் காத்திருந்தார்கள். மார்ட்டினுக்கு அவன் அம்மாவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அவன் அதைத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். இவ்வளவு காலம் அவன் பள்ளியில் இருந்த போதிலும் உணவு உண்ணும் மேஜையில் இருந்தபடி, இரைச்சல் போடுபவர்களின் நடுவே—அருகில் இருப்பவர்களின் ஆர்வத்திற்கிடையே—அவன் தன் கடிதங்களைப் பிரித்துப் படிப்பதில்லை. ஒத்திகை முடிந்த பின்னர் திடலுக்குச் சென்றே அல்லது ஆள் அரவம் இல்லாத இசை பயிலும் தனி அறைக்குச் சென்றே, தனிமையில் தான் தன் கடிதங்களைப் பிரித்துப் படிப்பான். அவ்வாறு செய்வது தான் அவனுக்குப் பிடிக்கும். அவன் தன் கை விரல்களால் தபால் உறையை அழுத்திப் பார்த்தான். அப்படியொன்றும் அது தடிப்பாக இல்லை. தொட்டுப் பார்த்தபோது அது ஒரு பத்து மார்க் நாணய நோட்டை அவன் அம்மா அனுப்பியிருப்பது போல் தெரிந்தது. வழிப் பயணக் கட்டணச் செலவு எட்டு மார்க் ஆகும். பின், மீதமிருக்கு இரண்டு மார்க் நாணயங்களுக்கு வீட்டிலிருப்பவர்களுக்கு ஏதாவது சிறுசிறு பரிசுப் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம். அவன் வரைந்துள்ள ஓவியம் நன்ருகத்தான் அமைந்துள்ளது; ஆனல் இரண்டு பேருக்குச் சேர்த்து ஒரு ஓவியம் போதாது என அவனுக்குத் தோன்றியது.

சாப்பாடு முடிந்த பின்னர் மத்தியாஸ், தனக்குக் கடன் கொடுத்தவர்களையெல்லாம் ஒன்ருக அழைத்தான். பசியினல்

யாரிடமெல்லாம் தின்பண்டங்கள் வாங்கினுனே அவர்களுக் கெல்லாம் திருப்பிக் கொடுத்தான். பிறகு அவன் திடீரென ஓடினன். ஷெர்ஃப் என்ற ரொட்டிக் கடைக்காரனைக் காண அவன் மிக வேகமாகச் சென்றான். இன்று அவன் பணக் காரன். அதனல் இன்று நாடகத்தில் நடிப்பவர்களுக் கெல்லாம் ரொட்டித் துண்டுகள் கொடுக்க வேண்டுமென அவன் விரும் பினன். அப்போது அவனுக்கும் ஒரு ரொட்டித்துண்டு நிச்சய மாகக் கிடைக்கும்; அவனும் நடிப்பவர்களில் ஒருவ னல்லவா.

சாப்பாட்டுக் கூடம் காலியாகியது. மார்ட்டினும் ஜானி யும் மட்டும் வாசற்படியில் நின்று கொண்டிருந்தார்கள். சற்றுப் பின்னல் தள்ளியிருந்த அறையின் மற்றொரு ஓரத்தில் ஜஸ்டஸ் சுருட்டைப் புகைத்தபடி மேஜை யொன்றில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர்கள் அவரிடம் சென்றார்கள். அவர் அவர்களை நட்புணர்வோடு நோக்கி தலையாட்டி அவர்களை ஏதோ வினவும் பாவனையில் பார்த்தார்.

''நீங்கள் மிகவும் பெரிமித உணர்வோடு காணப்படு கிறீர்கள்,'' அவர் கூறினர். ''உங்கள் மனதிலுள்ளது தான் என்ன?''

''எங்களோடு நீங்கள் சிறிது நடந்து அங்கே வரவேண்டு மென்று உங்களைக் கேட்க வந்திருக்கிறோம்,'' மார்ட்டின் விளக்கமாகக் கூறினன். ''உங்களுக்கு நாங்கள் அற்புத மொன்றைக் காட்டப் போகிறோம்.''

''ஓ!'' அவர் கூறினர். ''அதுவா உங்களுடைய விருப்பம்?''

இரண்டு பேரும் பலமாகத் தலையாட்டிக் கொண்டார்கள். அவர் எழுந்து அவர்களைப் பின்தொடர்ந்து உணவுக் கூடத் திற்கு வெளியே வந்தார். அவர்கள் அவரைப் பள்ளிக்கூட வாசல் பக்கம் அழைத்துச் சென்றார்கள்.

''ஹலோ!'' அவர் கூறினர், ''வெளியே வரவேண்டுமா?'' அவர்கள் மீண்டும் தலையாட்டினர்கள். ''காணப் போகும்

அற்புதம் என்னவென்று அறிய எனக்கு ஆர்வமாக இருக்கிறது,'' அவர் தொடர்ந்து கூறினுர். வீதி வழியாகப் பள்ளித் திடலுக்குப் போடப்பட்டிருந்த இரும்பு வேலி ஓரமாக அவரை அவர்கள் அழைத்துச் சென்ருர்கள். அப்போது அவர் அவர்களுடைய ஒத்திகைகளைப் பற்றிக் கேட்டார்.

''எங்களுக்கு நாங்கள் நடிக்கப் போகும் பாகங்கள் நன்ருகத் தெரியும்,'' ஜானி த்ரோட்ஸ் கூறினுன். மத்தியாஸ் கூட காட்சி சமயத்தில் மறந்துவிட மாட்டான் என்பது ஓரளவுக்கு உறுதியாகி விட்டது. நாளை பிற்பகல் நாடகக் காட்சிக்குரிய அரங்க அமைப்போடும் ஆடையணி வகைகளோடும் முழுமையாக உடை ஒத்திகை நடத்தப் போகிருேம்.''

உடை ஒத்திகைக்கு வரலாமா என்று ஜஸ்டஸ் கேட்டார். நிச்சயமாக வரலாம் என அவர்கள் கூறினுர்கள் ஆயினும், அவர் வருவதில் அவர்களுக்கு அவ்வளவு விருப்பமில்லை என அவர் மனதிற்குப்பட்டது. அதனுல் பொது நாடக நிகழ்ச்சி வரை தன்னுடைய பேரார்வத்தை அடக்கிக் கொள்வதாக அவர்களுக்கு அவர் வாக்குறுதி தந்தார்.

''ஆனுல், நீங்கள் என்னை இப்போது பூவுலகின் எந்தப் பகுதிக்குக் கொண்டு செல்கிறீர்கள்?'' டாக்டர் போக் கேட்டார்,

அவர்கள் புன்னகை பூத்தார்கள்; அவர்களுக்குப் பெரும் உற்சாகமாக இருந்தது; ஆனுல் அவர்கள் அவருக்கு எந்தப் பதிலும் கூறவில்லை.

திடீரென ஜானி கேட்டான்: ''நேற்றிரவு ஒரு நண்பரைப் பற்றி எங்களிடம் கூறினீர்கள் அல்லவா, உங்களது அந்த நண்பர் என்ன தொழில் செய்தார்?''

''அவர் ஒரு மருத்துவராக இருந்தார்,'' டாக்டர் போக் கூறினுர். ''அவர் ஏன் வாழ்க்கையில் மனமுடைந்து போனுர் என்பதற்குக் காரணம் அதுவாகத் தான் இருக்க வேண்டும். ஏனென்ருல் சொந்த மனைவியையும் குழந்தையையும் அவரால் காப்பாற்ற முடியவில்லை. அவர் மிக நல்ல

டாக்டராக இருந்தார். ஆனால், திறமையானது விதிக்கு எதிராக ஒருவரை காப்பாற்ற எப்போது முடிவதில்லை.''

''அவருக்குப் பியானோ வாசிக்கத் தெரியுமா?'' ஜானி கேட்டான்.

ஜஸ்டஸ் அவனை நோக்கி ஆச்சரியத்தோடு பார்த்தார். ''ஆமாம்,'' அவர் கடைசியில் கூறினார்.

''அவர் ஒரு நல்ல பியானோ வாசிப்பாளர் ஆவார். ஆனால் நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?''

''இல்லை. நான் அவ்வாறு ஏதோ நினைத்துக் கொண்டேன்,'' ஜானி கூறினான். மார்ட்டின் வாசற் கதவைத் திறந்து விட்டான். அந்த வழி ஒதுக்குப் புறமாக இருந்த இடத்திற்குச் சென்றது.

''இதன் வழியாகவா?'' விடுதித் தலைவர் கேட்டார். அவர்கள் தலையாட்டியபடி அவரை பனி மூடிக் கொண்டிருக்கும் திடலின் பல சிறு சிறு மனையிடங்களுக்கிடையே அழைத்துக் கொண்டு போனார்கள்.

''இருபது ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடமெல்லாம் ஒரே காடாகக் கிடந்தது,'' டாக்டர் போக் கூறினார். நாங்கள் வெளியே போகும் போதெல்லாம் நாங்கள் வேலியைத் தாண்டிக் கொண்டு போவோம்.''

''இப்போது நாங்களும் அப்படித்தான் செய்கிறோம்,'' ஜானி கூற, அவர்கள் சிரித்தார்கள்.

அப்போது இரண்டு பையன்கள் நின்றார்கள். ''ஏது! அங்கே இருப்பது உண்மையான ரயில் பெட்டி தானே,'' ஜஸ்டஸ் வியப்புடன் கேட்டார். ''அதனுள்ளே யாரோ வசிக்கிறார்கள், இல்லையா?''

''ஆமாம்,'' ஜானி கூறினான். ''அந்த ரயில் பெட்டியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் எங்களுக்கு வேண்டிய நண்பராவார். உங்களை எவ்வளவு விரும்புகிறோமோ அதைப்போலவே அவரையும் நாங்கள் நேசிக்கிறோம். அதனால்தான் அவரை நீங்கள் சந்திக்க வேண்டுமென நாங்கள் விரும்பினோம்.''

மார்ட்டின் தோட்டத்தைக் கடந்து சென்று, ரயில்பெட்டிக்கு வெளிப் புறத்தில் நின்று மூன்று முறை தட்டினுன். கதவைத் திறந்து கொண்டு புகைபிடியாதவர் வெளியே வந்தார். அவர் மார்ட்டினைப் பார்த்து தலையாட்டினுர். பின் வாசற் பக்கத்தில் ஜானி த்ரோட்ஸ், டாக்டர் போக்கோடு நிற்பதைப் பார்த்தார்.

உடனே ஜஸ்டஸ் ஆச்சரியத்தால் நீண்ட பெருமூச்சு வாங்கினுர். வாசற் கதவை வல்லந்தமாக இழுத்துத் திறந்து கொண்டு புகைபிடியாதவரை நோக்கி ஓடினுர். ''ராபர்ட்!'' அவர் கத்தினுர்.

''யொஹன்?'' எனக் கூறிய புகைபிடியாதவர், தன் நண்பரை நோக்கித் தம் கைகளை நீட்டினுர்.

பையன்களுக்கு ஓடி ஒளிந்து கொள்வது அப்படி யொன்றும் பெரும் சிரமமாக இல்லை. காரணம் அவ்விருவரும் அந்தப் பனியில் சிலைகளைப் போன்று ஒருவரை யொருவர் உற்று நோக்கியபடி நின்று கொண்டிருந்தார்கள்.

''என் அன்புள்ள நண்பா,'' ஜஸ்டஸ் கூறினுர். ''கடைசி யில் எப்படியோ உன்னை என்னுல் கண்டுபிடிக்க முடிந்ததே!''

மார்ட்டினும் ஜானியும் தோட்டத் துண்டு நிலங்களுக் கிடையே ஓசையின்றித் துள்ளுநடை போட்டு ஓடினுர்கள். பள்ளி விளையாட்டுத் திடலைச் சுற்றி போடப்பட்டிருந்த வேலிக் கருகில் சென்றபோது அவர்களுக்கு மூச்சு வாங்கியது. அவர்கள் பேசவில்லை. ஆனுல், வேலியைத் தாண்டுவதற்கு அவர்கள் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் ஊமைச் சபதமொன்று செய்து கொண்டது போலிருந்தது. வார்த்தைகளால் வெளி யிட முடியாத ஓர் சபதமாக அது இருந்தது.

# அத்தியாயம் எட்டு

நிறைய கேக்குகள்; 'பறக்கும் வகுப்பறை'யின் அடுத்த ஒத்திகை; உலி தன்னுடன் குடையை எடுத்துச் சென்றதற்கான காரணம்; விளையாட்டுத் திடலிலும் பள்ளிக்கூடத்திலும் முரட்டுத்தனமான வேடிக்கை நிகழ்ச்சி; டாக்டர் போக்கின் ஆறுதல் வார்த்தைகள்; மூன்றும் எண் இசையறை.

# 8

'பறக்கும் வகுப்பறையின் கடைசி ஒத்திகைக்கு முன்புள்ள ஒத்திகை சிறிது ரொட்டி சாப்பிட்ட பின்னர் தொடங்கியது. மத்தியாஸ் மிகவும் தாராள மனதோடு ரொட்டி வாங்கி, ஒரு சிறுதுண்டு ரொட்டிகூட மிச்சமாகாதபடி மிகுந்த கவனத்தோடு பங்கீடு செய்தான்.

உலி தாமதமாக வந்தான். அவன் ஒரு குடையைக் கக்கத்தில் இடுக்கியபடி வந்தான். ''நீ ஏன் அந்தப் பெரிய விகாரமான குடையை உன்னோடு தூக்கிக் கொண்டு நடக்கிருய்?'' செபாஸ்டியன் கேட்டான். ஆனால் உலி ஒன்றுமே சொல்லவில்லை; அவர்களும் அதை வற்புறுத்திக் கேட்கவில்லை.

காலை முதலே உலியிடம் ஏதோ ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பது போல செபாஸ்டியனுக்குத் தோன்றியது. அவன் ஒரு கடிகாரம் போல; செபாஸ்டியன் சிந்தித்தான். அவர்கள் அவன் மனதைப் பெரிதும் புண்படுத்தியிருக்கிருர்கள். அதனுல் ஏதோ தவறு ஏற்பட்டுள்ளது.

உலி ஒரு மூலையில் குடையை வைத்தான். மத்தியாஸின் வாதிபோல் தன்னை எண்ணி, அவமதிப்புச் செய்யவே, அவன் ரொட்டி சாப்பிடச் சேர்ந்துக் கொள்ளவில்லை. ''ஒத்திகை தொடங்குவதற்கு இதுதான் சமயம்,'' அவன் கூறினுன்.

பிறகு அவர்கள் ஜானியின் கிருஸ்துமஸ் நாடகத்தை முதல் அங்கம் முதல் இறுதி அங்கம் வரை ஒரு முறை கூட தவறு ஏற்படாதபடி நடித்தார்கள். அவர்கள் தங்களை பற்றியே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தார்கள். ''இதோ பார்!'' மத்தியாஸ் பெருமையோடு கூறினுன், ''அதிகம் சாப்பிட்டால் என் நினைவு சக்தி அதிகப்படுகிறது.'' பின்னர் அவர்கள் ஆடையணிகளைப் பற்றியும் நாடகத்திற்கு வேண்டிய பிற உபகரணங்களைப் பற்றியும் விரிவாக விவாதித்தார்கள். ஃபிரி

டோவின் அன்று பிற்பகல் நாவிதன் கடைக்குப் போய் உலிக்கு வேண்டிய நீண்ட பொன்னிறச் சடைப்பின்னலோடு கூடிய 'டோப்பா' மயிர் வாங்கி, அடுத்த நாள் காலேயில் பள்ளிக்கு வரும்போது கொண்டுவரவேண்டும் என முடிவு செய்யப் பட்டது. ஆக, உடை ஒத்திகைக்கு எல்லாமே தயாராகி விட்டது. கிருஸ்துமஸ் மரம் கூட நிலே நாட்டப்பட்டு மின்சார விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு விட்டது. விடுதித் தலேவர் கிளேகளேயெல்லாம் எத்தனேயோ ராத்தல் பருத்தி-ரோமங்களால் மூடியுள்ளார்.

''நாளே இரவு எல்லாமே தடங்கலின்றி சரிவர நடந்தேறி விடும் என்று நான் நம்புகிறேன்,'' ஜானி கூறினுன். ''முக்கிய மான விஷயம் மேடை பயத்தைத் தவிர்க்கவேண்டும் என்பது தான். ஒத்திகை பார்க்கும்போதே நல்ல கைதேர்ந்த பயிற்சியாளர்கள் போன்று நாம் நடிக்க வேண்டும்.''

''அதெல்லாமே சரியாகிவிடும்,'' மார்ட்டின் கூறினுன். ''ஆனுல், நாடக மேடைக் காட்சியமைப்பில் நமக்கு இன்னும் கொஞ்சம் அதிகப் பயிற்சி வேண்டும். நாளே இரவு பிரமிட்டோ அல்லது வட துருவமோ மற்றவையோ சாய்ந்து விழுந்த தென்றுல் நாம் வாய் திறப்பதற்கு முன்பே பார்வையாளர்கள் சிரித்து விடுவார்கள். பிறகு அது முழுவதையும் திரும்பச் செய் வதில் பொருளேதும் இல்லே.'' ஜானி, மார்ட்டின் கூறியதை ஒத்துக் கொண்டான். எனவே அவர்கள் வண்ணம் தீட்டிய பெரிய அட்டைப் பலகைகளே மூலேயிலிருந்து மீண்டும் எடுத்து வந்து விரைவாக அவைகளே கம்புகளின் மேல் இணேத்து வைத் தார்கள். பின்னர் அவர்கள் அட்டைப் பலகையின் பின்னுல் குனிந்து செல்லும்போதும் கம்புகளே முன்னுேக்கித் தள்ளும் போதும் பார்வையாளர்கள் காணமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டி விமானத்தை அப்புறப் படுத்திவைத்து, அவர்கள் ஒத்திகை பார்த்தார்கள்.

''இந்த மாற்றங்கள் மின்னல் வேகத்தில் நடக்க வேண்டும்,'' மார்ட்டின் கத்தினுன். ''ஒரு நிமிடத்தில் நாம் மேடையைச் சரிப்படுத்த வேண்டும்.'' அவர்கள் நாடக

மேடைக்குரிய காட்சிப் பொருள்களையும் கம்புகளையும் மூலைக ளில் திரும்பக் கொண்டு போய் வைப்பதும் மீண்டும் அவைகளை எடுத்து வருவதுமாக, மேடை அனுபவம் நிறைந்த நாடக மேடையாளர்களைப் போல வியர்க்க விறுவிறுக்க வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

உலி யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக பயிற்சிக் கூடத்திலிருந்து வெளியே போயிருந்தான். தான் தன்னுடைய விருப்பப்படி நடப்பதை அவர்கள் தடை செய்து விடுவார்கள் என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அவர்கள் தலை யீட்டை அனுமதித்து, பிறகு இடர்ப்பாடு அடைய அவன் தயா ராக இல்லை.

பனி மூடிய உறைபனி படலத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட பையன்கள் அவனுக்காக பொறுமையுடன் காத்துக் கொண் டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் கீழ்ப் படிவங்களைச் சேர்ந்த இளம் சிறுர்கள். அவர்கள் பெரிய பையன்களிடம் எதுவுமே கூறவில்லை; காரணம் அசாதாரணமான, தடுக்கப் பட்ட ஏதோ ஒரு செயல் நடக்கப் போகிறதென அவர்கள் எண்ணினுர்கள். தாங்கள் காணப்போவது எதுவாக இருக்கும் என்ற எண்ணக் கோட்டையோடு அவர்கள் தங்கள் கைகளை கோட்டுப் பைகளுக்குள் நுழைத்தபடி நின்றுகொண்டிருந் தார்கள். ''ஒரு வேளை அவன் வந்திருக்கமாட்டான்,'' ஒருவன் கூறினுன்.

அப்போது உலி அங்கே தோன்றினுன். அவன் பேசாமல் அவர்களைக் கடந்து விளையாட்டுத்திடலின் மூலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, ஏறுவதற்குப் பயன்படும் இரும்புக் கம் பத்திற்கருகில் சென்றுன். ''எதற்காகக் கையில் குடை வைத் திருக்கிருன்,'' அவர்களில் ஒருவன் கேட்டான். ''உஸ்ஸ்ஸ்!'' மற்றவர்கள் கத்தினுர்கள்.

கம்பத்தின் ஒரு பக்கத்தில் நீண்டதோர் ஏணி இருந்தது. உலி அதன் அருகில் சென்று சில்லெனக் குளிர்ந்துபோயிருக்கும் ஏணிப் படிகளின் மேல் ஏறினுன். ஏணியின் உச்சிப் படிக்கு

அடுத்த படியில் நின்ருன். ஏறி நின்ற அவன் திரும்பிக் கீழே கூட்டமாக நின்று கொண்டிருக்கும் பையன்களை நோக்கித் தன் பார்வையைச் செலுத்தினன். அவன் தலை சுற்றியது போல சிறிது தள்ளாடினன். ஆனுலும் அவன் சுய உணர்வோடு சமாளித்துக் கொண்டான். ''இது தான் நான் செய்யப் போவது,'' அவன் சத்தமாக அறிவித்தான். '' நான் என்னுடைய குடையைத் திறந்து ஒரு பாராசூட்டை இறங்கச் செய்யப் போகிறேன். நான் உங்கள் தலைகளின் மீது இறங்காதபடி நீங்கள் சற்று பின்னுல் தள்ளி நிற்க வேண்டும்.''

சில பையன்கள் உலிக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என எண்ணினர்கள். ஆனல், பெரும்பாலான பையன்கள் அமைதியாக பின்னுல் தள்ளி நின்று, உலி தங்களுக்கு வாக்குறுதி கொடுத்திருந்த பயங்கரக் காட்சியைக் காணப் பொறுமையாகக் காத்திருந்தார்கள்.

பயிற்சிக் கூடத்தில் உலியின் நான்கு நண்பர்கள் நாடகக் காட்சியமைப்புகளையும் கம்புகளையும் கடைசியாக மூலையில் தள்ளி வைக்க, அன்றைய வேலை முடிந்தது. ''தவறு செய்யும் போது—'' என்று தொடங்கும் வாசகத்தை ஐம்பது தடவை எழுதச் சொன்னதற்காக செபாஸ்டியன் ஹெர் க்ருய்ஸ்கெம்மை சபித்துக் கொண்டிருந்தான். ''பள்ளியை மூடுவதற்கு முதல் நாள் அப்படியொரு வேலையைக் கொடுத்ததை நினைக்கும்போது எனக்கு வேதனையாக இருக்கிறது,'' அவன் கடுஞ்சினத்தோடு கூறினன். ''அந்த மனிதருக்கு இதயமே இல்லை.''

''உனக்கும் இல்லை,'' ஜானி கூறினன்.

அதே சமயத்தில் மத்தியாஸ் யாரையோ தேடும் பாவனையில் சுற்று முற்றும் பார்த்தான். ''உலி எங்கே போயிருக்கிருன்?'' அவன் கேட்டான். ''அவன் எங்கோ போய்த் தொலைந்து விட்டான்,'' ஜானி கடிகாரத்தைப் பார்த்தான். ''மூன்று மணியாகி விட்டது,'' அவன் கூறினன். ''உலி மூன்று மணிக்கு என்னவோ செய்யப் போவதாகக் கூறி

யிருந்தான், அல்லவா ?''

''ஆமாம்,'' மார்ட்டின கூறினன். ''உடற் பயிற்சித் திடலில் எதுவாக இருக்குமென்று உனக்குத் தோன்றுகிறது?''

அவர்கள் ஒத்திகைக் கூடத்தை விட்டு பயிற்சித் திடலுக்கு ஓடினர்கள். மூலை திரும்பியபோது அவர்கள் பாதங்கள நிலத்தில் வேரூன்றியது போல நின்று விட்டது. திறந்த வெளியில் நிறைய பையன்கள் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் நீண்ட ஏணியின் உச்சிப பகுதியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அதன் மீது உலி நின்று மிகுந்த பிரயாசையோடு தனனை சமனப்படுததியபடி குடையை விரித்துத் தன் தலைக்குமேல பிடித்துக் கொண்டிருந்தான்.

''தெய்வமே,'' மூச்சுவிடாமல் மார்ட்டின் கூறினன். ''அவன் குதிக்கப போகிருன்!'' பனி உறைந்திருககும் பயிற்சித் திடலில் அவன் குதிக்கத் தயாராளுன. மற்றவர்கள அவன் பாதத்துக்கடியில் இருந்தார்கள். உறைபனிக்கு அடியில் பனிக்கட்டி மிகவும வழுக்கக் கூடியது. ஜானி விழுந்தான்.

''உலி!'' மத்தியாஸ் கத்தினன், ''நில் !'' ஆனல், அதே சமயத்தில் உலி குதித்து விட்டான.

குடை உட்புறமுகமாகத் திரும்பிக் கொண்டது, பனி மூடியிருந்த பனிக்கட்டித் தளத்தை நோக்கி அவன் விழுந்தான். அவன் வேகமாகத் தரையில் மோதி அசைவற்றுக் கிடந்தான்.

கூடி நின்ற கூட்டம் பயத்தால் அலறிக்கொண்டு சிதறியோடியது. ஒரு நிமிடத்தில் நான்கு நண்பர்கள் உலியின் பக்கத்தில் இருந்தார்கள். அவன் உறைபனியில் நினைவற்றுக் கிடந்தான். அவனுடைய முகம் சவக்களையாக வெளிறிப போயிருந்தது. மத்தியாஸ் அவனருகில் மண்டியிட்டு அவன் தலையைத் தட்டினன்

ஜானி நர்ஸைக கூட்டி வருவதற்காக விடுதிக்குள் விரைந்து ஓடினன். மார்ட்டின் வேலியை நோக்கி ஓடி, வேலியைத் தாண்டி புகைபிடியாதவரிடம் அலறிக்கொண்டு ஓடினன். அவர் ஒரு டாக்டராவார். அவர் நிச்சயம் உதவி



ஆனால், கண நேரத்தில் உலி குதித்துவிட்டான்.

செய்வார். போதாதற்கு ஜஸ்டஸும் இன்னும் அவருடன் தான் இருக்கிறார்.

மத்தியாஸ் தன் தலையை ஆட்டினான். ''பாவம் அச் சிறுவன்,'' உணர்வற்றிருந்த உலியைப் பார்த்துக் கூறினான். ''நீ பயந்தாங்கொள்ளி என்று அவர்கள் எப்போதும் சொல்லு வார்கள்!'' எனினும் எதிர்கால உலகச் சாம்பியன் குழந்தைத் தனமாக கண்ணீர்விட்டு அழுதான். அவன் சிந்திய கண்ணீர்த் துளிகளில் பல பனியில் வீழ்ந்தன. ஒருசில துளிகள் உலியின் சவக்களை நிறைந்த முகத்தின் மேல் வீழ்ந்தன.

மத்தியாஸ், மார்ட்டின், ஜானி, செபாஸ்டியன் ஆகியோர் பள்ளி மருத்துவ மனையினின்றும் விவரம் அறிய அறையின் பல கணிக்கருகில் ஊமையர்களாக காத்துக் கொண்டு நின்றிருந் தார்கள். அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப் படவில்லை. உலிக்கு எம்மாதிரியான காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என் பதைப் பற்றி எதுவுமே தெரியாது. நர்ஸோடும் ஹெர் க்ரூய்ஸ் கெமமோடும் புகைபிடியாதவரும் ஜஸ்டஸும அந்த அறையில் இருந்தனர். பள்ளிக்கூட டாக்டர் ஹார்ட்விக்கும் அங்கு இருந்தார்.

''அப்படியொன்றும் நிலைமை மோசமாக இல்லை, மாட்ஸ்!'' இறுதியில் மார்ட்டின் கூறினான்.

''நிச்சயமாக இருக்காது,'' ஜானி கூறினான்.

''நான் அவனுடைய நாடியைப் பிடித்துப் பார்த்தேன். அது சாதாரண நிலையில்தான் இருந்தது,'' செபாஸ்டியன் கூறினான். அவன் அதைக் கூறுவது மூன்றாவது தடவை யாகும். ''அவனுடைய வலதுகால் மட்டும்தான் முறிந் திருக்கும்.''

அவர்கள் மீண்டும் நிசப்தமாக பலகணி வழியாக வெள்ளை யாக இருந்த பகுதியை உற்று நோக்கினார்கள். ஆனால் அவர் களுடைய கண்களுக்கு எதுவுமே புலப்படவில்லை. துயரம் மிகுந்த அவர்களுடைய சிந்தனை அவர்களுடைய பார்வையை மங்கச் செய்திருந்தன. என்றென்றைக்குமாக இறுதியாகக்

காத்திருப்பது போலத் தோன்றியது.

அப்போது கதவு மெதுவாகத் திறந்தது. ஜஸ்டஸ் வெளியே வந்து விரைவாக அவர்களை நோக்கி நடந்தார். ''ரொம்ப மோசம் இல்லை,'' அவர் கூறினார். ''வலது காலில் சாதாரண முறிவும், மார்பில் கொஞ்சம் அடியும் பட்டுள்ளது. தலையில் அடி விழுந்திருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. எனவே, மகிழ்ச்சியாகவே இருங்கள்.''

பையன்கள் மீண்டும் பெருமூச் செறிந்தார்கள். மாட்ஸ் பலகணிக் கண்ணாடிக் கதவின் மீது அவனது முகத்தை அழுத்திப் பதித்துக் கொண்டான். அவனது தோள்கள் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்தன: அந்தப் பெரிய பையனுடைய தலையை தடவிக் கொடுக்க விரும்புவது போல் ஜஸ்டஸ் காணப்பட்டார். ஆனால் அவருக்கே நம்பிக்கை ஏற்பட்டிருக்கவில்லை. ''ஒரு மாதத்தில் அவனுக்கு எல்லாம் சரியாகிவிடும்,'' டாக்டர் போக் கூறினார். ''மேலும் நான் போய் அவனது குடும்பத்துக்குத் தொலைபேசி மூலம் அவன் கிருஸ்துமஸுக்கு வீட்டுக்கு வரமாட்டான் என்று தெரியப்படுத்த வேண்டும்.''

போவதற்காகத் திரும்பியபோது அவர் கேட்டார்: ''ஒரு ஏணிமேல் இருந்து கொண்டு ஒரு குடையுடன் குதிக்க வேண்டும் என்ற இந்த முட்டாள்தனமான எண்ணம் அவனுக்கு எப்படி உதித்தது என்பதை எனக்கு நீங்கள் கூறமுடியுமா?''

''அவர்கள் எப்போதும் அவனைத் தொந்தரவு செய்து விளையாடுவார்கள்,'' மத்தியாஸ் மூக்கை உரிஞ்சிக் கொண்டு கூறினான். ''அவர்கள் அவனை ஒரு கோழை என்று கூறுவார்கள்.'' மத்தியாஸ் தன் கைக்குட்டையை எடுத்து மூக்கைத் துடைத்துக் கொண்டான். ''நேற்று ஒரு மடையனைப் போல நான் அவனிடம் பேசும்போது, அவர்கள் உள்ளத்தில் பதியும் வண்ணம் ஏதாவது செய்யும்படி அவனிடம் கூறினேன்.''

''சரிதான், அவன் அதைச் சரியாகவே செய்து விட்டான்,'' ஜஸ்டஸ் கூறினார். ''அதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய பாடமாவது ஒரு பையன் தன்

வாழ்நாள் முழுவதும் தன்னைப் பயந்தாங்கொள்ளியாக மற்ற வர்கள் ஏளனக் குறிப்போடு பார்ப்பதைவிட அவன் தன் சொந்தக் காலையே ஒடித்துக் கொண்டான் என்ற செய்தி சிறந்தது என்பதை எப்போதுமே மறக்க வேண்டாம். ஒருவேளை முதல் பார்வையில் இப்பாராசூட் தரையிறங்கிய நிகழ்ச்சியானது அவ்வளவு முட்டாள்தனமான காரியமல்ல என்று தோன்றலாம்.'' இவ்வாறு கூறிய பின்னர் அவர் உலியி னுடைய பெற்றோர்க்குத் தொலைபேசி மூலம் செய்தி அறிவிக்க விரைந்து வெளியே சென்றார்.

புகைபிடியாதவர் வெளியே வந்து, ஒரு மாதத்தில் உலி பூரணமாகக் குணமடைந்து விடுவான் என்று ஆணையிட்டு உறுதிமொழி கூறினார். அதுவரையில் அந்த நான்குபேரும் அங்கேயே காத்திருந்தார்கள். மத்தியாஸ்தான் இறுதியாக அவ்விடத்தைவிட்டு அகன்றான். உலியைத் தான் பார்க்க முடியுமா என்று அவன் புகைபிடியாதவரைக் கேட்டான். அது அறவே இயலாத காரியம் என்று அவர் கூறிவிட்டார். காலை நேரத்திற்கு முன்பு உலியைக் காண்பதென்ற பேச்சுக்கே இட மில்லை. எனவே மத்தியாஸ் மற்றவர்களைப் பின் தொடர்ந்து தன் படிப்பறைக்குச் சென்றான்.

மாடிப்படியில் இறங்கும்போது மார்ட்டின் தன் தாயார் எழுதியிருந்த கடிதம் சட்டைப் பையில் சுருங்கிக் கிடப்பதை உணர்ந்தான்.

அவன் மூன்றாம் எண் இசையறைக்குள் சென்றான். அங்கே அவன் பலகணியின் அடிக்கட்டையிலிருந்து கொண்டு அஞ்சல் உறையைத் திறந்தான். முதலில் அவன் கண்டது சில தபால்தலைகள். அவைகளை வெளியே எடுத்தெடுத்து, அவைகளைப் பரபரப்பாக எண்ணினான். இருபத்தைந்து ஃபென்னிங் மதிப்புடைய இருபது தபால் தலைகள் இருந்தன. அவை அனைத்தும் ஐந்து மார்க் நாணய மதிப்புடையனவாகும்.

கிட்டத்தட்ட அவன் இருதயத் துடிப்பே நின்று விட்டது

போல் இருந்தது. பின்னர் அவன் கடிதத்தை உறையினின்றும் வெளியே எடுத்தான். அவன் அதை மேலும் கீழுமாகப் பார்த்தான். அவன் உறையைப் பார்த்தான். பிறகு அவன் தரையை நோக்கினான். ஆனால், தபால் தலைகளின் மதிப்பை அது உயர்த்தவில்லை. அவைகள் இப்போதும் ஐந்து மார்க் நாணய மதிப்புடையவைதாம்.

மார்ட்டினின் கால் முட்டிகள் பலவீன மடைந்தன. அவன் நடுங்கத் தொடங்கினான். அவன், எழுதியிருந்த காகிதத்தைப் பார்த்துக் கீழ்க்கண்டவாறு வாசிக்கலானான்:

எனது அன்புள்ள மகனே,

உண்மையிலேயே இது ஒரு துக்கமான கடிதமாகும். அதை எப்படித் தொடங்குவதென்றே எனக்குத் தெரியவில்லை. என் அன்புள்ள மார்ட்டின், நினைத்துப்பார், இந்தத் தடவை உன் ரயில் பயணச் செலவிற்குத் தேவையான எட்டு மார்க்குகளை அனுப்ப இயலாமலேயே போய் விட்டது. எங்களால் எளிதில் பணம் சம்பாதிக்க இயலவில்லை என்பதை நீ அறிவாய் அல்லவா. உன்னுடைய தகப்பனுருக்கு எவ்வித வருமானமும் இல்லை என்பதும் உனக்குத் தெரிந்ததுதானே. கிருஸ்துமஸுக்கு நீ பள்ளியிலேயே தங்கியிருக்க நேர்ந்துள்ளதை நினைக்கும் போது எனக்கு மிகுந்த துயரம் ஏற்படுகிறது. நான் என் மூளையைப் போட்டு குடைந்து கொண்டிருக்கிறேன். நான் உன்னுடைய அத்தையைக்கூட கேட்டுவிட்டேன். ஆனால், ஒரு பயனும் ஏற்படவில்லை. முன்பு தகப்பனுருடன் வேலை செய்து வந்த ஒருவரிடம் சென்று கேட்டதற்கு உன் தந்தையிடம் கொடுக்க தன்னிடம் ஒரு ஃபென்னிங் நாணயம்கூட இல்லை என்று கூறிவிட்டாராம்.

ஒரு வழியும் இல்லை மகனே. இந்தத் தடவை நீ பள்ளியிலேயே தங்கவேண்டி வரும். இனிமேல் நாம் ஈஸ்டர் பண்டிகை வரை ஒருவரையொருவர் பார்க்க முடியாது. அதை நினைக்கும் போது எனக்கு-இல்லை, என்னால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அதனால் நான் எவ்வித நலமும் இன்றி இருக்

கிறேன்.

இல்லை, நாம் மிகுந்த தைரியத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கவேண்டும், அல்லவா? பெரும் முயற்சியின் பேரில் என்னால் சேகரிக்க முடிந்ததெல்லாம் ஐந்து மார்க் நாணயங்கள்தான். நான் அதைத் தையல்காரன் ரோக்ஸ்ட்ரோ விடமிருந்து கடனாக வாங்கினேன். புத்தாண்டு தினம் வரை தான், பிறகு அவனுக்கு அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

நீயாகவே ஓட்டலிலிருந்து ஒரு கோப்பை சாக்லேட்டும் கொஞ்சம் கேக்கும் வாங்கிக்கொள், மார்ட்டின். பின், எந் நேரமும் அறைக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டாம். என்ன தெரிகிறதா? ஒருவேளை பனிச்சறுக்கு வண்டிகள் சில அங்கே இருக்கும்; அப்படி இருந்தால் நீ நிச்சய மாக அங்கே போகவேண்டும். எனக்கு அவ்வாறே செய்வ தாக உறுதிமொழி கொடுக்க வேண்டும்.

வீட்டில் கிருஸ்துமஸ் மரத்திற்கடியில் நீ பார்த்த பரிசுப் பொருட்களின் பொட்டலம் ஒன்று நாளைய தபாலில் உனக்கு வரும். ஒருவேளை இந்த ஆண்டு நாங்கள் கிருஸ்துமஸ் மரம் வைக்க முடியாமல் போகும். நீ இல்லாமல் அதை வைப்பதால் என்ன பயன்?

நாங்கள் உனக்கு அனுப்பியிருப்பது அதிகமொன்றுமில்லை. ஆனால், நாங்கள் இப்போது மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறோம் என்று உனக்குத்தான் தெரியுமே. அது மிகவும் பரிதாபமான நிலைதான்; ஆனால், அதைப் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும். எனது அன்புள்ள அருமை மகனே, இந்தக் கிருஸ்து மஸுக்கு நாமெல்லாம் மிகுந்த தைரியத்துடன் இருக்க வேண்டும். கொஞ்சங்கூட கண்ணைக் கசக்கக்கூடாது. நான் உனக்கு வாக்குறுதி தருகிறேன்; அதே போன்று நீயும் எனக்கு வாக்குறுதி தரவேண்டும்.

அநேக முத்தங்களோடு
உன்னுடைய அன்புத் தாயார்

தந்தை தன் பேரன்பை அனுப்பியுள்ளார். நீ தைரியசாலிப் பையனுக இருக்க வேண்டுமென்று அவர் கூறுகிருர். ஆனுல், நீ எது வந்தாலும் தைரியமாக இருப்பாய் என்று எனக்குத் தெரியும். நான் பணத்தைத் தபால் தலைகளாக அனுப்பியிருக் கிறேன். நீ அவைகளைத் தபால் நிலையத்தில் மாற்றிக்கொள்.

மார்ட்டின் தாலர் கடிதத்தையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். கடிதத்தின் வரிகள் அவன் கண்முன்னே அன்னம்போல் நீந்திச் சென்றன. அவனுடைய அன்னை அழு திருக்கிருள் என்பதை அவனுல் நன்கு காணமுடிந்தது. பல இடங்களில் மை லேசாக நனைந்ததால் அழிந்திருந்தது. அவன் பலகணியின் அடிப் பகுதியைப் பிடித்துக்கொண்டு சாம்பல் நிறத்திலிருந்த டிசம்பர் மாத வானத்தை மேல் நோக்கிப் பார்த்த படி தாழ்ந்த குரலில் கூறினுன். "அம்மா! எனதன்புள்ள அம்மா!"

அழக்கூடாது எனத் தடை செய்யப்பட்டிருந்தும் அவன் அழுதுவிட்டான்.

# அத்தியாயம் ஒன்பது

பயத்தைப் பற்றி செபாஸ்டியனின் ஆழ்ந்த சிந்தனைகள்; மாற்று நடிகர் தேர்ந்தெடுத்தல்; நோயாளி அறைக்குள் ரகசிய வருகை; 'மாரோ போன்' என்றழைக்கப்படும் பீர்க் கடை; சூடான இரவுச் சாப்பாடு, தபால்காரனை நேருக்குநேர் சந்தித்தல்; மார்ட்டினின் வீட்டுக் கடிதம்.

# 9

உலியின் பாராசூட் இறக்கம் எல்லாப் படிப்பறைகளிலும் விவாதத்திற்குரிய விஷயமாகி விட்டது. மேலும் ஒரேயொரு அபிப்பிராயமே எங்கும் மேலோங்கி யிருந்தது. சிறுவனாகிய ஸிம்மேன் ஒரு பெரிய விளையாட்டு வீரன்; அவ்வளவு துணிச்சல் மிக்கவனா அவன் என்று எவருமே எண்ணிப் பார்த்ததில்லை.

இந்தப் பொது அபிப்பிராயத்தை செபாஸ்டியன் மட்டும் ஏற்றுக் கொள்ளவில்லை. "அதில் துணிச்சல் ஏதும் இல்லை," அவன் சாவதானமாகக் கூறினான். "உலி ஏணியின் உச்சியிலிருந்து குதித்தபோது அதற்கு முன்பு இருந்ததைவிட புதிதாக அப்படியொன்றும் தைரியசாலியாக இருக்கவில்லை. அவன் நிராசையினால் தான் அவ்வாறு செய்தான்."

"அதாவது நிராசையின் தைரியம்," ஐந்தாம் படிவத்தைச் சேர்ந்த பையனொருவன் திருத்தம் கொடுத்தான்.

"அதற்கும் இதற்கும் மிகமிக வித்தியாசமிருக்கிறது. எத்தனையோ கோழைகள் இருக்கிறார்கள், அவர்களுக்கு எவ்வளவோ நிராசைகள் இருக்கலாம், ஆனால் அதற்காக ஏணி மேலிருந்து குதிக்க யாரும் கனவுகூட காண்பதில்லை."

செபாஸ்டியன் தாட்சண்ணியம் காட்டும் பாவனையில் தலையை ஆட்டினான். "அது மிக மிக உண்மை," அவன் கூறினான். "ஆனால், அவர்களுக்கும் உலிக்குமிடையே உள்ள வித்தியாசம் தைரியத்தைப் பற்றியதல்ல,"

"பின் எதைப் பற்றியது."

"உலி தன்னைப் பற்றி தானே வெட்கப்படும் படியாக நடந்து கொள்வதில் பெருந் திறமையுடையவன் என்ற சாதாரண நிலைதான் அது. உலி மிகவும் எளிய நேரான போக்குடைய பையனுவான். அவனுடைய முனைப்பான

முயற்சிக் குறைபாடு மற்றவர்களை விட மிக அதிகமாக அவனிடம் பதிந்திருந்தது.'' செபாஸ்டியன் எதையோ சிறிது நேரம் சிந்தித்த பிறகு மீண்டும் தொடர்ந்தான்: ''நான் இப போது கூறப் போவது உங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. நான் துணிவூக்கமுள்ளவன்தானு என்று உங்களை நீங்களே எப்பொழுதாவது கேட்டுக் கொண்டதுண்டா? நீங்கள் அவை எதையுமே எப்பொழுதும் கவனித்திருக்க முடியாது. என்ருலும் மற்றவர்களைக் காட்டிலும் பெருமளவுக்குப் பீதி இயல்பு உடையவன் நான் என்ற ரகசிய உண்மையை உங்களுக்குக் கூறிக் கொள்கிறேன். ஆனுல், நான் புத்திசாலித்தனம் உள்ளவன். அதனுல் மற்றவர்கள் அதனைக் கவனிக்கும்படி நான் விட்டு விடுவதில்லை. எனக்குள்ள பீதியியல்பு எனக்கு அதிகத் துன்பம் தருவதில்லை. நான் அதற்காக வெட்கப்படவில்லை. காரணம், நீங்கள் காண்பது போல எனக்குக் கொஞ்சம் பொது அறிவு உண்டு. எல்லோரிடத்திலுமே குற்றங் குறைகள் உண்டு என்பது எனக்குத் தெரியும். இதில் முக்கியவிஷயம் என்னவென்ருல் மற்றவர்கள் அவைகளை அறிந்து கொள்ளாவண்ணம் எளிதாகத் தடுத்துக் கொள்கிருர்கள் என்பதுதான்.''

அவன் கூறியதன் பொருள் அவர்கள் எல்லோருக்கும் புரியவில்லை என்பது உறுதி. அது அவர்களில் பலருக்கும் குறிப்பாக இளஞ் சிறுவர்களின் மூளைக்கு அப்பாற்பட்ட விஷயமாகும்.

''அதைப் பற்றி வெட்க உணர்ச்சி உண்டாவதை விட அது இருந்தது என நினைக்கிறேன்,'' ஐந்தாம் படிவப் பையன் கூறினுன்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது,'' தணிந்த குரலில் செபாஸ்டியன் மறுமொழி கூறினுன். அவன் வழக்கத்துக்கு மாருக வாயாடினுன். ஒரு வேளை அது உலிக்கு நேர்ந்த விபத்தின் விளைவாக இருக்கும். சாதாரணமாக அவன் கூறும் எதுவுமே வடுச் சொல்லாகவும் பரிகாசத்திற்குரியதாகவுமே இருக்கும். அவனுக்கு உண்மையான நண்பர்களே எப்போதும்

ஏற்பட்டிருக்கவில்லை. அவனும் அவ்வகையில் யாரும வேண்டுமெனை விரும்பவில்லை. ஆனுல், இப்போது தனியனுக தனியனுக ஆவதால் அவனுக்குச் சங்கடம உண்டாகுமே என்று அவனுக்குத் தோனறியது. அவன் ஒரு மகிழ்ச்சி நிறைந்த பையனுக இருக்க இயலவிலலை. "ஆனுல், எப்படியோ," திடீரென அவன் தன் குரலைத் தணித்துக் கொண்டு கூறினுன். "எனக்குத் தைரியம இல்லை எனக் கொண்டு என்னுடைய காலைவாரி விடலாம் என்று நினைக்கக் கூடிய துடுக்குத் தனம் உங்களுக்கு ஏற்பட வேண்டாம். நீங்கள் அப்படிச் செய்தீர்களென்றுல் என்னுடைய புகழை நிலைநாட்ட வேண்டி உங்களில் ஒருவனுக்கு நான் குத்துவிடுவேன். அதற்கு வேண்டிய தைரியம் எனக்கு எப்போதும் உண்டு."

செபாஸடியன் அபபடிபட்டவனுகவே இருந்தான். ஒரு நிமிடத்திற்கு முன்பு அவர்கள் கிட்டத்தட்ட அவனுக்காக வருந்திக் கொண்டிருந்தார்கள். ஆனுல், இபபோதோ அவன் அவர்களுடைய முகத்திற்கு நேராகத் தன் முஷ்டியை நீட்டி அசைத்துக் காட்டிக் கொண்டிருந்தான்.

"ஆர்டர்," படிப்பறைத் தலைவன் கத்தினுன். ஒரு குட்டித் தூக்கம் போட்டிருந்த அவன் அப்போதுதான் தூக்கம் கலைந்து எழுந்திருந்தான.

செபாஸ்டியன் "தவறு செய்யும்போது .." எனத் தொடங்கும் வாசகத்தை ஐம்பது தடவைகள் எழுதி முடித்தான்.

அதன் பிறகு அவன் ஜானியின் படிபபறைக்குள் போனுன். "நாளை இரவு நடைபெறவிருக்கும் நாடகத்தில் உலியின் பாகத்தை ஏற்கப் போவது யார்?" அவன் கேட்டான.

ஜானி ஒரு திடீர்க் குலுக்கலோடு பூலோகத்திற்குத் திரும்பி வந்தான். உலிக்கு ஏற்பட்ட விபத்து 'பறக்கும் வகுப்பறை' யின் நாடக நிகழ்ச்சிக்குப பேரிடரை ஏற்படுத்தியுள்ளது என்ற விஷயத்தை அவன் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை.

''அது அப்படியொன்றும் பெரிய பாகம் இல்லை,'' செபாஸ்டியன் கூறினன். நாளை மதியத்திற்கு முன்பு, மனப் பாடம் செய்துக் கொள்ளக் கூடிய ஒருவனைக் கண்டு பிடிக்க வேண்டும். அவன் தோற்றத்தில் ஒரு சிறுமியைப் போன்ற சாயல் உள்ளவனாக இருக்க வேண்டும்.''

இறுதியாக மூன்றும் படிவத்தைச் சேர்ந்த ஸ்டோக்கர் என்ற பெயருடைய ஒரு பையனை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அவனை உதவி செய்யும்படி கேட்டுக் கொள்வதற்கு முன்பு மார்ட்டினேடு இவ்விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க அவர்கள் ஒன்பதாம் எண்ணுள்ள பொது 'அறைக்குப் போனார்கள்.

ஒன்பதாம் எண் பொது அறை துயரம் நிறைந்த வீட்டைப் போன்றிருந்தது. மத்தியாஸ், ஜஸ்டஸிடம் சென்று அவன் கிருஸ்துமஸ் விடுமுறைக்குப் பள்ளிக் கூடத்திலேயே தங்கட்டுமா என்று கேட்டான். அவ்வாறு அவன் தங்கா விட்டால் உலி தனிமையில் இருக்கும்படி நேரிடும். ஆனால், ஜஸ்டஸ் அவனுக்கு வெளிப்படையாக அனுமதி அளிக்க மறுத்தார். மத்தியாஸைக் காண ஆவலோடு காத்திருக்கும் பெற்றோர் களிடம் அவன் மகிழ்ச்சியோடு திரும்பிச் செல்ல வேண்டு மென்று அவர் கூறினர்.' ஜானி எதுவாயினும் பள்ளியிலேயே தான் தங்கியிருப்பான். உலியினுடைய பெற்றோர்கள் கிருஸ்து மஸுக்காக கிர்ஷ்பர்கில் சில நாட்கள் செலவழிக்க விரும்புவ தாக தொலைபேசி மூலம் இப்போது அறிவித்துள்ளார்கள். அதனல் மத்தியாஸ் கிருஸ்துமஸுக்கு வீட்டிற்குப் போக வேண்டுமே என்ற வருத்தத்தோடு அவர் முன் உறுத்து நோக்கியபடி இருந்தான்.

மார்ட்டின் பள்ளியிலேயே தங்கியிருக்க வேண்டுமென்பதை எண்ணி எவ்வளவோ சங்கடப் பட்டுக் கொண்டு ஒரு சில மேஜைகளுக்கு அப்பால் உட்கார்ந்திருந்தான். உலியும் ஜானியும் அங்கு இருப்பார்கள் என்பதை அவன் கடந்த மணி வரை தனக்குத் தானே எண்ணிக் கொண்டிருந்தான். ஆனல், எப்படியோ அது ஒரு போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

கேப்டனின் சகோதரியின் வீட்டில் ஜானிக்குச் செய்யக்கூடியது என்ன இருக்கிறது? ஒருவனுடைய தந்தை கெட்டவனாக அமெரிக்காவில் வாழும்போது, பள்ளியிலேயே தங்கியிருப்ப தென்பது அவ்வளவு பெரிய கஷ்டமொன்றும் இல்லை. உலியி னுடைய பெற்றோர்கள் அவனைப் பார்ப்பதற்காக வரவிருக் கிறார்கள். மேலும் ஒருவனது கால் முறிந்தால் அதையெல்லாம் பொறுத்துச் சமாளிக்க வேண்டும்.

ஆனால், மார்ட்டின் சிந்தித்தான்; நான் பூரண ஆரோக் கியத்தோடு இருக்கிறேன். என்னுடைய கால் முறியவில்லை என்றாலும் நான் இங்கேயே தங்கியாக வேண்டும். நான் என்னுடைய தாயாரையும் தகப்பனாரையும் மிகவும் விரும்பு கிறேன். அதே போன்று அவர்களும் என்னை மிகவும் நேசிக் கிறார்கள். எனினும் நாங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி 'கிருஸ்துமஸ் ஈவ்' விழாவைக் கொண்டாட முடியாது. அது ஏன்? ஏனென்றால் எங்களிடம் பணமேதும் இல்லை. எதனால் எங்களுக்குப் பணமேதும் இல்லாமல் இருக்கிறது? என் தந்தை மற்றவர்களை விட புத்திசாலித்தனம் குறைந்தவரா? இல்லை. மற்ற பையன்களைவிட நான் குறைவாக உழைத்துப் படிக் கிறேனா? இல்லை. பின் ஏன் இப்படி? பலரும் இவ்வாறு துன்புறு வதற்கு அநீதி தான் காரணம். அதனையெல்லாம் மாற்ற விரும்பும நல்ல ஆண்களும் பெண்களும் நிச்சயமாக உண்டு. ஆனால், 'கிருஸ்துமஸ் ஈவு' விழாவிற்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. அதற்கு முன்பு அதனை மாற்றி வெற்றி பெற அவர்களால் முடியாது.

கால் நடையாக வீடுபோய்ச் சேர்ந்தால் என்ன என்று கூட மார்ட்டின் தனக்குள் கேட்டுக் கொண்டான். அதற்கு மூன்று நாட்களாகும். அதுவும் உச்சமான குளிர் காலத்தில். அப்படி போனாலும் முன்னதாக நடைபெறும் குத்துச் சண்டை நாளன்று அவன் அங்குப் போய்ச் சேர முடியாது. வழியில் உணவுக்கும் தங்குவதற்கான செலவுக்குக் கையிலி ருக்கும் ஐந்து மார்க்குகள் போதுமா? பின்னர், விடுமுறைக்குப்

பிறகு அவன் பள்ளிக் கூடத்திற்குத் திரும்பி வரவேண்டும. திரும்பி வருவதற்கான வழிச் செலவுக்குப் பணம் கொடுக்க பெற்ருேர்களால் இயலாது.

அவன் அப்படியும் செய்ய முடியாது; அவன் எந்த வழியில் சிந்தித்தாலும் இறுதியில் அங்கேயே தங்கியிருக்க வேண்டிய தாகத்தான் இருந்தது.

ஜானியும் செபாஸ்டியனும் உள்ளே வந்து சிறுவனை ஸ்டோக்கர், உலியின் பாகத்தை ஏற்று நடிக்க முடியுமென்று தோன்றுகிறதா என்று கேட்பார்கள். ஆனல், அவர்கள் கூறியது அவனுக்குக் கேட்கவே இல்லை. ஜானி அவனுடைய தோளால் அவனைத் தூக்கி சோர்வுச் சூழலிலிருந்து அவனை வெளிக் கொணர குலுக்கினுர்கள். பின்னர் மார்ட்டின் மீண்டும கேட்டான்.

''நிச்சயமாக'', சிரத்தையற்றவனுகக் கூறினுன்.

இரு பையன்களும் வியப்போடு அவனையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ''என்ன விஷயம்?'' செபாஸ்டியன் கேட்டான். ''உலிக்கு ஏற்பட்ட விபத்திஞலா?'' நீ அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம. அது எவ்வளவோ அதிகம் கஷ்டம தரக்கூடியதாக இருக்கின்றது.

''நிச்சயமாக,'' மார்ட்டின் கூறினுன்.

ஜானி அவனுக்கருகில் குனிந்தான்.

''நான் கேட்கிறேன்,'' அவன் தணிந்த குரலில் கூறினுன். ''ஏதாவது தவறு நேர்ந்துவிட்டதா? உனக்கு உடல்நல மில்லையா? அல்லது வேறு ஏதாவதா?''

''நிச்சயமாக,'' மார்ட்டின் பதிலளித்தான்.

எதைக் கேட்டாலும இரண்டு வார்த்தைகளை மட்டுமே அவன் கூறிக் கொண்டிருந்தான். அவனது மேஜையின் மேல் மூடியைத் திறந்து எழுதப் பயன்படும சில காகிதங்களை வெளியே எடுத்தான்.

அதைக் கண்ட அவர்கள் போய்விட்டார்கள்.

''அவனுக்கு என்ன நேர்ந்தது?'' நடை வழியில் நின்ற

படி ஜானி த்ரோட்ஸ் மிகுந்த அக்கறையோடு கேட்டான்.

''ஒன்றும் பிடிபடவில்லை,'' செபாஸ்டியன் கூறினன். ''ஒருவேளை அவனுக்குத் தலைவலியாக இருக்கும்.''

பின்னர் அவர்கள் சிறுவன் ஸ்டோக்கரைக் கண்டு பேசச் சென்றார்கள். அவன் உற்சாகத்தால் துள்ளிக் குதித்தான். ஆனால், தான் பெண்ணின் உடுப்புகளையும் நீண்ட சடையோடு கூடிய 'டோப்பா' முடியையும் அணிந்து கொள்ள வேண்டியிருக்கும் என்பதைக் கேட்டபோது அவனுடைய பேரார்வம் குறைந்துவிட்டது.

தங்களைக் கை விட்டு விடக் கூடாதென்று அவர்கள் அவனிடம் கேட்டுக் கொண்டார்கள். 'பறக்கும் வகுப்பறை' கையெழுத்துப் பிரதிகளை அவனுடைய கையில் வைத்து ஜானி அழுத்த, செபாஸ்டியன் கடுமையாகக் கூறினன்: ''நாளை மத்தியானத்திற்குள் நீ உன் பாகங்களைப் படித்திருக்க வேண்டும்!''

சிறுவன் ஸ்டோக்கர் நடுக்கத்தோடு உட்கார்ந்தான்.

மத்தியாஸுக்கு இனியும் அதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அவன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியேறினன். படிப்பறைத் தலைவனை தெயடோர் முதல் நாள் டாக்டர் போக் கூறிய கதை உண்டாக்கிய மனமாற்றத்துடனேயே இருந்தான். அவன் உள்ளக் கனிவுள்ளவன். மருத்துவ மனை கதவுக்கு அருகிலுள்ள நடைவழியிலுள்ள ஒரு தூணின் பின் புறத்தில் ஒளிந்து கொண்டு மத்தியாஸ் காத்து நின்றான்.

அவனுக்கு அதிர்ஷ்டம் ஏற்பட்டது. ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு நர்ஸ் வெளியே வந்து சமையற் கட்டில் ஏதோ செய்ய வேண்டி மாடிப்படிகளில் இறங்கிக் கீழே சென்றாள். மத்தியாஸ் திருட்டுத்தனமாக சுற்று முற்றும் பார்த்தான்.

ஒரு நிமிடத்திற்குப் பின் அவன் உலியின் படுக்கைக் கருகில் நின்று கொண்டிருந்தான். அந்தச் சிறுவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். சுற்றிலும் மருந்துகளின் வாடையாக

இருந்தது. மத்தியாஸின் இருதயம் தொண்டையில் போய் இடிப்பது போல் தோன்றியது. அவன் தன் இளைய நண்பனின் வெளிறிய முகத்தை எவ்வளவோ ஆர்வப்பெருக்கோடு பார்த் தான்.

திடீரென உலி தன் கண்களைத் திறந்தான். மங்கிய அவன் முகத்தில் சோர்வு நிறைந்த புன்சிரிப்பு ஒன்று தோன்றியது.

மத்தியாஸ் தலையசைத்தான். அவனுக்குத் தொண்டையை அடைத்துக்கொண்டிருப்பது போலத் தோன்றியது.

''அப்படியொன்றும் எனக்கு அதிகமான வேதனை ஏற்பட வில்லை,'' உலி கூறினான். ''உண்மையாகவே இல்லை. மேலும் நாளை மறுநாள் என்னுடைய சொந்தக்காரர்கள் வருகிறார்கள்.''

மத்தியாஸ் மீண்டும் தலையாட்டினான். அப்போது அவன் கூறினான்: ''என்னுடைய விடுமுறையை நான் இங்கேயே கழிக்க விரும்புகிறேன். ஆனால், ஜஸ்டஸ் சம்மதிக்கவில்லை.''

''மிக்க நன்றி,'' உலி தாழ்ந்த குரலில் கூறினான். ''ஆனால், நீ நிச்சயம் வீட்டிற்குப் போக வேண்டும், மாட்ஸ். மேலும், நீ திரும்பி வரும்போது கிட்டத்தட்ட நான் நன்கு குண மடைந்திருப்பேன்.''

''நிச்சயமாக,'' மத்தியாஸ் கூறினான். ''இப்போது வேதனை இல்லை என்பது உறுதிதானே?''

''அவ்வளவாக இல்லை,'' உலி கூறினான். ''மற்ற பையன்கள் என்ன கூறுகிறார்கள்?''

''அவர்கள் அடியோடு தோற்றுப் போய்விட்டார்கள்,'' மத்தியாஸ் கூறினான். ''மேலும் அவர்கள் உன்னை ஒரு அதிசய மான பையன் என நினைக்கிறார்கள்.''

'பார்த்தாயா?'' தணிந்த குரலில் உலி கூறினான். ''நீ சொல்வது சரியே, மாட்ஸ். நம்மிடமுள்ள கோழைத்தன நோயை நாமே குணப்படுத்திக் கொள்வோம்.''

''ஆனால் உலி, நான் அப்படிப்பட்ட பொருளில் கூற வில்லை,'' மாட்ஸ் கூறினான். ''அது நிலைமையை இன்னும் மோசமானதாக் மாற்றிவிடும். நான் ஒரு கோழை என்று

என்னை நினைக்கவில்லை. ஆனால், நீ பத்து இலட்சம் தடவை கேட்டுக் கொண்டாலும் ஏணியின உச்சியிலிருந்து நான் குதிக்க மாட்டேன்.''

உலியின் முகம் கர்வத்தாலும் மகிழ்ச்சியாலும் பிரகாசித்தது. ''இல்லை?''

''பயம் இல்லை,'' மத்தியாஸ் கூறினன். ''ஆயிரம் தடவைகள் வேண்டுமானாலும் என்னை நீ அழைத்துக் கொள்.''

வேதனை இருந்தாலும் இன்னும சில வாரங்களுக்குப் படுக்கையிலேயே இருக்க வேண்டுமென்ருலும் உலிக்கு தன்னையும் உலகத்தையும் பற்றி திருப்தி ஏற்பட்டது. ''அந்த மேஜையின் மேல் கொஞ்சம் சாக்லெட் இருக்கிறது,'' அவன் கூறினன். ''க்ருன்கென் சொந்தமாக அனுப்பியிருக்கிருர். அதை எடுத்துக் கொள்.''

''வேண்டாம். நன்றி,'' மத்தியாஸ் கூறினன்.

''எனக்குப் பசியில்லை.''

உலி சிரித்தே விட்டான். ஆனால், நெஞ்சில் வலி சற்று அதிகமாகவே இருந்தது. ''உனக்குப் பசி இல்லை?'' அவன் கேட்டான். ஆனால், மாட்ஸ், நீ அந்தச் சாக்லேட்டை எப்படியும் சாப்பிட வேண்டும். நீ சாப்பிட வில்லையென்ருல் எனக்கு வருத்தமாக இருக்கும். புகைபிடியாதவர், எக்காரணம் கொண்டும் மனதில் வருத்தமோ சங்கடமோ இருக்கக் கூடாது எனக் கூறியுள்ளார்.''

மத்தியாஸ் சாக்லேட்டை விரைந்து எடுத்துக் கொண்டான். அவன் ஒரு சிறு துண்டை வாயில் போடும் வரை உலி அவனையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் மகிழ்ச்சியோடு புன்னகை புரிந்தான்,

அந்தச் சமயத்தில் கதவு திறந்தது; நர்ஸ் உள்ளே வந்தாள். ''உடனே வெளியே போ,'' அவள் அலறினள். ''உன்னைப்போல் உள்ள ஒரு தடியன், அந்தச் சின்னஞ்சிறு பையனின் சாக்லேட்டைத் தட்டிப் பறித்ததை என்னல் நம்ப முடியவில்லையே!''

மத்தியாஸ் வெட்கத்தால் சிவந்து விட்டான். ''அவன் தான் கட்டாயப் படுத்தினுன்,'' வாய் நிறைய சாக்லேட்டை வைத்துக் கொண்டு அவன் சொன்னுன்.

''ஓடு வெளியே,'' அவள் மீண்டும் கத்தினுள்.

இரு பையன்களும் ஒருவரை நோக்கி யொருவர் தலையாட்டிக் கொண்டனர். ''சீக்கிரம் குணமாகி விடும், உலி,'' மத்தியாஸ் கூறினுன்.

மாலை நேர இறை வணக்கத்திற்குப் பிறகு, குழுமியிருந்த பள்ளி மாணவர்களுக்கு டாக்டர் போக் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். ''சிறுவனுன உலி செய்த சோதனையின் விளைவு ஒரு பெரும் அபாயகரமான துக்க நிகழ்ச்சியாக இல்லாது ஒரு விபத்தோடு மட்டும் நின்று விட்டதற்காக நாம் நம்முடைய இதயத்தின் அடித்தளத்திலிருந்து நன்றி செலுத்துவோம்,'' என அவர் கூறினுர். ''அதனைத் தொடர் முறையாக ஆக்குவதற்கு இத்தகைய தைரியத்தை யாருமே பின்பற்றி நடக்க அனுமதிக்க வேண்டாமென உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். தைரியத்தையும் அதைப் போலவே அதைரியத்தையும் தெளிவில்லாமல் நடைமுறையாக்க வேண்டாமென உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். நம்முடைய சொந்த மரியாதையைப் போலவே நம்முடைய பள்ளியின் மரியாதையையும் நாம் கட்டிக் காக்க வேண்டும். ஆனுல், முறிந்த கால்கள், ஒரு விடுதித் தலைவர் என்ற முறையில், நான் எவ்வளவோ வெறுப்போடு விலக்கக் கூடிய உதாரணங்களாகும். எந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஏற்பட்டாலும் அவை என்னை பெரிதும் கவரப் போவதில்லை. எதுவானுலும் இப்போது நாம் அவைகளையெல்லாம் மறந்து விடுவோம். நான் இன்று மாலை வெளியே போகப் போகிறேன். நான் வெளியே போயிருக்கும் சமயத்தில் ஹெங்கெல் பொறுப்பாளராக இருப்பார். நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள். இன்று இரவு நீங்கள் குழப்பம் ஏதாவது ஏற்படுத்தினுல் எதிர்காலத்தில் நான் வெளியே

போவது சாத்தியமில்லாமல் போய்விடும். எப்போதாவது ஒரு மாலை நேரம் வெளியே போக விருப்பமில்லாமல் செய்து விடாதீர்கள். குட் நைட்!''

''குட் நைட், சார்!'' அவர்கள் கத்தினார்கள்.

டாக்டர் போக் நகரத்திற்குப் போனார். அவர் சற்று அதிக தூரம் போக வேண்டியிருந்தது. காரணம் ''மாரோபோன்'' என்ற பீர்க் கடை வலப்பக்க நகர்ப்புறத்தில் இருந்தது. புகை பிடியாதவர், தான் அங்கே பியானோ வாசிப்பதாகக் கூறியிருந்தார்.

வாசற் கதவின்மேல் ''நடனம், பீர், ஒயின்'' என்ற சொற்கள் எழுதப்பட்டிருந்தன. ஜஸ்டஸ் உள்ளே சென்றார். அது அப்படியொன்றும் குறிப்பிடத்தக்க சிறப்பான நிலையம் அன்று. அங்கு வழக்கம் போல வந்து குழுமியிருந்தவர்கள் ஏதோ ஒரு வகையான தனிப் போக்குடையவர்களாக இருந்தனர். புகை பிடியாதவர் சுரசுத்தமில்லாத பியானோவுக்கருகில் அமர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக நடனத்திற்கேற்ற இசையை வாசித்தார்.

போக் ஒரு சிறிய மேஜைக்கருகில் அமர்ந்து ஒரு கிளாஸ் பீருக்கு ''ஆர்டர்'' கொடுத்துவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகைக்கலானார். புகைபிடியாதவர் அவர் வரும்போதே அவரைப் பார்த்துத் தலையாட்டினார். அவருடைய நண்பர் இசைப் போட்டியின் இசைக் கருவியை முடுக்கிக் கொண்டிருக்கும்போது ஜஸ்டஸ் தன்னைச் சுற்றிலும் ஒருமுறை கூர்ந்து பார்த்தார். அது உண்மையிலேயே ஒரு புதுமையான இடமாகத்தான் இருந்தது. ஆடவர்கள் நடனமாடும்போது தங்கள் தலைகளில் தொப்பி அணிந்திருந்தார்கள். அது அவர்களின் தனியியல்பு போலும்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு புகைபிடியாதவர் டாக்டர் போக்கின் மேஜைக்கு வந்தார். ''இப்போது இடைவேளை சமயம்,'' மகிழ்ச்சியால் புன்னகை புரிந்தவண்ணம் அவர் கூறினார். பரிமாறுபவன் அவருக்கு வியன்னா ரீதியில் பக்குவம் செய்யப்பட்ட இறைச்சியும் ஒரு சிறிய கண்ணாடிக்

கோப்பையில் பீரும் கொண்டு வந்து வைத்தான். ''என்னுடைய சூடான இரவு உணவு'' என்று கூறிக்கொண்டே புகைபிடியாதவர் பசியோடு அதனைச் சாப்பிடத் தொடங்கினர்.

நான் கூறுவதை நீ தவருக எடுத்துக் கொள்ளவில்லையென்ருல் கூறுகிறேன். ''இது உனக்கேற்ற இடமில்லை. ராபர்ட்!'' என்ருர் ஜஸ்டஸ். ''மத்தியதர வகுப்பின் சமுதாய மதிப்புக்கு நீ ஒரு வாய்ப்புக் கொடுக்கக் கூடாதா?'' அவருடைய நண்பரிடமிருந்து எவ்விதப் பதிலும் வெளிவராது போகவே, போக் தொடர்ந்து கூறினர், ''என்னை மகிழ்விப்பதற்காகவேனும் நீ இதைச் செய்.''

புகைபிடியாதவர் தலையாட்டினர். ''நான் என்னசெய்ய வேண்டும் யொஹன்?'' அவர் கேட்டார். ஏளனத்திற்குரிய என்னுடைய ரயில் பெட்டியைக் கொண்டு நான் மிகவும் திருப்தியடைகிறேன்; அடுத்த வசந்த காலத்தில் பூக்கள் மீண்டும் மலரும். எனக்கு மிகக் குறைந்த அளவு பணமே தேவை. வீணுகப் போய்விட்டதாக நீ கருதும் கடந்த சில ஆண்டுகளில் எனக்குக் கிடைத்ததைப் போல படிக்கவோ சிந்திக்கவோ அதிகமான ஓய்வு அதற்கு முன்பு ஒருபோதும் எனக்குக் கிடைக்கவில்லை. கடந்து சென்ற அந்தக் கஷ்ட காலத்திற்கு அதற்கேயுரிய ஒரு பொருள் ஏற்பட்டது. என்னைப் போன்ற விசித்திரப் பிறவிகள் வேறு சிலரும் இருக்கலாம். நான் ஒரு டாக்டராக இருக்க முடியவில்லை. நான் ஒரு தோட்டக்காரராகவே இருக்க முடிந்தது. ஆனல், துரதிர்ஷ்டவசமாக இப்போது அதற்குள்ள சந்தர்ப்பமும் பிந்திவிட்டது. இங்கே இந்த இரைச்சல் மிகுந்த நாகரிகமற்ற பீர்க்கடையில் இருப்பதானது எங்கேயோ ஒரு காட்டில் தனிமையில் இருப்பது போன்றதொரு விந்தையான உணர்ச்சியாக எனக்குத் தோன்றுகிறது.''

''கேள், ராபர்ட்,'' ஜஸ்டஸ் கூறினர். ''எங்களுடைய பள்ளிக்கூட டாக்டரான ஹார்ட்விக் அவர்களுக்கு மிகவும் வயதாகி விட்டது. பள்ளிக்கூடத்தில் அவருக்குப் பின் அப்

பதவியை நீ ஏற்க, அவர் சிபார்சு செய்ய மறுப்பார் என எனக்குத் தோன்றவில்லை. இங்கே பியானோ வாசிப்பதற்கு உனக்கு எவ்வளவு கிடைக்கிறதோ அதைவிட மிக அதிக மாகவே அங்கே நீ சம்பாதிக்கலாம். மேலும் நீ உன்னுடைய ரயில் பெட்டியிலேயே வசித்துக் கொள்ளலாம். சரி, இதைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? நான் ஹார்ட்விக்கோடு இதைப்பற்றிப் பேசட்டுமா?''

''நீ விருப்பப் பட்டால்,'' புகைபிடியாதவர் பதிலளித் தார் ''உனக்கு அது மிகவும் மகிழ்ச்சி தரும் என்றால் கேட்டுப் பார். ஆனால், நண்பா இந்த ஆஸ்பிரின் மருந்து எழுதிக் கொடுக்கும் வேலைக்குத் திரும்பவும் போவதனால் எனக்கு அதிகமான மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்பட்டு விடுமென நீ கருத வேண்டாம். ஒரு மனிதனுக்குப் பேராசை இல்லாமல் வாழ்வது சாத்தியமற்ற ஒன்று என்ற கதையைத் தூக்கிக் கொண்டு என்னிடம் வரவேண்டாம். என்னைப் போல வாழ் கின்றவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். அவர் களெல்லாம் தரம் குறைந்த பீர்க் கடையில் பியானோ வாசிக்க வேண்டுமென்ற பொருளில் நான் கூறவில்லை. ஆனால், மிக முக்கியமான விஷயங்களை நினைவில் கொள்ள நேரமுள்ள அதிகமான பேர்களை நான் வேண்டிக்கொள்கிறேன். பணம், மதிப்பு, புகழ் — இவைகள் விளையாட்டுத்தனமான விஷயங் களாகும். விளையாட்டுப் பொம்மைகள் அன்றி, வேறில்லை. அவை உண்மையில் முதிர்ந்த பெரியவர்களுக்கு வேண்டிய சங்கதிகள் அல்ல. நான் சொல்வது சரிதானே?'' அவர் கொஞ்சம் தயக்கம் காட்டினார். ''ஆனால், உன்னுடைய பையன்களை தகுதியுள்ளவர்களாகவும் ஆரோக்கியமுள்ளவர் களாகவும் உருவாக்குவதற்கான பணி என்றால் அது அவ் வுளவு மோசமான வேலை அல்ல. அவர்களில் ஒருவனுக்கு உடல் நலமில்லையென்றால் மட்டுமே நான் வேலி தாண்டி அங்கு வருவேன். மற்றபடி நான் பூச்செடிகளை வளர்ப்பதும் புத்தகங் களைப் படிப்பது மாகத்தான் இருப்பேன். சரி வயதான அறுவை

மருத்துவரிடம் இதைப்பற்றிப் பேசு. அவர் தலையசைத்தால் நான் இந்தப் பழைய பியானோவை படக்கென மூடிவிடுகிறேன். என்னவானாலும் மார்ட்டின், ஜானி, மத்தியாஸ், உலி, செபாஸ்டியன் ஆகியோர் மெட்ரிக் தேர்வில் வெற்றி பெறும் வரை நான் என்னுடைய தற்போதைய இருப்பிடத்தை விட்டு வரமாட்டேன்.''

''நானும் என்னுடைய 'டவர்' அறையை விட்டுப் போக மாட்டேன்,'' ஜஸ்டஸ் கூறினார்.

''அவர்கள் முதல்தரமான பையன்கள் !''

பிறகு அவர்கள் இருவரும் மிக அன்னியோன்னியமாகக் குடித்தார்கள்.

''சிறுவனான உலி உடல் நலம் பெறுவதற்காக,'' புகை பிடியாதவர் இரைந்து கூறினார். பின் அவர்கள் இருவரும் தங்கள் கண்ணாடிக் கோப்பைகளை மோதி ஓசையுண்டாக்கினார்கள். உயர் நடுநிலைப் பள்ளி பையன்களுக்கெதிராக நடைபெற்ற போராட்ட நடவடிக்கைகளையெல்லாம் பற்றி தமக்குத் தெரிந்த தகவல்களை இருவரும் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டனர். ஜஸ்டஸ் தன் நண்பரைப் பார்த்து புன்னகை புரிந்தார். ''அந்தப் போக்கிரிச் சிறுவர்கள் நம் இருவருக்குமே பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள்,'' அவர் கூறினார்.

புகைபிடியாதவர் மனத் திருப்தியோடு, தலையாட்டினார்.

அப்போது அவர் மீண்டும் பியானோவிடம் போக வேண்டி வந்தது. ஆண்களும் பெண்களும் நடனமாடுவதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருவரும் நகரத்தினிடையே பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது நள்ளிரவு கடந்துவிட்டது. அவர்களுடைய இளமைக் காலத்தின் பல கதைகளும் அவர்கள் நினைவுக்கு வந்தது. எவ்வளவு காலத்திற்கு முன்பு நடந்தவை அவை! அவைகளெல்லாம் நடந்தது இங்கேயேதான் !

அவர்கள் நடந்து கொண்டிருந்த அதே தெருக்களில்! இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவர்களோடு அதே பெஞ்சுகளின் மேல் உட்கார்ந்திருந்த மற்றவர்கள் என்ன ஆனார்களோ? அவர்களில ஏதோ ஒரு சிலரைப் பற்றி அவர்கள் கேள்விப் பட்டார்கள், ஆனால், மீதமுள்ள மற்றவர்கள் என்ன ஆனார் கள்? தலைக்கு மேல் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டி ருந்தன. இந்த நட்சத்திரங்கள் மட்டும் இன்றும் அப்படியே காலி தான் இருக்கின்றன.

தபால்காரன் நோர்டு தெருவின் மூலையிலுள்ள தூணிலிருந்த தபால் பெட்டியினின்றும் தபால்களை எடுத்துப் பெட்டியைக் செய்து கொண்டிருந்தான்.

''எத்தனை தடவைகள் நாம் இந்தத் தபால் பெட்டிப் பக்கம் ஓடியிருக்கிறோம்,'' ஜஸ்டஸ் கூறினார்.

''வாரத்திற்குக் குறைந்தது இருமுறையாவது நாம் வந்தி ருப்போம்,'' புகைபிடியாதவர் சிந்திக்கும் பாவனையில் கூறினார். ''நான் வாரத்திற்கு இரண்டு தடவையாவது கடிதம் எழுத வில்லை யென்றால் எனக்கு ஏதேனும் உடல் நலமில்லையோ என்று அம்மா கருதுவாள்.''

தபால்காரன் காலி செய்து கொண்டிருந்த தபால் பெட்டி யில் ஹெர்ம்ஸ்ட்ராஃபில் உள்ள ஹெர் ஃபிரா தாலரின் முகவரி எழுதப்பட்ட ஒரு கடிதம் இருந்தது. அஞ்சல் உறையின் பின் புறத்தில் அனுப்பியவரின் பெயர் இருந்தது. 'மார்ட்டின் தாலர் யொஹன் ஸிஜிஸ்மண்ட், கிர்ஷ்பெர்க்' என்றிருந்தது.

''இப்போதும் அதே அஞ்சல் தூணிலுள்ள அதே தபால் பெட்டிதான்,'' ஜஸ்டஸ் கூறினார், ஆனால் அதே தபால்காரன் இல்லை''

இப்போது நாம் குறிப்பிட்ட அக்கடிதத்தில் கீழ்க்கண்டபடி எழுதியிருந்தது·

எனது அன்புள்ள அம்மா,

உன்னுடைய கடிதம் எனக்கு முதலில் பேரதிர்ச்சியைத் தந்தது. ஆனால், தவிர்க்க முடியாத காரியமானதால்

நான் அதைப் பொறுத்துக் கொள்ளத் தானே வேண்டும். நான் கொஞ்சமும், ஒரு துளி கண்ணீர் கூட விட்டு அழவில்லை. மேலும் நான் அழமாட்டேன் என்று அம்மாவுக்கும் அப்பாவுக்கும் உறுதி தருகிறேன். ஷெர்ஃபிலிருந்து நான் 'கேக்'கும் 'சாக்லேட் கப்'பும் வாங்கிக் கொள்கிறேன். அங்கு விலை மிக மலிவு என மத்தியாஸ் கூறுகிருன். அம்மாவுக்கு மகிழ்ச்சிதரும் என்ருல் நான் பனிச்சறுக்குக் கலத்திற்கும் போகிறேன். என்னை நம்புங்கள்! மேலும் பணம் அனுப்பியதற்கு மிக மிக நன்றி. 'கிருஸ்துமஸ் ஈவ்' அன்று அஞ்சலகம் போய் தபால் தலைகளை மாற்றிக் கொள்கிறேன்.

நாம் பிரிந்திருந்து கொண்டாடும் முதல் 'கிருஸ்துமஸ் ஈவ்' இதுதான். இது மிகவும் வேதனை தரக் கூடியதுதான். ஆனல், அம்மாவுக்கு என்னை நன்கு தெரியுமல்லவா, என்னை நானே தாழ்த்திக் கொள்ளக் கூடாது என என் மனதைத் திடப் படுத்திக் கொண்டால், பிறகு வருத்தம் ஏற்படப் போவதில்லை. மொத்தத்தில் நான் எதற்கும் போதாத ஒருவனல்ல. நாளைய பார்சலை பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். என்னுடைய மேஜையில் நான் ஒரு சில பச்சைக் குச்சிகளை வைப்பேன். சில மெழுகு வத்திகளை கொளுத்தி வைப்பேன். ஜானியும் விடுமுறையை இங்கே கழிக்க விருக்கிருன். ஏதனல் என்று அம்மாவுக்குத் தெரியுமல்லவா. உலி தன்து வலது காலை ஒடித்துக் கொண்டு விட்டான். அதனல் அவனுடைய விஷயம் அதிகக் கஷ்டமாகி விட்டது. நாம் முடிந்த அளவு தைரியத்தோடு இருந்தால் எதுவுமே அவ்வளவு கஷ்டம் அல்ல என்று ஜானி கூறுகிருன். அதை நாமும் பார்க்கலாம்.

எனது அன்புள்ள அம்மா, உங்களுக்கும் அப்பாவுக்கும் இந்தக் கிருஸ்துமஸுக்கு ஒரு பரிசு கூட என்னல் அனுப்ப இயலாது என்பது அம்மாவுக்குத் தெரியுமல்லவா. ஒரு வேளை அடுத்த ஆண்டு முதல்படிவத்தைச் சேர்ந்த பையன்கள் யாருக்காவது 'ட்யூஷன்' சொல்லிக் கொடுக்க என்னல் முடியும். அப்போது நான் பணவசதியோடு இருப்பேன். அப்போது

நிலைமை மிக நன்றாக இருக்கும், இல்லையா?

ஆயினும் நான் உங்களுக்காக ஒரு ஓவியம் வரைந்திருக்கிறேன். அதற்கு 'பத்து ஆண்டுகளில்' எனப் பெயரிட்டிருக்கிறேன். அதன் பொருள் என்னவென்று உங்களுக்குப் புரியும். நான் உங்களை ஆல்ப்ஸ் மலை மீது ஒரு நீல நிறக் குதிரை வண்டியில் உட்கார வைத்து ஓட்டிக் கொண்டு போவதைக் காட்டுவதுதான் அந்த ஓவியம். அதை நான் இந்தக் கடிதத்தோடு வைத்து அனுப்புகிறேன். ஆனால், நான் அதை இரண்டு முறை மடித்து வைக்க வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் அதை இக்கடிதக் கூட்டிற்குள் வைக்க முடியாது. இவ்வோவியத்தை நீங்கள் விரும்புவீர்கள் என்று நம்புகிறேன். இதை இன்னும் அழகாக வரைய முடியவில்லை. இதை வரைய பதினைந்து நாட்கள் ஆகியது. மேலும், அன்புள்ள அம்மா, நான் இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன். ஏனென்றால் இரவுச் சாப்பாட்டிற்கான மணி அடித்து விட்டது. அதன் பிறகு நான் தபால் பெட்டியில் இதைப் போடப் போவேன்.

கிருஸ்துமஸுக்கு நான் உங்களோடு இல்லாவிட்டாலும் என்னை நீங்கள் மறக்க வேண்டாம். துயரப்பட வேண்டாம். நான் துயரப்படமாட்டேன், மாட்டேன். நான் பனிச் சறுக்குக் கலத்திற்குப் போவேன். அங்கே உங்களை நினைத்துக் கொள்வேன். அது மிக மகிழ்வூட்டும் வேடிக்கையாக இருக்கும். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மிகுந்த அன்போடு,

உங்கள் அன்பு மகன்

மார்ட்டின்

தபால் பெட்டியைக் காலி செய்தபோது எத்தனை யெத்தனை பெருமூச்சுக்கள் தன்னுடைய தபால் பையில் விழுந்துள்ளன என்பது அந்தத் தபால்காரனுக்குத் தெரியாது. டாக்டர் போக்கும் புகைபிடியாதவருக்கும் கூடத் தெரியாது.

# அத்தியாயம் பத்து

விடுமுறைக்கு முதல் நாள்; கிர்ஷ்பெர்க் வழியே சுற்றித் திரிதலும் நேருக்கு நேரான பல சந்திப்புக்களும்; மத்தியாஸுக்கான மற்றொரு சாக்லேட் கடை; பயிற்சிக் களத்தில் கிருஸ்துமஸ் குழுக் கூட்டம்; பார்வையாளர்களில் எதிர்பாரா புதியதோர் உறுப்பினர்; அவர் பெற்றுக் கொண்ட பரிசும் அவர் கூறியதும்; மார்ட்டின் படுக்கைக் கருகில் ஒரு நிமிடம்.

# 10

அடுத்த நாள் பள்ளியின் இறுதி நாளாக இருந்தது. டிசம்பர் 23ஆம் தேதி மாணவர்கள் 'மின்சார உற்பத்தி' பற்றிய பாடத்திலோ, கூட்டு வட்டிக் கணக்கிலோ அல்லது ஃபிரெடெரிக் மாமன்னரைப் பற்றிய பாடத்திலோ ஆர்வம் காட்டுவார்கள் என்று எந்த ஆசிரியரும் எதிர்பார்க்கமாட்டார். உலகத்திலுள்ள எந்தப பள்ளியாசிரியருக்கும் அது அவசியதாகமானவும் இருக்காது.

அவர்களில் யாரும் அவ்விதம் செய்யமாட்டார்கள். யொஹன் ஸிஜிஸ்மண்ட் பள்ளியின் சூழ்நிலையும் அது போன்றதுதான். விடுதியில் தங்கியுள்ளோர்களில் பெரும்பாலோர் முன்னரே பெட்டி படுக்கைகளையெல்லாம் மூட்டை கட்டத் தொடங்கிவிட்டார்கள். பயிற்சிக் களத்தில் நடக்கும் கிருஸ்துமஸ் விருந்துக்கும் அடுத்த நாள் காலையில் செல்ல வேண்டிய ரயில் பயணத்திற்கும், பெற்றோர்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் வேண்டிய முக்கியமானவர்களுக்கும் கொடுப்பதற்கென எடுத்துச் செல்ல வேண்டிய பரிசுப் பொருள்களையும் அவர்களுக்காக வீட்டில் காத்துக் கொண்டிருக்கும் பரிசுப் பொருள்களையும் பேராவலோடு எதிர்நோக்கிய வண்ணம் இருந்தார்கள்.

அவர்கள் புழுதி மண்ணில் விளையாடித் திரியும் பையனைப் போல மிகுந்த மகிழ்ச்சியுடையவர்களாக இருந்தனர். ஒவ்வொன்றும் அவர்களை மகிழ்வித்தன. அவர்களுக்குத் தங்களைத் தாங்களே அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இல்லாவிட்டால் கங்கு கரையற்ற மகிழ்ச்சியால் அவர்கள் பாடத்தினிடையே பெஞ்சியின் மேல் ஏறி நின்று நடனம் ஆடத் தொடங்கி விடுவார்கள்.

ஆசிரியர்கள் தங்களது மாணவர்களுக்குக் கதைகளைப்

படித்துக் காட்டவோ அல்லது தங்களது சொந்தக் கதைகளைக் கூறவோ செய்தார்கள்.

நான்காம் படிவத்திற்கான கடைசிப் பாடம் டாக்டர் போக்கின் பூகோள பாடமாகும். உலக இலக்கியத்தின் உன்னதக் கதைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலை அவர் தன்னோடு கொண்டு வந்தார். சிறியதாயினும் பொருள் பொதிந்த அக் கதைகளை பையன்கள் ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி உரத்த குரலில் வாசித்தார்கள். அவைகளில் பெரும்பாலானவை மிருகங்களைப்பற்றியவையாயினும் மனிதர்களைக் குறித்துத்தான் அவை எழுதப்பட்டிருந்தன.

படிக்க அழைக்கப்பட்டவர்களில் மார்ட்டினும் ஒருவன். அவன் திக்கியும் சொற்களைத் தவருக உச்சரித்தும் படித்தான். அவன் இரண்டு வரிகளைத் தெரியாது விட்டு விட்டுப் படித்தான். முதல் நாள் படிக்கக் கற்றுக் கொண்டவன்போல் படித்தான். ஒரு சில பையன்கள் சிரித்தார்கள். ஜானி கவலையோடு மார்ட்டினை உறுத்துப் பார்த்தான்.

''எவ்வளவு அருமையான வாசிப்பு,'' ஜஸ்டஸ் கூறினுர். இப்போதே ஹெர்மஸ்ட்ராஃபில் கிருஸ்துமஸ் மரத்தை அடைந்து விட்டாற்போல் தோன்றுகிறது. அவ்வளவு அவசரம் வேண்டாம். நீ விரைவில் வீடு போய்ச் சேர்ந்துவிடுவாய்.

மார்ட்டினின் தலை முன் பக்கமாகத் தாழ்ந்தது. அவன் தனக்குள் முணுமுணுத்தான்; அழுவதற்குக் கடுமையான தடையுண்டு! அழுவதற்குக் கடுமையான தடையுண்டு! அழுவதற்குக் கடுமையான தடையுண்டு! முன் இரவு அவன் விழித்த படி படுத்துக் கொண்டு இந்த ஒரே வாக்கியத்தை மீண்டும் மீண்டும் தனக்குள்ளாக முணுமுணுத்துக் கொண்டிருந்தான். குறைந்தது நூறு தடவைகளாவது இருக்கும்.

ஜஸ்டஸ் அப் புத்தகத்தை, அடுத்திருந்த பையனிடம் கொடுத்தார். ஆனல், பாக்கியிருந்த பாட நேரத்தில் அவர் அடிக்கடி வகுப்புத் தலைவனைக் கடைக்கண்ணுல் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் போக்கு அவருக்கு வியப்பாக

இருந்தது.

மார்ட்டின் நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி உட்கார்ந்திருந்த சாய்வு மேஜையை உறுத்துப் பார்த்தபடி இருந்தான்.

மதியம் தபால்காரன் அவனுக்கு, அவன் தாயார் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த பார்சலைக் கொண்டு வந்து கொடுத்தான். கிருஸ்துமஸ் பரிசுகளுள்ள பார்சல் அது. மார்ட்டின் அதைத் திறக்கவில்லை. அவன் அதைத் தன் கக்கத்தில் இருக்கிக் கொண்டு நிலைப் பெட்டியிருந்த அறைக்குச் சென்றான். அவன் தன்னுடைய நிலைப் பெட்டியைத் திறந்து பார்சலை உள்ளே வைத்தபோது மத்தியாஸ் வேகமாக உள்ளே வந்தான். அவன் ஒரு பெரிய பெட்டியை இழுத்துக் கொண்டு வந்தான். அவன் பெட்டியைக் கட்டப் போகிறான்.

''ஹலோ, உனக்கு ஒரு பார்சல் கிடைத்ததா இன்று?'' அவன் கேட்டான், ''எங்கிருந்து?''

''வீட்டிலிருந்து,'' மார்ட்டின் பதில் கூறினான்.

''ஆனால், இன்றைக்கு ஏன் உனக்குப் பார்சல் அனுப்பியிருக்கிறார்கள். நாளைக்கு நீதான் வீட்டிலிருப்பாயே.''

''என் அம்மா சில வெளுத்த துணிகளை அனுப்பியிருக்கிறாள்,'' மார்ட்டின் பொய் சொன்னான். ''ஜனவரியில் பள்ளி திரும்பும்போது என்னுடன் அதிகமாகக் கொண்டுவரக் கூடாதென்பதற்காக.''

''மிக நல்ல யோசனை!'' மத்தியாஸ் கூறினான். ''நல்லது, நான் மூட்டை கட்டப் போகிறேன். நான் இங்கே தங்குவதைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே? ஆனால், ஜஸ்டஸ் அதை ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஃபிராங்கென்டெய்னில் உள்ள வீட்டில் கிருஸ்துமஸ் மரத்திற்கருகில் நான் இருந்து என் வீட்டிலுள்ளவர்களுக்கு மகிழ்ச்சிதர வேண்டுமென அவர் நினைக்கிறார். அதுவும் நல்லதுதான். கிருஸ்துமஸிற்கு வீட்டில் நிறைய வேடிக்கை விநோதங்கள் இருக்கும். உன்னுடைய வீட்டிலும் அப்படியேதான் இருக்கும், இல்லையா?''

''ஆமாம்,'' மார்ட்டின் கூறினன், ''ஓரளவுக்கு''.

மத்தியாஸ் அவனை அமைதியாக இருக்கவிடவில்லை.

''மதிய வண்டிக்குப் போகப் போகிருயா?''

''இல்லை''

''5.12க்கா?''

''ஆமாம், 5·12 க்கு?''

''ஏன் நீ மதிய வண்டிக்கு வரக்கூடாது?'' மத்தியாஸ் பேசிக்கொண்டே போனன். ''நம்முடைய வழியில் போகக் கூடியவர்கள் குறைந்தது ஐம்பது பசங்களாவது இருப்பார்கள். நமக்கென தனிக் கோச்சுவண்டி கிடைக்கும். அடித்துப் பிடித்துக்கொண்டு போக நன்ருக இருக்கும். நீயும் வர்றீயா?''

மார்ட்டினுக்கு இனியும் சகித்துக் கொண்டு நீண்ட நேரம் நிற்க முடியவில்லை. அவன் படீரென நிலையறைக் கதவை மூடிப் பூட்டினன். ''இல்லை,'' அவன் கத்தியபடி அறைக்கு வெளியே ஓடினன்.

மத்தியாஸ் தலையை ஆட்டிக் கொண்டான். ''குரங்கு அவனைக் கடித்து விட்டது போலும்,'' அவன் கூறினன்.

நண்பகலில் பெரும்பாலான பையன்கள் கடைசி ஒருசில பொருட்களை வாங்குவதற்காகவோ அல்லது பொம்மைக் கடையை பலகணி வழியாகப் பார்த்துக் கொண்டு நிற்பதற்காகவோ நகரத்திற்குள் சென்ருர்கள். நண்பகலுக்கு முன்னதாகவே பனி பெய்யத் தொடங்கியதால் வானிலை இப்போது கடுங்குளிராக இருந்தது. தெரு முனைகளில் கிருஸ்துமஸ் மரங்களை விற்பனை செய்வோர் அவர்களுடைய ஃபிர் மரக் கொப்புகளையும் பைன் மரக் கொப்புகளையும் எப்படியாவது விற்றுத் தீர்க்க முயன்று கொண்டிருந்தார்கள்.

மார்ட்டின் அஞ்சலகத்திற்குச் சென்று அங்குள்ள அலுவலரிடம் தன்னுடைய தபால் தலைகளைப் பணமாக மாற்றித் தரும்படி கேட்டுக் கொண்டான். அந்த மனிதனே கரடியைப்போல் உறுமிய போதிலும் இறுதியில் இரண்டு மார்க் நாணயம் இரண்டும் ஒருமார்க் நாணயம் ஒன்றும் கொடுத்தான். அப் பையன்

மரியாதையோடு அவனுக்கு நன்றி கூறிவிட்டு பணத்தைத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். கொஞ்ச நேரம் அவன் தெருக்களில் சுற்றியலேந்தான்.

வில்ஹெல்ம்—ப்ளாட்ஸில் அவன் உயர் நடுநிலேப் பள்ளிக் கூடப் பையன்களின் முன்ஞள் தலேவஞன எகர்லாண்டை நேருக்கு நேராகச் சந்தித்தான். கடும் பகையாளர்களான இரண்டு போர்ப் படைத் தளபதிகள் போருக்குப் பின்னர் சந்தித்துக் கொள்வதைப்போல இருவரும் ஒருவரை யொருவர் நோக்கித் தலேயாட்டிக் கொண்டனர். இணக்கமற்றதாக இருப்பினும் ஒருவருக்கொருவர் மதிப்புத் தருவதாக இருந்தது.

கெய்ஸர் தெருவில் அவன் செபாஸ்டியன் ஃபிராங்க்கைச் சந்தித்தான். செபாஸ்டியன் அவனேத் திகைக்க வைக்கும் வகையில் பார்த்தான். அவன் தன்னுடைய கையிலுள்ள சில சிறியப் பொட்டலங்களேச் சுட்டிக் காட்டிஞன். ''நீயும் கடைகளில் சாமான்கள் வாங்கப் போகிருயா?''

''இல்லே,'' மார்ட்டின் பதிலளித்தான்.

''நான் எப்போதும் கடைசி நிமிடம்வரைக் காத்திருப்பேன்,'' செபாஸ்டியன் வெளிப்படையாகக் கூறிஞன். ஓவ்வொரு ஆண்டும் இப்பழகத்தைப் போக்க முயற்சிப்பேன். இது மிகப் பழமைய சம்பிரதாயமாயிற்றே, இல்லேயா? ஆனல் கடைசி நிமிடம் நான் இதற்காக ஓடி வருவேன். அதில் ஏதோ இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு ஏதாவது ஒன்று கொடுப்பதென்பது எனக்கு எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும். நீ என்ன நினேக்கிருய்?''

''சரிதான்,'' மார்ட்டின் கூறிஞன். ''இது மிக நல்ல பழக்கமென நினேக்கிறேன்.'' அப்போது அவன் தன் கீழுதட்டைக் கடித்துக் கொண்டான். ஒரு வார்த்தை அதிகம் பேசியிருந்தால் அவன் அழுதிருப்பான். அழக் கூடாது என்று கண்டிப்பான தடையுண்டு என்பதை நினேத்துக் கொண்டான். செபாஸ்டியனேடு தலேயாட்டியபடி விரைந்து நடந்து சென்றுன். அவன் ஓடிஞன் என்றே சொல்ல வேண்டும். எட்டச் செல்!

இந்தக் கிருஸ்துமஸ் சூழலிலிருந்து எட்டச் செல்கிறேன். நோர்டு தெரு முனையில் அவன் நின்று ஷெர்ஃபின் ரொட்டிக் கடையின் பலகணி வழியாகத் தன் பார்வையைச் செலுத்தினன்.

நாளைப் பிற்பகல் அவன் அங்கு உள்ளே சென்று சாக்லேட்டும் கேக்கும் சாப்பிடுவான். அது எவ்வளவு சுவையாக இருக்கும்! அம்மா அவ்வாறு செய்யும்படி கூறியிருக்கிருள். அவனும் அவ்வாறே செய்வதாக உறுதியளித்திருக்கிருன்.

தெய்வமே! அவன் நினைத்தான். ஒரு முறை கூடக் கண்ணீர் வடிக்காமல் பதினைந்து நாட்களுக்கு விடாப்பிடியாக எப்படி இருப்பது?

பிறகு அவன் துள்ளுநடை போட்டு பள்ளியை நோக்கிச் சென்ருன். இரண்டு மார்க் நாணயங்கள் இரண்டும் ஒருமார்க் நாணயம் ஒன்றும் அவன் சட்டைப் பையில் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தன.

'பறக்கும் வகுப்பறை' யின் உடை ஒத்திகை மிக அமைதியாக நடந்து முடிந்தது. சிறுவஞகிய ஸ்டோக்கர் தங்களுக்கு இறக்கத்தை உண்டாக்கி விடுவாளே என்று பையன்களுக்குப் பயமேற்பட்டிருந்தது. ஆனால், அவனே அவர்களுக்கு வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்படும் வகையில் தொழில் முறையாளனைப் போல் நடித்தான். நாவிதனிடமிருந்து வாங்கிய நீண்ட பொன்னிறச் சடை கொண்ட பொய்த் தலை முடியையும் உலியினுடைய நிலப் பெட்டியிலிருந்து எடுத்த உடைகளையும் அணிந்து கொண்டபோது அவன் அழகுமிக்க சிறு பெண்ணுகக் காட்சியளித்தான். அவன் வேடமிட்டிருக்கிருன் என்பதை அறியாதவர்கள் யாரும் அவனை ஒரு அழகான சிறு பெண் என்றே கருதுவார்கள்.

ஆறும் படிவப் பையன்கள் உன் பாதத்தில் வீழ்ந்து

உன்னைக் காதலிப்பார்கள்,'' செபாஸ்டியன் இரைந்து கூவினான்.

மத்தியாஸ் ஒருவன் மட்டுமே, உலியாக இருந்தால் இந்தப் பாகத்தை இன்னும் சற்று சிறப்பாகவே செய்திருப்பான் என்று எண்ணிக் கொண்டான். ஆனால், அது இயற்கை தானே. உண்மையில் நெருங்கிய நட்புணர்ச்சியினால்தான் அவன் அவ்வாறு எண்ணினான்.

அவர்கள் இரண்டு தடவைகள் முழு நாடகத்தையும் நடித்துப் பார்த்தார்கள். மிகவும் கடினமான பாத்திரம் மாட்னி னுடையதாகும். அவன் மிகவும் சிரமம் அடைவது நான்காம் ஐந்தாம் அங்கங்களுக்கிடையேயுள்ள மிகக் குறைவான இடைவேளையின் போதுதான். காரணம் ஒரு நிமிடத்தில் அவன் துருவக் கரடி வேடத்தைக் கலைந்து விட்டு செயிண்ட் பீட்டர் வேடத்தைப் போட்டுக் கொள்ள வேண்டும். என்றாலும் அவன் அதைச் சரியாகவே செய்து முடித்துவிடுவான்.

''அது போதும்,'' ஜானி த்ரோட்ஸ் கூறினான்.

இன்று இரவு நல்லபடியாக நடக்கட்டும்! அவர்கள் மூன்று முறை துப்பினார்கள். நடிப்பவர்கள் எப்போதும் அவ்வாறு செய்ய வேண்டுமென செபாஸ்டியன் அவர்களிடம் கூறியிருந்தான்.

ஜானி, மார்ட்டினிடம்சென்றான். ''உனக்கு என்ன நேர்ந்து விட்டது?'' அவன் கேட்டான். ''நீ பேச வேண்டிய வசனம் தெரியுமென்றாலும் உன்னுடைய மனம் வேறு எதிலோ இருப்பது போல நீ வெறுமனே வேகமாகக் கூறிச் செல்கிறாய்.''

''காட்சி சமயத்தில் எல்லாம் சரியாகி விடும்,'' வகுப்புத் தலைவன் கூறினான். ''இனி நான் தூங்கப் போவதில்லை.''

அவர்கள் தங்களுடைய சாதாரண உடைகளைத் திரும்ப உடுத்திக் கொண்டபோது, அவர்கள் ஆடையணிகளையும் டோப்பா முடிகளையும் சடையையும் அலமாரியில் வைத்தார்கள். உலியைச் சென்று பார்ப்பதற்கு அனுமதி கிடைத்திருந்தது.

நாடகம் தடையின்றி அமைதியாக நடைபெறும் என்று அவன் எப்படி உறுதி மொழி கொடுத்தான் என்பதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்தார்கள். 'சிறுவனுகிய ஸ்டோக்கர் மோசமல்ல என்பதால் இருக்கும்' என மத்தியாஸ் அபிப்பிராயம் தெரிவித்தான். நிச்சயமாக அவனை உலியோடு ஒப்பிட்டுப் பேச வேண்டாம் - இப்போதும்-மற்றவர்கள் தலையாட்டினார்கள்.

''எனக்கு மிகவும் மகிழ்ச்சி,'' உலி கூறினன். ''நாளைக்கு நீங்களெல்லாம் போகவிருக்கிறீர்கள், என்னையும் ஜானியையும் தவிர. நீங்களெல்லாம் நிறைய பரிசுகளைப் பெறுவீர்கள் என்று நம்புகிறேன்,'' அப்போது அவன் மத்தியாஸைத் தனது கட்டிலினருகில் ஜாடை காட்டி அழைத்து யாரும் அறியா வண்ணம் ஒரு சாக்லேட் பாளத்தை அவன் கையில் வைத்துத் திணித்தான். ''க்ரூன்கென் முதியவர் மீண்டும் இங்கே வந்திருந்தார்,'' அவன் தணிந்த குரலில் கூறினன். ''உன்னுடைய பசி எப்படி இருக்கிறது?''

''அது மிக அதிகமாகிவிட்டது,'' மாட்ஸ் கூறினன்.

''அதைக் கவனிக்க வேண்டும்,'' உலி கூறினன். ''நீ நிறைய சாப்பிட வேண்டும், தெரிந்ததா!''

''வீட்டிலிருக்கும்போது எப்போதுமே எனக்கு இதைவிட அதிகப் பசியாக இருக்கும்,'' தன் சட்டைப் பையில் சாக்லேட்டைப் போட்டுக் கொண்டே மத்தியாஸ் கூறினன், ''அம்மாவுக்குச் சில சமயங்களில் மயக்கமே வந்துவிடும். இவ்வளவு அதிகமாகச் சாப்பிடுவது கிரிமினல் குற்றமாகும் என்று அம்மா கூறுகிருள்.''

''அதைப் பற்றிக் கவலைப் படாதே,'' செபாஸ்டியன் கூறினன். அவன் வழக்கத்தை விட இன்று அதிகம் பரந்த மனப்பான்மையுடையவனுக இருந்தான். ''ஒரு மனிதனின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.'' பிறகு அவன் உலியை நோக்கித் திரும்பி, பெற்ரோரின் உடன் பிறந்தாரைப் போன்று அவனுடைய தலையை ஆட்டினன். ''நல்லது, நீ மிகவும் தங்கமானவன்! உடற்பயிற்சித் திடலில் கோயில் ஏதும்

இல்லாதது நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் கோபுரத் தூபியின் மேல் ஏறிக் குதிக்கும்படியாயிருந் திருக்கும்.''

அவர்கள் நோயாளியின் படுக்கையைச் சுற்றி நின்று பேச வேண்டியவை எவை என்று அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றாலும் கூடி நின்று பிரமாதமாக வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். படுக்கையில் படுத்திருந்த அந்தப் பையனே அவர்கள் அதுவரை அறிந்திருந்த சிறுவன் உவி யாக இல்லாமலிருந்தான்.

''இன்று இரவு நீ பயிற்சிக் களத்தில் இல்லாமல் இருப்பது எவ்வளவு வருந்தத்தக்க விஷயம்,'' ஜானி கூறினான். ''நாளைக்கு நான் அவைகளைப் பற்றியெல்லாம் விவரமாக உன்னிடம் கூறுகிறேன்.''

மார்ட்டின் பலகணியருகில் நின்று கொண்டிருந்தான். அவனுக்குத் தானும் பள்ளியிலேயே தங்கப் போகிறேன் என்று அவர்களிடம் கூற வேண்டுமென விரும்பினான். ஆனால், மனம் சம்மதிக்கவில்லை.

அவனைச் சுற்றி அவன் நண்பர்கள் இருந்த போதிலும் அவனுக்குத் தான் அடியோடு கைவிடப் பட்டவன், தனிமை யாக்கப்பட்டவன் என்ற உணர்ச்சி ஏற்பட்டது.

கிருஸ்துமஸ் குழு எதிர்பார்த்த எல்லாவற்றையும் நிறை வேற்றியது. தொடக்கத்தில் இரண்டு ஆறும் படிவப் பையன் கள் பியானோ வாசித்தார்கள். புகழ் பெற்ற கிருஸ்துவ மகிழ்ச் சிப் பாடல்கள் பல்வேறு தொனிகளில் இசைக்கப்பட்டன. அப் போது தலைமையாசிரியர் டாக்டர் க்ரூன்கென் சிறியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அது அவருடைய வாழ்க்கையில் நிகழ்த்திய மற்ற கிருஸ்துமஸ் சொற்பொழிவுகளைப் போலவே இருந்தது, என்றாலும் இறுதியில் அவர் கூறிய ஒருசில வார்த்தை கள் புதியதாகவும் அவர் பேச்சைக் கேட்போர் உள்ளங் களில் அழுத்தமாகப் பதியும்வண்ணம் கவர்ச்சியாகவும் அமைந்திருந்தன.




நாடகம் மாபெரும் வெற்றி

''எனக்குக் கருத்த கோட்டும் தாடையின் அடிப்பாகத்தில் நீண்ட வெண்தாடியும் இல்லாவிட்டாலுங்கூட சில சமயங்களில் நான் கிருஸ்துமஸ் தந்தை போன்றே இருப்பது போல எனக்குத் தோன்றுவதுண்டு,'' அவர் கூறினர். ''கிட்டத்தட்ட நான் வயதானவனுகவே இருக்கிறேன். ஒவ்வோராண்டும் நான் திரும்ப வருகிறேன். பையன்களைப்பிரம்பு கொண்டு பயமுறுத்தும் போது பையன்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கும் படியான ஒரே மாதிரியான ஆள் நான். இறுதியாக கிருஸ்துமஸ் தந்தையைப் போல பையன்கள் மீது எனக்கு அளவு கடந்த அன்புண்டு, அன்பு கூர்ந்து அதனை எப்போதும் மறக்காதிருக்க வேண்டும்.''

அவர் கீழே அமர்ந்து தன் கண் கண்ணுடிகளை தன் கைக் குட்டைத் துணியால் துடைத்தார். ஐந்தாம் படிவப் பையன்கள் நிலத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அங்குள்ள பெரிய கிருஸ்துமஸ் மரம் எண்ணற்ற மின் விளக்கு களால் பேரொளியோடு திகழ்ந்ததால் எல்லோரும் விழாக் கொண்ட உணர்வு நிலையைஅடைந்தார்கள்.

இதைத் தொடர்ந்து 'பறக்கும் வகுப்பறை' யின் அரங் கேற்றம் நடந்தது. அது ஒரு மாபெரும் வெற்றியாக முடிந் தது. 'குற்றக் காட்சியின் மூலம் படிப்பு' என்ற வரிகள் வரும் போது செபாஸ்டியன் எதிர்பார்த்தபடியே ஆசிரியர்கள் சிரித் தார்கள். தெளிவாகத் தெரியும் வண்ணம் மார்ட்டின் தோற்ற மளித்தான். ஆனுல் ,சிறுவனுகிய ஸ்டோக்கரின் வெற்றி மிகப் பெரியதாக இருந்தது. இரண்டாவது மூன்ருவது படிவப்பையன் களைத் தவிர வேறு யாரும் அவனை அடையாளம் கண்டு கொள்ள வில்லை. கவர்ச்சி மிகுந்த ஒரு சிறுமி என்றே மற்றவர்கள் எல்லோரும் மனமாற நம்பினுர்கள். அவள் எப்படி அங்கே வந்து சேர்ந்தாள் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. இறுதிக் காட்சியில் அவன் மேகத்திலிருந்து சற்று விரைவாகவே இறங்கி வந்தது உண்மைதான். ஆனுல், அதைத் தொடர்ந்து இசைக்கப் பட்ட கிருஸ்துமஸ் பாடலுடன் வந்திருந்தோர் அனைவரும் சேர்ந்து பாடவே ஆர்வப்பெருக்குமிக்கதாக அக்காட்சி அமைந்தது.

க்ருன்கென் பறக்கும் கோட் வாலோடு நடிகர்களிடம் போய் ஒவ்வொருவரோடும் கைகுலுக்கினர். ஜானி த்ரோட்ஸிடம் அவர் மகிழ்ச்சி மிக்கவருகக் கூறினர். ''நீ ஒரு உண்மையான நாடக நடிகன். நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.'' ஜானி தலை குனிந்தான். மார்ட்டினின் மேடை அலங்காரமும் பாராட்டப்பட்டது.

''அந்தச் சிறுமி யார்?'' தலைமையாசிரியர் கேட்டார். வந்திருந்தவர்கள் ஆர்வத்தோடு கூர்ந்து கேட்டார்கள். ஆறும் படிவத்தைச் சேர்ந்தோர் அனைவரும் காதைத் தீட்டிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த சிறுமிச் பொன்னிறச் சடையோடு கூடிய டோப்பா முடியை கழற்றி எடுக்கவே அடுத்த விநாடி இருநூறுக்கு மேற்பட்ட பையன்களும் விலாநோகச் சிரித்தார்கள். ''ஸ்டோக்கர்!'' என அவர்கள் கத்தினர்கள். அவர்கள் சிரிப்பை அடக்கியதாகத் தெரியவில்லை.

''இதோ பார்.'' செபாஸ்டியன் திடீரெனத் தன் நண்பர்களிடம் கூறினன். ''ஆசிரியர்களோடு உட்கார்ந்துகொண்டிருப்பது யார்? அதோ ஜஸ்டஸுக்குப் பின்னல்? அது புகை பிடியாதவர்தான்!''

செபாஸ்டியன் கூறியது சரிதான். புகை பிடியாதவர் நீல நிற உடுப்பு அணிந்து ஆசிரியர்களுக்கிடையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். மார்ட்டினும் ஜானியும் மட்டுமே அதை அறிவார்கள். ஜானி திரும்பி உடற்பயிற்சிக்கூடத்திற்கு வெளியே ஓடினன்.

டாக்டர் போக் எழுந்து கூடத்தின் நடுப்பகுதிக்குச் சென்ருர். அங்கே அமைதி தவழ்ந்தது. ''எனக்கு அடுத்துள்ள நாற்காலியில் நீங்கள் பார்ப்பது யார்?'' ஜஸ்டஸ் கூறினர். ''இங்கே அமர்ந்திருப்பவரை உங்களில் பலருக்குத் தெரியாது;'' அவர் என்னுடைய நண்பர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் இருவரும் இதே பயிற்சிக்களத்தில் அடுத்தடுத்து அமர்ந்திருந்தோம், நிச்சயமாக ஆசிரியர்களுக்கு மத்தியில்

அல்ல. இன்று மாணவர்கள் அமர்ந்திருக்கும் அதே இடத்தில் பல ஆண்டுகளாக என் நண்பரைப் பற்றிய தடயங்களையே காண முடியவில்லை. நேற்றுவரை என்றால் இவரை மீண்டும் காணமுடியாதிருந்தது. இந்தப் பள்ளியைச் சேர்ந்த இரண்டு பையன்கள் எங்களை மீண்டும் ஒன்று சேர்த்தார்கள். என் வாழ் நாளில் எப்போதுமே நான் இப்படியொரு அற்புத கிருஸ்துமஸ் பரிசைப் பெற்றதில்லை. எனது நண்பரின் பெயர் ராபர்ட் உத் தோஃப். இவர் ஒரு டாக்டர். நாங்கள் மீண்டும் பிரிந்திருக்க விரும்பவில்லை. எனவே, இன்று நான் நம்முடைய பழைய டாக்டரான ஹார்ட்விக் அவர்களோடு அதைப் பற்றிப் பேசினேன்.''

புகைபிடியாதவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''டாக்டர் ஹார்ட்விக்கை நான் கேட்டேன்,'' ஜஸ்டஸ் தொடர்ந்தார், ''இங்கே நம்முடைய டாக்டராக என்னுடைய நண்பர் டாக்டர் உத்தோஃப் அவர்களை நியமிக்குமாறு பள்ளி நிர்வாகிகளிடம் கூறுமாறு கேட்டிக்கொண்டுள்ளேன். இந்தப் பள்ளியில் முதன் முதலில் நாங்கள் நண்பர்களானோம். இப் போது நாங்கள் மீண்டும் சேர்ந்திருக்கிறோம். அவர் உங்க ளுடைய டாக்டர். நான் உங்களுடைய ஆசிரியர். கூரையைத் தாங்கிக் கொண்டிருக்கும் தூண்களைப்போல, அங்கே பனியில் நிற்கும் முதிய மரங்களைப்போல, நாங்கள் இப்பள்ளிக்குச் சொந்தமானவர்களாவோம். நாங்கள் இந்த இடத்திற்குச் சொந்தமானவர்கள். எங்களுக்கு உங்கள் மேல் உள்ள அன்பில் பாதியளவாவது எங்கள் மீது உங்களுக்கு இருந்த தென்றால் எல்லாமே செம்மையாக அமைந்துவிடும். நான் அதைவிட அதிகமாகக் கேட்கவில்லை. நான் கூறுவது சரி தானே, ராபர்ட்?''

புகைபிடியாதவர் எழுந்து ஜஸ்டஸிடம் சென்று தகுந்தபடி யான கருத்துரை கூற முயற்சித்தார். ஆனால், தன்னுடைய நண்பரின் கைகளை அழுத்திப் பிடிக்கமட்டுமே அவரால் முடிந்தது.

அப்போது ஜானி சில பொட்டலங்களைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடிவந்தான். அவன் புகை பிடியாதவரிடம் சென்று, தாழ்ந்து தலை குனிந்தான். ''அன்புள்ள திரு. புகைபிடியாதவர் அவர்களே,'' அவன் கூறினான், ''அல்லது உங்கள் பெயர் எதுவாக இருந்தாலும் இருக்கட்டும். உங்களை இன்று இரவு இங்கே எங்களுடைய கிருஸ்துமஸ் நாடகத்தின்போது காண்போம் என்று எங்களுக்குத் தெரியாது. மார்ட்டினும் உலியும், மத்தியாஸும் செபாஸ்டியனும் நாளைக்குக் கிருஸ்துமஸ் ஈவின் போது உங்களுடைய ரயில் பெட்டியில் தங்களுக்குப் பரிசுகள் தரவேண்டுமென்று என்னிடம் கூறியுள்ளார்கள். ஆனால், இப்போது அதிகாரப்பூர்வமாக நீங்கள் எங்களில் ஒருவர்; மேலும் நான் என்னுடைய பரிசை இன்றே உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.''

ஜானி, டாக்டர் உத்தோஃபின் கையில் காலுறைகள், சிகரெட்டுகள். புகையிலை, கம்பளிச் சட்டை ஆகியவைகளை வைத்து அழுத்தினான். ''கம்பளிச் சட்டை அளவு பொருத்தமாக இல்லாவிட்டால்,'' அவன் கூறினான், ''நீங்கள் கவலைப் பட வேண்டாம். நீங்கள் அதை மாற்றிக் கொள்ள நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் இங்கே அதற்கான டிக்கெட் இருக் கிறது.''

புகைபிடியாதவர் பரிசுப் பொருட்களைக் கக்கத்தில் வைத்துக் கொண்டார் ''மிகவும், நன்றி ஜானி,'' அவர் கூறினார். ''உன்னுடைய நண்பர்கள் நால்வருக்கும் நன்றி. அவர்களும் என்னுடைய நண்பர்களேயாவார்கள். மற்றவர் களுக்கு இன்னும் என்னைத் தெரியாது. ஆனால், அவர்கள் உரிய சமயத்தில் என்னோடு பழகுவார்கள். எனக்கு அதைப் பற்றி நல்ல நம்பிக்கை இருக்கிறது.'' அவர் சுற்றிலும் பார்வையைச் செலுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார். ''உங்களுடைய ஜஸ்டஸான யொஹன் போக்கும் நானும் சேர்ந்து இங்கே பள்ளியிலும் வெளி உலகத்திலும் எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்திருக்கிறோம். ஆனால, நாங்கள் மறக்கவில்லை.

எங்கள் இளமைப் பருவத்தைப் பற்றிய நினைவுகளை நாங்கள் உயிரோட்டத்துடன் நினைவிலிருத்திக் கொண்டுள்ளோம். அது ஒரு பெரிய காரியமாகும். என்னுடைய முயற்சி போதவில்லை யென்றால் என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் புரியும் என்று நம்புகிறேன். உண்மையில் உங்களுக்கும் மனதில் பதியும் என்பது உறுதி. கால் முறிவு, சீத ஜன்னி போன்றவை உண்டாகும்போது என்னைப்பற்றி நீங்கள் நல்ல முறையில் அறிவீர்கள். ஆனால், நான் கூறுவதை சரிபார்க்க வேண்டி உங்களுடைய கால்களை ஒடித்துக்கொள்ள நான் விடுக்கும் அழைப்பாக ஒருபோதும் இதை எடுத்துக் கொள்ளக்கூடாது.''

புகைபிடியாதவர் ஜஸ்டஸின் கைகளைப் பிடித்துத் தூக்கினார். ''நாம் முக்கிய விஷயத்தை மறந்துவிடக் கூடாது.'' அவர் கூறினார். ''அதனால் நாமெல்லோரும் எப்போதும் நினைவுகூற வேண்டுமென நான் கருதும் இச்சமயத்தில் உங்களோடு உங்களுடைய இளமைக் காலத்தை ஒரு போதும் மறக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் சிறுவர்களாக இருக்கும்வரை அத்தகைய எண்ணம் அனுவசிய மானது என்று தோன்றும். ஆனால், அது அப்படியல்ல. எங்களை நம்புங்கள். நாம் வயதானவர்களாக ஆகும்போது சிறுவர்களாகவே இருப்போம். அது எங்கள் இருவருக்கும் தெரியும்!''

டாக்டர் போக்கும் டாக்டர் உத்தோஃபும் பரஸ்பரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அப்பார்வையை ஒருபோதும் மறக்கக் கூடாதென பையன்கள் தங்கள் மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டனர்.

ஜஸ்டஸ் படுக்கைக் கூடத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு வந்தபோது வெகுநேரமாகியிருந்தது. அவர் தன் கால் நுனி விரல்களால் ஓசையின்றி நடந்தார். பலகைகள் மெதுவாக ஓசை எழுப்பின. அவர் ஒவ்வொரு தப்படி எடுத்து வைக்கும் போதும் சுவரின் மேலிருந்த விளக்குகள் மின்னின.

இரண்டாவது படுக்கைக் கூடத்தில் உள்ள மார்ட்டின்

படுக்கை முனையில் அவர் நின்றார். ''இந்தப் பையன் என்ன தவறு செய்திருந்தான்? அவனுக்கு என்ன நேர்ந்தது?''

மார்ட்டின் தாலர் அமைதியற்று உறங்கிக் கொண்டிருந்தான். முன்னும் பின்னுமாக புரண்டபடி படுத்திருந்தான். சில வாக்கியங்களை திரும்பத் திரும்ப முணு முணுத்துக் கொண்டிருந்தான்.

டாக்டர் போக் குனிந்தபடி மிகக் கவனமாகக் கேட்டார்.

பையன் தூக்கத்தில் எதைத் தன் உதட்டில் முணு முணுத்துக் கொண்டிருக்கிறான்! ''அழுகை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது!'' திரும்பத் திரும்ப அதுவே.

ஜஸ்டஸ் மூச்சை அடக்கிக் கொண்டார்.

''அழுகை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது! அழுகை கண்டிப்பாகத் தடை செய்யப் பட்டிருக்கிறது! அழுகை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது!'' மீண்டும் மீண்டும் அதுவேதான்.

இது ஒரு புதுமையான கனவாக இருக்க வேண்டும்? கனவில் அழுகை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டிருந்தது!

டாக்டர் போக் மெதுவாகவும் அமைதியாகவும் படுக்கைக் கூடத்தை விட்டு வெளியே நடந்தார்.

# அத்தியாயம் பதினொன்று

புகைவண்டி நிலையத்தில் அன்பு ததும்பும் ஒரு காட்சி; மாணவர்கள் இல்லாத ஒரு பள்ளிக் கூடம்; விளையாட்டுத் திடலின் குறுகிய சந்தில் ஒரு கண்டுபிடிப்பு; தலைமையாசிரியர் திருட்டுத் தனமாக வேலி தாண்டுதல்; உலியைச் சென்று பார்த்தல்; ''நாம் நம்முடைய பெற்றோர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது'' என்ற ஜானியின் கொள்கை; மீண்டும் ஒரு பச்சைப் பொய்.

# 11

டிசம்பர் மாதம் 24ஆம் நாள் காலை நேரம் யொஹன் ஸிஜிஸ்மண்ட் பள்ளியில் பெரும் ஆரவாரப் பேரொலியோடு உதித்தது. இளம் காட்டுமிராண்டிகளைப் போல பையன்கள் மாடிப்படிகளின் மேலும் கீழும் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். ஒருவன் தன் பல் தேய்க்கும் பிரஷை குளியல் அறையில் விட்டு வந்தான்; மற்றொருவன் தன்னுடைய பெட்டியின் சாவியை மும்முரமாகத் தேடிக்கொண்டிருந்தான்; மூன்றுமவன் ஒருவன் பனிமீது சறுக்கி விளையாடும் சறுக்குக் கட்டைகளை கட்டிவைக்க மறந்து விட்டான்; நாலாமவன் ஒருவன் வலுமிக்கவர்களைத் தேடினான்; ஏனென்றால் தன்னுடைய பெட்டியில் அளவுக்கு மேல் நிறைய சாமான்கள் திணிக்கப்பட்டிருந்ததால் அதனை மூடுவதற்கு அதன் மேல் வெளிப்புறத்தில் உட்கார்ந்து அமுக்கக் குறைந்த பட்சம் மூன்று பேராவது தேவைப்படும்.

இந்த அவசரம், பரபரப்பா லெல்லாம் தாங்கள் சிறிதும் பாதிக்கப் படாதவர்களைப்போல ஆறும்படிவ மாணவர்கள் நடந்து கொண்டார்கள். ஆனால், அவர்களை யாரும் பார்க்காத போது இளையவர்களைப் போலவே அவர்களும் நடை வழியில் விரைந்தோடிக் கொண்டிருந்தார்கள்.

பத்து மணிக்கெல்லாம் பள்ளிக்கூடம் பாதி காலியாகி விட்டது. பிந்திய ரயில் வண்டிகளுக்குப் போக வேண்டியவர்களெல்லாம் இன்னும் இரைச்சலைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், பழகிய காதுகளுக்கு, மீண்டும் ஒரு கூட்டம் பயணம் தொடங்கி விட்டதென்பது நன்கு தெரிந்தே இருந்தது.

மதியம், அடுத்த படை வாசல் வழியாக வெளியேறியது. தொப்பிகளைத் தலையின் ஒருபக்கமாக வைத்திருந்தார்கள். அவர்களுடைய கனமான பெட்டிகள் பனி வழுக்கலில் இழுத்துச் செல்லப் பட்டன. ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு,

மத்தியாஸ் அவர்களுக்குப் பின்னாலேயே பாரம் தூக்கிக் கொண்டு வந்தான். அவன் இதுவரை உலியோடு இருந்தான். வாசற்படியில் ஜானி அவனோடு கைகுலுக்கி விடை கொடுத்தான்.

''உலியின் மீது ஒரு கண் வைத்திருக்கவும்,'' மத்தியாஸ் கூறினான். ''நான் அவனுக்கு அடிக்கடி எழுதுவேன். நீ நலமாக இருப்பாயாக.''

''நீயும் நலமாகவே இருப்பாயாக,'' ஜானி த்ரோட்ஸ் திருப்பி வாழ்த்தினான். ''நான் அவனைக் கவனித்துக் கொள்கிறேன். நீ விரைந்து செல். செபாஸ்டியன் முன்னதாகப் போய் விட்டான்.''

''அப்பப்பா! இது ஒரு கஷ்டவாழ்க்கை,'' மாட்ஸ் புலம்பலானான். ''நான் ரொட்டிக் கடைக்காரனை உடனே பார்க்க வேண்டும். இல்லையென்றால் பசியினால் வண்டியிலேயே இறந்து விடுவேன். அது என்னுடைய வீட்டார்கள் கண்ணுற் காணும் கொடிய காட்சியாக இருக்கும். ஆனால், எனது எழுத்தாள நண்பரான நம் மார்ட்டின் தாலருக்கு அதாவது மூன்று மார்க்குக்கு என்ன நேர்ந்தது இன்று? எனக்கு அவனிடம் ''போய் வருகிறேன்'' எனக்கூறி விடைபெற வேண்டியிருந்தது. ஆனால், அவனை எங்குமே காணமுடியவில்லை. ''போய் வருகிறேன்'' எனக் கூற வேண்டுமென்றால் இரண்டு பேர் இருக்க வேண்டுமே! சரி நீ அவனுக்கு என்னுடைய அன்பைத் தெரியப்படுத்து. அவன் எந்த வண்டியில் திரும்பி வருகிறான் என்பதைப்பற்றி எனக்கு ஒரு அஞ்சலட்டை எழுதுமாறு அவனிடம் கூறு.''

''சரி,'' ஜானி கூறினான். ''நான் அவனிடம் கூறுகிறேன். இனியும் இங்கு நீ நின்று கொண்டிருக்க வேண்டாம். நேரமாகிறது, நீ விரைவாகப் போக வேண்டும்.''

மாட்ஸ் பெட்டியை இடது தோள்மீது தூக்கி வைத்தான். ''தெய்வமே! எனக்கு ஒரு குத்துப் பயிற்சிப் பந்து கிடைக்கும்!'' அவன் கத்தியபடி திறமைமிக்க ரயில்வே கூலியாளைப்போல

துள்ளு நடை போட்டு ஓடினுன்.

ரயில் நிலையமோ பள்ளிக்கூடப் பையன்களால் நிரம்பி வழிந்தது. சிலர் வடதிசையை நோக்கிப் போகவேண்டிய வர்கள்; மற்றும் சிலர் கிழக்கே போகவேண்டியவர்கள். அவர்கள் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் இரண்டு வண்டிகளுமே ஒரு சில நிமிட நேர வித்தியாசத்தில் கிர்ஹ்பெர்க் நிலையத்தை வந்தடையும்.

ஆரும் படிவப் பையன்கள் பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் நடந்து தங்களுடைய நடன வகுப்பிலுள்ள பெண் நண்பர் களோடு பெரிய மனிதர்களைப்போல உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பூக்களும் கிருஸ்துமஸ் கேக்குகளும் பரிசுப் பொருள்களாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டன. டாங் கோவில் தியதோரின் கூட்டாளியாக இருந்த ஃப்ராலின் மால்லின் ஷைலிக்கு ஒரு உண்மையான சிகரெட் பெட்டியை அவன் அன்பளிப்பாக அளித்தான். அவன் பெருமை யோடு அதை ஆரும் படிவத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்குக் காட்டினுன். அவர்கள் அதைக் கண்டு பொருமைப்பட்டனர்.

செபாஸ்டியன் அருகிலேயே நின்று கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் சிறிய வகுப்புப் பையன்கள் குழுமியிருந் தனர். அவன் ஆரும் படிவப் பையன்களைப் பரிகாசம் செய்து கொண்டிருந்தான். அவர்களின் அபரிமிதச் செலவுகளைப் பற்றி அவன் கூறிய வேடிக்கை வார்த்தைகளை அவர்கள் மிகவும் ரசித்துக்கொண்டிருந்தனர்.

இறுதியாக மத்தியாஸ் வந்து சேர்ந்தான். அவன் தன் பெட்டியின்மேல் அமர்ந்து ஆறு துண்டுகள் கேக் சாப்பிட்டான். அப்போது இரண்டு வண்டிகளில் ஒன்று முதலாவதாக வந்து சேர்ந்தது. வடக்கே போக வேண்டிய பையன்கள் ஒரு விரோதியின் கோட்டையைக் கைப்பற்றுவதுபோல் வண்டி நின்றவுடன் புயலெனக் கிளம்பி இடங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கினுர்கள். பின்னர் அவர்கள் ஜன்னல் வழியாக

வெளியே நின்றுகொண்டிருந்தவர்களோடு எவ்வளவு உரக்கப் பேசமுடியுமோ அவ்வளவு சத்தமாகப் பேசிக்கொண்டிருந் தார்கள். ஐந்தாம் படிவத்தைச் சேர்ந்த பையன் 'வீடு' என்ற வார்த்தை பொறிக்கப்பட்ட ஒரு பலகையை வெளியே தொங்க விட்டிருந்தான். முதல் படிவப் பையனொருவன் திடீரென அலறிக்கொண்டு வண்டியினின்றும் வெளியே ஓடினான். அவன் தன் பெட்டியைப் பிளாட்பாரத்திலேயே வைத்துவிட்டு மறந்துபோயிருந்தான். ஆனால், தக்க சமயத்தில் அதனை உணர்ந்து திரும்ப அப்பெட்டியை வண்டிக்குள் கொண்டு வந்து சேர்த்தான். ரயில் எஞ்சின் நகர ஆரம்பித்ததும் எல்லோரும் தங்களுடைய தொப்பிகளை எடுத்து ஆட்டினார்கள். பதிலுக்கு நடனவகுப்பைச் சேர்ந்த பெண்கள் தங்களுடைய கைக் குட்டைகளை ஆட்டினார்கள். சிலபேர் 'மகிழ்ச்சி நிறைந்த கிருஸ்துமஸ் வாழ்த்துக்கள்!' என்று கத்தினார்கள். மற்ற வர்கள் 'மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டு' என்றும், 'மகிழ்ச்சி யான ஈஸ்டர் வாழ்த்துக்கள்' என செபாஸ்டியனும் கத்தி னார்கள். அப்போது ரயில் வண்டி நிலையத்திற்கு வெளியே சென்றுவிட்டது.

பொதுவாக எவ்விதத்திலும் மகிழ்ச்சி குறையவில்லை. ரயில்வே ஸ்டேஷன்மாஸ்டரைத் தவிர ஒவ்வொருவரும் சிறந்த நகைச்சுவை உணர்வோடு இருந்தார்கள். இரண்டாவது வண்டி வந்து புறப்படும்வரை—ஒரு பள்ளிக்கூடப் பையனும் இங்கு இல்லை என்ற நிலைமை ஏற்படும் வரை-அவரால் மூச்சு விடக் கூடமுடியாது. அவர் நிலையில் இருந்து பார்த்தால்தான் அது சரியென்பது புரியும்.

பள்ளிக்கூட விடுதி கல்லறைபோன்று அமைதியாகக் காட்சியளித்தது. பிற்பகலுக்குப் பிறகும் போகாதிருந்த ஒரு டஜன் பையன்கள் அச்சூழலில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஜஸ்டஸ் தன் கம்பளிக்கோட்டை அணிந்து கொண்டு



எஞ்சின் நகர ஆரம்பித்ததும் எல்லோரும்
தொப்பியை ஆட்டினார்கள்.

மோன அமைதியில் வெண்மையாகக் கிடக்கும் பனித் திடலில் நடந்து சென்ருர். புதிதாக யாருடைய காலடிச் சுவடும் படாததாகப் பனிப் பாதைகள் அமைந்து கிடந்தன. ஆரவாரம், சிரிப்பு எல்லாமே அடங்கியிருந்தன. யொஹன் போக் நின்று, காற்றடித்ததால் மரக்கிளைகளின் அசைவினுல் எழுந்த மெல்லிய சலசலப்பொலியைக் காது கொடுத்துக் கவனித்தார். இப்போது மீண்டும் மோன அமைதி, ஆழ்ந்த தனிமை வந்துவிட்டது.

முக்கியப் பாதையினின்றும் துணைப்பாதைக்குத் திரும்பும் போது அவர் அங்கே காலடித் தடயங்கள் இருப்பதைக் கண்டார். அவை ஒரு பையனுடைய கால்பூட்ஸுகளின் தடயங் களாகும். இப்படிப்பட்ட சமயத்தில், இந்த இடத்தில் தனிமையில் நடந்திருப்பது யாராக இருக்கும்?

அவர் கால் தடயங்களைப் பின் தொடர்ந்து நடந்தார். அவை மரப்பந்தாட்ட விளையாட்டுத் திடலுக்குச் செல்லும் குறுகிய சந்துப் பாதையை நோக்கிச் சென்றது. ஜஸ்டஸ் பனிப் பாதையில் கால் பெருவிரலால் ஊர்ந்து நடந்து, அங் கிருந்த கொட்டகையின் முனைப் பகுதியைச் சுற்றிக்கொண்டு, மறைவாக முன்னெச்சரிக்கை உணர்வுடன் அடுத்த பகுதிக்குச் சென்று நோட்டமிட்டார்.

அங்கே ஒரு பையன் வேலியின்மேல் உட்கார்ந்துகொண் டிருந்தான். அவன் தலை மரத்தூண் ஒன்றின்மேல் சாய்ந் திருந்தது. அவன், கனத்த பனிமேகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக மிதந்துபோய்க்கொண்டிருந்த வானத்தை உறுத்து நோக்கிய படி இருந்தான்.

''ஹலோ!'' ஜஸ்டஸ் உரத்த குரலில் கூப்பிட்டார். திடுக் கிட்ட அப்பையன் அச்சத்தோடு திரும்பிப் பார்த்தான். அவன் வேறு யாருமில்லை, மார்ட்டின் தாலர்தான். வேலியினின்றும் கீழே குதித்தான். ஆசிரியர் அவனை நெருங்கிச் சென்ருர். ''இங்கே என்ன செய்து கொண்டிருக்கிருய்?''

''நான் தனிமையில் இருக்க விரும்புகிறேன், சார்!'' அப்

பையன் கூறினன்.

''அப்படியானல், என்னை மன்னிக்கவும்; உனக்குத் தொந்தரவு கொடுத்துவிட்டேன்,'' ஜஸ்டஸ் கூறினர். ''ஆனல், நாம் சந்தித்ததும் ஒரு வகையில் நல்லதுதான். நேற்றுக்காலை வகுப்பில் நீ அவ்வாறு குழறுபடியாக வாசிக்க நேர்ந்ததற்குக் காரணம் என்ன?''

''அப்போது நான் எதையோ எண்ணிக் கொண்டிருந்தேன்,'' மார்ட்டின் சற்று தடுமாற்றத்துடன் கூறினன்.

''இது ஒரு நியாயமான சமாதானமாக உனக்குத் தோன்றுகிறதா? நேற்று இரவு நாடகத்தில் நீ ஏன் அவ்வளவு மோசமாக நடந்தாய்? எதனல் நீ சாப்பாட்டு அறையில் எதுவும் சரிவர சாப்பிடவில்லை?''

''நான் அச்சமயத்திலெல்லாம் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தேன், சார்,'' தனக்குள் ஏதோ வெட்க உணர்வு கொண்டவனகப் பதில் கூறினன்.

''நீ எதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாய்? கிருஸ்துமஸைப் பற்றியா?''

''ஆம், சார்.''

''சரி, குறிப்பாக அதைப் பற்றி உனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லையே.''

''இல்லை, குறிப்பாக அதிக மகிழ்ச்சி இல்லை, சார்.''

''நீ எப்போது வீட்டிற்குப் போகப் போகிருய்? பிற்பகல் ரயில் வண்டிக்கா?''

அதைக் கேட்டபோது இரண்டு பெரிய கண்ணீர்த்துளிகள் மாணவர் தலைவனன அப்பையனின் கண்களிலிருந்து இறங்கி கன்னங்கள் வழியாக உருண்டோடியது. தொடர்ந்து இன்னும் இரண்டு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் வழிந்தோடின. ஆனல், அவன் பல்லைக் கடித்துக்கொண்டு அடக்கிக் கொண்டான். அதனல், தொடர்ந்து கண்ணீர்த்துளிகள் வெளிப்படவில்லை என்ருலும் அவன் கூறினன்: ''நான் வீட்டிற்குப் போகப் போவதில்லை, சார்!''

''ஏன் ?,'' ஜஸ்டஸ் கேட்டார். ''இந்த விடுமுறையெல்லாமே நீ பள்ளிக்கூடத்திலேயேதான் தங்கப் போகிருயா ?''

மார்ட்டின் தலையாட்டியபடி கண்களிலிருந்து வழிந்த நான்கு சொட்டுக் கண்ணீர்த் துளிகளைத் தன் புறங்கையில் துடைத்துக் கொண்டான்.

''உன்னுடைய வீட்டிலுள்ளோருக்கு நீ வீட்டிற்கு வர வேண்டும் என்ற விருப்பமில்லையா ?''

''உண்டு, சார். நிச்சயமாக உண்டு.''

''அப்போ, சரி. உனக்குப் போகவிருப்பமில்லையா ?''

''உண்டு, எனக்குப் போக வேண்டுமென்ற விருப்பம் உண்டு, சார்.''

''அப்படியா, இது என்ன கதை!,'' ஜஸ்டஸ் இரைந்து கூவினர். ''எனக்கு ஒரு பிடியும் கிட்டவில்லையே! அவர்களுக்கு உன்னைக் காண விருப்பமுண்டு. உனக்கு அவர்களைக் காண ஆர்வமுண்டு. எனினும் நீ இங்கேயே தங்கப் போகிருய். இதன் பொருள் என்ன ?''

''அதை உங்களிடம் கூருமலிருப்பதே உசிதமானது, சார்,'' மார்ட்டின் கூறினன். ''இப்போ, நான் இவ்விடத்தை விட்டுப்போகிறேன், சார்!'' அவன் திரும்பி நடக்கத் தொடங்கினன்.

ஆனால், ஆசிரியர் அவனைப் பிடித்து நிறுத்தினர். ''ஒரு நிமிடம் நில்,'' அவர் கூறினர். அவர் குனிந்து அப்பையனோடு மரங்கள்கூட கேட்க முடியாத அளவுக்குத் தணிந்த மெல்லிய குரலில் கேட்டார் : ''வண்டிக்குப் போக உன்னிடம் பணம் இருக்கிறதா ?''

அப்போது மார்ட்டினிடம் இருந்த தைரியம், சுயக் கட்டுப்பாடு எல்லாமே மறைந்துவிட்டன. அவன் தலையாட்டினன். விளையாட்டுத் திடலில் பனிமூடியிருந்த வேலியின்மேல் அவன் தன் தலையைச் சாய்த்து வைத்துக்கொண்டான். அவன் தனது இதயம் தகர்ந்து விட்டதுபோல் அழுதான். கடுந்துயரம் அவன் பிடரியைப்பிடித்து முன்னும் பின்னுமாக ஆட்டி அலைக்கழித்தது.

ஜஸ்டஸ் அதிர்ச்சியூட்டும் ஆச்சரியத்தோடு அங்கே நின்ருர். அவர் பொறுமையாகவே இருந்தார். அப்பையனை உடனே ஆறுதல்படுத்தத் தொடங்கக்கூடாதென்பதை அவர் அறிவார்.

இறுதியில் அவர் தன்னுடைய கைக்குட்டையை வெளியே எடுத்து, மார்ட்டினை தன்னருகில் அழைத்து அவனுடைய கண்ணீரைத் துடைத்தார். "சரி, சரி," அவர் கூறினர். அவர் தானே சிறிது நிலைகுலைந்தார். அவர் ஓரிரண்டு முறை பலமாக இரும்பும்படியாயிற்று. பிறகு அவர் தொடர்ந்து கூறினர் :

"வண்டிக்குப் பயணக்கட்டணம் எவ்வளவு?"

"எட்டு மார்க்குகள்"

ஜஸ்டஸ் தன் பணப்பையை வெளியே எடுத்து, ஒரு நோட்டை கையில் எடுத்துக் காண்பித்துக்கொண்டு கூறினர் : "இதோ, இங்கு இருபது மார்க்குகள் இருக்கின்றன. இதைக் கொண்டு நீ ஊருக்குப் போகவர டிக்கெட் வாங்கிக்கொள்." மார்ட்டின் நோட்டை உற்றுப் பார்த்தான். பிறகு அவன் தலையாட்டினன். "வேண்டாம், எனக்கு இது வேண்டாம், சார்."

ஜஸ்டஸ் பையனின் கோட்டுப் பைக்குள் நோட்டைத் திணித்தார்.

"நீ கூறியது போலவே செய்கிருயா போக்கிரிப் பயலே?" அவர் கூறினர்.

"ஆனல், என்னுடைய பணம் ஐந்து மார்க்குகள் என்னிடம் இருக்கின்றன," மார்ட்டின் முணுமுணுத்தான்.

"சரி, வீட்டிலுள்ளவர்களுக்கு நீ ஏதாவது பரிசுட் பொருள்கள் வாங்க வேண்டாமா?"

"ஆமாம், நிச்சயமாக வாங்கவேண்டும், ஆனல்—"

"சரி, அப்புறம்," விடுதித் தலைவர் கூறினர்.

மார்ட்டின் தன் சொந்த உணர்ச்சிகளோடு போராடினன். "மிகமிக நன்றி, சார். ஆனல் என்னுடைய தந்தையால்

தங்களுக்கு இப்போது இதைத் திருப்பித்தர இயலும் என எனக்குத் தோன்றவில்லை. என் தந்தைக்குத் தற்போது வேலை யேதும் இல்லை. வரும் ஈஸ்டருக்குச் சில முதற் படிவப்பையன் களுக்கு 'ட்யூஷன்' எடுக்க என்னால் இயலும் என்று நம்பு கிறேன். அது வரையிலும் நான் இதை வைத்திருக்கலாமா?''

''நீ சற்றுப் பேசாமலிருக்கிறாயா?'' டாக்டர் போக் அழுத்தந்திருத்தமாகக் கூறினார். ''கிருஸ்துமஸ் ஈவில் நான் உனக்கு வீட்டிற்குப் போவதற்காகப் பணம் கொடுத்தால் அதைத் திருப்பித்தர வேண்டுமென்ற கேள்விக்கே இடமில்லை. இது ஒரு நல்ல காரியமாகவே இருக்கும்!''

மார்ட்டின் தாலர் தன்னுடைய பள்ளிக்கூட ஆசிரியர் முன்பு அப்படியே நின்றான். அவனுக்கு என்ன கூறுவது அல்லது என்ன செய்வது என்றே தெரியவில்லை. இறுதியில் அவன் அந்த மனிதருடைய கையை நாணத்தோடு எடுத்துத் தன் கைகளில் வைத்து மிருதுவாக அழுத்தினான்.

''இனி ஓடிப்போய் உன்னுடைய மூட்டைகளைக் கட்டு,'' ஜஸ்டஸ் கூறினார். ''உன்னுடைய பெற்றோர்களுக்குக் குறிப் பாக உன் தாயாருக்கு என்னை நினைவு படுத்தவேண்டும். உன்னுடைய தாயாரை நான் சந்தித்திருக்கிறேன் என்று எண்ணுகிறேன்.''

பையன் தலையசைத்தான். ''அன்புகூர்ந்து உங்க ளுடைய தாயாருக்கு என்னை நினைவு படுத்துங்கள்,'' அவன் திருப்பிக் கேட்டுக்கொண்டான்.

''அது சாத்தியமற்ற காரியமாக இருக்கிறதே என அஞ்சு கிறேன்,'' டாக்டர் போக் கூறினார். ''என்னுடைய தாயார் இறந்து ஆறு வருடங்கள் ஆகின்றன.''

மார்ட்டின் திடீரென ஒருகணம் நிதானித்தான். அவன் பள்ளியாசிரியரின்மீது கிட்டத்தட்ட விழப்போவது போலத் தோன்றியது. ஆனால், அவன் அவ்வாறு விழுந்துவிடவில்லை. அவன் மதிப்பளிக்கும் பாவனையில் பின்வாங்கி ஜஸ்டஸை வெள்ளை உள்ளத்தோடு நீண்ட நேரம் பார்த்தான்.

''அதெல்லாம் சரி,'' டாக்டர் போக் கூறினர். 'எல்லா, வற்றிற்கும் மேலாக நீங்களல்லவா எனக்குப் புகைபிடியாத வரை திரும்பக் கொடுத்திருக்கிறீர்கள். இன்று இரவு அவரோடுதான் நான் ரயில்பெட்டி வீட்டில் கிருஸ்துமஸைக் கொண்டாடப்போகிறேன். உலியையும் அவனுடைய பெற்றோர்களையும் ஜானி த்ரோட்ஸையும் பற்றி நான் சிந்திக்க வேண்டும். தனிமை உணர்ச்சியோடு நான் அதிக நேரம் இருப்பது சாத்தியமல்லவென்பதை நீயே பார்க்கிறாயல்லவா,'' பிறகு அவர் வாஞ்சையுடன் அவன் தோளில் தட்டியபடி தலையாட்டினர். ''நலமாகப் போய்வா, மார்ட்டின்.''

''உங்களுக்கு மீண்டும் மிக்க நன்றி,'' பணிவுடன் கூறிய பின் அப்பையன் திரும்பி ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தான். அவன் பள்ளிக்கும் பின்னர் தனது துணிமணி இருந்த அறைக்கும் பறந்தான்.

ஜஸ்டஸ் நிசப்தமாக பனியுடுத்திய அந்நிலங்களினூடே சாவதானமாக நடந்து வேலிவரை சென்றார். அங்கு அவர் நாலாபக்கமும் கூர்ந்து நோக்கிய பின்னர் பல ஆண்டுகட்கு முன்னர் சிறுவனாக இருந்தபோது செய்ததைப்போல வேலியை ஒரே தாண்டாகத் தாண்டிக் கடந்து சென்றார். அது மிகவும் சுலபமாக இருப்பதை அவர் கண்டார்.

''ஒரு விஷயத்தை ஒருமுறை நீ படித்தால், பின்னர் அது ஒருபோதும் மறப்பதில்லை.'' தன்னைப் பேரார்வத்தோடு கவனித்துக்கொண்டிருந்த நடுங்கும் சிட்டுக்குருவியைப் பார்த்து அவர் கூறினர்.

பின்னர் அவர் புகைபிடியாதவரைச் சந்தித்தார். அங்கே ஒரு சிறிய கிருஸ்துமஸ் மரம் இருந்தது. அவர் அதை காற்றில் பறக்கும் வெள்ளித்துகிற் கொடிகளாலும் தங்க முலாம் பூசிய கொட்டைகளாலும் அலங்கரித்திருந்தார்.

மார்ட்டின் மும்முரமாக மூட்டை கட்டிக்கொண்டிருக்கும் போது ஜானி த்ரோட்ஸ் துணிமணியிருந்த அறைக்குள்

வந்தான். ''ஓ, நீ இங்கே இருக்கிருயா !'' அவன் கூறினன். ''போய் வருகிறேன் என உன்னிடம் கூறும்படி மாட்ஸ் என்னிடம் கூறியுள்ளான். நீ வீட்டிலிருந்து எந்த வண்டியில் திரும்புகிருய் என்பதை தனக்குக் கடிதம் எழுதித் தெரிவிக்கு மாறு உன்னிடம் கூறும்படி கேட்டுக் கொண்டுள்ளான்.''

''சரி,'' மகிழ்ச்சியுடன் மார்ட்டின் கூறினன்.

''நீ, மீண்டும் முந்தைய இயல்பான நிலையைப் படிப்படியாக அடைவது போல் தோன்றுகிறது,'' ஜானி துயர்போக்கும் வகையில் கூறினன். ''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என எனக்குத் தோன்றுகிறது; என்ன விஷயம்; ஊம்?''

''கேட்க வேண்டாம்,'' மார்ட்டின் கூறினன். (அவனுக்கு ஜானியோடு வெளிப்படையாகப் பேச முடியாது. காரணம் ஜானிக்குப் போவதற்கு வீடில்லை) ''எனக்கு உன்னேடு கூறக் கூடியது இதுதான்—உலகத்தில் ஜஸ்டஸைப் போல வேறு ஒருவர் இல்லை.''

''அது ஒரு புதிய செய்தி என்பது உன் எண்ணமா?,'' ஜானி கேட்டான்.

''மூட்டை கட்டும்போது மார்ட்டின் தான் புகை பிடியாத வருக்கென்று வரைந்த 'ஆசிரமவாசி' என்ற ஓவியத்தைப் பார்த்தான். ''தெய்வமே!,'' அவன் கூறினன். ''அவருக்கு இப்போது இதைக் கொடுப்பதில் பொருளேதும் இல்லை. அவர் இப்போது ஆசிரமவாசியே அல்ல. அவர் இப்போது பள்ளிக்கூட டாக்டர். என்றுலும் ஒருவேளை அவருக்கு இது பிடிக்கும்.''

''நிச்சயமாக,'' ஜானி கூறினன். ''இது அவருக்கொரு நினைவுப் பொருளாகும். அவர் தனிமையில் கழித்த ஆண்டுகளைப் பற்றி அது அவருக்கு நினைவூட்டும். இன்று இரவு நான் இதை அவருக்குக் கொடுப்பேன்.''

அதன் பிறகு அவர்கள் உலியைக் காணச் சென்றுர்கள். அவனைப் பார்க்க அவன் பெற்றேர்கள் வந்திருந்தார்கள். அவன் மகிழ்ச்சியோடு புன்முறுவல் பூத்தபடி படுக்கையில் படுத் திருந்தான். அவனுடைய பெற்றேர் அவன் படுக்கையருகில்

அமர்ந்திருந்தனர்.

''இது எவ்வளவு அருமையான காரியம், தெரியுமா!'' ஹெர் ஃபொண் ஸிம்மேன் கூறினர்.

''இனி, மீண்டும் இதைப்போல செய்ய மாட்டான்,'' மார்ட்டின் உறுதியளித்தான்.

உலியின் தாயார் கைகொட்டி ''இனிமேல் இதுபோல் நடக்காது என நான் உறுதியாக நம்புகிறேன்.''

''தவிர்க்க முடியாத சில துர்பாக்கிய நிலேகள் உண்டு,'' ஜானி த்ரோட்ஸ் கூறினன். ''உலி காலே முறித்துக் கொள்ளவில்லேயென்ருல் அவன் நிச்சயமாக இதைவிட அதிகத் துன்பத்தை அடைந்திருக்கலாம்.''

பெரியவர்கள் அவ்விருவரும் ஜானியைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள்போல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

''அவன் ஒரு கவியாவான்,'' உலி விளக்கிக் கூறினன்.

''ஆஹா!'' அவனுடைய தந்தை கூறினர். ''நிச்சயமாக.''

அந்த இரண்டு பையன்களும் நீண்ட நேரம் தூங்கவில்லே. உலி மார்ட்டினிடம், தான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் குணமாவதாக வாக்களித்தான்.

ஜானியும் மார்ட்டினும் பள்ளிக்கூட வாயிலில் பிரிந்தார்கள். மார்ட்டின் தன்னிடம் எதையோ கேட்கவிரும்புவது போலவும் அதை எப்படிக் கேட்பது என்று தைரியமில்லாமல் திக்குமுக்காடுவதுபோலவும் ஜானிக்குத் தோன்றியது.

''அதெல்லாம் பழக்கத்தைப் பொறுத்த விஷயம்,'' ஜானி கூறினன். ''நமக்கு நம்முடைய பெற்ருேர்களேத் தேர்ந்தெடுக்க முடியாதல்லவா. நான் சில சமயம் 'என்ருவது ஒருநாள் அவர்கள் இங்கே வந்து என்னே அழைத்துச் செல்வார்கள்' என்று எண்ணிக்கொள்வேன். அப்போது அவர்களிடமிருந்து சுதந்திரம் என்பது எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்தது என்பது உண்மையாகப் புரியும். மேலும் ஜனவரி மூன்ரும் தேதி கேப்டன் ஹாம்பர்க்கை அடைவார். அவர் என்னேக் காண வருவார். நாங்கள்

இரண்டு நாட்களுக்கு பெர்லினுக்குப் போவோம். அது அருமையாக இருக்கும்.'' அவன் மார்ட்டினிடம் தலையாட்டினான். ''வருத்தப்பட வேண்டாம். நான் அப்படியொன்றும் மகிழ்ச்சியாக இல்லை—என்று கூறினால் அது பொய்யாகவே இருக்கும்—ஆனால், நான் அப்படியொன்றும் மகிழ்ச்சியற்றவனாகவும் இல்லை.''

அவர்கள் கைகுலுக்கிக் கொண்டார்கள். ''உன்னுடைய அந்தப் பொட்டலத்தில் என்ன இருக்கிறது?'' ஜானி கேட்டான். காரணம், மார்ட்டினுக்குத் தன்னுடைய கிருஸ்துமஸ் பரிசைப் பெட்டியினுள் வைக்க முடியவில்லை.

''துணிமணிகள்,'' மார்ட்டின் பதில் கூறினான். முதலிலும் இதே பதிலைத்தான் அவன் மத்தியாஸுக்கு அளித்தான். அவன் தன்னுடைய சொந்தப் பரிசுகளை வீட்டிற்குக் கூடவே கொண்டு போகிறேன் என்று—ஹெர்ம்ஸ்டார்ஃபில் கிருஸ்துமஸ் மரத்தினடியில் அவைகளைக் காண்பதற்குப் பதிலாக கிர்ஷ்பெர்கிலிருந்து அவன் இதை வீட்டிற்குக் கொண்டு போகிறேன் என்று—ஜானியிடம் அவன் கூறவில்லை.

நகரத்தில் அவன் தந்தைக்காக ஒரு சிறு பெட்டி நிறைய சுருட்டு வாங்கினான். ஒரு கம்பளிக் கடையிலிருந்து அவனுடைய அம்மாவிற்கு வெப்பந்தரக் கூடியதும் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டதுமான ஒரு ஜோடி மிதியடிகள் வாங்கினான். அவனது தாயாரின் பழைய ஒட்டக மயிர் மிதியடிகள் எத்தனையோ வருடப் பழையதாக இருந்தது. ஆனால், யாராவது அதைப்பற்றிக் கூறினால் 'அது இன்னும் பத்தாண்டுகளுக்குப் பயன்படும்' எனக் கூறுவாள். இவ்வாறு அவன் பெரும் சுமையோடு ரயில் நிலயத்தை நோக்கி நடந்தான்.

அவன் டிக்கெட் கொடுக்குமிடத்தில் ஹெர்ம்ஸ்டார்ஃபிற்கு மூன்றும் வகுப்பு டிக்கெட் ஒன்று கேட்டான். அப்போது அவன் மகிழ்ச்சியோடு டிக்கெட் தருபவரைப் பார்த்துக் கூறினான்:

''மிக்க நன்றி, சார்''

''ஏன் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிருய்?'' அவர் கேட்டார்.

''ஏனென்ருல், அது கிருஸ்துமஸாக இருப்பதால்தான்,'' அப்பையன் பதில் கூறினன்.

# அத்தியாயம் பன்னிரண்டு

அருமையான பல கிருஸ்துமஸ் மரங்களும் ஒரு சிறிய ஃபிர் மரமும்; ஒவ்வொன்றும் நான்கு பௌண்டு எடையுள்ள ஆரஞ்சுகள் ; பல கண்ணீர்த்துளிகள் ; மறுபடியும் மணியடித்தல் ; *கண்ணீரோடு சேர்ந்த சிரிப்பு ; சில புதிய* வண்ணப் பென்சில்கள் ; அவற்றை முதலாவதாகப் பயன்படுத்தியது ; ஹெர்ம்ஸ்ட்ராஃப் அஞ்சற்பெட்டி ; ஒரு நட்சத்திர வீழ்ச்சி.

# 12

'கிருஸ்துமஸ் ஈவ்' எட்டுமணியை அடுத்திருந்தது. வானிலை ஆராய்ச்சித்துறை அலுவலகம் மத்திய ஐரோப்பா முழுவதும் பனி கொட்டுவது கடுமையாக இருக்குமென முன்னறிவிப்புச் செய்திருந்தது. வானவியலாளர்கள் எவ்வளவு கனகச்சிதமாக முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை வானம் நிரூபிக்கத் தொடங்கியது. மத்திய ஐரோப்பா முழுவதும் பனி கொட்டிக் கொண்டிருந்தது.

அதனால் ஹெர்ம்ஸ்ட்ராஃபிலும் பனி கொட்டிக்கொண்டிருந்தது. ஹெர் ஹெர்மன் தாலர் நல்ல அறையின் பலகணிக்கருகில் நின்றுகொண்டிருந்தார். அறை இருட்டாக இருந்தது. விளக்கேற்றி வைப்பதென்றால் பணச்செலவாகும். தாலர் எல்லாவகையிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டி இருந்தது.

''எத்தனை ஆண்டுகளாக இப்படியொரு பனிப்பொழிவு நமக்குக் கிருஸ்துமஸ் சமயத்தில் ஏற்பட்டதில்லை,'' அவர் கூறினார்.

ஃப்ரௌ தாலர் மிருதுவான சாய்வு இருக்கையில் அமர்ந்திருந்தாள். அவள் தலையை மட்டும் ஆட்டினாள். அவளுடைய கணவனும் அவளிடமிருந்து பதில் எதையும் எதிர்பார்க்கவில்லை. அறை ஓசையின்றி மோன அமைதியில் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவே அவர் உரையாடினார்.

''நௌமன் குடும்பத்தில் அவர்கள் பரிசுகளைப் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள்,'' அவர் கூறினார். ''ஓ, மில்டஸ் வீட்டில் இப்போதுதான் மெழுகுவத்திகள் ஏற்றுகிறார்கள். அவர்களுக்கு அழகான பெரிய கிருஸ்துமஸ் மரம் ஒன்று இருக்கிறது. நிச்சயமாக அவர் இப்போது அதிகப் பணம் சம்பாதிக்கிறார்.''

ஹெர் தாலர் தெருவின் கீழ்புறத்தைப் பார்த்தார். ஒளி

வீசும் வீட்டுப் பலகணிகளின் எண்ணிக்கை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. பனித்திவலைகள் வண்ணத்துப்பூச்சிகள் சிறகடித்துப் பறப்பது போன்று மிதந்து வந்து கீழே விழுந்தன.

ஃப்ரௌ தாலர் சிறிது அசைந்தாள். மெத்தென்ற பூம்பட்டு வனகயிலான பழைய மிருதுவான சாய்வு இருக்கை 'கிரீச்' என ஒலி எழுப்பியது. "காலியாகக் கிடக்கும் அவ்வளவு பெரிய பள்ளிக்கூடத்தில் இப்போது அவன் என்ன செய்து கொண்டிருக்கிறானே," அவள் கேட்டாள்.

அவர் மெதுவாகப் பெருமூச்செறிந்தார். "அதை நினைத்து உனக்கு நீயே ஏன் மனக்கஷ்டத்தை ஏற்படுத்திக்கொள்கிறாய்," அவர் கூறினார். "ஜோனத்தான் த்ரோட்ஸ் அங்கே இருக்கிறான். அவனுக்கு இவன்மீது பேரன்பு உண்டு. மேலும் மற்றொரு சிறுபையன் காலை ஒடித்துக்கொண்டு அங்கேயே இருக்கிறான். அவர்கள் அவன் படுக்கைக்கருகில் அமர்ந்து மண்ணில் விளையாடும் புழுதிப் பையன்களைப்போல மிகவும் மகிழ்ச்சியாக சிரித்துப்பேசிக் கொண்டிருப்பார்கள் என நான் உறுதியாக எண்ணுகிறேன்."

"இப்போது கூறியதில் ஒரு வார்த்தையைக்கூட நீங்கள் நம்பிக்கையுடன் கூறவில்லையென்பது எனக்குத் தெரியும்," அவர் மனைவி கூறினாள். "என்னைப்போலவே அவன் இன்று இரவை மகிழ்ச்சியுடன் கழிக்க முடியாதென்று உங்களுக்கும் தெரியும். அவன் ஒருவேளை ஏதாவதொரு மூலைப்பகுதிக்குள் பதுங்கிச்சென்று அழுது கொண்டிருப்பான்."

"அவன் அவ்வாறு செய்யமாட்டான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்." அவளது கணவர் கூறினார். "அழமாட்டேன் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறான். அவனைப் போலவுள்ள ஒரு பையன் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றியே தீருவான்." ஹெர் தாலர் இவ்வாறு கூறி நடித்தாரே தவிர அவருக்கு அந்த அளவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கவில்லை. ஆயினும் அவர் வேறென்னதான் கூறமுடியும்.

''உறுதிமொழி! உறுதிமொழி!'' மார்ட்டின் தாயார் கூறினாள். ''நான் கூட உறுதிமொழி அளித்திருக்கிறேன். என்றாலும் கடிதம் எழுதும்போது நான் அழுதேன்.''

ஹெர் தாலர் பலகணியிலிருந்து திரும்பி நின்றார். மின்னும் கிருஸ்துமஸ் மரங்கள் அவரை தளர்ச்சி கொள்ளச்செய்தன. அவர் இருளடைந்த அறைக்குள் பார்வையைச் செலுத்தினார். ''வா விளக்கேற்று, விளக்கேற்று!'' அவர் கூறினார்.

அவருடைய மனைவி எழுந்து விளக்கைப் பற்றவைத்தாள். அழுகையினால் அவள் கண்கள் சிவந்துவிட்டன.

வட்டமேஜையொன்றின் மேல் மிகமிகச் சிறிய ஒரு ஃபிர் மரம் நின்று கொண்டிருந்தது. கிருஸ்துமஸ் சமயத்தில் சந்தையில் கிருஸ்துமஸ் மரங்கள் விற்றுக்கொண்டிருந்த விதவையான ரீதெல் என்பவள் கொடுத்தது அது. ''உங்களுடைய மார்ட்டினுக்கு,'' அவள் கூறியிருந்தாள். அதனால் இப்போது அவர்கள் குடும்பத்தில் முறையாக கிருஸ்துமஸ் மரம் இருந்தது. ஆனால், அதைக் காட்டுவதற்கு மகன் இல்லே!

ஹெர் தாலர் சமையலறைக்குள் சென்று எதையோ கொஞ்சநேரம் துருவித்துருவி தேடியபின் கடைசியில் ஒரு சிறிய பெட்டியோடு வெளியே வந்தார். ''சென்ற ஆண்டு மெழுகுவத்திகள் இதில் இருக்கின்றன,'' அவர் கூறினார். ''நாம் அவைகளை பாதி மட்டுமே எரியவைத்தோம்.'' பிறகு அவர் பன்னிரண்டு பாதிஎரிந்த மெழுகுவத்திகளை ஃபிர் மரத்தின் சிறிய கிளைகளின்மேல் கொளுத்திவைத்தார். சிறிது நேரத்தில் அச்சிறிய மரம் அழகு மிக்கதாகத் திகழ்ந்தது. ஆனால், மார்ட்டினின் பெற்றோர்களுக்கு வருத்தமே ஏற்பட்டது.

மெதுவான சாய்வு இருக்கையில் அடுத்தடுத்து இருவரும் அமர்ந்தனர். ஃப்ரௌ தாலர் ஐந்தாவது தடவையாக மார்ட்டினின் கடிதத்தை உரக்கப் படித்தாள். பல தடவைகள் அவள் படிப்பதை சற்று நிறுத்துவதும் கைகளால் கண்ணீரைத் துடைப்பதுமாக இருந்தாள். அவள் படிப்பதை நிறுத்தியபோது அவளுடைய கணவன் கைக்குட்டையை வெளியே எடுத்து

மூக்கினடியில்வைத்துப் பலமாகச் சிந்தினன்.

''அது சரியில்லை,'' அவர் கூறினர். அவனைப்போலுள்ள ஒரு சிறுபையன் பணமில்லாததன் கஷ்டத்தை இவ்வளவு விரைவில் அறியக்கூடாது. அவன் தன்னுடைய அப்பாவையும் அம்மாவையும் தேவையான அளவுக்குச் சம்பாதிக்க இயலாதவர்கள் என்பதால் அவன் சபிக்கமாட்டான் என நம்புகிறேன்.''

''முட்டாள்தனமாக எதையும் பேசாதிருங்கள்,'' அவருடைய மனைவி கூறினள். நீங்கள் எப்படி இப்படியெல்லாம் எண்ணுகிறீர்கள்? மார்ட்டின் இப்பவும் ஒரேயொரு பையன்தான். ஆனல், திறமைக்கும் பணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது அவனுக்கு மிக நன்ருகத் தெரியும்.''

அப்போது அவள் தையல் மேஜையின் மேலிருந்து மார்ட்டின் வரைந்த ஆறு குதிரைகள் பூட்டிய நீலநிறக் கோச் வண்டி ஓவியத்தை எடுத்துக்கொண்டுவந்து அதனை மிகுந்த கவனத்தோடு சிறியதான கிருஸ்துமஸ் மரத்தின் கீழே வைத்தாள்.

''கலையைப் பற்றி எனக்கொன்றும் அதிகம் தெரியாது'' எனக்கூறிய அவளுடைய கணவன், ''எனினும் இஃதொரு அற்புதமான படமாக எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை எதிர்காலத்தில் அவன் புகழ்பெற்ற ஒரு ஓவியக் கலைஞனவான். அப்போது நாம் அவனுடன் நிச்சயமாக இத்தாலிக்குப் போவோம். அல்லது அது ஸ்பெயினுக இருக்குமா?''

''முக்கியமானது அவன் நன்ருக இருக்கவேண்டு மென்பது தான்,'' ஃப்ரௌ தாலர் கூறினள்.

''அவன் தனக்கு வைத்திருக்கும் மீசையைப் பார்த்தாயா!''

இருவரும் புன்னகை புரிந்துகொண்டனர்.

''மிகப் பிரபலமாகியுள்ள மோட்டார்காரில் இருப்பதாக நம்மை வரையாமல் ஆறு குதிரைகள் பூட்டிய நீலநிற கோச் வண்டியில் இருப்பதாக அவன் வரைந்துள்ளது மிகுந்த நுண் திறமையைக் காட்டுவதாக இருக்கிறது,'' அம்மா கூறினள்.

''அது மிகப் பெரிய கவிதை இயல்பு கொண்டதாகும்.''

''அந்த ஆரஞ்சுகள்?'' அவனுடைய தந்தை கூறினர், ''அவைகள் அவ்வளவு பெரிய அளவில் வளர்வதில்லை. அவைகள் ஒவ்வொன்றும் குறைந்தது நான்கு பௌண்டுகள் கனமிருக்கும்.''

''எவ்வளவு புத்திசாலித்தனமாக அவன் சாட்டையை வீசுகிருன்,'' அவனுடைய தாய் கூறினுள்.

பிறகு மீண்டும் அவர்கள் அமைதியாக 'பத்து ஆண்டுகளில்' என்ற ஓவியத்தைக் கருத்தூன்றிப் பார்த்தபடி அந்த இளம் கலைஞனைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

அவனுடைய தந்தை இருமினர். ''பத்து ஆண்டுகளில்! எவ்வளவோ நல்ல காரியங்கள் ஏற்படலாம்.'' அவருடைய சட்டைப்பையிலிருந்து தீப்பெட்டியை வெளியே எடுத்து, ஒரு குச்சியை உரசிப் பற்றவைத்து பன்னிரண்டு மெழுகுவத்திகளையும் கொளுத்திய பிறகு விளக்கேற்றினர். தாலருடைய 'சிறந்த அறை' விழாக்கோலத்தில் திகழ்ந்தது.

''எனதன்புள்ள உண்மை இதயமே,'' அவர் தன் மனைவியிடம் கூறினர். ''நமக்கு இந்த ஆண்டு ஒருவருக்கொருவர் பரிசுகள் கொடுக்க இயலவில்லை. ஆனல், நாம் ஒருவருக்கொருவர் எல்லாவற்றிற்கும் மேலாக இதய பூர்வமாக வாழ்த்திக் கொள்வோம்,'' அவர் அவளுடைய கன்னத்தில் முத்தமிட்டார். ''மகிழ்ச்சி நிறைந்த கிருஸ்துமஸ்.''

''மகிழ்ச்சி நிறைந்த கிருஸ்துமஸ்!'' அவள் திருப்பிக் கூவினுள்.

அப்போது அவள் அழத் தொடங்கினுள். அவ்வழுகையொலி எப்போதுமே நிறுத்த முடியாததுபோல இருந்தது.

எவ்வளவு நீண்டநேரம் அவர்கள் அந்த மிருதுவான சாய்வு இருக்கையில் உட்கார்ந்திருந்தார்கள் என்று யாருக்குத் தெரியும்?...... ..

மெழுகுவத்திகள் எரிந்து கொஞ்சங் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தன. அடுத்த குடியிருப்புப் பகுதியிலிருந்து

''அமைதியான இரவு, புனிதமான இரவு,'' என்ற ஒலிகள் வந்தன. பனித்திவலைகளாலான பனிக்காற்று அப்போதும் சுழன்று சுழன்று வீசிக் கொண்டிருந்தது.

திடீரென மணியடித்தது. இருவருமே அசையவில்லை. அவர்கள் மிகவும் மனக்கவலையில் இருந்ததால் யாரும் தொந்தரவு கொடுப்பது அவர்களுக்குச் சிறிதும் பிடிக்காதிருந்தது.

ஆனால், மணி இரண்டாம் முறையாக பலத்த ஓசையுடன் ஒலித்தது.

ஃப்ரௌ தாலர் எழுந்து வாசற்படிக்கு மெதுவாகச் சென்றாள். 'கிருஸ்துமஸ் ஈவ்'லே ஆட்கள் மற்றவர்களை அமைதியாக இருக்கும்படி விடக்கூடாதோ?

அவள் வீட்டின் வெளிப்புறவாசல் கதவைத் திறந்தாள். சில நிமிடங்கள் அவள் அப்படியே திகைத்து நின்று விட்டாள். பிறகு அவள் 'மார்ட்டின்!' என்று உரக்கக் கூவினாள். அவளுடைய கீச்சுக்குரல் படிக்கட்டுகளுக்குக் கீழேயும் எதிரொலித்தது.

மார்ட்டின்? அது நடக்கக் கூடியதா? அவனுடைய தகப்பனார் திடுக்கிட்டுக் குதித்தெழுந்து ஓடினார். அவர் வெளிவாசற்படிக்கு ஓடினார். அங்கு தன் கண்களையே நம்பமுடியாமல் நின்றார்.

அவருடைய மனைவி குனிந்து தன் இரு கைகளாலும் மார்ட்டினை இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டாள்.

அதைக் கண்டபோது ஹெர் தாலருக்கு கண்ணீர் துளிர்த்தது, யாருமறியாமல் அதைத் துடைத்துக் கொண்டார். வாசலில் யாருமே கவனியாது கிடந்த பெட்டியை எடுத்துக் கொண்டார். ''ஆனால், என் அன்பு மகனே,'' அவர் கூறினார், ''நீ எப்படி இங்கு வந்தாய்?''

அவர்கள் சிறந்த அறைக்குப் போவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. தாயும் மகனும் சேர்ந்து சிரித்தார்கள்; அழுதார்கள். ஹெர் தாலர் குறைந்தது பத்து தடவையாவது விக்கியிருப்பார். ''சரி, எண்ணாரிட்பார்?'' அப்போது அவன் மீண்டும்

வாசலை நோக்கி ஓடினான். காரணம் பரபரப்பில் அவர்கள் வாசற்கதவை மூடாது வந்துவிட்டார்கள்.

முதலாவதாக மார்ட்டின் கூறியது இதுதான்: ''திரும்பிப் போவதற்கு வேண்டிய பணம் என்னுடைய கையில் இருக்கிறது.''

கடைசியாக அவர்கள் மூவரும் அமைதி நிலையை அடைந்த பின்னர் மார்ட்டின் கிர்ஹ்பெர்கில் இருப்பதற்கு மாறாக இங்கு எப்படி வரும்படியாயிற்று என்பதை விளக்கினான். ''நான் சர்வ சக்தியையும் பயன்படுத்தி என்னை நானே தேற்றிக் கொண்டேன்,'' அவன் கூறினான். ''நான் அழவில்லை. கடைசியில்தான் நான் அழுதேன். எனினும் எங்கள் விடுதித் தலைவர் டாக்டர் போக் என்னிடம் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்து விட்டார். எனவே, அவர் எனக்கு இருபது மார்க்குகள் தந்தார். பனிச்சறுக்கு விளையாட்டிடத்திற்கு வெளியேயுள்ள திடலில் நான் இருக்கும்போது அதைக் கொடுத்தார். அவர் அதை இரகசியமாகவே கொடுத்தார். உங்களிடம் அவருடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்படி கூறியிருக்கிறார்.''

''மிக்க நன்றி,'' அவருடைய பெற்றோர்கள் இருவரும் ஒருமுகமாகக் கூறினார்கள்.

''என்னால் சில பரிசுப் பொருள்கள் கூட வாங்க முடிந்தது,'' மார்ட்டின் தற்பெருமையோடு கூறினான். அப்போது அவன் தன் தகப்பனாருக்குப் பளப்பளக்கும் சிறிய பெட்டி நிறையச் சுருட்டுகளையும் தன் தாயாருக்கு பூவேலை செய்யப்பட்ட அழகிய மிதியடிகளையும் பரிசுப் பொருள்களாகக் கையில் கொடுத்தான். அவர்கள் இருவரும் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்...

''உனக்கு எங்களுடைய பரிசு பிடித்திருந்ததா?'' அவனுடைய தாயார் கேட்டாள்.

''நான் அதை இதுவரைப் பார்க்கவில்லை,'' மார்ட்டின் உண்மையைக் கூறினான். அப்போது அவன் கிர்ஹ்பெர்குக்கு

அவள் அனுப்பியிருந்த பொட்டலத்தைப் பிரித்தான். அதனுள்ளே வியப்பூட்டும்படியான பொருள்கள் நிறைய இருந்ததை அவன் கண்டான். அவனுடைய தாயாரே தயார்செய்த ஒரு புதிய இரவுச்சட்டை, இரண்டு உல்லன் காலுறைகள், சாக்லேட் கேக் ஒரு பாக்கெட், தென்கடல் தீவுகளைப்பற்றிய பேரார்வமூட்டும் ஒரு புத்தகம், ஓவியம் வரையும் தாள்களின் ஒரு தொகுதி; எல்லாவற்றிலும் மிகச்சிறந்ததாக மிக உயர்ந்த தரமுள்ள ஒரு வண்ணப் பென்சில் ஆகியவை இருந்தன.

மார்ட்டின் மிகவும் மகிழ்ந்தான். அவர்கள் இருவரையும் முத்தமிட்டான்.

மார்ட்டின் எதிர்பார்த்த மிக உயர்ந்த கிருஸ்துமஸ் ஈவாக அது வந்தமைந்தது. சிறிய கிருஸ்துமஸ் மரத்தில் இருந்த வத்திகள் விரைவிலேயே எரிந்துவிட்டன என்பது உண்மைதான். ஆயினும், அவர்கள் விளக்கை ஏற்றினார்கள். அம்மா காபி போட்டாள். அவனுடைய தகப்பனார் கிருஸ்துமஸ் சுருட்டுக்களில் ஒன்றைப் புகைத்தார். பிறகு அவர்கள் கேக் சாப்பிட்டார்கள். உலகத்தில் முன்னும் பின்னும் உள்ள எல்லாக் கோடீஸ்வரர்களையும்விட அதிகமான மகிழ்வுணர்வை அவர்கள் பெற்றார்கள். அவனுடைய தாயார் புதிய மிதியடிகளை அணிந்து நடக்க முயன்றாள். அவளுடைய வாழ்நாளில் அவள் இதுபோல் அற்புதமான மிதியடிகளை அணிந்ததே இல்லையென்று கூறினாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பின் மார்ட்டின் கீழே அமர்ந்து அவன் ரயில்வே நிலையத்திலிருந்து வாங்கிய ஒரு போஸ்ட் கார்டை வெளியே எடுத்து வரையத் தொடங்கினான். அவன் புதிய வண்ணப்பென்சில் கொண்டுதான் வரைந்தான்.

அவனுடைய பெற்றோர்கள் ஒருவருக்கொருவர் புன்முறுவலைப் பரிமாறிக்கொண்டபடி அவனைக் கூர்ந்து நோக்கினார்கள். அவனுடைய 'கோட்'டிலிருந்து மேலெழும்பும்படியாக தேவதூதர்களின் இரண்டு பெரும் இறக்கைகளோடு கூடிய ஒரு இளம் கனவானின் படத்தை அவன் வரைந்தான். இந்தத்

தனித்தன்மை வாய்ந்த மனிதன் மேகங்களிலிருந்து கீழே தாழப்பறந்து வருவதுபோன்று இருந்தது. கீழே ஒரு சிறு பையன்—கன்னங்களிடையே பெரும் கண்ணீர்த்துளிகள் வழிந்தோடும் ஒரு சிறிய பையன் நிற்கிறுன். இறக்கைகளுள்ள மனிதனின் கையில் ஒரு கனத்த பணப்பையுள்ளது. அது பையனுக்கு நேராக நீட்டிக்கொண்டிருந்தது.

மார்ட்டின் பின்புறமாகச் சாய்ந்து ஒரு வல்லுநன் என்ற பாவத்தில் கண்களை பாதிமூடி ஒரு நிமிடம் சிந்தித்து மற்றும் வேறு பலவற்றை வரையத் தொடங்கினன். முதலில் சிறிது சிறிதாக பனித்திவலைகள், பின்னர் பின்னணிச் சூழலில் எஞ்சின்மீது அலங்கரிக்கப்பட்ட கிருஸ்துமஸ் மரத்தோடு கூடிய ஒரு புகைவண்டி. ஸ்டேஷன் மாஸ்டர் வண்டியின் அருகில் இருந்து வண்டி புறப்படுவதற்கான சமிக்ஞை கொடுக்க ஒரு கையைத் தூக்கிக் கொண்டு நின்றுகொண்டிருந்தார். அதனடியில் பெரிய அச்செழுத்துக்களில் எழுதியிருந்தான்: ‘போக் எனும் பெயர் கொண்ட ஒரு கிருஸ்துமஸ் தேவதூதன்.’

அவனுடைய தந்தையும் தாயும் கார்டின் பின்புறத்தில் ஒரு சில வரிகளை எழுதினர்.

‘அன்புள்ள டாக்டர் போக்,’ ஃபிரௌ தாலர் எழுதினுள்.

‘‘என்னுடைய மகன் தங்களை ஒரு தேவதூதனுக வரைந்தது மிகவும் சரியானதாகும். என்னுல் வரைய முடியவில்லை; என்னுடைய நன்றியறிதலை உங்களுக்கு வார்த்தைகளால் மட்டுமே வெளியிட முடியும். எங்களுடைய இரத்தமும் சதையுமாயுள்ள எங்கள் பையனை கிருஸ்துமஸ் பரிசாக தாங்கள் எங்களுக்கு அனுப்பிவைத்தமைக்கு மிகமிக நன்றி. தாங்கள் மிக நல்லவராக இருப்பதால் உங்களுடைய மாணவர்கள் எல்லோருமே நல்லவர்களாக வளரக்கூடிய தகுதியுண்டு. இது தான் என்னுடைய என்றென்றைக்குமான நன்றியறிதலான வாழ்த்துக்கள். மார்கரெட் தாலர்.’’

‘‘நீ எனக்கு அதிக இடம் அளிக்கவில்லை,’’ மார்ட்டினின் தந்தை முணுமுணுத்தார். அவருக்குத் தன்னுடைய



அவர்கள் கோட்டுகளை அணிந்து கொண்டு
ஸ்டேஷனை நோக்கிச் சென்றார்கள்.

கையெழுத்தையல்லாமல் அதிகமாக எழுத முடியவில்லை. இறுதியில் மார்ட்டின் முகவரி எழுதினான்,

பிறகு அவர்கள் கோட்டுகளை அணிந்துகொண்டு இருவருமாக ரயில் நிலையத்திற்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் தாமதத் தாபல்தலை ஒட்டி அதனைப் போடுவதற்கான தபாற் பெட்டியில் கார்டைப் போட்டார்கள். ஆகவே ஜஸ்டஸ் நிச்சயமாக கிருஸ்துமஸ் அன்று காலையிலேயே அதனைப் பெற்றுக் கொள்வார். பின்னர், மீண்டும் அவர்கள் வீட்டைநோக்கித் திரும்பி நடந்தார்கள். மார்ட்டின் தகப்பனார் தாயாருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு மத்தியில் நடந்து சென்றான்.

அது அற்புதமான நடையாக இருந்தது. வானம் முடிவேயில்லாத ஒரு இரத்தின வியாபாரியின் கடைபோல் திகழ்ந்தது. பனிப் பொழிவு நின்றிருந்தது. ஒவ்வொரு வீட்டின் பலகணி வழியாகவும் ஒரு கிருஸ்துமஸ் மரம் மின்னிக்கொண்டிருந்தது.

மார்ட்டின் நின்று ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினான். ''நாம் இப்போது காணும் நட்சத்திரத்தின் ஒளி,'' அவன் கூறினான், ''எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும். ஒளிக் கதிர்கள் பூமியை அடைய நேரமனைத்தையும் எடுத்துக் கொள்கிறது. ஒருவேளை அந்நட்சத்திரங்களில் பெரும்பாலானவை ஏசு கிருஸ்து பிறப்பதற்கு முன்பே அணைந்து மறைந்துபோயிருக்கும். ஆனால், அவைகளின் பிரகாசம் இப்போதும் நம்மைநோக்கி வந்துகொண்டிருக்கின்றன. அதனால் நாம் இப்போதும் அவைகள் மின்னிக் கொண்டிருப்பதாகக் காண்கிறோம்—ஆனால் உண்மையில் அவை எப்போதோ குளிர்ந்து, இருளடைந்து போய்விட்டன.''

''தெய்வமே துணை!'' அவனுடைய தந்தை கூறினார். அவன் தாயாரும் அதைப்போலவே வியப்படைந்தவளாகக் கூறினாள். தொடர்ந்து அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். பனி அவர்களின் பாதத்தினடியில் தனக்கேயுரிய இசையை எழுப்பிக் கொண்டிருந்தது. அவன் அவர்களின் கைகளை தன் இருபுறத்திலும் இணைத்து வைத்துக்கொண்டான். அவன்

மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

அவன் வாசற்கதவைத் திறக்கும்போது அவர்கள் வெளியே நின்ருர்கள். மார்ட்டின் மீண்டும் ஆகாயத்தை நோக்கித் தன் பார்வையைச் செலுத்திஞன். அந்த நிமிடத்தில் ஒரு எரி நட்சத்திரம் இரவின் இருளுக்கு எதிரிடையாகப் பளிச் சிட்டு மின்னி உயர்ந்து ஆகாயத்தினிடையே அமைதியை ஏற் படுத்திக்கொண்டு அடிவானத்தில் மறைந்துவிட்டது.

'இப்போது நான் விரும்புகிறேன்,' பையன் சிந்தித்தான். மேலும் அவனுடைய கண்கள் நட்சத்திரம் வானில் செல்லும் பாதையைப் பின் தொடர்ந்துகொண்டிருந்தபோது அவன் தனக்குத்தானே எண்ணிக்கொண்டான்: 'அப்பா, அம்மா, ஜஸ்டஸ், புகைபிடியாதவர், ஜானி, மாட்ஸ், உலி முதலியோர் வாழ்நாள் முழுவதும் மிகுந்த மகிழ்ச்சியோடிருக்க பெரிதும் விரும்புகிறேன். எனக்கும் அதையேதான் நான் விரும்பு கிறேன்.'

அது நிச்சயமாக பெரிய விருப்பமாகும். மேலும் அது நிறைவேறுவதற்கான வெற்றிவாய்ப்புகள் உண்டாகி இருந் தன. காரணம் நட்சத்திரம் விழும் சமயத்தில் மார்ட்டின் மிக அமைதியாக இருந்தான்.

அதுதானே நமக்கு அறியவேண்டிய முக்கிய செய்தி.

# முடிவுரை

புகைவண்டிகளும் உல்லாசப் பஸ்ஸுகளும்; கோட் ஃபிரீத், மயில்கண்ணன், எட்வர்ட் எனும் பெயருள்ள காளைக்கன்று ஆகியவற்றின் இனிய நினைவுகள்; ஜானி த்ரோட்ஸ், கேப்டன் ஆகியவர்களோடு நேர்முகச் சந்திப்பு; ஜஸ்டஸுக்கும் புகைபிடியாதவருக்கும் அநேக அன்பு நிறைந்த வாழ்த்துக்களும் நூலின் முடிவும்.

# முடிவுரை

இப்போது நான் உங்களுக்கு என்னுடைய கிருஸ்துமஸ் கதையைப் பற்றிக் கூறுகிறேன். நான் எழுதத்தொடங்கிய போது ஒரு பெரிய புல்வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா? ஒரு மரப் பெஞ்சியின்மேல் ஆடக்கூடிய ஒரு சிறிய மேஜைக்கருகில்? அதிக வெப்பமாக இருந்தால் நான் ஸுக்ஸ்பிட்ஸீனுடைய பனி நிறைந்த பனிப்பாறைப் பிளவையும் பாறைக் கூர்முகட்டையும் பார்ப்பதுண்டு. காலம் எப்படிப் பறந்தோடுகிறது!

இப்போது நான் முடிவுரை எழுதுகிறேன். நான் மீண்டும் பெர்லின் திரும்பிவிட்டேன். இங்கு நாலாவது மாடியில் எனக்கு ஒரு சிறிய குடியிருப்புப் பகுதி உண்டு. என்னோடு என் தாயாரும் வசிக்கிறாள். மதிய உணவுக்குச் சற்று முன்னதாகவே நான் வீட்டிலிருக்க வேண்டும். எனக்கு மிகவும் பிடித்த உணவு வகையில் ஒன்றான பன்றித் தொடையின் உப்பிட்ட இறைச்சியும் கோதுமை மாவால் செய்யப்பட்ட குழல் பண்ணியமும் இன்று கிடைக்கும்.

குர்ஃபர்ஸ்டன்-டாமில் உள்ள ஒரு உணவு விடுதிக்கு வெளியே நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். இது இலையுதிர் காலமாகும். காற்றடிக்கும்போது தவிட்டு நிறமும் மஞ்சள் நிறமும் கொண்ட முதிர்ந்த இலைகள் நடைபாதைகளின்மேல் உதிர்ந்துகொண்டிருந்தன. ஐந்து வாரங்களாக கிட்டத்தட்ட எல்லா பிற்பகல்களிலும் என்னை வந்து சந்தித்துக் கொண்டிருந்த கோட் ஃப்ரீத் எனும் பெயருள்ள பளபளப்பான வண்ணத்துப் பூச்சி எங்கே போய்விட்டது? வண்ணத்துப்பூச்சிகள் நீண்ட காலம் வாழ்வதில்லை. கோட் ஃப்ரீத் இறந்திருக்க வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. அது நட்புணர்வும் ஈடுபாடுமிக்க ஒரு வண்ணத்துப் பூச்சியாகும். அதன் சுடலை நீறுக்கு என்றென்றும் சாந்தியுண்டாவதாக!

ஒவ்வொரு மாலைநேரமும் பெரிய புல்வெளியிலிருந்து

என்னைக் கூட்டிக்கொண்டு போவதற்காக வந்து தடாகத்தை அடுத்திருந்த உணவு விடுதிவரை என்னுடன் நடந்துவரும் அந்த அழகிய தவிட்டுநிறக் காளைக் கன்றுக்குட்டி என்ன செய்து கொண்டிருக்கும்? அது இப்போது காளைமாடாக வளர்ந்திருக்குமா? அல்லது கன்றுக்குட்டி இறைச்சி கறிவகை செய்யப் பயன்பட்டிருக்குமா? எட்வர்ட்மீது எனக்கு அளவு கடந்த அன்பு! குர்ஃபர்ஸ்டன்-டாமிலிடையே அதுதுள்ளுநடைபோட்டு வந்து என்னுடைய பிரம்பு நாற்காலி முன்பு நின்று, நம்பிக்கை நிறைந்த பாசவுணர்வோடு என்னை நோக்கி, அதன் சிறிய கொம்புகளால் என்னை முட்டினால், நான் மகிழ்ச்சியோடு இசை யிழுத்துப் பாடுவது உண்டு. நிச்சயமாக என்னோடு ஒரே வீட்டில் அதை வாழச் செய்யவேண்டும். ஒருவேளை அதை பால்கனியில் வைத்துக்கொள்ளலாம். அதற்கு நான் இலவம் பஞ்சு மெத்தையில் வைத்து உணவு கொடுப்பேன். க்ருன் வால்டில் ஒவ்வொரு மாலையும் உலாவ அதைக் கொண்டு போவேன்.

ஆனால், நான் இப்போது உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தில் ஒரு கன்றுக்குட்டிகூட என்னைக் கடந்து போவதில்லை. அதிகமாகப்போனால் எப்போதாவது ஒரு சில செம்மறியாடுகள் அல்லது ஒரு காண்டாமிருகம் கடந்துபோகும்.

டிராம் வண்டிகள் மணியடித்துக்கொண்டு செல்கின்றன; பஸ்கள் உறுமிக்கொண்டு ஓடுகின்றன; கார்கள் வெறுப்பொலி எழுப்புவதுபோல் விசைக்குழல் ஊதிக்கொண்டு ஓடுகின்றன; எல்லாமே துரிதப்படுகின்றன; நான் மீண்டும் நகரத்திற்குத் திரும்பியுள்ளேன்.

ஸுக்ஸ்பிட்ஸின் அடிவாரத்தில் காட்டுப்பூக்களின் மணம் காற்றில் நிறைந்திருந்தது. இங்கே மோட்டார் டயர்கள், பெட்ரோல் நாற்றமாக இருக்கிறது. ஃபிர் மரங்களோ, தொழிற் சாலையின் புகைக்கூண்டுகளோ, வானளாவிய கட்டடங்களோ, பனி மூடிய மலைகளோ, நெல் வயல்களோ, பூமிக்கடியில் உள்ள ஸ்டேஷன்களோ, மிதக்கும் மேகங்களோ, தொலைபேசிக்

கம்பிகளோ, திரைப்பட அரங்குகளின் கூட்டமோ, பச்சைப் பசேலென்ற மலை ஏரிகளோ, நகரமோ அல்லது நாட்டுப்புறங் களோ எதுவானாலும் எனக்கு இரண்டுமே விருப்பம்தான். இரண்டையுமே நான் ஒன்றாகத்தான் விரும்புகிறேன். ஒன்று இல்லாத மற்றொன்றால் என்ன பயன்?

முடிப்பதற்கு முன்பு நான் இப்போது சந்தித்த ஒரு நிகழ்ச்சி யைப் பற்றி உங்களிடம் கூறவேண்டும். என்னைக் கடந்து போன மக்கள் கூட்டத்தின் இடையில் வியாபாரக் கப்பலின் அலுவலர் ஒருவரும் இருந்தார். அவர் தங்க நாடாவோடு கூடிய நட்சத்திரங்களைக் கொண்ட அழகான சீருடை அணிந்திருந்த வயதான கனவானவர். அவருக்குப் பக்கத்தில் பள்ளிக்கூடத் தொப்பியணிந்த ஒரு பையன் இருந்தான். அவர்கள் ஜானி த்ரோட்ஸும் கேப்டனுமே ஆவார்கள்.

''ஜானி!'' நான் கூப்பிட்டேன்.

பையன் திரும்பினான். கேப்டன் நின்றார். நான் அவர்கள் அருகில் சென்று கேப்டனை குனிந்து வணங்கினேன். ''கிர்ஹ் பெர்கிலுள்ள யொஹன் ஸிஜிஸ்மண்ட் பள்ளியைச் சேர்ந்த ஜானி த்ரோட்ஸாகத்தான் நீ இருக்கவேண்டும்,'' நான் அப் பையனை நோக்கிக் கூறினேன்.

''ஆமாம்,'' அவன் பதில் கூறினான்.

''மிக்க மகிழ்ச்சி!'' நான் கூறினேன்.

''ஜானியைத் தந்தையைப்போல கவனித்துக்கொள்ளும் கேப்டன் நீங்கள்தானே?'' மாலுமிக்குரிய சீருடையிலிருந்த கனவானைப் பார்த்து நான் கேட்டேன்.

பண்பட்டவராகத் தலையாட்டினார். நாங்கள் கை குலுக் கினோம்.

''நான் உன்னைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியிருப்பதைக் குறித்து உன்னிடம் பேசவேண்டும்,'' நான் அப்பையனிடம் கூறினேன். ''இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிருஸ்துமஸ் சமயத்தில் உங்களுக்கு ஏற்பட்ட அசாதாரணமான விஷயங்

களைப் பற்றித்தான் அது விளக்கிக் கூறுகிறது. நீ இப்போது ஐந்தாம் படிவத்தில் படிப்பாய் என்பதை நான் அறிவேன். எனவே உன்னை நான் மரியாதையோடு நடத்தவேண்டும். ஆனால், நான் அவ்வாறு செய்யப்போவதில்லை. நீயும் அதைப் பொருட்படுத்தமாட்டாய் என்பதை நான் நன்கறிவேன். உயர் நடுநிலைப்பள்ளி பையன் உங்களுடைய பயிற்சிப் புத்தகங்களை எகர்லாண்டின் நிலவறையில் நெருப்புவைத்து எரித்த அந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா?''

''எனக்கு அது மிக நன்றாக நினைவிருக்கிறது,'' ஜானி பதில் கூறினான்.

''நீங்கள் அதையெல்லாம் எழுதியிருக்கிறீர்களா?''

நான் தலையாட்டினேன்.

''உலி காலை முறித்துக்கொண்ட அந்த பாராசூட் குடையிறக்கம் பற்றியும்.''

''அதைப் பற்றிக்கூட உங்களுக்குத் தெரியுமா?'' ஆச்சரியத்தோடு அவன் கேட்டான்.

''நிச்சயமாக,'' நான் கூறினேன். ''வேறு பலவும் தெரியும். நீங்களெல்லாம் நல்ல சுகம்தானே? மத்தியாஸ் இப்போதும் எப்பவும்போல் அதிகமாகச் சாப்பிடுகிறானா?''

''அவன் சாப்பிடுவதில்லை,'' ஜானி கூறினான். ''அவன் சரியாகிவிட்டான். அவனுக்கு வாரத்தில் இரண்டுமுறை ஒரு உடற்பயிற்சியாசிரியர் குத்துச்சண்டை கற்றுக்கொடுக்கிறார்.''

''குறிப்பிடத்தக்க செய்திதான்! செபாஸ்டியன் என்ன செய்கிறான்?''

''தற்போது அவனொரு ரசாயனப் பைத்தியமாக இருக்கிறான். அவன் எலெக்ட்ரான்களைப் பற்றியும், நுண்துகள்களின் இயக்கத்தினாலேயே வாயுநிலை தோன்றுகிறதெனும் கொள்கையைப் பற்றியும் அளவை மெய்ம்மைக்கோள் முதலிய துறைகளைப் பற்றிய மிக உயர்ந்த புத்தகங்களையெல்லாம் விழுந்து விழுந்து படித்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு ஒரு விஞ்ஞானியாக வேண்டும் என்ற விருப்பம். அவை

எதனுலாகியது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமாம்.''

''உன்னுடைய நண்பன் என்ன செய்து கொண்டிருக்கிருன்?''

''மார்ட்டின் இப்போதும் வகுப்பில் முதல் மாணவன்தான். அநியாயமானது எதுவாக இருந்தாலும் அவன் இன்றும் கொதித்தெழுகின்ருன். எஞ்சிய நேரத்தையெல்லாம் ஓவியம் வரைவதில் செலவிட்டு வருகிருன். உங்களுக்குத்தான் அதைப்பற்றியெல்லாம் தெரியுமே. அவனுடைய ஓவியங்கள் மிகச் சிறந்தவைகளாகும். கலைக் கழகத்திலிருந்து ஒரு பேராசிரியர் அவனுக்கு எழுதிய கடிதத்தில் அவன் ஒரு சிறந்த ஓவியக் கலைஞனுக வருவான் என்று எழுதியிருந்தார் அவனுடைய தகப்பனுர் மீண்டும் வேலை செய்து வருகிருர்.''

''அதைக் கேட்க நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்,'' நான் கூறினேன். ''உலி?''

''உலி ஒரு தனித்தன்மை வாய்ந்த பையனுவான்,'' ஜானி கூறினுன். ''அவன் இன்றும் வகுப்பில் மிகச் சிறியவனுகவே இருக்கிருன். ஆனுல், முன்பைவிட அவன் இப்போது பெரிதும் வேறுபாடு உடையவனுக உள்ளான். மத்தியாஸ் அடியோடு அவன் கட்டை விரலுக்குக் கீழ்தான் இருக்கிருன். சமயம் வரும்போது நாங்கள் எல்லோருமே கூட அப்படித்தான். உலி இப்போதும் சிறுவன்தான். ஆனுல், எதிர்த்து நிற்க முடியாத ஏதோ ஒரு சக்தி இப்போதும் அவனுக்குண்டு. அவன் அவ்வாறு இருக்கவேண்டுமென்று விரும்பவில்லை. ஆனுல், அவன் உங்களை நோக்கிப் பார்த்தாலே போதும்.''

''அவன் தனக்குத்தானே எப்படி தலைவனுக இருப்பது என்பதை கற்றுக்கொண்டுள்ளான்,'' சிந்திக்கும் பாவனையில் கேப்டன் கூறினுர். ''மற்றவைகள் வெறும் சிறுவர் நாடகம் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே.''

''அதுதானே,'' நான் மீண்டும் ஜானியிடம் திரும்பினேன். ''நீ இன்னும் எழுதிக் கொண்டிருக்கிருயா?''

கேப்டன் புன்முறுவல் பூத்தார். ''ஆம், அவன் கதைகள்,

நாடகங்கள், கவிதைகள் எழுதுகிறான். ஏன், ஏதாவது ஒன்றை அவன் உங்கள் பார்வைக்கென அனுப்பித் தந்தால் என்ன? நீங்கள் அவனுக்காகச் செய்வீர்களா?''

''ஆஹ! தாராளமாக,'' ஜானி கூறினான். ''ஆனால், கதைகளை மட்டும்தான் திறனாய முடியும்; ஆற்றலைத் திறனாயத் தெரியாது. உன்னால் எழுதமுடியுமா என்பதை நான் பார்க்கிறேன். ஆனால், நீ எப்போதாவது எழுத்தாளன் ஆவாயா என்பதைக் கூற என்னால் இயலாது. அதை பிற்காலத்தில் அல்லாது இப்போதே முடிவு செய்யமுடியாது.

''நான் காத்திருப்பேன்,'' ஜானி மெள்ள அறிவித்தான். நல்லபாங்கான பையன், நான் சிந்தித்தேன். ''நீ கிர்ஹ்பெர்குக்குத் திரும்பிப் போகும்போது,'' நான் தொடர்ந்தேன், ''என்னுடைய அன்பான வாழ்த்துக்களை ஜஸ்டஸுக்கும் புகைபிடியாதவருக்கும் கூறுங்கள்.''

''உங்களுக்கு அவர்களைகூடத் தெரியுமா?'' ஆச்சரியத்தில் ஜானி த்ரோட்ஸ் கேட்டான். ''யாரென்று நான் கூறுவது......?''

''பெர்லினில் உள்ள ஒரு நண்பர் என்று கூறினால் போதும்,'' நான் கூறினேன், ''அவர்களுக்குத் தெரியும். மேலும் என்னைப் பையன்களுக்கும் நினைவுபடுத்து.''

''நான் அவர்களிடம் கூறுகிறேன். புத்தகம் அச்சடித்து முடிந்தவுடன் நீங்கள் அப்புத்தகத்தை அனுப்புவீர்கள் இல்லையா?''

''நான் டாக்டர் போக்குக்கு அனுப்பிவைப்பேன்,'' நான் கூறினேன். நீ அதைப்பார்க்க வேண்டுமென அவர் கருதினால் அதை உனக்கும் கொடுப்பார். இல்லையென்றால் அவர் அதை மார்ட்டின் தாலருக்கு மட்டும் கொடுப்பார்.''

பிறகு நாங்கள் கைகுலுக்கினோம். கேப்டனும் அவருடைய வளர்ப்பு மகனும் தங்கள் வழியே சென்றார்கள். ஜானி மீண்டுமொருமுறை என்னைத் திரும்பிப் பார்த்துத் தன் கைகளை ஆட்டினான்.

இப்போது நான் முதல் நெம்பர் பஸ்ஸைப் பிடித்து வீடு போய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால் கோதுமைக் குழல் பண்ணியம் பலகாரம் ஆறிப்போய்விடும்.

நான் ஜானி த்ரோட்ஸையும் கேப்டனையும் சந்தித்ததைப் பற்றிக் கூறினால் என்னுடைய அம்மாவுக்கு அது பெரும் ஆச்சரியமாக இருக்கும்.

# பறக்கும் வகுப்பறை

''பறக்கும் வகுப்பறை'' உண்மையில் கிர்ஹ்றபெர்க் விடுதிப்பள்ளி மாணவரான ஜானி த்ரோட்ஸ் எழுதிய நாடகமாகும். அந்நாடகம் கிருஸ்துமஸ் கொண்டாட்டங் களின் ஒரு பகுதியாக நடக்கவிருந்தது. ஆனால், அதற்கு முன்பாகவே எத்தனையோ பெரிய நிகழ்ச்சிகள்—உயர் நடு நிலைப் பள்ளி மாணவர்களின் ஆள் கடத்தல் கொடுஞ்செய லும், உயிர்க்கிறுதி உண்டாக்கவல்ல அக்கொடுமைக்கு ஆளான தங்கள் சக மாணவரை விடுவிக்க வேண்டி அவர் கள் மேற்கொண்ட அதியற்புத சாகசச் செயல்கள் பல வும்—நடந்துவிடுகின்றன



வெளியீடு:

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், சென்னை, இந்தியா & ஹொர்ஸ்ட் எர்த்மன் ஃபெர்லாக், துபிங்கன் (மேற்கு ஜெர்மனி) & பாஸல் (ஸ்விட்ஸர்லாந்து)